Q.—நீங்கள் இன்னும் ஏதாவது அதிகமாகச் சொல்லப் போகிறீர்களா ? நீங்கள் புதிதாக ஏதாவது சொல்லப்போகிறீர்களா ?
A.—ஆம். 100 காணி பயிரிடுகிற ஏரி சும்மா கிடக்கிறது. கையைவிட்டுப் பணம் கொடுக்கிறோம். ஒருவிதமான அனுகூலமும் கிடையாது.

Q.—அயன் கிராமத்துப் பட்டா இருக்கிறதா ? இருந்தால் ஒன்றைக் கொடுங்கள்.
A.—**The witness produces a zamin patta and also an ayan patta** தண்டலைப்பட்டா கொடுக்கிறேன். என்னுடைய சிநேகிதருடையது.

Q.—உமக்குப் பட்டா இருக்கிறதா ?
A.—இல்லை. அயனில் சிறிய தாயாருக்குப் பட்டா இருக்கிறது. அதைக்கொண்டு வரவில்லை. கோத்தூர் பட்டாவைக் கொடுக்கிறேன்.

Q.—இதைத் தவிர புதிதாக ஒன்றும் சொல்லவேண்டியதில்லையே ?
A.—ஏரியைப்பற்றிச் சொல்லுகிறேன். அது சும்மா கிடக்கிறது. நிலம் 300 காணி தரிசாகக் கிடக்கிறது. ஒருவிதமான ஏதுவும் கிடையாது. ஜமீன்தார்களைக் கேட்க முடியாது. கேட்டால் எங்கள் தலை தப்பாது. மராமத்து பண்ணவேயில்லை. 37 வருஷமாக பணம் செலுத்திக்கொண்டு வருகிறோம். மராமத்து கிடையாது. சும்மா தரிசாகக் கிடக்கிறது. தீர்வையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒன்றும் இல்லாமலே கிடக்கிறது. தீர்வை கொடுக்கிறோம்.

Q.—ஊரில் உமக்கு இன்னும் வேறு நிலம் இருக்கிறதா ?
A.—இருக்கிறது.

The RAJA OF MIRZAPURAM : **through** Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—ஆயக்கட்டில் காணிக்கு என்ன தீர்வை கொடுக்கிறீர்கள் ?
A.—2 ரூபாய்.

Q.—நஞ்சை இருக்கிறதா ?
A.—இருக்கிறது. பட்டாவில் போட்டுக்கொடுத்திருக்கிறார்கள். நஞ்சைக்கும் புஞ்சைக்கும் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மரமெல்லாம் போய்விட்டது. இன்னும் மரத் தீர்வை கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Q.—பட்டாவிலிருக்கிற மரத்திற்கு தீர்வை கொடுத்தால் நிலத்தீர்வை கிடையாதே ?
A.—பட்டா நிலத்திலிருக்கிற மரங்களுக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நிலத்துக்கும் தீர்வை கொடுத்துக்கொண்டுவருகிறோம்.

The CHAIRMAN :

Q.—ஒரு மரம்கூட இல்லையா ?
A.—மரமே கிடையாது.

Q.—மரத்துக்கு என்ன தீர்வை ?
A.—தென்னை மரத்துக்கு 3 அணா வருஷத்துக்கு. புளியமரத்துக்கு 10 அணா 6 பை, மா மரத்துக்கு 6 அணா. இந்தமாதிரி தீர்வை கொடுத்துக்கொண்டுவருகிறோம். ஒரு மரமும் இல்லாமலிருக்கிறபோது வசூல் பண்ணுகிறார்கள். எத்தனையோ மரத்துக்கு வசூல் பண்ணுகிறார்கள். எங்களிடத்தில் ஐந்து மரத்துக்கு வசூல் பண்ணுகிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—ஒரு மரம்கூட இல்லையா ?
A.—இல்லை.

Q.—அதைப்பற்றி ஏதாவது மனுக்கொடுத்தீர்களா ?
A.—கொடுத்துப் பார்த்தோம் ஒன்றும் பிரயோஜனமில்லை.

The CHAIRMAN :

Q.—ஐந்து மரத்துக்கு கொடுத்ததிற்கு ரசீது இருக்கிறதா ?
A.—இருக்கிறது. பட்டாவில் சேர்ந்திருக்கிறது.

(He produces the patta.)

The Zamindar of Mirzapuram :

Q.—எந்த வருஷத்துப் பட்டா ?
A.—இந்த வருஷப் பட்டா. வேலாயுதமாச்சாரி பட்டாவைக்கொடுத்திருக்கிறேன்.

The Chairman :

Q.—உன்னுடைய பட்டா எங்கே ?
A.—இங்கே இருக்கிறது. (He produces,)

The Zamindar of Mirzapuram :

Q.—ஒரு மரங்கூட இல்லையா ?
A.—இல்லை.

Q.—அந்த மரமெல்லாம் என்ன ஆச்சு ?
A.—பட்டுப்போச்சு. எனக்கே தெரியாது எப்போது பட்டுப்போச்சு என்று. (சிரிப்பு.)

Mr. B. Venkatachalam Pillai :

Q.—பட்டாவை விட்டு விலக்காமல் இருக்கிறதினால் வரி கொடுத்துக்கொண்டு வருகிறீர்களா.
A.—ஆமாம். மாட்டை ஜப்தி பண்ணி ஏலம் போட்டு பணத்தை வசூல் பண்ணுகிறார்கள்.

The Chairman :

Q.—பணம் கொடுக்கவேண்டாமா ?
A.—வருஷா வருஷம் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். உழவு மாட்டை ஜப்தி பண்ணுகிறார்கள். பணத்துக்கு ரொம்ப கஷ்டப்படுகிறோம். இந்த வருஷத்துப் பாக்கிதான் கொடுக்க வேண்டியது. உழுத மாட்டை ஜப்தி பண்ணிவிட்டார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—அதற்கு முன்னால் பாக்கி இல்லையா ?
A.—அதற்கு முன்னால் அநேகமாகக் கொடுத்துவிட்டோம். இந்த வருஷத்துக்குத்தான் பாக்கி, உழுத மாடு 25 ரூபாய் பெறும். மதிப்பு 3 ரூபாய் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அப்புறம் அந்த மாடு என்ன ஆச்சு ?
A.—பணத்தைக் கொடுத்துவிட்டு ஓட்டிக்கொண்டு வந்துவிட்டோம்.

Q.—எந்தப் பசலிக்கு ஜப்தி செய்தார்கள் ?
A.—1346-ம் பசலிக்குத்தான் இப்போது ஜப்தி செய்திருக்கிறார்கள். இருபது கேஸில் ஜப்தி பண்ணியிருக்கிறார்கள். பேஷ்கார் தனக்கு லஞ்சம் கேட்கிறார். கொடுக்காவிட்டால் இந்தமாதிரி யெல்லாம் செய்கிறார். இரண்டு ரூபாய் கொடுத்தால் வாங்கிக்கொண்டு மாட்டை விட்டுவிடுவார்கள்.

Q.—மற்றதெல்லாம் சரவண பிள்ளை சொன்னதுதானே ? வேறொன்றுமில்லையே ?
A.—அவ்வளவுதான் வேறொன்றுமில்லை.

Q.—மரத்துக்குத் தீர்வை போடுகிறார்கள் என்று சொன்னீர்களே ? பூமிக்கும் தீர்வை உண்டா ?
A.—உண்டு. அதற்கு வேறு வாங்குகிறார்கள்.

Q.—மரம் விளையக்கூடிய நிலத்தில்தான் இருக்கிறதா ?
A.—ஆமாம். பூமிக்கு வேறு வாங்குகிறார்கள். மரத்துக்கு வேறு வாங்குகிறார்கள். மரமே கிடையாது ?

The Zamindar of Mirzapuram :

Q.—இந்த மரங்களைத்தள்ளி தீர்வைப் பணத்தை வாங்கவேண்டுமென்று ஜமீன்தாருக்கு ரிஜிஸ்டர் நோட்டீஸ் கொடுக்கவில்லையே ?
A.—இல்லை.

Q.—மனுக் கொடுத்ததற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ?
A.—இல்லை. மனுவை வாங்கிக்கொண்டு செய்கிறேன், செய்கிறேன் என்று சொன்னார்களே தவிர வேறொன்றும் செய்யவில்லை.

The Zamindar of Mirzapuram : through Mr. B. V. Pillai :

Q.—கோத்தூரில் ஜமீன்தாருடைய பட்டா மணியமாகயிருந்து பண வசூல் பண்ணிக்கொண்டிருந்தீர்களா ?
A.—ஆமாம்.

Q.—பட்டா மணியமாக் இருந்தபோது பணத்தைக் கையாடல்பண்ணியதாக ஆறு மாசம் சிக்ஷை, தண்டனை யடைந்ததுண்டா என்று கேட்கிறார்கள் ?
A.—ஆறுமாசம் இல்லை. இரண்டுமாசம்தான். 2 அணா வரிக்கு தள்ளிக்கொடுக்கவேண்டுமென்று ரசீது போட்டேன். ஜமீன்தார் ஒப்புப்கொள்ளமாட்டேன் என்று விரோதமாகப் பண்ணிவிட்டார்கள்.

Q.—பணத்தை வசூலானதில் கையாடினதற்காக ஆறு மாசம் சிக்ஷயாகவில்லையா என்று கேட்கிறார்கள் ?
A.—இரண்டு மாசம் ஆச்சு. ஜெயிலுக்கும் போய்விட்டு வந்துவிட்டேன். இரண்டு மாசம் இருந்துவிட்டு வந்துவிட்டேன். அப்பீலில் விடுதலையாய் விட்டது.

The Zamindar of Mirzapuram :

Q.—அந்தக் காகிதம் கொண்டுவர முடியுமா ?
A.—கொண்டுவருகிறேன். இப்போது கொண்டுவரவில்லை.

Q.—அப்பீல் போட்டாயா ?
A.—நானே அப்பீல் போட்டேன். தள்ளுபடியாய்விட்டது.

Mr. VENKATACHALAM PILLAI :

Q.—இரண்டு மாசம் இருந்தபிறகு போகச்சொல்லிவிட்டார்களா ?
A.—ஆமாம்.

Q.—குற்றவாளியில்லையென்று அப்பீலில் சாதகமாச்சா ?
A.—இரண்டு மாசம் இருந்தேன். அப்புறம் போகச்சொல்லிவிட்டார்கள்.

Q.—அப்பீலில் கீழ்கோர்ட்டு ஜட்ஜ்மெண்டை உறுதியென்று சொல்லி தண்டனையைமட்டும் இரண்டு மாசம் ஆக்கினார்களா ?
A.—ஆமாம்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—அந்தத் தேதி முதல் நீங்கள் ஜமீன்தாருக்கு விரோதமாக இந்தமாதிரி செய்துகொண்டு வருகிறீர்களா ?
A.—எனக்கு ஒரு விதமான விரோதமும் கிடையாது.

Q.—ஜெயிலிலிருந்து வந்து எத்தனை வருஷமாச்சு ?
A.—நாலு வருஷமாச்சு. ஐந்து வருஷமாச்சு.

Q.—உங்கள் நஞ்சை நிலத்துக்கு வசூல் பண்ணினார்களே, நஞ்சைப் பயிரிட்டாலும் புஞ்சை பயிரிட்டாலும் ஒரே தீர்வைத்தான் வசூல் பண்ணுகிறார்களா ?
A.—நஞ்சை தீர்வைதான் வசூல் பண்ணுகிறார்கள்.

Q.—2 ரூபாய் வசூல் பண்ணுகிறார்களா ?
A.—தரிசுக்கு 2 ரூபாய் வசூல் பண்ணுகிறார்கள். அப்போதிருந்தே தரிசாகத்தான் கிடக்கிறது. 37 வருஷமாகத் தரிசாகக் கிடக்கிறது. 2 ரூபாய் வசூல் பண்ணுகிறார்கள்.

Mr. VENKATACHALAM PILLAI :

Q.—அந்தமாதிரி எத்தனை காணிக்கு கொடுக்கிறீர்கள் ?
A.—100 காணிக்கு.

Witness No. 156. Trichinopoly. 7th February 1938.

Oral evidence of Mr. B. Srinivasa Pillai of Angarayanallur.

1346-ம் பசலிக்கு ஜூன் மாதத்தில் பட்டா கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது ஜப்தி பண்ணியிருக்கிறார்கள். 1937-ம் வருஷம் அக்டோபர் மீ 23உயில் ஜப்தி பண்ணி யிருக்கிறார்கள். ஒரு வருஷம் ஆகிறதற்குள் இந்த இரண்டு மூன்று மாசங்களுக்கு வட்டிபோட்டிருக்கிறார்கள். 2 அணா 3 பைசா வட்டி போட்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் மாசங்கள் இருக்கின்றன. அதோடு படி 4 அணா போட்டிருக்கிறார்கள். சில்லரைச் சிலவு அணா போட்டிருக்கிறார்கள். மாடு ஓட்டுகிற கூலி 2 அணா போட்டிருக்கிறார்கள். ஆக மொத்தம் ரூ. 6-12-4. மதிப்பு போட்டிருக்கிறது 6 ரூபாய். 50 ரூபாய் பெறுமானது ரூ. 1-1-3 சிலவு என்று போட்டு இந்தமாதிரி வசூல் பண்ணு கிறார்கள். இது **Movable attachmnet** ரூ. 12-7-7 செலுத்திவிட்டு மாட்டை ஓட்டிக்கொண்டு வந்தேன். ரூ. 6-12-4 தான் செலுத்தவேண்டியது. அதற்கு இந்த பணம் செலுத்திவிட்டு வந்திருக்கிறேன்.

Mr. VENKATACHALAM PILLAI :

Q.—இதெல்லாம் அனாவசியம் என்று சொல்லுகிறீர்களே, நீங்கள் ஏன் மனுக்கொடுத்து தள்ளிக்கொள்ளக்கூடாது ?
A.—பார்ட்டிக்கு சக்தியில்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

When the witness produced a patta, the Zamindar asked him whose it was.

A.—வேறொரு பார்ட்டி உடையது. அவனுக்கு இங்கே வருகிறதற்கு சக்தியில்லை.

சம்மரி சூட்—50 ரூபாய்க்குள்ளேயிருந்தால் கிராம முனிசீப்பு கோர்ட்டிலோ பஞ்சாயத்து கோர்ட்டிலோ பண்ணிவிட்டால் நல்லாயிருக்குமென்பது என்னுடைய எண்ணம். தவிரவும் அவர்கள் எங்களை மனிதர்களாக நினைக்கவில்லை. பணம் செலுத்துகிறவன் எவ்வளவு பெரிய மனிதனாயிருந்தாலும் வசூலிக்கிறவன் அவர்கள் கீழ் வேலை செய்கிற சொற்ப ஏஜெண்டாக யிருந்தாலும் அவரை அவர் என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக ரயட் பெரிய மிராசுதாரராக யிருந்தாலும் அவரை அவன் என்று சொல்லுகிறார்கள். **(He showed some papers to the members).**

Mr. VENKATACHALAM PILLAI :

Q.—உங்களுடைய குடும்பத்திற்கு நீங்கள் எவ்வளவு கொடுக்கிறீர்கள் ?
A.—200 ரூபாய் கிஸ்து பே பண்ணுகிறேன்.

Q.—உங்களுடைய ரசீது கொண்டுவந்திருக்கிறீர்களா ?
A.—இல்லை.

Q.—உங்களுடைய நிலங்களெல்லாம் நஞ்சையா ? புஞ்சையா ?
A.—எல்லாம் புஞ்சை.

Q.—உங்களுக்கு எவ்வளவு பூமி ?
A.—40 காணி இருக்கிறது.

Q.—புஞ்சையா ? நஞ்சையா ?
A.—எல்லாம் புஞ்சை.

Q.—எவ்வளவு கொடுக்கிறீர்கள் ?
A.—வறக்குறைய 200 ரூபாய்.

Q.—லீசுக்கு கொடுக்கிறீர்களா ?
A.—கொடுக்கிறோம். 10 காணி போக 30 காணியை லீசுக்கு கொடுத்திருக்கிறோம்.

Q.—எவ்வளவு ரூபாய் வரும் ?
A.—காணிக்கு 15 ரூபாய் 12 ரூபாய் வரும்.

Q.—30 காணியை லீசுக்கு கொடுத்திருக்கிறீர்கள் ? 10 காணி சாகுபடி பண்ணுகிறீர்கள் ?
A.—ஆமாம்.

Q.—அதில் எவ்வளவு வரும் ?
A.—25 ரூபாய் வரும். **Gross income.**

Q.—**Net income** என்ன வரும் ?
A.—10 ரூபாய் வரும்.

Q.—30 எக்கருக்கும் எவ்வளவு வரும் ?
A.—300, 350 ரூபாய் வரும்.

Q.—30 எக்கருக்கு எவ்வளவு தீர்வை செலுத்துகிறீர்கள் ?
A.—150 ரூபாய் செலுத்துகிறோம்.

Q.—அது எவ்வளவு விலை பெறும் ?
A.—ஒரு எக்கர்—4 எக்கர் அந்தமாதிரி இருக்கிறது. 200 ரூபாய்க்கு விற்கும். 36 எக்கரும் சராசரி 75 ரூபாய் கொடுத்தால் இன்றைக்கே விட்டுவிடுகிறேன்.

Q.—நீங்கள் வாங்கினீர்களா ? ஜமீன்தார் பட்டா கொடுத்தார்களா ?
A.—வாங்கினதும் இருக்கிறது. பட்டா கொடுத்ததும் இருக்கிறது.

Q.—எவ்வளவு வாங்கினது ?
A.—எனக்குத் தெரியாது. என்னுடைய மூதாதிகளைக் கேட்டால் தெரியும்.

Q.—இன்னும் வேறு நிலம் இருக்கிறதா ?
A.—கவளந்தவல்லி கிராமத்தில் அயனில் எனக்கு நிலம் இருக்கிறது. 150 காணி இருக்கிறது. நஞ்சையில் 50 காணி இருக்கிறது.

Q.—அதற்கு எவ்வளவு கிஸ்தி கொடுக்கிறீர்கள் ?
A.—400 ரூபாய் கொடுக்கிறோம்.

Q.—நஞ்சையா ? புஞ்சையா ?
A.—அதில் எல்லாம் நஞ்சை.

Q.—காணிக்கு எவ்வளவு தீர்வை ?

A.—காணிக்கு ரூ. 10, ரூ. 10-2-0, ரூ. 6-5-0, ரூ. 7-2-0, புஞ்சைக்கு ரூ. 1-2-0 கொடுக்கிறோம்.

Mr. Venkatachalam Pillai :

Q.—10 ரூபாய் என்று சொன்னீர்களே. அது அயன் நஞ்சைக்கா ?

A.—இரண்டு போகம் விளையக்கூடிய நிலம். ஆற்றுப் பாசனம். அதைக்கொண்டுதான் இங்கே தீர்வை கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—10 ரூபாய் என்று சொன்னீர்களே. அது முதல் அனுபோகத்துக்கும் இரண்டாம்போகத்துக்குமா ? இரண்டாம் போகத்துக்கு வேறு கொடுக்கிறீர்களா ?

A.—இரண்டு போகத்திற்கும் சேர்த்துதான் 10 ரூபாய்.

The witness continuing—

பொன்னுசாமி பேஷ்கார் ஜப்தி பண்ணியிருக்கிறார் என்று சொன்னேனே அந்த பொன்னுசாமி பிள்ளை 1931-ம் வருஷத்தில் கிரிமினல் கேஸ் ஒருவர்பேரில் கொடுத்து அவர் 150 ரூபாய் **compensation** கொடுக்கும்படியாக தீர்ப்பாயிருக்கிறது. அவர் இப்பொழுதும் உத்தியோகத்திலிருக்கிறார். அந்தமாதிரி பேர்வழி ஜப்தி செய்திருக்கிறார். கோத்தூர் முதலிய இடங்களில் காடாக 400 காணி இருக்கிறது. அதில் ஒன்றும் விளையவில்லை. அதற்கு தீர்வை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதில் மண்ணைத்தோண்டி கீழே இருக்கிற கல்லை எடுத்தால் **prosecution** பண்ணிவிடுகிறார்கள்.

Witness No. 157. **Trichinopoly.** **7th February 1938.**

Oral evidence of Mr. Meenakshisundaram Pillai of Allinagaram.

ஆதியில் அரியலூர் ஜமீனுக்கு 57 கிராமங்கள். 783 வராகன் வசூல் செய்யும்படிக்கு title 200 சர்க்காருக்குச்செலுத்திவிட்டு குடிகளை சமரக்ஷித்து பாக்கித் தொகையை உபயோகிக்கும்படி title deed கொடுத்திருக்கிறது.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q—சந்நது இருக்கிறதா ?
A—வீட்டில் இருக்கிறது. இங்கே கொண்டு வரவில்லை. காப்பி கொடுத்திருக்கிறேன். இப்பொழுது லக்ஷ ரூபாய்க்கு மேல் வசூலாகிறது. ஜமீனில் சிலவு ஒன்றும் குடிகளுக்கு ஒருவரும் செய்யவில்லை. ஒவ்வொரு Proprietorம் வெகுதூரத்தில் இருக்கிறார்கள். கிராமங்களுக்கு ஒருவிதமான சௌகரியமும் செய்கிறதில்லை. குளம், போக்குவரத்து பொது நன்மைக்கான காரியங்கள் எதுவும் செய்கிறதில்லை. குடிகளுக்கு தீர்வை நஞ்சை Landக்கு ரூ. 12-12-0 அயன் rate குடிகள்தான் மராமத்து செய்துகொண்டு வருகிறார்கள். ஒரு காணிக்கு ரூ. 12-12-0 வாங்குகிறார்கள். புஞ்சை தீர்வை 7-13-9 லிருந்து இருக்கிறது. மொத்தம் அல்லிங்கரத்தில் 200 காணி-1,200 ரூபாய் வசூலாகிறது. அதே இடத்தில் எக்கர் ஒரு ரூபாய் முதல் ரூ. 2-8-0 வரை இருக்கிறது. கூத்தூரில் நஞ்சையாயிருந்தால் 5 ரூபாய் 6 ரூபாய்க்குமேல் இல்லை. தீர்வை செலுத்த ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். தீர்வையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும். கிராம சௌகரியத்துக்காக எதாவது செய்யவேண்டும். 100 வருஷமாக ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை. உட்குடி ரூ. 12-12-0 நஞ்சைக்கு, புறக்குடி ரூ. 9-8-6, கவுல்குடி ரூ. 7-13-0 இதில் போட்டிருக்கிறதுதான் rate (he hands over a paper to the chairman).

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—எத்தனை வருஷமாக மராமத்து இல்லை ?
A.-⊥50 வருஷமாக இல்லை.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—ஏரி இருக்கிறதா ?
A.—குளம் இருக்கிறது- ஆனால் ஒன்றும் அவர்கள் செய்யவில்லை.

Q.—அதை யார் பழுது பார்த்துக்கொண்டு வருகிறார்கள் ?
A.—குடிகளாகச் செய்துக்கொண்டு வருகிறார்கள்.

The CHAIRMAN :

Q.—Proprietor எங்கே இருக்கிறார் ?
A.—Barodaவில் இருக்கிறார்.

Q.—இப்பொழுது எத்தனை Properietorகள் இருக்கிறார்கள் ?
A.—20 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். ஆதியில் Impartible ஜமீன்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—சட்டத்தில் Impartible, partible என்று போட்டிருக்கிறதா ? தெரியுமா ?
A.—ஆக்டைப் பார்க்கவில்லை. எனக்குத் தெரியும்.

Q.—சர்வே ஆயிருக்கிறதா ?
A.—ஆகவில்லை.

Q.—சர்வே பண்ணினால் யார் சிலவைக் கொடுக்கவேண்டும் ?
A.—பகுதி கிராமங்களில் இருக்கிறவர்கள் கொடுக்கவேண்டும்.

Q.—வசூல் விஷயத்தில் தொந்திரவு இல்லையே ?
A.—இல்லை. கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—50 கிராமங்களைப்பற்றி சொல்லுகிறீர்களா ? அல்லது உங்கள் கிராமத்தைப்பற்றி சொல்லுகிறீர்களா ?
A.—57 கிராமங்களுக்காகச் சொல்லுகிறேன்.

Q.—அந்த கிராமங்களைப்போய்ப் பார்த்திருக்கிறீர்களா ?
A.—போயிருக்கிறேன்.

Q.—போகிறதற்கு என்ன அவசரம் ?
A.—அங்கே இருக்கிறவர்களெல்லாம் எனக்கு வேண்டியவர்கள். எனக்கு தெரிந்தவர்கள். உடையார்பாளையம் ஜமீன் கோர்ட்டு கிளார்க்காயிருந்திருக்கிறேன்.

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?
A.—5, 6 காணி இருக்கிறது.

Q.—இப்பொழுது இருக்கிறதா ?
A.—இருக்கிறது.

Q.—யார் சாகுபடி செய்கிறது ?
A.—நான்தான் செய்கிறேன்.

Q.—இந்த தீர்வை செலுத்திக்கொண்டிருக்கிறிர்களே. இது எவ்வளவுகாலமாயிருக்கிறது ?
A.—நீண்ட காலமாக யிருக்கிறது.

Q.—புதிதாகப் போட்டதில்லையே ?
A.—இல்லை.

Q.—வரி ஜாஸ்தியாக இருக்கிறதென்று சொன்னீர்களே. கலெக்டருக்கு குறைக்கவேண்டுமென்று எதாவது மனு போட்டீர்களா ?
A.—இல்லை.

Q.—ஏரி மராமத்து செய்யவில்லை என்று கலெக்டருக்கு மனு கொடுத்தீர்களா ?
A.—இல்லை-

Witness No. 158. **7th February 1938.**

Trichinopoly.

Mr. Sengappa Goundar of Attipatti village, Harur taluk—
Did not give any oral evidence, but filed some records.

Witness No. 159. **Trichinopoly.** **7th February 1938.**

Oral evidence of Mr. A. R. S. M. Somasundaram Chettiyar of Devastanam Puduppatti, Marungapuri Zamin.

ஜமீன் Court of Wardsல் இருக்கிறது. இப்பொழுது 10 வருஷமாச்சு. அங்கே இருக்கிற கிராமங்கள் மலையை அடுத்திருக்கின்றன. Forest ஆக ஏற்படுத்திக்கொண்டு மாடு வகையறுக்களை மேய்க்கவிடாமல் நிர்பந்தம் செய்கிறார்கள். மலைகளிலும் அடிவாரங்களிலும் எனக்கு அங்கே என்னுடைய நிலம் இருக்கிறது. 200 எக்கராவுக்குமேல் இருக்கிறது.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—முன்னையெல்லாம் மேய்த்துக்கொண்டிருந்தீர்களா ?
A.—முன்னையெல்லாம் மேய்த்துக்கொண்டுதானிருந்தோம்.

Q.—தீர்வை முன்னே வாங்கினார்களா ?
A.—ஜமீன்தார் காலத்திலும் தீர்வை வாங்கிக்கொண்டுதான் இருந்தார்கள். அதற்கு முன்னே இருந்ததோ, இல்லையோ தெரியாது. எனக்குத் தெரிந்ததிலிருந்து சொல்லுகிறேன். தீர்வை வாங்குகிறார்கள். 10 வருஷமாக கெடுபிடியாக இருக்கிறது. அதற்கு முன்னால் 2 பைசா, 3 பைசா வாங்கிக்கொண்டிருந்தார்கள். வெள்ளாட்டுக்கு 2 அணா, செம்மறியாட்டுக்கு 6 பைசா, மாடுகளுக்கு ஒரு அணா வருஷத்துக்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஜமீன்தார் காலத்தில் இப்போது 6 அணா, 3 அணா, 9 அணா என்று வாங்குகிறார்கள். வெள்ளாடு மலையில் ஏறக்கூடாதென்று சொல்லுகிறார்கள். ஒரு தழையை கீழே அறுத்தாலுங்கூட சீட்டு வாங்கவேண்டுமென்று தடுத்துவிடுகிறார்கள். நிலங்களுக்கு உரத்துக்காக ஒரு தழை எடுக்க முடியவில்லை. முன்னே அதற்கு வரி கிடையாது. இப்பொழுது வாங்குகிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—எத்தனை வருஷங்களுக்கு முன் கிடையாது ?
A.—10 வருஷங்களுக்கு முன் இல்லை.

Q.—இப்பொழுது எப்படி வசூல் பண்ணுகிறார்கள் ?
A.—ஒரு வண்டி தழைக்கு 6 அணா, 4 அணா என்று போட்டு வாங்குகிறார்கள். எனக்கு தெரியாது. Court of Wards வந்த பிறகுதான் இந்தப்படிக்கு தீர்வை வாங்குகிறார்கள். கல்யாணம் முதலிய காரியங்களுக்கு தினம் எரிக்கக்கூட விறகு எடுக்கக்கூடாது. சீட்டு வாங்கினால் கொடுக்கிறார்கள். விறகு எடுத்துக்கொள்ள இடம் வேண்டும்.

The Zamindar of Mirzapuram :

Q.—தீர்வை கொடுத்தால் கொடுக்கிறார்களா ?
A.—எல்லோரும் கொடுத்து வாங்க முடியுமா ? முடியாது.

விவசாயத்துக்கு நுகம் முதலியவை வெட்டிக்கொள்ள முடியவில்லை. வரிச்சல் சுமைக்கு 4 அணா, கை மரங்களாயிருந்தால் 5 அணா, என்று வைத்திருக்கிறார்கள். ஒரு கட்டுக்கு வண்டியாயிருந்தால் ஒரு வண்டிக்கு இவ்வளவு என்று வாங்குகிறார்கள். ஜமீன்தார் காலத்தில் வெள்ளாட்டுக்கு 2 அணா, இப்பொழுது வெள்ளாடே போகக்கூடாது. எருதுக்கு 6 அணா வாங்குகிறார்கள். ஜமீன்தார் செத்தபிறகுதான் இப்படி வாங்குகிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—Court of Wardsக்கு வந்த பிறகா வாங்குகிறார்கள் ?
A.—Court of Wardsக்கு வந்த பிறகுதான் என்று சொல்லுகிறேன்.

Q.—நிச்சயமாகச் சொல்ல முடியுமா ? ஆதாரம் இருக்கிறதா ?
A.—ஆதாரம் இல்லை.

தரிசு நிலங்கள் புறம்போக்கு நிலங்கள் என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். அவைகளை குடிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். குடிகளுக்கு பட்டா கொடுக்கவேண்டும்.

The Zamindar of Mirzapuram :

Q.—எதற்காகக் கொடுக்கவேண்டும் ?
A.—பட்டா செய்து தரவேண்டும். குடிகளுக்குச் சேர்ந்த நிலங்கள் அவர்களுக்கு இருந்தால் பிரயோஜனமுண்டு. ஜமீன்தாருக்கு இருந்ததினால் பிரயோஜனமில்லை.

Forestல் ஒரு மரம் கூட பலன் தரக்கூடியது கிடையாது. குடிகளுக்கு அந்த Forestஐ விட்டு விட்டால் ஒரு பாதகமும் இல்லை. சப்பாத்திக்கள்ளியும் உசிலும்தான் இருக்கிறது.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—ஜமீனில் விறகுவெட்டி விற்கிறார்களா ?
A.—அதுதான் கூடாது என்று சொல்லுகிறேன்.

Mr. B. VENKATACHALAM PILLAI:

Q.—Forestஐ பாதுகாக்காவிட்டால் விறகு ஒன்றும் கிடைக்காதே கொஞ்நாளைக்குப் பிறகு ?

A—கொஞ்சமாக வெட்டிக்கொள்ளவேண்டும். நாங்கள் வெட்டி விற்கவில்லை. ஜமீனிலும் கூப்பு குத்தகைக்குத்தான் விடுகிறார்கள். கரிக்கு விடுகிறார்கள். வேறு வரும்படி ஒன்றும் கிடையாது. விளைவு இல்லாத காலத்தில் பூராத் தீர்வையையும் வாங்குகிறார்கள். அப்பொழுது வஜா கொடுக்கவேண்டும். மழை பெய்து இரண்டாம்போகம் பயிர் செய்தால் முதல் போகத்தின் தீர்வையில் பாதியைப் போட்டுவிடுகிறார்கள். ஏக்கருக்கு ஒரு ரூபாயிலிருந்து எழு ரூபாய் வரையில் இருக்கிறது. தரவாரியாக வைத்திருக்கிறார்கள்.

Mr. B. VENKATACHALAM PILLAI:

Q.—எந்தப் பயிர் விளைந்தாலும் ஒரே தீர்வைதான் போடுகிறார்களா ?

A.—ஆமாம்.

Q.—பக்கத்தில் அயன் கிராமம் இருக்கிறதா ?

A.—இருக்கிறது.

Q.—ஒன்றுக்கொன்று வித்தியாசம் இருக்கிறதா ?

A.—இருக்கிறது. ஐந்து, ஆறு மைலுக்கப்பால் இருக்கிறது.

தீர்வை அதிகம் என்று சொல்லவரவில்லை. விளையாத காலத்தில் வஜா செய்யவேண்டுமென்று தான் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாம் போகத்துக்கு நீர்கூலி போடுகிறார்கள். அது வேண்டாமென்று சொல்லவேண்டும். நஞ்சை, புஞ்சையைத் தவிர ஒரு கிணற்றை வெட்டி ஒருவன் தண்ணீர் இறைத்தால் அதை தோட்டம் என்று வைத்துக்கொண்டு தீர்வையை அதிகப்படுத்தி வாங்குகிறார்கள். தோட்டம் என்று இருக்கக்கூடாது. அது குடியானவனுடைய முயற்சியினால் வந்தது. அதற்கு தோட்டம் என்று வைக்கக்கூடாது. நஞ்சை அல்லது புஞ்சை என்றுதான் இருக்கவேண்டும். சிறு சிறு கம்மாய்கள் இருக்கின்றன. குளங்களுக்கு மராமத்து பண்ணுகிறதே கிடையாது.

Q.—எத்தனை வருஷங்களாகச் செய்யவில்லை ?

A.—முப்பது முப்பத்தைந்து வருஷங்களாக எனக்குத் தெரியும். செய்யவில்லை.

Q.—கோர்ட்டு ஆப் வார்ட்ஸுக்கு வந்து எத்தனை வருஷங்கள் இருக்கும் ?

A.—கோர்ட்டு ஆப் வார்ட்ஸுக்கு வந்து பத்து, பதினொறு வருஷமாகிறது. அவர்கள் காலத்திலும் செய்யவில்லை.

Q.—மனு போட்டீர்களா ?

A.—கலெக்டருக்கு மனு போடுகிறோம். அதை மானேஜருக்கு அனுப்பிவிடுகிறார்கள். எங்களுக்கு பதிலே சொல்லுகிறதில்லை. குடிகளுடைய குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள இடம் வாய்க்கவில்லை.

The CHAIRMAN:

Q.—எழுத்து மூலமாக ஒன்றும் கொடுக்கவில்லையா ?

A.—நான் எத்தனையோதரம் மனுப்போட்டிருக்கிறேன். ரிஜிஸ்தர்பண்ணிப் போட்டிருக்கிறேன். நேரில் மானேஜரிடத்திலும் கொடுத்திருக்கிறேன். மானேஜரைக் கூட்டிக்கொண்டு வந்துஒப்புவிக்கிறேன். மானேஜரிடத்தில் சொன்னால் கலெக்டருக்கு எழுதவேண்டுமென்று சொல்லுகிறார். கலெக்டருக்கு எழுதினால் பதிலே கிடையாது. மானேஜருக்கு அனுப்பிவிடுகிறார்கள். பிரத்தியக்ஷமாகத் தெரிந்த விஷயம். நான் ஒன்றும் சேர்த்துக் சொல்லவில்லை.

The CHAIRMAN:

Q.—அவைகளுக்கெல்லாம் காப்பி இருக்கிறதா ?

A.—நான் கொண்டுவரவில்லை. வீட்டில் இருக்கிறது.

நாளைக்கு கொண்டுவாருங்கள்.

Witness.

புதுப்பட்டியில் இருக்கின்றன. எங்கே கொண்டுவந்து கொடுக்கச் சொன்னாலும் கொண்டுவந்து கொடுக்கிறேன்.

Witness continuing.

நிலத் தீர்வையையும் மரத் தீர்வையையும் குறைத்துக் கொடுக்கவேண்டும். புளிய மரத்துக்கு மூன்று அணு ஆறு பைசாவும் தென்னைமரத்துக்கு ஐந்து அணுவும் போட்டிருக்கிறார்கள். பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் போட்டுவிடுகிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPUR:

Q.—செடி இல்லாவிட்டாலும் போட்டுவிடுகிறார்களா ?

A.—இருந்தால்தான் போடுகிறார்கள். மரங்கள் பட்டுப்போயிருந்தாலும் தீர்வையை வஜா செய்யாமல் இன்னும் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR:

Q.—நீங்கள் ஆக்ஷேபிக்கவில்லையா ?

A.—ஆக்ஷேபித்து மனு கொடுத்தோம். மூன்று வருஷம் தீர்வையைக் கொடுத்தால் அந்தத் தீர்வையை வஜா பண்ணுவோமென்று சொன்னார்கள். கட்டினேன். அப்புறமும் வஜா செய்யவில்லை.

The CHAIRMAN:

அந்த பேப்பரை எல்லாம் கொண்டு வாருங்கள். கொடுத்தால் அவருக்கு கொடுத்துவிட்டு explanation கேட்க முடியும்.

The Zamindar of Mirzapur :

Q.—ஜமீன்தார் இருக்கிறபோதுகூட இப்படி இருந்ததா ?
A.—அது ஐம்பது வருஷமாக இருந்துவருகிறது. நீர்ப்பாசன வசதிகள் இல்லை. குளம் உடைந்து போனால் ஒரு விதமான மராமத்தும் கிடையாது. கிஸ்தி பாக்கிக்கு ஏலம் போடுகிறார்கள். இரண்டு ரூபாய் பாக்கியிருந்தால் முப்பது ரூபாய் இருபத்தைந்து ரூபாய் பாக்கிக்கு கொண்டுவந்துவிடுகிறார்கள். அவ்வளவு தொகையையும் வாங்கிக்கொண்டு சிலவையும் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஏழைகள் பெரும்பாலும் இருக்கிறார்கள். அதிகப்படியான சிலவுக்கு இடமில்லை. ஜமீன் குடிகளுக்கு சொற்ப வட்டிக்கு நீண்ட காலத் தவணைக்கு கடன் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்கிறேன். பட்டாக் குடிகள் நிலங்களுக்கு பக்கத்தில் நாலு விரலுக்கு அப்பால் இருந்தாலும்கூட அந்த மரம் உங்களுக்குப் பாத்தியம் இல்லையென்று காம்பவுண்டு 30, 20 என்று போட்டுவிடுகிறார்கள். அது இல்லாமல் பட்டா குடிகளே அடையும்படி அனுமதிக்கவேண்டும்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அது புறம்போக்கு மரம்தானே. அதில் நமக்கு பாத்தியம் இல்லையே.
A.—அப்படித்தான் அவர்கள் சொல்லுகிறார்கள்.

Q.—உங்கள் கிராமத்துக்கு சர்வே ஆயிருக்கிறதா ? இல்லையா ?
A.—ஆயிருக்கிறது. 30, 40 வருஷத்துக்குமுன் பண்ணியிருக்கிறார்கள்.

Witness continuing.

குடிகளுக்குச் சொந்தமான குளத்திலிருக்கிற மரங்களையும் கரையிலிருக்கிற மரங்களையும் வெட்டிக் கொள்ள அனுமதி கொடுக்கவேண்டும். மகசூல் விளையாத காலங்களில் சங்கம ஸ்தாவர சொத்துக் களை ஜப்தி செய்து வாங்குகிறார்கள். மகசூல் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறோம்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—ஒரு வருஷத்தில் மகசூல் இல்லாவிட்டால் அடுத்தவருஷம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ?

A.—ஆம். இப்பொழுது என்ன செய்கிறார்களென்றால் சட்டி, வட்டியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதைவிட்டுவிட்டு மகசூல் உள்ள காலத்தில் எடுத்துக்கொள்ளட்டும். ஜமீனுக்கு சொந்தமான காண்ட்ராக்ட் வேலைகளை வெளியூர்களிலுள்ளவர்களுக்கு கொடுக்கிறார்கள். அதை நிறுத்திவிட்டு ஆயக்கட்டில் நிலம் வைத்திருக்கிறவர்களுக்குத்தான் அவைகளைக் கொடுக்கவேண்டு மென்று சொல்லுகிறேன். அவர்கள் நன்றாய் செய்வார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அயன் கிராமத்தில் செய்கிறமாதிரி செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்களா ?
A.—ஆமாம்.

Witness continuing.

விவசாயிகளுக்கு ஹத்து காட்டவேண்டுமென்று சொன்னால் கட்டணம் கட்டச் சொல்லுகிறார்கள். அது இல்லாமல் செய்து தரும்படி செய்யவேண்டும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—எவ்வளவு ரூபாய் கேட்கிறார்கள் ?
A.—சமயத்துக்குத் தக்கபடி கேட்கிறார்கள். ஒரு பைசாகூட கேட்காமல் செய்து தரும்படியாகச் சொல்லவேண்டும்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அயன் கிராமத்தில் அப்படித்தான் வாங்குகிறார்கள். அது மாதிரி கேட்கிறார்கள் ?
A.—எங்களுக்குத் தெரியாது. எங்கள் கிராமத்திலுள்ளவர்கள் ஏழைகள். ஜமீன் பிரதேசங் களில் 100 கிராமங்கள் இருக்கின்றன. பரம்பரையாக முன்சீபு, கர்ணன்களைத் தவிர வேறு வேலை ஒருவருக்கும் கொடுக்கிறதில்லை. படித்தவர்களுக்கு ஜமீன் எஸ்டேட்டில் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். நிலத்துக்கு வேறு தீர்வை மரத்துக்கு வேறு தீர்வை வாங்கு கிறார்கள். அது இருக்கக்கூடாது. பக்கத்து நிலத்துக்கு பட்டா கொடுக்கவேண்டும். அதற்கு ஒன்றும் வாங்கக்கூடாது. பட்டா அப்போதைக்கப்போது கொடுக்காமல் கூட்டுப்பட்டா வைத்துக்கொண்டிருக் கிறார்கள். நான்கு பேர்கள் செலுத்தவேண்டியதாயிருந்தால் மூன்று பேர்கள் செலுத்தி ஒருவன் செலுத்தாமலிருந்தால் மற்றவர்களிடத்தில் வசூல் பண்ணுகிறார்கள். அதை நிறுத்திவிடவேண்டும். ஜாயிண்ட் பட்டாவே இருக்கக்கூடாது. புறம்போக்கு தரிசு நிலங்களை வெட்டித் திருத்தி மரம் வைத்து உண்டுபண்ணினால் அவனை விரட்டிவிட்டு ஜமீனில் பிடுங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவை களைக் குடிகளுக்கு விட்டுவிடவேண்டுமென்று சொல்லுகிறேன். பழைய காலத்தில் இருந்த பண்ணை நிலங்களைத் தவிர வேறு நிலங்களை ஜமீன்தாருக்கு பட்டா செய்யக்கூடாது.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—யாருக்கு விட்டுவிடவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ?
A.—இதற்குமுந்தி ஜமீந்தார்பேருக்கு பட்டாவாயிருக்கிற நிலங்களை குடியானவனுக்கு மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறேன்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—பண்ணை நிலங்கள் என்று சொல்லுகிறீர்களே. அதிலேதானே அந்த மரங்கள் இருக் கின்றன ?
A.—குடியானவர்கள் புறம்போக்கில் மரங்களை வைத்து உண்டுபண்ணியிருக்கிறார்கள். அவை களை குடிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். அடுத்த நிலத்துக்காரன் தென்னை மரங்களை பக்கத்திலுள்ள புறம்போக்கில் வைத்து உண்டுபண்ணுகிறான். என்னுடைய நிலத்துக்கு பக்க நிலம் இருக்கிறது. அதை தங்கள் சொந்த நிலமென்று சொர்ல்லுகிறார்கள். நிலத்தையும் மரத்தையும் பக்கத்து நிலத்துக்காரனுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறேன்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—சப்-ரிஜிஸ்ட்ராராபீஸ் பட்டாவை மாற்றலாமே. நீங்கள் என் அப்படி செய்யக்கூடாது ?

A.—முப்பத்தேழு வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட பட்டா மாருமலே இருக்கிறது. ஐம்பது பேர்களுக்கு கூட்டுப்பட்டா இருந்தால் ஐம்பது பேர்களுடைய சம்மதத்தையும் கேட்டுத்தான் மாறுவோமென்று சொல்லுகிருர்கள். Court of Wards காலத்திலும் அப்படித்தான் இருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPUR :

Q.—இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறதா ?

A.—முன்னே அருந்தது அப்படியே இருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—Court of Wards காலத்திலும் ஒன்றும் செய்யவில்லையா ?

A.—இந்தப் பத்து வருஷங்களாக மாற்றிக் கொடுக்கிருர்கள். இப்பொழுதுதான் மாற்றிக் கொடுக்கிருர்கள்.

The CHAIRMAN :

Q.—பத்து வருஷங்களாக Court of Wards management-ல் இருக்கிறது. அதில் complaint இருந்தால் 1, 2, 3 என்று சொல்லுங்கள்.

A.—ஜமீன்தார் ஏற்பட்ட தேதியிலிருந்து சொல்லுகிறேன். இப்பொழுதும் அதுதான் நடக்கிறது.

The CHAIRMAN :

Court of Wards பேரில் சொல்லுகிறதற்கு ஆதரவு இருந்தால் எடுத்துக்கொண்டு வாருங்கள். மறுபடியும் விசாரிக்கிறோம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறோம். திரும்பி வந்தால் உங்களை விசாரிக்கிறோம். பத்தாம் தேதி வாருங்கள். அன்றைத் தினம் என்னென்ன இருக்கிறதோ அதையெல்லாம் சொல்லுங்கள்.

Witness No. 160. Trichinopoly. 7th February 1938.

Oral evidence of Mr. Bakthavathsalu Nayudu of Inam village Tirupuvanam in the Kumbakonam taluk.

The WITNESS : I have given a petition that Section 6 (1) of the Estates Land Act should be so amended as to take away the right of the Pandarasannadhi of Dharmavaram to compel us to vacate from nearly a thousand houses which we have built in the village of Tirupuvanam, comprising nearly 170 acres and 60 cents. We want that some machinery should be found by which accommodation might be provided for all of us in this temple inam village ; we have been occupying these houses for a long number of years ; although we agree to pay pahudhi or rent, we are asked by the Pandarasannadhi to vacate them. Each house is likely to cost about Rs. 500 and there are about 1,000 or 1,500 such houses. We are also prepared to pay, if necessary, the value of the ground.

The CHAIRMAN : Suits in regard to this question might be pending now, or some suits might have been even decreed. So far as we are concerned, the question to be decided is whether such questions as this are within our province to go into. If it is a village site, as represented, in which all the villagers are interested jointly, I think it cannot become the exclusive property of the Pandarasannadhi.

Mr. A. RANGASWAMI AYYANGAR : Probably we may have cases like this in mind when we take up legislation. But I do not know if we should go into these cases just now.

The ZAMINDAR OF MIRZAPURAM : If suits are pending and if the High Court passes decrees one way or the other hereafter, how can we now examine the question ?

The CHAIRMAN : We have been enquiring into these matters from the very beginning. We are not subordinate to any court. We are now examining everything relating to the land, to the zamindar and the tenant, the inamdar and the tenant and the mukasadar and the tenant—all that comes under the Estates Land Act. We have to find out how the law is imperfect and how we could amend it.

Mr. A. RANGASWAMI AYYANGAR : We agree with you there ; but the question is whether we can decide anything now, when cases are before the courts.

The CHAIRMAN : That is a matter for you to consider and on which you should submit a report. We are merely agents here to report on certain things. We are not deciding anything just now. Here is the diglott register which shows that it is a village site. If all these people who are now occupying the houses are trespassers, they will have to vacate. (Addressing the witness)—

Q.—How did you get the power to construct houses in this village ?

A.—(In Tamil.) These houses have been in existence for more than 50 or 60 years. Some of us have been recently compelled to give an agreement by which we bind ourselves

to pay a monthly rent. Even recently, when the Survey department made a survey, we put in petitions that we should be given pattas in our names ; the Pandarasannadhi also gave a similar petition ; but the Survey department refused to give patta in the name of either.

THE CHAIRMAN : I think this is a matter which will have to be settled in a court of law. If you have any documents to prove what you say, bring them tomorrow and we shall see what can be done.

The witness then withdrew.

The Committee, at this stage (5-50 p.m.) adjourned to meet again at 11 a.m. on the next day.

The Committee met at the Collector's Office Buildings, at Trichinopoly at 11 a.m. on 8th February 1938.

All the members were present.

Witness No. 161. **Trichinopoly.** **8th February 1938.**

Oral evidence of Mr. G. P. Subrahmanya Ayyar, retired advocate, Ganapathi Agraharam, Papanasam taluk, Tanjore district.

The CHAIRMAN :—You have already submitted a memorandum ?

A.—Yes.

Q.—You are speaking on behalf of ?

A.—Ganapathi Agraharam, Manalur.

Q.—You are speaking for the Inam tenants ?

A.—Yes.

Q.—What is the nature of the tenure of your village ?

A.—The village originally formed part of the Tanjore Raj and the whole estate was acquired by an Act of State. This estate was the subject matter of a suit which went up to the Privy Council. I have already submitted papers in connection with this and sent up a Memorial to His Excellency Lord Pentland in 1917. (Here he produced a copy.)

After it became the Governmet property, it remained so for sometime and Her Majesty Queen Victoria re-granted the villages to the widows of the Rajas and also to the heirs of the Rajas. Now most of the heirs have become poor and the property has come into alien lands.

During the time of Her Majesty Muchalikas were taken from the tenants. After the re-grant the estate was managed by receivers. Grain rent at a certain level was fixed on the estimated gross yield.

This rent is now enormously high. The Estate authorities have been promising Survey and Settlement. The last Muchalika was taken in 1892.

Q.—By whom was the Muchalika taken ? *A.*—It was by the District Court Manager. The Melvaramdar's due for every veli for double crop is Rs. 350, and half is fixed as Melvaram by the receiver. You will find extracts. Justice Davis when he was the District Judge had occasion to remark that the rent was unfair and enormously high. Another Sub-Judge who looked into the papers called it very high and as deliberately fixed high and reduced the real price of paddy at Rs. 3 per kalam to Rs. 1–2–6 per kalam. I put it to the Committee that it has been fixed at 258 kalams per veli, i.e., 6 2/3 acres. It works out to 1½ times or more assessment prevailing in the adjacent ryotwari area. The ryotwari areas have better irrigation facilities when compared with this.

Q.—You say the present rate is very high ? If you want to show that it was lower and now gradually it has risen, take some record and explain. *A.*—Even according to the Estate Accounts.

Q.—What is the point you are making ? *A.*—It was originally the Raja's private property.

Q.—Private property means ? *A.*—He was not a zamindar. Under the Treaty, he was put in possession. He was enjoying the properties.

Q.—Then what happened ? *A.*—By an Act of the State the whole property was taken over by the Government. Afterwards on an application made by the widows of the Raja it was re-granted by Her Majesty Queen Victoria. The effect of the grant has been construed by the Madras High Court, in Full Bench case, where they say it is the right of the Government to collect assessment due on the lands that has been assigned over.

Q.—What was the rate of rent before the Treaty and tell me what it is after the Treaty, if you can, and after the re-grant ? *A.*—It has been almost the same. At one time it was 52 per cent of the gross outturn (estimated outturn). Sometimes it was 48 per cent. From the records and from the time of Muchalikas of Queen Victoria it has been the same.

Q.—What do you mean by that ? *A.*—Forty-eight per cent of the gross outturn assessment. When considering the cost of labour, etc., it was very often promised that the revenue payable in the Government villages would be fixed. Therefore, I suggest that the revenue payable in the Government villages may be promised. That is the point about the rent. Therefore it is a point which I have brought to the Comittee's attention.

Mr. B. NARAYANASWAMI NAIDU : *Q.*—Promised by whom ? *A.*—By the receiver.

The CHAIRMAN : *Q.*—He was promised that the present rate would be reduced by the receiver, whereas that promise was not fulfilled ? *A.*—I find that from the Muchalikas the above promise being made almost at every stage. We find that this marked distinction. The village is not Surveyed and Settled and rent fixed according to taram rate. (He exhibited Muchalikas.) Two more Muchalikas are here taken by Her Majesty in 1861 and 1867. (Exhibited them.)

Q.—Have you got any Muchalikas of the heir's time ? *A.*—Yes. One I have exhibited. The estate was under the management of the receivers. At one time because of the Civil litigation the Collector had to manage. That is why we find that Mr. Oliver was a Special Receiver. Retired Tahsildars and Deputy Collectors were receivers. So it is through receivers alone that the Estate has been managed till it has been parcelled out actually. Some of the Muchalikas were taken at the time of Mr. Sundaresa Iyer, the receiver.

Q.—What is the next point? *A.*—I have at present dealt with what our difficulties are. There is absolutely no land for grazing purposes. Something must be done if possible to acquire lands for that purpose. Some scheme may be evolved and some lands reserved for grazing so that the cattle can thrive in the zamindari areas.

Q.—In the zamindari areas ? *A.*—Yes.

Q.—Was there formerly ? *A.*—If it is possible to do something, it could be done. You may take into consideration all these points.

Q.—Formerly was there any common pasture land ? *A.*—No. Absolutely nothing of that sort in our parts. Every inch of the land was converted or brought under cultivation.

Q.—We find that the same of the document, there is something of the description. *A.*—Not so in our parts. Even from the old Muchalikas we do not find that.

Q.—Are you living in your village ? *A.*—I am in close touch with the village for the past 7 years.

Q.—Before that ? *A.*—I was in Tanjore.

Q.—You were a lawyer ? *A.*—Yes I was a lawyer. I left the village when I was very young and went back after retirement.

Mr. A. RANGASWAMY IYYANGAR : *Q.*—How is it that Agraharamdars own kudivaram interest in this Estate ? *A.*—I do not know how it has come. Several people own lands.

Q.—Melvaram is owned by the Raja and kudivaram by the tenants ? *A.*—No answer.

Q.—They have come by way of alienation ? *A.*—Yes.

Q.—Are there Melvaramdars cultivating the lands themselves or have they leased it to under-tenants? *A.*—Some of them who own small holdings, they themselves might cultivate, some might lease out.

Q.—Some of them lease out ? *A.*—Yes. Some of them.

Q.—Can you give us the idea of the proportion of the lease amount which these Melvaramdars get? How much percentage will be left as profit ? *A.*—I quite follow you. About 15 per cent profit will be left for the cultivator, after paying the lease and meeting out the cultivation expenses.

The CHAIRMAN : *Q.*—It depends on the price ? *A.*—Yes. Now it has fallen. That is why we are unable to stand the strain.

Mr. A. RANGASWAMY IYYANGAR : *Q.*—You say the water-rate is illegal ? *A.*—Yes. Because we are paying already high rates.

Mr. MAHBOOB ALI BAIG : *Q.*—What is your complaint ? Is it about the 50 per cent giving to the Melvaramdar or about the fall in prices ? *A.*—I object to both. The very percentage of 48 or 50 per cent of the gross yield is extremely high. The estimate itself is mere an assumption and not an actual fact.

Q.—You say you want the ryotwari rates? I mean on the basis of ryotwari rent? *A.*—Exactly so. Not this 45 or 50 per cent business.

Q.—You want the rate of rent to be fixed on a scientific basis. *A.*—Yes.

Mr. V. V. JOGAYYA PANTULU : *Q.*—What is the ryotwari rent in the neighbouring village. *A.*—I cannot give the present figures; not more than Rs. 16 per acre for double crop. I have worked out and found that we are paying 60 per cent for the same identical lands.

Mr. MAHBOOB ALI BAIG : *Q.*—You traced the history of the Melvaramdar to Her Majesty's time, to the Rani times and when it was re-granted, etc. You said that the Rani was entitled to 52 per cent of the gross produce? *A.*—Not that she was entitled to but she claimed.

Q.—Historically speaking 50 per cent or 60 per cent was the Raja Bakha (ராஜ பாகம்). *A.*—In this case, it seems so.

Q.—So it continued and was reduced to 48 per cent. *A.*—Yes.

Q.—Historically speaking you have no reason to complain? *A.*—Except this, that the gross estimate might have been wrong at that time.

Q.—Now what should be the proportion? Supposing it is estimated correctly, have you any objection for paying that 48 per cent. *A.*—If it is 48 per cent of the net, I am ready to part with it in that case. My complaint is that it is calculated all along on a wrong basis.

Mr. PALLAM RAJU : *Q.*—Are you a cultivator yourself? *A.*—Yes. I am not personally. I get it done through my servants, i.e., by keeping a Panniyam. Some lands I have leased out and the tenants are giving me 30 to 40 per cent of the profits. What is left is barely enough to meet the Melvaramdar's dues. That is my complaint.

Mr. NARAYANASWAMI NAYUDU : *Q.*—Is there any water-rate? *A.*—There is a peculiar custom. (The witness said some Tamil words which were inaudible.)

The CHAIRMAN : *Q.*—Explain. *A.*—The whole village is made up of 40 karais, i.e., 640 units. Each is called a visam 1/16. That is why you will find in the Muchalikas. In this system every man will come in possession of lands by re-distribution. The whole consists of 7,200 velis.

Mr. A. RANGASWAMI AYYANGAR : *Q.*—It is a very good system? *A.*—There are good and bad points.

Mr. B. NARAYANASWAMI NAYUDU : *Q.*—Are the lands purchased by the villagers? *A.*—Out of that payment my portion is 1/640, corresponding to that description. This rotation or re-distribution is done once in 6 years or 11 years as at present.

Mr. MAHBOOB ALI BAIG : *Q.*—For every distribution it is made, It will be shifting? *A.*—Yes. My share will be there but not the same lands. Equivalent to my share I will get another block.

Q.—Who will show you that is your block? *A.*—You cast lots and whoever draws the name, a particular block for, will be noted.

Q.—Is it a lottery? *A.*—No. There are 4 main divisions made. The whole village will be divided into 4 equal parts. Lots are cast. One man representing that will get. Then he will split it into 10 karas and thus the division will go on till the last block.

The CHAIRMAN : *Q.*—You have no objection to it now? *A.*—Personally, I have objection. It is at my instance they have enlarged the period for 11 years. I said that 6 years will not be enough to improve.

Q.—If it is surveyed and settled, all difficulties would go? *A.*—They will do it very practically. Now what they do is they estimate in a rough and ready manner the Thittam and the yield.

Q.—Are you willing to share the costs of Survey? *A.*—That is a statement which we have already made. Mr. Narayana Iyer, District Judge, has made a note that we could not be called to make any contribution towards Survey unless that is followed by settle ment. The Act itself is very clear. We are prepared to do so, if settlement also follows. (33 M.L.J. Page 333—The witness referred to the judgment.)

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—What is this estimate called Thittam? *A.*—No. Kudivaram.

Q.—It is on that basis the 48 per cent is charged? *A.*—Yes.

Q.—Are there exchange of pattas and Muchalikas every year. *A.*—No.

Q.—For what periods then ? *A.*—The last muchalika will continue till it is settled. Till now they were taking for 7 or 10 years. The last has completely sealed our fates. There is no doubt a provision in the Madras Estates Land Act, which govern over the transfer of pattas, etc. In practice we do not find any.

Take my own case: I have got the Record of Rights. The survey as made is practically of no use. It is a sham survey. 350 acres are registered in the name of 15 individuals. What fraction is owned by A or B will not be known. How much each man has got nobody knows. Even in the case of alienation, I find that lands still stand in my name. Very recently the system is introduced that whenever a document is registered and when applications are sent for transfer of pattas and muchilakas it ought to be done. Though petitions were sent they are not paid any need.

Mr. A. Rangaswami Ayyangar: *Q.*—That system recently came to operate ? *A.*—Yes. Even then it has not received any attention. These irresponsible (please excuse me) landholders, they do not care what is going on. I have quoted my own case wherein these things were not effected. So far as I am concerned I may be able to have my grievances redressed, but what about the voiceless many.

The Zamindar of Mirzapuram: *Q.*—You are an Inam tenant ? *A.*—Yes.

Q.—What is the extent of the land ? *A.*—About 92½ acres wet and dry.

Q.—How much wet ? *A.*—About 4/5 of it.

Q.—Irrigated by what ? By the Cauvery river ? *A.*—We are not affected by the project.

Q.—How did you get the lands, did you purchase them ? *A.*—I purchased the lands practically the whole portion.

Q.—How much, may I know, you purchased lands for, or at what rate ? *A.*—I purchased them from Rs. 600 to 2,000 per visam, i.e., 1-3/5 acres.

Q.—How many visams, you purchased at Rs. 2,000 ? *A.*—About one or two visams.

Q.—And the rest ? *A.*—From Rs. 1,000 to 1,500 and from Rs. 1,500 to 2,000 about 10—15 visams and the rest below Rs. 1,000.

Q.—In which year did you purchase the lands ? *A.*—From 1905 up to 1931.

Mr. Pallam Raju: *Q.*—When did you pay the highest price ? *A.*—In 1922, I think.

The Zamindar of Mirzapuram: *Q.*—There is no change in the amount of rent or no change in the rate of rent per acre ? *A.*—No change in the rate of rent fixed in grain but there has been change in the rate-price.

Mr. Pallam Raju: *Q.*—You purchased at Rs. 2,000 in what year ? *A.*—In 1921 or so. The price of paddy was Rs. 4 per kalam.

The Zamindar of Mirzapuram: *Q.*—When was the price low ? *A.*—About 1903 or 1904 and up to 1921. I have purchased. The registered deeds there are. These dates will show the gradual rise of prices from Rs. 600, 750, 850 and so on.

Q.—Even in 1904, you purchased at the rate of Rs. 600. Is it the minimum rate ? *A.*—Yes.

Q.—Do you cultivate the land yourself ? *A.*—By hired labour a portion.

Q.—Do you lease out to under-tenants ? *A.*—Yes. Some small payments, in some years.

Q.—What about this year ? *A.*—I have not done so. One-third by the hired labour and ⅔ on Varam. That is, after giving the tenants all necessaries.

Q.—Is it lease ? *A.*—No.

Q.—You are not cultivating yourself. You are allowing the under-tenant to cultivate the lands ? *A.*—No. I get the ploughs, etc.

Q.—You give two-thirds of the lands to an under-tenant. He cultivates the land. You take in certain portion of the grain. Am I right ? *A.*—Yes. Then I buy the cattle for him, give him manure, etc.

Q.—Do you give him the cattle, etc. *A.*—Yes.

Q.—Then what portion do you get and what portion do you leave the cultivator ? *A.*—From 25 to 30 per cent to him.

Q.—Then you get 75 per cent ? *A.*—No answer.

Q.—At the same time you recover the price of the cattle, the price of the seeds and price of everything you advance ? *A.*—No. Manuring we have got to do ourselves.

Q.—Do you allow the cattle to be taken away by the sub-tenants ? *A.*—Generally we lose it.

Q.—Whose property was it ? *A.*—All that is purchased with our money.

Q.—You say you take no interest for the amount advanced ? *A.*—Yes.

Q.—It has been suggested that the actual tillers of the soil who are called as under-tenants, should also be given the occupancy right. What is your opinion on the point ? *A.*—Because I have invested large sums of money, I must have a return for the investment.

Q.—Do you want that they should have occupancy rights ? *A.*—If they pay they can have.

Q.—You are not for it ? *A.*—I have paid for those lands and as such I am not for it unless I get back my money.

Q.—Therefore you want a fair return ? *A.*—Anything reasonable.

Q.—One and a half times the rent is reasonable ? *A.*—If you pay me that, it wont satisfy me; you should take into consideration the purchase money, etc., and then make some fair suggestion.

Q.—You want the money you paid for the land ? *A.*—Ever if the property were to be sold now it wont get that money.

Q.—What about if two-thirds of the purchase money is given ? *A.*—Yes.

Q.—You have not double-crop lands ? *A.*—Mostly they are.

Q.—In the Government villages for second-crop do they charge extra water-rate ? *A.*—I do not think.

Q.—For the double crop that You raise, do you pay water-rate ? *A.*—I am already paying a very high assessment of Rs. 255 per vieli : why should I pay?

Mr. A. Rangaswami Ayyangar : *Q.*—I think you have no objection if the additional rent is paid by the Zamindar ? *A.*—I have no objection.

The Zamindar of Mirzapuram : *Q.*—May I know the Government rates near your village ? *A.*—Highest Rs. 20 and Rs. 14 lowest for double crop lands. For single crop lands Rs. 8.

Q.—The ryot need not pay any water-rate except for dry lands ? *A.*—Except for dry lands he need not pay.

Q.—Your village lands are supposed to be the best ? *A.*—It once had that reputation. It has since lost it.

Q.—Is there any complaint about the fact that the rates are high ? *A.*—This agitation has been going on for 20 years or, say, 30 years.

Q.—Have you complained yourself ? *A.*—I have complained and sent several petitions.

Mr. A. Rangaswami Ayyangar : *Q.*—What is the Tamil word for the promissory note taken from your tenants ? *A.*—சுவந்தை.

Q.—The provisions look like a pro-note. You renew it from time to time ? You keep it alive even for 30 or 40 years ? *A.*—No, not more than 10 years. I have heard in Tiruturaipundi, there have been instances where they are centuries old. These have been kept with any chance of recovery.

Q.—These are kept to see that the tenants do not run away and as a check also ? *A.*—Yes. I have myself known some cases.

The Zamindar of Mirzapuram : *Q.*—Do you know in a village called Rayam, the lowest rent varies from Rs. 26 to 25 per acre ? *A.*—I do not know.

Q.—Is that village very near yours ? *A.*—About 5 or 6 miles.

Q.—You do not know the rates ? *A.*—I do not know.

Mr. V. V. Jogayya Pantulu : *Q.*—Do you recover the money from your tenant the money lent for purchasing cattle, etc. *A.*—In 99 cases out of 100, we lose.

The Zamindar of Mirzapuram : *Q.*—Do you keep those pro-notes to keep your tenants under your controll, so that they will not run away ? *A.*—Certainly. It is not for. We wish to get back our money if there is a chance.

Q.—Do you mean to say that all the money you spent in this way is completely lost ? *A.*—Some are honest and return a portion.

Q.—You must have heard about the agitation of the Inamdars. They want their Inam villages to be excluded from the operation of the Madras Estates Land Act. I mean, the Amendment Act. Can you tell us your opinion ? *A.*—I prefer to have direct dealings with the Government than with these people.

Witness No. 162. **Trichinopoly.** **8th February 1938.**

Oral evidence of Mr. R. N. A. R. Somasundaram Pillai, son of Arunachalam Pillai, Murugur Village, Turaiyur Zamin.

The CHAIRMAN :

Q.—உங்களுக்கு எந்த ஜமீன் ?
A.—துறையூர் ஜமீன்.

Q.—உங்கள் ஜமீன்தார் பெயர் என்ன ?
A.—பிரஸன்ன வெங்கடாசலதுரை.

Q.—அவர் எங்கிருக்கிறார் ?
A.—அவர் துறையூரிலிருக்கிறார்.

Q.—நீங்கள் டெனெண்டா ?
A.—ஆம். **Tenant.**

Q.—என்ன அந்த எஸ்டேட்டைப்பற்றி சொல்லப்போகிறீர் ?
A.—அந்த **Estate**-ல். அநேக குறைகள் இருக்கின்றன. முதலாவது **ryots** ஆக இருப்பதால் நிலம் எங்களுடையதென்று சொல்லவேண்டும். 1316-ம் பசலியில் குத்தகைதார் என்று போட்டார்கள். நாங்கள் ஆக்ஷேபணை செய்த பிறகு தீர்வை என்று சொல்லிவிட்டார்கள். அதற்குதான் இந்த ரசீது இப்பொழுது தாக்கல் செய்திருக்கிறேன்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—உங்களுக்கு நிலங்களை விற்க பாத்தியம் உண்டா ?
A.—இதற்கு முந்தி பாத்தியம் இருந்தது. இப்பொழுது திருத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

Q.—நீங்கள் நிலங்களை வாங்குவது உண்டா, விற்பதுண்டா ?
A.—நாற்பது, ஐம்பது வருஷம் அப்படித்தானிருந்தது. நாங்கள் ஆக்ஷேபணை செய்த பிறகு அதை தீர்வை என்று திருத்திக்கொடுத்திருக்கிறார்கள்.

Q.—தீர்வை விகிதம் எப்படியிருக்கிறது ?
A.—ரொம்ப கூடுதலாக இருக்கிறது.

Q.—நஞ்சை, புஞ்சை இரண்டிலும் கூடுதலாக இருக்கிறதா ?
A.—ஆம். நஞ்சைக்கு ரூ. 18. தோட்டத் தீர்வையென்றும் சில நஞ்சைக்கு ரூ. 12, ரூ. 7 என்று மூன்றுவிதம் தீர்வை இருக்கிறது. புஞ்சைக்கு ரூ. 5, ரூ. 3, ரூ. 4 தீர்வை இருக்கிறது.

Q.—குடி குத்தகையா, பயிர்வாரியா ?
A.—எள்ளு, கொள்ளு இரண்டுக்கும் ஒரு தீர்வை **(Lower rate)**. மற்றவைகளுக்கு வேறு மாதிரி.

Q.—தீர்வை நிலத்தின் தரத்தின்மேலா ?
A.—களர், மணல், சிவல், கரிசல் என்று பிரித்திருக்கிறார்கள்.

Q.—நாலிலும் எல்லா தானியத்துக்கும் ஒரே தீர்வையா ?
A.—ஜாஸ்தி **rate** கரிசல் ரூ. 5. அடுத்தது சிவல் ரூ. 3. களருக்கு ரூ. 1–8–0. மணலுக்கு ரூ. 2, ரூ. 2–8–0 தீர்வை.

Q.—ஏக்கரா or காணியா ?
A.—காணி. 1·33 ஏெண்டு.

Q.—ஏதாவது தீர்வையில் வித்தியாசம் உண்டா ?
A.—உயர்த்தியிருக்கிறார்கள். கொஞ்சம், கொஞ்சமாக.

Q.—எவ்வளவு தீர்வை.
A.—பத்து காணிக்கு 1331-ம் பசலியில் ரூ. 85, 1332-ம் பசலியில் ரூ. 100, 1345-ம் பசலியில் ரூ. 109–4–0.

Q.—பயிர்வாரி தீர்வையா அல்லது **rate** விகிதத்தில் உயர்த்தியிருக்கிறார்களா ?
A.—ஒருபோகம் இருபோகம் என்று **rate** விகிதத்தில் உயர்த்தியிருக்கிறார்கள்.

Q.—அந்த காலத்தில் இருபோகத்தில் ஆதியில் தீர்வையில்லையா ?
Q.—Before 1929 the prices were high. From 1930 the prices have fallen. Do you mean to say that in the muchlikas executed after 1930, the rate was decreased proportionately. *A.*—No answer.

Q.—If you have not got any document relating to the question, today with you, you can produce them during the session here. *A.*—Yes.

Q.—So, you say there was no difficulty in your estate ? *A.*—No.

Q.—What is the extent of the estate ? *A.*—About 10,000 acres.

Q.—No difficulty is experienced in entering into such an agreement ? *A.*—There is absolutely no difficulty.

Q.—For wet cultivation what is the source of irrigation ? *A.*—Tanks. After the introduction of Cauvery-Mettur project, we take that water also into tanks and store them.

Q.—Are the tanks in good repairs ? *A.*—I cannot say they are in very good condition. There are about ten tanks and almost all are in satisfactory condition.

Q.—Do you think that it is your duty to maintain them in a proper condition ? *A.*—I admit that it is my duty.

Q.—How long have you been connected with this estate ? *A.*—For the past seven or eight years.

Q.—Is there any dispute regarding the poramboke and communal lands ? *A.*—No such land exists.

Q.—What, no such lands exist ? What do you mean by it ? *A.*—Every unit of the land is occupied. Even according to the present survey, the poramboke lands belong to the Zamindar.

Q.—For what purpose ? *A.*—For common purposes, although they are described as zamin poramboke.

Q.—Does the Zamindar claim exclusive right over there ? *A.*—The Zamindar has allowed the use of them by the ryots for grazing and other purposes.

Q.—Any forests in your estate ? *A.*—There is one, which is not a forest in the correct sense of the word. It is only a shrub forest. There is no timber, etc.

Q.—Do you allow the cattle to graze ? *A.*—Yes. There is no trouble at all in my estate. This question has been going on from time immemorial.

Q.—Your Zamindar has not encroached upon the interests of the people ? *A.*—No.

Q.—Are all the villages surveyed and settled ? *A.*—Yes. I have the history of records and rights.

Q.—Have you any jamabandi in your Zamindari ? *A.*—We have jamabandi every year.

Q.—Do the ryots come and state their complaints ? *A.*—Generally not.

Mr. V. V. Jogayya Pantulu : *Q.*—How many tanks are there ? *A.*—About ten.

Q.—What is the amount spent every year ? *A.*—It may be about 2 per cent of the total income.

Q.—That amount how do you spend ? *A.*—As the case may be. At times we spend even more.

Q.—Are there any tanks which are silted up ? *A.*—No.

The Chairman : *Q.*—Are any tank-beds given for cultivation under patta to the tenants ? *A.*—No. They are not.

The Zamindar of Mirzapur : *Q.*—I suppose you issue permits for the ryots to go into the forest ? *A.*—Generally it is taken for granted.

Q.—There is nothing in writing ? *A.*—The tenants are at liberty to go into the forests and even free grazing is allowed.

Q.—What is the extent of the jungle ? *A.*—About 200 acres for all these villages.

Q.—You said that the rates of rent were fixed in kind ? *A.*—There are also some under that system.

Q.—How do you get your share ? *A.*—For convenience sake at times we receive cash.

Q.—What are the cash rent rates ? *A.*—Cash rents range from As. 6 per acre.

Q.—How long have they been at this rate ? *A.*—For the past 20 years and over.

Q.—There has been no change. Is it ? *A.*—There is change now and then according to the fluctuation of the markets.

Q.—You mean to say this happens with regard to fixed money rents ? What does the patta contain ? Is the connection about the fluctuation in the market-rate noted ? *A.*—The estate of the Sellathur is under this system. For the convenience of the parties we have fixed cash-rent.

Q.—Does the patta contain that the Zamindar is entitled to a certain share ? *A.*—Yes.

Q.—What the patta contains is that the Zamindars should get a particular share. Am I right ? *A.*—Yes.

Q.—The Zamindar gets a certain share of the produce every year, is it ? *A.*—Yes.

Q.—According to the conveinence of the Zamindar and the tenant, you have converted it into money rent. Is that the reason for changing every year according to the market rate ? *A.*—It may be said as one of the reasons. Some lands have cash rents. Where the tenants wanted computation decrees, they have been changed.

Q.—There has been no change in the rate of rents fixed in cash ? *A.*—No answer from the witness.

Q.—I suppose there are pattas and muchilkas ? *A.*—There are only muchilkas.

Q.—The ryot is not given any patta ? *A.*—No.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—Is the estate supplied by the Cauvery-Mettur Project water-supply ? *A.*—About 72 per cent of the lands are cultivated by that project.

Q.—When the water is taken, water-tax has to be paid ? *A.*—Yes. If the crops are divided, we also share.

The CHAIRMAN : *Q.*—What is that you write in the agreement and deed ? *A.*—No such agreements are taken.

Q.—Is not same thing like the condition of the Amani system written ? *A.*—Yes.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—Concerning only about Amani system is it ? *A.*—Yes.

Q.—You take a certain share in kind I suppose ? *A.*—Yes. But for the convenience of the tenant and the landholder that is converted into money-rent every year with regard to market-rate.

Q.—So that is the reason ? *A.*—Yes.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—There is no exchange of pattas and muchilkas in your estate ? *A.*—No. There is no exchange of pattas and muchilkas.

Reading from the Exhibit.

Q.—This looks like ar agricultural lease ? *A.*—That is written to because of the Amani system.

Q.—These words are used in agricultural lease deed, why are they used in a muchilka ? *A.*—I can't explain. Generally it is written like that.

Q.—So far as the nanja lands are concerned what do you take ? *A.*—Generally 50 per cent of the total yield.

Q.—From muchilka to muchilka will there be a change ? *A.*—The figures will not be the same.

Q.—After the Cauvery-Mettur Project, do you also take into consideration the yield ? *A.*—Yes.

Q.—After this project came into existence the yield ought to be more ? *A.*—It is not so. After the introduction the yield has much decreased.

The CHAIRMAN : *Q.*—What are the reasons ? *A.*—The lands have been waste lands for a long time. It will take some years for the soil to get improved.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—You said that the maximum rate was only Rs. 5–10–2. Are there cases where you collect more ? *A.*—There are some cases. Generally it is Rs. 5–10–2. There are some places where it is Rs. 16 also.

Q.—You said that after the introduction of the project, the income is not what used to be ; but you collect the same rent ? *A.*—No, I have reduced rents.

Q.—Have you got any records or documents. *A.*—No.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—You are reducing the rent fixed under Amani system ? *A.*—Yes. We also share the water-rate.

Q.—Where the money-rents are fixed, do you reduce rent ? *A.*—Yes.

Q.—By how much ? *A.*—About Rs. 1–8–0 per acre.

Q.—Is that reduction rate temporary ? *A.*—It is not a permanent reduction.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—When was the project scheme introduced ? *A.*—In fasli 1344.

Q.—What are the Government villages by the side of your estate ? *A.*—I am not very certain about the names.

Q.—You are agent for six or seven years and yet you do not know ? *A.*—I am not definite.

Q.—You are a paradise ? *A.*—Yes.

Q.—Yet you do not know the names of the neighbouring Government villages ? *A.*—I am not definite about the names.

Q.—You can remember one at least ? *A.*—Yadathi.

Q.—What are the rates there ? *A.*—I do not know.

Q.—Are you quite sure of the village name at least ? *A.*—Yes.

Witness No. 175. **Trichinopoly.** **9th February 1938.**

Oral evidence of Mr. B. Gopalachari, son of Mr. Balakrishna Ayyangar, Inam ryot of Umayalpuram village of Papanasam taluk of Tanjore district.

உமையாள்புரம் கிராமம் இனாம் கிராமம். மேல்வாரம் பாத்யம் உள்ளது. டிஸ்டிரிக்ட் போர்டுக்கு உட்பட்ட கிராமம். அதில் நான் ஒரு **ryot**. **Amani system** த்தைப்பற்றி சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் மறைபொருளாய் இருக்கிறது. இன்னும் கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கிறது, "அமானி" அனுஷ்டானத்தில் கொண்டுவருகிறார்கள். சாகுபடி பண்ணவேண்டும். தெரியப்படுத்த வேண்டும். தெரியப்படுத்தின பிறகு அறுவடைசெய்ய வேண்டும். கண்டு முதல் செய்யவேண்டும். சீக்கிரத்தில் அறுவடை பண்ணவேண்டுமென்று **ryot** க்கு இருக்கு. ஆனால் அவர்கள் உத்திரவை எதிர்பார்க்கவேண்டும். பட்டரையில் இருக்கும் நெல்லை சாப்பாட்டுக்கு எடுத்துக்கொண்டுபோக வேண்டியிருக்கிறது. இதற்கு இடம் கொடுக்கவில்லை. பேர்பாதி,**(gross income)** ல் பேர்பாதி எடுத்துக்கொண்டுபோகிறது, **ryot** தாங்கமுடியாது.

The CHAIRMAN :

Q.—' **Amani** ' வேண்டாம் என்று சொல்லுகிறீர்களா ?

A.—ஆம்.

Common expenses கழிக்கவில்லை. காவல் கூலி கொடுக்கிறார்கள். அவர்கள் சௌகரியத்தை உத்தேசித்து வந்து இருக்கிறது. பரிகாரி **(Barber)** கொல்லன், தச்சன் இவர்களுக்கு இந்த கிராமத்தில் கழிக்கவில்லை. ரயத்திடம்தான் இருக்கிறது. **Ryot** க்கு ரொம்ப ஜாஸ்தி தீர்வையில் போகிறது. இந்த அனுஷ்டானத்தை நீக்கி வேறு எந்தவிதமான சௌகரியங்களையாவது செய்து கொடுக்கவேண்டும்.

The CHAIRMAN :

Q.—உங்களுடைய **Inam village** ல் இந்தமாதிரி **collection** ஆய்விட்டதா ?

A.—முச்சிலிக்காவில் சொன்னபடி **inconveniences** அநேகம் இருக்கு. சௌகரியம் செய்வதில்லை. 5 வருஷம் 10 வருஷத்துக்கு முச்சிலிக்கா எழுதிக்கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 1348-ம் பசலி முடிந்து போகப்போகிறது. அவர்கள் **mercy** இருந்தால்தான் செய்வார்கள்.

The CHAIRMAN :

Q.—என்னவேண்டியது ?

A.—சௌகரியம் செய்து கொடுப்பதாயிருந்தால் **ryotwari system** செய்து கொடுக்கவேண்டும்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—வாரம் கொடுக்கிறீர்களா ?

A.—சரிபாதி. அதை ஆதாரமாகவைத்துக்கொண்டு முச்சிலிக்கா செய்து கொடுக்கிறார்கள்.

Q.—**Water-rate** யார் கொடுக்கிறார்கள் ?

A.—எங்கள் தலைமேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறார்கள். வசூல் ஜாஸ்தி ஏற்படுகிற விஷயத்தில் கவர்ன்மெண்டுக்குத் தண்ணீர் தீர்வை என்று ஏற்பட்டிருக்கிறது. ' தாளடி ' என்று நாங்கள் கொடுக்கிறோம். ஒரு போகத்துக்கில்லை. ' திட்டத்தாளடி.' 2 போக சாகுபடியாய் யிருந்தால் அதற்குமில்லை. திட்டத்தாளடி ஒரு போக நிலத்தில் இரண்டாம்போக சாகுபடி பண்ணினால் **Government** க்கு **water-rate** கொடுக்கிறார்கள். அதை நாங்கள் கொடுக்கிறோம்.

Q.—' கங்காணம் ' கேட்கிறது உண்டா ?

A.—முச்சிலிக்கா எழுதிக்கொடுத்துகொண்டுவருகிறோம்.

Q.—நீங்கள் உழுகிறீர்களா ? பண்ணை ஆள் வைக்கிறீர்களா ?

A.—நாங்களே சாகுபடி பண்ணுகிறோம்.

Q.—கூலிகொடுக்கிறீர்களா ?

A.—நெல் கூலி கொடுக்கிறோம். மாத சம்பளம் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

Q.—குத்தகை விடுகிறீர்களா ?

A.—100 ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கிறபேர் சமாளிக்கமுடியாமல் குத்தகை விடுகிறார்கள். அநேகமாகச் சொந்தச் சாகுபடி செய்கிறவர்கள் ஜாஸ்தி. உத்யோகத்தில் இருக்கிறவர்கள் வேறு வழியில் சம்பாதனையிருக்கிறதினால் குத்தகைபோடுகிறார்கள்.

1924-ம் வருஷம் இந்த கிராமத்தில் காவேரி உடைப்பு எடுத்து மணல் அடித்து விட்டது. சாகுபடிக்கு லாயக்கில்லாமல் செய்துவிட்டது.

The CHAIRMAN :

Q.—உங்களுக்கு எவ்வளவு இருக்கு ?

A.—3 ஏக்கராயிருக்கு.

1924 இல் இருந்து 1938-ம் வருஷம் வரை தரிசாய் இருக்கிறது. அவர்கள் தீர்வை கேட்கவில்லை. நம்முடைய நிலம் ஆச்சே என்று மணலை எடுத்து சீர்திருத்தம் பண்ணி செலவு பண்ணினால்—மணல் எடுத்திருக்கும் பூமியில்—அங்கே ' அமானி ' கொடு என்று கேட்கிறார்கள். இந்த நிலத்தில் 10 கலம் வந்தால் ஜீவனத்துக்குச் சௌகரியமாயிருக்கிறது. அதில் அவர்கள் ' **அமானி** ' உண்டு என்று சொல்லுகிறார்கள். இந்த **expenses** ஐ அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டாமா ? என் கைப்பொருள் போட்டு சீர்திருத்தம் பண்ணினால் ' மேல் வாரம் ' கேட்கிறார்கள். மேல்வாரத்தோடு **water-rate** கேட்கிறார்கள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—**Fasli** யில் **arrears** இருக்கிறதா ?

A.—1345, 1346 வசூல் பண்ணி விட்டார்கள்.

Q.—என்ன பரிகாரம் வேண்டும் ?
A.—அமானி கொடுக்கிறது சிரமமாய் இருக்கிறது. அவர்கள் விட்டுக்கொடுக்கும்படி செய்ய வேண்டும். தண்ணித்தீர்வை எங்கள் தலைமேல் சுமத்தக்கூடாது.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—தாளடி தீர்வை போடுகிறார்கள் என்று சொன்னீர்கள். **Proprietor** பாதி தானியம் கேட்கிறார் ?
A.—பேர் பாதி வரவில்லை. தண்ணீர் தீர்வை மாத்திரம் கொடுத்து விடுகிறோம்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—**Share** கொடுக்கிறீர்களா ?
A.—இப்போது கொடுக்கிறதில்லை. 1348-ம் **fasli** முடிந்ததும் சங்கடமாய் இருக்கும்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—உங்களுக்கு எத்தனை வேலி ?
A.—17 எக்கரா நஞ்சை, 16 எக்கரா புஞ்சை.

Q.—ஒரு எக்கராவுக்கு எத்தனை கலம் உண்டு. சரிபாதி தருகிறீர்களா ? எத்தனை கலம் நெல் தருவீர்கள் ? போன வருஷம் எவ்வளவு ?
A.—எக்கராவுக்கு 16 கலம் வாங்கினார்கள். இப்போது 13.

Q.—மதிப்பு என்ன இருக்கும் ?
A.—ஒரு எக்கராவுக்கு ரூ. 20 ஆகிறது.

Q.—பக்கத்தில் அயன் கிராமம் இருக்கிறதா ?
A.—இருக்கு. **Heart of the village** அடுத்த வரப்பு அதற்கு ரூ. 8. என் கிராமத்தில் முதல் போகம் இரண்டாம் போகம் எட்டும், நாலும் பனிரெண்டு.

Q.—இப்போது ரூ. 20 தருகிறீர்களா ?
A.—ரூ. 17 ஆவது வைத்துக்கொள்ளுங்கள் ரூ. 18 ஆவது வைத்துக்கொள்ளுங்கள்.

Q.—அமானி **system** தரிசாய் இருக்கின்றன. பயிர் இட்டுவிட்டால் என்ன வாங்குவார்கள் ?
A.—அக்கம் பக்கம் விளைந்தபடி அந்த **rate** வாங்குவார்கள். பட்டா ஷரத் அப்படியிருக்கிறது. தரிசாய் போடமுடியாது.

Q.—அயன் கிராமத்தில் ரொம்ப குறைச்சலா ?
A.—ஆம்.

Q.—**Government** ல் 4, 5 வருஷத்தில் 1 ரூபாய்க்கு 2 அணா 4 அணா வஜா கொடுத்தார்கள் அப்படி கொடுக்கிறார்களா ?
A.—வஜா கொடுக்கிறார்கள். அந்த **date** டுக்குள் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் வஜா யில்லை.

Witness No. 176. Trichinopoly. 9th February 1938.

Oral evidence of Mr. Pasupathi Pillai son of Mr. Chidambaram Pillai கிராமக்குடி **and karnam, Mavathur village Kadavur Zamin Kulithalai taluk.**

The CHAIRMAN :

Q.—ஜமீன்தார் தரப்பில் வந்தீர்களா ?
A.—ஜமீன்தார் தரப்பிலும் குடிகள் தரப்பிலும் பொதுவாக வந்திருக்கிறேன்.

Q.—கடவூர் **Estate** ட்டா ?
A.—மாவத்தூர் **village** கடவூர் ஜமீன்.

Q.—என்ன விசேஷம் இப்போது **Estate** ட்டில் ?
A.—இந்த ஜமீனில், அந்த அளவு விஷயத்தைப் பற்றி சாட்சி சொன்னதைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்வதற்கு, அதாவது ஜமீனில் 80 அடி சங்கிலியால் அளக்கிறது. 66 அடி சங்கிலியான **survey** சங்கிலியால் அளந்தாலும் அதுவே விஸ்தீர்ணம்தான். 80 அடி சங்கிலியால் அளந்தாலும் அதுவே விஸ்தீர்ணம். 213 **Fasli** அளவு காலத்தில், அளவு ஏற்பட்டு அதே பிரகாரம் குழி மாறுதல். பண்ணி பார்த்தால் அளவு சரியாய் ஏற்படுகிறது. அப்போதும், இப்போதும் ஒரு வித்யாசம் இல்லை. ஆகையினால், அளவு விஷயங்களில் மாறுதல் கிடையாது. தீர்வை விஷயங்களில் மாறுதல் கிடையாது. 213 **Fasli** யில் தீர்வை மாறுதல் கிடையாது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—80 அடி சங்கிலி தனியாய் வைத்து இருக்கிறார்களா ?
A.—80 அடி சங்கிலி ஆதியில் இருந்து அனுஷ்டானத்திலிருந்து வருகிறது.

Q.—எல்லோரிடத்திலும் **Links** சங்கிலியிருக்கிறது. அந்த மாதிரி வைத்துக்கொண்டால் என்ன ? 100 **Links** தான் நல்லது. அதுவே வழக்கம். இந்த அனுஷ்டானத்தை வழக்கம் பண்ணால் இப்போது என்ன ?
A.—தப்பு ஒன்றுமில்லை. அனுஷ்டானத்தில் அப்போதே இருந்து இருக்கிறது.

Q.—உலகம் பூரா 100 **Links** சங்கிலி. உங்கள் ஜமீனில் 80 அடி சங்கிலி.
A.—நாங்கள் 'குழி' கணக்குதான் போடுகிறோம்.

Q.—குழி 80 அடி சங்கிலி அளவா ?
A.—குழி என்பது 50$\frac{3}{4}$ **cents.**

Q.—நீங்கள் சொல்லுகிற கணக்கு கிராமத்தாருக்கு அர்த்தம் ஆகாது. **Acre** கணக்கு அர்த்தமாகும்.
A.—எக்கர் கணக்கு அனுஷ்டானத்தில் வராது.

Q.—சங்கிலி கணக்கை எக்கரா கணக்கில் மாற்றுகிறதினால் கஷ்டம் இல்லையே.
A.—இல்லை.

Q.—என் மாற்றுகிறதில்லை ?
A.—கேட்பார் இல்லை.

Q.—ஆனால் மாற்றாமல் வைத்திருக்கிறீர்கள்.
A.—ஆம்.

Q.—பட்டாவில் என்ன எழுதுகிறார்கள் ?
A.—குழி என்று எழுதுகிறார்கள். 1 குழி, $\frac{1}{2}$ குழி, $\frac{1}{4}$ குழி என்று பைமாஷ் கணக்கு.

At this stage, witness read a statement prepared by him in Tamil regarding the conditions prevailing in the Kadavur zamin village, Mavathur and filed the same.

After filing this statement the witness began to read another statement written on a piece of paper. The witness was here asked as to whether the statement read out by him was his, he said that it was not his statement and that the piece of paper had been handed over to him by someone of the வெள்ளைப்பட்டி **village to be read out before the Chairman and that it was written by the Revenue Inspector.**

This statement written by the Revenue Inspector and read out by the witness Mr. Pasupathilingam Pillai was also filed.

The CHAIRMAN :

Q.—புகார் சமாசாரம் சரியான சமாசாரமா ?
A.—ஒன்றும் வித்யாசமில்லை. சரியான சமாசாரம்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—நீங்கள் 25 **years experience** உள்ள கர்ணமா ?
A.—ஆம்.

Q.—இப்போது லஞ்சம் நின்றுபோய்விட்டது சமஸ்தானத்தில் உத்தரவு போட்டு.
A.—நின்றுவிட்டது.

The CHAIRMAN :

Q.—நின்றுபோய் எத்தனை வருஷம் ஆச்சு ?
A.—10, 12 வருஷம் ஆச்சு ஜமீன் **major** ஆய்.

Q.—லஞ்சம் வாங்குகிறதை நிறுத்திவிட்டார்களா ?
A.—ஆம்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—சமஸ்தானம் உத்தரவு போட்ட பிற்பாடு லஞ்சம் இல்லை.
A.—இல்லை.

Q.—காட்டில் என்ன வரி வசூல் பண்ணுகிறார்கள் ?
A.—தீர்வை வசூல்.

Q.—மாட்டுக்கு ?
A.—மலையில் மேய்ந்தால்.

Q.—காடு என்றால் மலையா ?
A.—மலைதான் அர்த்தம்.

Q.—காடு, மலை வித்யாசம் என்ன ?
A.—மலை மேல்பாகம், காடு குடி கைப்பற்றில் இருக்கும் தரிசு நிலம்

Q.—எவ்வளவு **rate** ?
A.—காடு 4 அணா, 8 அணா.

Q.—உங்களுக்கு வரி வசூல் தெரியாது ?
A.—தெரியாது.

Q.—மற்ற கிராமங்களில் வசூல் தெரியாது.

A.—தெரியாது.

Q.—நேற்று சாட்சி சொன்னவர் உங்கள் கிராமக்குடியா ?
A.—எங்கள் கிராமக்குடி.

Q.—லஞ்சம் உங்கள் கிராமத்தில் உண்டா ?
A.—எல்லா கிராமங்களில் வாங்குகிறது கிடையாது.

Q.—**Survey** தேவை என்று சொல்லுகிறீர்களா ?
A.—இது இருக்கிறதினால் பாதகமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். **Court of Wards** கூட இந்தமாதிரி சொல்லியிருக்கிறார்கள்.

Q.—**Survey** தேவையில்லை என்று மனு கொடுத்து இருக்கிறீர்களா ?
A.—இல்லை. மனு தாகல் பண்ணவில்லை.

Q.—உங்கள் கிராமத்தில் 2 சங்கிலி வழக்கமா ?
A.—ஒரு சங்கிலி 80 அடி.

Q.—ஆதியில் எந்த சங்கிலி ?

A.—80 அடி.

Q.—இப்போது ?

A.—66 அடி. 80 அடி சங்கிலியால் அளந்தால் வித்யாசம் கிடையாது. வித்யாசம் கிடையாது என்பதற்குக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

Q.—ஒரு ஏக்கரா 100 cent அல்லவா ?

A.—80 அடியால் அளந்தாலும் அதே விஸ்தீர்ணம்.

Q.—உங்களுக்கு என்ன சம்பளம் ?

A.—8 ரூபாய்.

Q.—வரி வசூல் யார் பண்ணுகிறது ?

A.—முன்சீப்பும் நானும் இரண்டுபேரும் சேர்ந்து.

Q.—தனிப்பட்டா மணியம் கிடையாது ?

A.—கிராம முன்சீப்பு.

Q.—சிப்பந்தி சிலவு கொடுக்கிறார்களா ?

A.—ஒன்றும் கிடையாது-

Q.—முந்தி வாங்கிக்கொண்டிருந்தார்களா ?

A.—1 ரூபாய் 6 பை.

Q.—எத்தனை வருஷத்துக்கு.

A.—8 வருஷத்துக்கு Court of Wards க்குப் பிந்தி நிறுத்திவிட்டார்கள்.

Q.—அதற்கு முந்தி வசூல் பண்ணிக்கொண்டிருந்தார்களா ?

A.—அதற்கு முன் இருந்தது. இப்போது நிறுத்தி ஆச்சு.

Q.—காட்டில் மரங்கள் எடுக்கவேண்டுமானால் Permit கொண்டுதான எடுக்கவேண்டும் ?

A.—Permit வாங்கித்தான் சொந்த உபயோகத்துக்கு Permit இல்லாமல் எடுக்கலாம்- வெளி யூர்களுக்குக் கொண்டுபோனால் permit வேண்டும்.

Q.—Fees வாங்காமல் permit கிடையாது ?

A.—ஆம்.

Q.—வட்டியில்லை என்று சொன்னால் அந்த வருஷம் தள்ளியிருக்கா ?

A.—4, 5 வருஷமாகவே இங்கு ஒன்றும் தாக்கல் செய்யவில்லை.

Q.—10, 15 Case கள் போட்டதாகச் சொன்னீர்களே, ஏதாவது தாக்கல் பண்ணி இருக்கிறார்களா?

A.—இல்லை.

Q.—உத்தேசமாய்ச் சொல்லுகிறீர்களா ?

A.—உத்தேசம். ஆதரவு கொண்டுவரவில்லை.

Q.—சொந்தப்பயிர் இருக்கா ?

A.—ஆம்.

Q.—எவ்வளவு காணி ?

A.—30 ஏக்கர். ரூ. 50 வாய்தா செலுத்துகிறேன்.

Q.—சொந்தப் பயிரா ?

A.—ஜாடா சொந்தப்பயிர்.

Q.—நேரா குத்தகை விட்டது கிடையாது ?

A.—ஆம்.

Q.—குத்தகையைப்பற்றி நேராவிட்டதாகச் சொல்லமுடியாது ?

A.—என்னுடைய சொந்த நிலத்தை ஒன்றும் குத்தகைக்கு விடவில்லை.

Q.—இன்ன இன்னார் விட்டார்கள் என்று record தாக்கல் பண்ணினீர்களா, வாயினால் சொல்லு கிறீர்களா ?

A.—வாயினால் சொல்லுகிறேன்.

Q.—புஞ்சை 15 ரூபாய்க்கு விற்றீர்கள் என்று சொன்னீர்களே கிரய பத்திரங்கள் தாக்கல் பண்ணியிருக்கிறீர்களா ?

A.—இல்லை.

Q.— நான் கேட்டுவந்த நிலங்களைப்பற்றி விஷயங்கள் கூறுகிறீர்களா அவைகள் சரியா ?

A.—கணக்கிலிருந்து சொல்லுகிறதுதான் சரியாயிருக்கும்.

The CHAIRMAN :

Q.—Survey ஆச்சா ?

A.—குழிக்கணக்கு. "பைமாஷ்" கணக்கு.

Q.—Survey யில் ஜாஸ்தியிருந்தால் அது யாருக்குப்போகும் ?

A.—ஜமீன்தார் அடமானம் செய்து கொடுக்கவேண்டியது குடிகளுக்கு.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—நில ஜப்திசெய்து கொடுக்கிற காலத்தில் எவ்வளவு Stamp?

A.—புது Act படி எவ்வளவு lable ஒட்டுகிறது என்பது தெரியாது. சமஸ்தானத்தில் ரூ. 15 ஆகிறது என்று சொல்வதைக்கொண்டு சொல்லுகிறேன். எனக்கு நேரில் தெரியாது.

Q.—ரூ. 15 ஆகும் என்று சொன்னீர்களே, சமஸ்தான கணக்கிலிருந்து சொல்லுகிறீர்களா?

A.—ஆம்.

Q.—பழ மரங்களுக்கு என்ன தீர்வை ?

A.—புளிய மரம் 5 அணு 4 தம்படி, மா மரம் 5 அணு 4 தம்படி, பலா மரம் 5 அணு 4 தம்படி.

Q.—என்னென்ன மரத்துக்கு தீர்வை போடுகிறார்கள் ?
A.—முந்தி ஏற்பட்ட தீர்வையை வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

Q.—பட்டுப்போயிருந்தால் மனு கொடுக்காமலிருந்தால் பட்டாவில் இருந்ததுதானே ?
A.—அந்த மாதிரி இருக்கு. அந்தமாதிரியிருந்தால் வரி வசூலாயிருக்கு.

Q.—மாடு மேய்ச்சல் **rate** சொன்னீரே என்ன ?
A.—4 அணு, 6 அணு கணக்கு.

Q.—மற்ற கிராமங்களில் இருக்கிறது உங்களுக்குத் தெரியாதா ?
A.—மலை அடிவாரங்களில் எனக்குத் தெரியாது. என் கிராமம் மலை இல்லாத கிராமம்.

Q.—**Survey** இல்லாமல் இருக்கிறதினால், கணக்கு எழுதுகிறது கஷ்டம் தானே ?
A.—மாமூலாயிருக்கிறதினால் கஷ்டமில்லை.

Q.—**Survey** யிருந்தால் சௌகரியமாய் இருக்குமல்லவா ?
A.—சௌகரியம் இருக்கும்.

Q.—குடிகளுக்குச் சௌகரியம்தானே ?
A.—தேவைதான்.

Q.—குடிகளுக்கு **Survey** தேவைதானே ?
A.—ஆம்.

Q.—**Survey** இல்லாமல் இருக்கிறதினால் அசௌகரியம்தானே ?
A.—**Survey** இருந்தால் ரொம்ப நல்லது.

Q.—**Court** டுக்கு வந்தாலே அசௌகரியம்தானே ?
A.—ஆம் **Survey** இல்லாததினால்.

Q.—நிலம் எந்தயிடத்தில் இருக்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியுமா ?
A.—முடியாது.

Q.—திறமையுள்ளவர்தான் சொல்லமுடியும். புதிதாய்வந்த கணக்குப்பிள்ளைக்குத் தெரியாது அல்லவா ?
A.—ஆம்.

Q.—தேர்ச்சி அடைந்தவர்களுக்குத் தெரியும். தேர்ச்சியடையாதவர்களுக்குத் தெரியாது.
A.—ஆம். ஆனால் அடங்கலைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம். "பைமாஷ்" ஷைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

Q.—நிலத்தீர்வை தவிற என்னென்ன வரி உங்கள் கிராமத்தில் ஏற்பட்டிருக்கிறது ?
A.—நில வரியைத்தவிற ஆடு மாடு மேய்த்தால் வரி. குச்சி ஒடித்தால் **permit fees** இருக்கிறது. மரத்தீர்வை வாங்குகிறார்கள்.

Q.—சிப்பந்தி வரி இருக்கிறதா ?
A.—இப்போதில்லை. கிராம அதிகாரிகளுக்குக் கொடுப்பது வழக்கம். இனமாய்க் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—என்ன கொடுப்பது வழக்கம் ?
A.—ஒரு ரூபாய்க்கு ½ அணு கொடுப்பது வழக்கம். எங்களைச் சேர்ந்தது இனம்.

The CHAIRMAN :

Q.—**List** சொல்லுங்கள் ?
A.—½ அணு வீதம் கொடுப்பார்கள்.

Q.—உங்களுக்கு எவ்வளவு, மற்றவர்களுக்கு எவ்வளவு ?
A.—கிராம அதிகாரிகளுக்கு இனமாய்க் கொடுத்து வந்தார்கள்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—குடிகள் இஷ்டம் இருந்து கொடுத்தால்தான் அது இருக்கிறது என்று சொல்லுகிறீர்களா ?
A.—குடிகள் கொடுத்தால் வாங்கிக்கொள்ளுவார்கள்.

Q.—இது லஞ்சத்தில் சேரவில்லையா ?
A.—வழக்கமாய் இருக்கிறது.

Q.—லஞ்சத்திலிருந்து விலக்கியிருக்கிறார்களா ?
A.—அதில், இது வாங்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

Q.—ரூபாயில் ½ அணு வாங்கினதை விலக்கியிருக்கிறார்களா ?
A.—வாங்கப்படாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

Q.—**Copy of the order** இருக்கிறதா ?
A.—இல்லை. ஊரில் இருக்கு.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—இஷ்டப்பட்டுக் கொடுக்கிறார்களா ?
A.—ஆம்.

Q.—பட்டா மாற்றுகிறது இருக்கே. எப்போது மாற்றுகிறது, ஜமாபந்தியிலா ?
A.—மனு கொடுக்கிறபோது விசாரணைசெய்து மாற்றுகிறது.

Q.—**Register** இருக்கிறதா ?
A.—ஆம்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—மாற்றின சங்கதியைப்பற்றி ஏதாவது தாக்கல் பண்ணி இருக்கிறீர்களா ?
A.—இல்லை.

Q.—பட்டா மாற்றுகிறதாயிருந்தால், உங்களைக் கேட்டுதான் மாற்றுகிறது ?
A.—எங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டும், ஆதரவையும் பார்த்துதான் மாற்றுவார்கள.

Q.—நிலங்கள் எத்தனை வகையாய்ப்பிரித்து இருக்கிறார்கள் ? ஏக்கராவுக்கு என்ன தீர்வை ?
A.—புஞ்சை தோட்டம் முத்தீர்வை. ஏக்கரா 5 வரை இருக்கு, குறைந்தது ரூ. $2\frac{3}{4}$, புஞ்சை குறைந்தது $\frac{3}{4}$ ரூபாய்.

Q.—கரும்பு போட்டால் நிலத்தீர்வை என்ன ?
A.—நிலத்தீர்வையில் $\frac{1}{2}$ பங்கு சேர்க்கவேண்டும்.

Q.—நெல் போட்டால் ?
A.—தோட்டத் தீர்வைதான்.

Q.—கடலை போட்டால் எப்படி தீர்வை ?
A.—புஞ்சையில் போட்டால் புஞ்சை rate, தோட்டத்தில் போட்டால் தோட்ட ரேட். பயிர் வாரி தீர்வைகிடையாது.

Q.—வருஷா வருஷம் பட்டாவில் தீர்வை மாறுமா ?
A.—மாறுது.

Q.—தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்தால் ?
A.—ஜாஸ்தி தீர்வை.

Q.—தரிசு நிலத்துக்கு ?
A.—கம்மி தீர்வை.

Q.—தரிசு பயிர் இடாமல் இருந்தால் எவ்வளவு தீர்வை ?
A.—தரிசாய்ப் போட்டால் 2 அணா 6 பையிலிருந்து 4 அணா ஆகும். குழிக்கு குறைந்த தீர்வை ரூ. $\frac{3}{4}$.

Q.—பக்கத்தில் அயன் கிராமம் இருக்கா ?
A.—இருக்கு.

Q.—இப்போது வந்தார்களே அவர்கள் எந்த ஊர் குடிகள் ?
A.—என் கிராமம் இல்லை. ஜமீன் குடி.

Q.—குடிகளுக்கு எரிபாசனம் கிடையாதா ?
A.—கிடையாது. ஜமீன் சொந்த பண்ணையிலிருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—இங்கிருந்து உங்கள் ஊர் எவ்வளவு தூரம் ?
A.—40 மைல்.

Q.—எப்போது வந்தீர்கள் ?
A.—நேற்று வந்தேன்.

Q.—இங்கு வந்தீர்களா ?
A.—இல்லை.

Q.—என்ன காரியமாய் வந்தீர்கள் ?
A.—கம்மிட்டி முன் சாட்சியம் கொடுக்கவேண்டுமென்று வந்தேன்.

Q.—நோட்டீஸ் வந்ததா ?
A.—இல்லை.

Q.— நீங்கள் யார்சம்பந்தமாக வந்தீர்கள் ?
A.—ஜமீன் சம்பந்தமாகவும், குடிகள் சார்பாகவும் வந்திருக்கிறேன்.

Q.—குடிகளுக்காக வரவில்லையா ?
A.—குடிகளுக்காகவும் வந்தேன்.

Q.—நீங்கள் வந்ததுமுதல் குடிகள் சம்மந்தபட்டமட்டில் ஒன்றும் சொல்லவில்லையே ?
A.—சொல்லியிருக்கிறேன்.

Q.—எழுதி வாசித்தீர்களே குடிகள் கஷ்டத்தைப்பற்றி சொன்னதாக தெரியவில்லை ?
A.—நிலஜப்தி ஜாஸ்தி ஏற்பட்டு, அதைக்கம்மிபண்ண வேண்டுமென்று சொல்லுகிறேன்.

Q.—ஜமீன் விவசாயிகள் படுகிற கஷ்டத்தைப்பற்றிச் சொல்லவில்லையே ?
A.—இல்லை.

Q.—ஜமீனில் குடிகளாக இருக்கமாட்டோம் என்று சொல்ல வரவில்லை ?
A.—ஜமீனில் குடிகளுக்கு இடைஞ்சல் இல்லை. அதைச்சொல்ல வரவில்லை.

The CHAIRMAN :

Q.—உங்களுக்கு சம்பளம் யார் கொடுக்கிறார்கள் ?
A.—கவர்ன்மெண்டில் கொடுக்கிறார்கள்.

Q.—ஜமீனில் உங்களுக்கு என்ன சம்பளம் ?
A.—ஜமீனில் கர்ணம் வேலை பார்த்துக்கொண்டு வருகிறேன்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—குடிகள் வேறே, ஜமீந்தார் வேறே. குடிகளுக்கும் ஜமீந்தாருக்கும் இருக்கிற சம்பந்தத்தை விசாரணை பண்ணுகிறார்கள். குடிகளுக்குக் குடிகள் சொல்லவேண்டும். ஜமீந்தார், தங்களுக்கு இருக்கிற சமாசாரத்தை அவர்கள் சொல்லவேண்டும். நீங்கள் வந்தீர் ஜமீந்தாருக்காக. நீங்கள் வரவேண்டிய காரணமென்ன ?

A.—தீர்வை ஜாஸ்தி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னதினால் அதை பொறுத்தமட்டில் சொல்லவந்தேன்.

The Zamindar of Mirzapuram :

" The witness is a village officer. He can speak anything. Everybody is trying to do public service. Mr. P. S. Kumaraswami Raja remarked that he wanted to know exactly on whose behalf he had come there."

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—யார் கொடுத்தது வாசிக்கச்சொல்லி ?
A.—ரெவினியூ இன்ஸ்பெக்டர் எழுத்து.

The Chairman :

Q.—எஸ்டேட் ரெவினியூ இன்ஸ்பெக்டர் தானே ?
A.—ஆம்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அதைத்தான் வாசித்தீர்களா ?
A.—ஆம்.

Q.—படித்த பேபரைக் கொடுத்துவிடுங்கள் ?
A.—இல்லை. தாகல் பண்ணி யிருக்கிறேன்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—அதில் கண்டுள்ளவை நிஜமா ?
A.—ஆம்.

Q.—நீங்கள் எழுதிக்கொடுக்கச் சொன்னீர்களா ?
A.—இல்லை.

Q.—வந்திருக்கிற குடிகள் ஜமீன் குடிகளா ?
A.—ஆம்.

Q.—ஊரில் கட்சி இருக்கா ?
A.—இல்லை.

Q.—குடிகளுக்குக் கஷ்டம் இல்லையே ?
A.—சௌக்கியமாயிருக்கிறார்கள். ஜமீந்தாருக்கும் குடிகளுக்கும் ஒற்றுமை.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—குடிகள் ஜமீந்தார் ஒற்றுமையாய் இருக்கிறார்களா ?
A.—ஆம்.

Q.—சர்வே பண்ணினால் உங்களுக்கு சௌகரியம் என்று சொன்னீர்கள். அது கவர்ன்மெண்டு சர்வேயா ?

A.—ஆம். கவர்ன்மெண்டு சர்வேதான் இருக்கவேண்டும்.

Q.—சர்வே பண்ண செலவு யார் நியாயமாய் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ?

A.—கவர்ன்மெண்டும் ஜமீந்தாரும், இரண்டு பேரும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

Q.—எந்த காரணத்தைக்கொண்டும் குடிகளைக் கேட்பது ஒழுங்கு இல்லை ?
A.—ஆம். அவர்களிடத்தில் காசு இல்லை.

Q.—சிலபேர் சொல்லுகிறார்கள், பஞ்சாயத் மூலம் சர்வே பண்ணலாம் என்று. அது சரியான முறையில் நடக்காது அல்லவா ?

A.—ஆம்

Q.—புளிய மரத்துக்குத் தீர்வை போடுகிறார்கள். அதை பொறுத்தமட்டில் தீர்வை போடுவது நல்லதல்லவா ?

A.—இல்லாமல் இருந்தால் நல்லது.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—சமஸ்தானம் ஏற்பட்டது முதல் இவ்வாறு வரி தள்ளிக்கொடுத்தது கிடையாதா ?
A.—கிடையாது. உள் தீர்வையை தள்ளிக்கொடுத்தது உண்டு.

Q.—நீங்கள் எந்த ஊர் கர்ணம் ?
A.—நான் மாவத்தூர் கர்ணம்.

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?
A.—சுமார் 30, 35 எக்கர் இருக்கிறது. நானும் ஒரு ரயத்துதான்.

Q.—உங்களுக்கு எஸ்டேட்டில் ஏதாவது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா ?
A.—சர்வே பண்ணிக்கொடுக்காததால் ஏற்படுகிற கஷ்டம் தவிர வேறு எவ்வித கஷ்டமும் எனக்கு ஏற்படவில்லை.

Q.—மாவத்தூர் டிமாண்டு என்ன ?
A.—ரூ. 5,100 சொச்சம்.

Q.—1344-ம் பசலியில் பாக்கி உண்டா ?
A.—கிடையாது.

Q.—1346-ம் பசலியில் ?
A.—கொஞ்சம் பாக்கி இருக்கலாம்.
Q.—பாக்கி வசூல்செய்ய சூட் (suit) போடுகிறதுண்டா ?
A.—எப்பொழுதும் சூட் போடுகிறது கிடையாது. ரயத்துகள் தங்கள் இஷ்டமாகவும் சுலபமாகவும் கொடுத்துவிடுவார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—ஆடு மாடுகள் ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்வதுண்டா ?
A.—உண்டு. ஒரு வருஷத்திற்கு இரண்டொரு கேஸ்கள் அந்தமாதிரி வரும். ஜாஸ்தி ஜப்தி கேஸ்கள் வராது.

Q.—பாக்கி தொகைக்கு வட்டி வாங்குவதுண்டா ?
A.—இல்லை.

Q.—நிலங்களை ஜப்தி செய்தால் விற்கிறதுண்டா ?
A.—சில சமயங்களில் விற்பதுண்டு.

Q.—நிலங்கள் என்ன விலை ?
A.—புஞ்சை ரூ. 15 முதல் 25 வரை ஒரு காணி விற்கும். தோட்ட நிலம் ரூ. 100 முதல் 150 வரையில் போகும். முத்தீர்வை நிலம் ரூ. 150 முதல் 250 வரையில் விற்கும்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—1340-ம் பசலியில் எவ்வளவு வசூல் பாக்கி தெரியுமா ?
A.—1342-ம் பசலி வரையில் பாக்கியே கிடையாது.

Q.—நாளது வரையில் பாக்கியே கிடையாதா ?
A.—ஏதோ சொல்ப கேஸ்கள் பாக்கியிலிருக்கும்.

Q.—எவ்வளவு கேஸ்களில் ஜப்தி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன ?
A.—10, 20 கேஸ்களில் ஜங்கமசொத்து, மகசூல் இவைகளை ஜப்தி செய்து வசூலாகி இருக்கிறது. ஆனால் கோர்டில் சூட் செய்தது கிடையாது.

Q.—வட்டியையும் சேர்த்துத்தானே வசூல் செய்கிறது ?
A.—சாதாரணமாக இல்லை. கோர்டு நடவடிக்கைக்குப் போனால் வட்டி சேர்ப்பது உண்டு.

Q.—சர்வே செய்தால் செட்டில்மெண்டு செய்து ரிகார்டு தயார் செய்யவேண்டியது அவசியம் தானே.
A.—ஆம். நிலங்களை சர்வே செய்து செட்டில்மெண்டு ரிகார்டு ஏற்படுத்தினால்தான் குடிகளுக்கு அனுகூலம்.

Witness No. 177. **Trichinopoly.** **9th February 1938.**

Oral evidence of Mr. Muthukannu Odayar, Karyaralabath, Ariyalur.

The President :

Q.—நீர் என்ன சொல்ல விரும்புகிறாய்?
A.—அமீனாபாத்து என் கிராமம். கோனேரிராஜபுரம், காயரலாபாத்து இவைகள் இரண்டும் ஜமீன் கிராமம். எனக்கு அயன் கிராமத்தில் (அமீனாபாத்தில்) 4 ஏக்கர் நிலம் இருக்கிறது. அரியலூர் ஜமீன்கோனேரிராஜபுரத்திலும் காயரலாபாத்திலும் நிலங்களிருக்கின்றன. அமீனாபாத்து நெ. 116 அயன் கிராமம். அதில் புஞ்சைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 0–14–0 தீர்வை. இந்த பட்டா தாக்கல் செய்கிறேன். அதில் எல்லாம் விவரமாக இருக்கிறது. ஜமீன் கிராமத்தில் ரூ. 12 கிஸ்தி. நான் கிணறு வெட்டி இருக்கிறேன். என் சொந்தச்செலவில். குட்டைகூட வெட்டியிருக்கிறோம். ஊர் பொதுச்செலவில் வெட்டி யிருக்கிறோம். ஜமீனிலிருந்து ஒரு பைசா கூட அவைகளுக்காக கொடுத்ததில்லை. அப்படி இருந்தும் நஞ்சை நிலம் என்று கணக்குப்பண்ணி ரூ. 12 தீர்வை போட்டிருக்கிறார்கள். புஞ்சைக்கு ரூ. $5\frac{1}{2}$, 6 தீர்வை. ரொம்பக் குறைந்தது ரூ. $3\frac{1}{2}$. அதற்கு குறைந்த ரேட்டு கிடையாது.

Q.—இது மாமூல் ரேட்டாக இருக்கிறதா ?
A.—எனக்கு 55 வயது ஆகிறது இப்பொழுது இருக்கிற ரேட்டு ரொம்ப கொள்ளையாக இருக்கிறது. சுமார் 15 வருஷத்திற்குள்ளாகத்தான் இப்படி உயர்த்தி இருக்கிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—பழைய பட்டா ஏதாவது தாக்கல் செய்திருந்தீர்களா?
A.—பட்டா இருக்கிறது. ஆனால் நான் கொண்டுவரவில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் தாக்கல் செய்கிறேன்.

Q.—ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் இருக்கிறதா ?
A.—சில நிலங்களிருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் பட்டா பண்ணிவிட்டார்கள். தப்பித் தவறி ஆடுமாடுகள் சுற்றி இருக்கிற நிலங்களில் போய்விட்டால் பிடித்துக்கொண்டுபோய்விடுவார்கள். அதற்காக தண்டம் வசூலிக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு பட்டாக்கு ஒரு கிடா கொடுக்கவேண்டும். சாமி கும்பிடு ஏற்பட்டால் கோழி வகையரா கொடுக்கவேண்டும். இதை ஆக்ஷேபித்தால் இந்தமாதிரி

யான இம்சைகள் ஏற்படுகிறது. கிராம சிப்பந்திகள் இதற்கெல்லாம் காரணம். ஊரில் குடி தண்ணீர் கிடையாது. எங்கள் முன்னோர்கள் காலத்தில் ஒரு ஏரி இருந்தது. அது இப்பொழுது போய் விட்டது. அதையாவது மராமத்து செய்து கொடுக்கவேண்டுமென்று எவ்வளவோ கேட்டு பார்த்தோம். ஒரு பலனுமில்லை.

Q.—ஊரில் பொது ஏரி (ஜமீன் ஏரி) ஏதாவது இருக்கிறதா ?

A.—ஒன்றுகூட கிடையாது. எங்கள் சொந்த சிலவில் கிணறு குட்டைகள் வெட்டி தண்ணீர் எடுத்துக்கொண்டால் அதற்கு தீர்வை போடுகிறார்கள். அவர்கள் போடுகிற வாய்தா தாங்கமுடியவில்லை.

Q.—வாயிதா ஏதாவது தள்ளிக்கொடுக்கிறதுண்டா ?

A.—இதுவரையில் தள்ளிக்கொடுத்தது கிடையாது. கணக்குப்பிள்ளை மணியகாரர்களுக்கும் ஜமீன் சிபந்திகளுக்கும் வேண்டியவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஒருவேளை கிடைக்கும். மற்ற குடிகளுக்கு சாதாரணமாக வாய்தா தள்ளிக்கொடுத்ததே இல்லை.

The Zamindar of Mirzapuram:

Q.—நீங்கள் எப்பொழுதாவது வாயிதா தள்ளிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டீர்களா ?

A.—ஏதாவது கேட்டால் கலெக்டர் கோர்டில் வியாச்சியம் போட்டுவிடுகிறார்கள். நாங்கள் கொடுக்கவேண்டிய ரூபாய்க்கு வட்டிபோட்டு கோர்டு செலவு எல்லாவற்றையும் சேர்த்து வசூல்செய்து விடுகிறார்கள். இது எல்லாம் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. இந்த கஷ்டங்களை நீக்கவேண்டும்.

Q.—நிலங்களை சர்வே செய்தால் உங்களுக்கு அனுகூலம் உண்டா ?

A.—எங்கள் நிலங்களை சர்க்கார் சர்வே செய்து சர்க்காரால் ஒருவிதமான தீர்வை ஏற்பட்டால் எங்களுக்கு கஷ்டமே இருக்காது. அயன் கிராம தீர்வையை எங்கள் வீட்டு பெண்பிள்ளைகள்கூட எங்களை எதிர்பார்க்காமல் கொடுத்துவிடுகிறார்கள். இந்த ஜமீனில் கிஸ்திக்காக எங்களை படுத்துகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை.

Mr. B. Venkatachalam Pillai:

Q—இநத வருஷம் அயன் கிராமத்தில் என்ன வரும்படி ?

A.—அயன் கிராமத்தில் சோளம் 12 மூட்டை, பச்சைப்பயறு 2 மூட்டை. இன்னும் தட்டைகாவட்டை முதலியன வந்தது.

Q.—என்ன விலை விற்கும் ?

A.—சோளம் ரூ. 50-க்கு விற்கும். பயரு ரூ. 15, 20 கிடைக்கும். தட்டைகாவட்டை ரூ. 10 அல்லது 15-க்கு விற்கும்.

Q.—வாயிதா எவ்வளவு ?

A.—இதற்கு வாயிதா ரூ. 3–8–0.

The Witness Volunteers:

எங்கள்பேரில் கிஸ்தி வகையராவுக்காக சூட் போடுகிறதாக இருந்தால் பஞ்சாயத்து கோர்ட்டில் போடவேணும். அப்படி செய்தால் ஜனங்களுக்கு பணச்சிலவும் சிரமமும் அதிகம் இருக்காது. இன்னும் எங்கள் கிராமங்களில் முன்சீப், கணக்குப்பிள்ளை யாராவது இறந்துவிட்டால் ஜமீன் உத்தியோகஸ்தர்கள் ரூ. 50 கொடு, ரூ. 60 கொடு, உனக்கு சிபார்ச் செய்து அர்ஜி எழுதுகிறேன் என்று கூட பணம் வாங்குகிறார்கள். இது எல்லாம் போகவேண்டும். கவர்ன்மெண்டிலேயே இவர்களை எல்லாம் ஏற்படுத்தவேண்டும். இவைகளை செய்துகொடுத்தால் ஜனங்களுக்கு கொஞ்சம் சௌகரியம் ஏற்படும்.

Witness No. 178. Trichinopoly. 9th February 1938.

Oral evidence of Mr. Sabapathi Pillai, Konerirajapuram, Headman, Kurichinatham ryot.

The President:

Q.—Which is your place ?

A.—என் கிராமம் குருச்சிநத்தம். அது அரியலூர் ஜமீந்தார் மனைவிக்குச் சொந்தம்.

Mr. B. Venkatachalam Pillai:

Q.—உங்களுக்கு ஜமீனில் எவ்வளவு நிலம் இருக்கிறது ?

A.—எனக்கு 6 காணி நஞ்சையும், புஞ்சையுமாக இருக்கிறது.

Q.—தீர்வை எவ்வளவு ?

A.—மொத்தமாக ரூ. 27 செலுத்துகிறேன்.

Q.—தீர்வை விகிதம் எப்படி ?

A.—ஏற்கனவே இருந்த தீர்வைக்கு மாறாக இப்பொழுது தீர்வையை உயர்த்தி இருக்கிறார்கள்.

Q.—உங்கள் ஊரில் பயிர்வாரித் தீர்வையா என்ன ?

A.—குரிச்சி கிராமம் பூராவுக்கு கவுல் தீர்வை ரூ. 3, 3½, 5, 7, இந்த விதமாக பல ரேட்டுகள் (rates) இருக்கின்றன. கவுல் ரேட் என்பது பயிர்மேல் தீர்வை இல்லை.

Q.—எந்த பசலியிலிருந்து தீர்வை உயர்ந்திருக்கிறது ?

A.—1887-ம் வருஷத்திலிருந்து கொஞ்சநாள் ஒரே மாதிரியாக இருந்தது, 1313, 1314-ம் பசலிவரையில் ரூ. 1–5–6 ஆக இருந்தது. அதற்குபின் proprietor ஆக இருந்த வீரராகவய்யங்கார் காலத்தில் கவுல் என்பதை புறக்குடி என்று மாற்றி ரூ. [illegible]–3–6 தீர்வை போட்டார்கள். அதை அனுசரித்தே இப்பொழுது இருக்கிற ப்ரோப்ரைட்டர்களும் பட்டாகொடுத்து வருகிறார்கள். நாங்கள் வெள்ளெரி ஏதாவது சாகுபடி செய்தால் அதற்காக ஜாஸ்தி தீர்வை வாங்குகிறார்கள்.

Q.—இன்னம் என்ன சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது ?

A.—ஜமீனில் ரூ. 2–0–3-ல் இருந்து ரூ. 12–4–0 வரையில் தீர்வை இருக்கிறது. அடுத்து இருக்கிற அமானியாபாக்கத்தில் அதே ரகமுள்ள நிலங்களுக்கு ரூ. 0–14–0 தான் தீர்வை இருக்கிறது. இந்த கிராமங்களுக்கு அயன் கிராமங்களைப்போல் வஜா எற்படுவதில்லை. விளைந்தாலும் விளையாவிட்டாலும் தீர்வை செலுத்தி தீரவேண்டும். இந்த கிராமங்கள் பேரீஜ் தொகையிலிருந்து கிராமத்திற்காக எந்தவித செலவும் செய்ததுமில்லை. செய்கிறதுமில்லை. கிராமங்களில் பொது நிலம், மேய்ச்சல் நிலம், புல் பச்சை முதலியவைகள் பொதுவுக்காக அளந்து ஒதுக்கப்படவில்லை. எரி, குட்டை, கிணறு இப்பேர்பட்டவைகளுக்கு ஒரு விதமான மராமத்தோ, பண உதவியோ அல்லது வேறு புதிய எற்பாடோ கிடையாது. இம்மாதிரியான கஷ்டங்கள் அரியலூர் ஜமீன் பூராவுக்கும் இருக்கின்றன. ரூ. 50-க்கு மேற்படாத எந்த தாவாவும் கிராம பஞ்சாயத்திலேயே இருக்கவேண்டுமென்று எங்கள் கோரிக்கை. ரெவினியூ கோர்ட்டுகளில் சூட்டு கொடுக்கிறதால் குடிகளுக்கு அதிக செலவும் கஷ்டமும் எற்படுகிறது. கிராம கோர்ட்டுகளிலேயே இருந்தால் குடிகளுக்கு அலைச்சலும் கஷ்டமும் இல்லாமலிருக்கும். செலவும் ரொம்பவும் குறைச்சலாகவும் இருக்கும். கிராமங்களை சர்வே செய்து செட்டில்மெண்டு தரம் விதித்து தீர்வை போடவேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை.

Q.—பட்டா மாறுதல் விஷயமாக எதாவது கஷ்டமிருக்கிறதா ?

A.—பார்ட்டீஸ் மனுப்போட்டால் கூட சுலபமாக பட்டா மாறுகிறதில்லை. அதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன.

Q.—பட்டா மாறாமல் எவ்வளவு காலமாக இருக்கலாம் ?

A.—பட்டா மாறுதலுக்கு மனுக்கொடுத்துக்கூட 10, 15 வருஷங்களுக்கு மாறாமல் இருக்கும்.

Q.—பட்டா மாறாமல் இருப்பதால் என்ன கஷ்டம். மாறினால் என்ன அனுகூலம் ?

A.—பட்டா மாறாமலிருப்பதால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பல பட்டாக்களுக்கு ஒரே சமயத்தில் தீர்வை கட்டவேண்டியதாக இருக்கிறது. ஒரு பட்டாவில் அநேகம்பேர்கள் நிலங்கள் சேர்ந்திருக்கலாம். ஒரு பட்டாவில் மொத்தமாக தீர்வை போட்டால் அதிலுள்ள உள் பேர்வழிகள் யார் யார் எவ்வளவு கட்டவேண்டுமென்று சாதாரணமாக குடிகளுக்கு தெரிவதில்லை. யாராவது ஒரு புள்ளி வாயிதா கட்டாமல்போனால் பட்டாவிலிருக்கிற எல்லோருக்கும் இடஞ்சல் எற்படுகிறது. ஒருவர் பாக்கிக்காக மற்றவர்கள் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதனால் ரொம்ப பணச்சிலவு உண்டாகிறது. அவரவர்களுக்குச் சொந்தமான நிலங்கள் அவர்கள் பேரில் இருக்கிறதா இல்லையா என்பதுகூட குறிப்பிட முடியாமல் இருக்கிறது. பட்டா மாறாமல் இருந்தால் யார் யார் எந்தெந்த சொத்தை அனுபவிக்கிறார்கள் என்பதுகூட தெரியாது. பட்டா அந்தந்த வருஷம் கிரமமாக கொடுத்தால் எந்த நிலம் யார் அனுபவிக்கிறார்கள். அவர்கள் என்ன தீர்வை கொடுக்கவேண்டுமென்பது தெரியும். தீர்வை யாராவது கொடுக்காமல் நின்றுவிட்டால் நடவடிக்கை எடுப்பதுகூட சுலபமாக இருக்கும். அதன்பொருட்டு மற்றவர்களுக்கு கஷ்டமும் செலவும் எற்படாது. பட்டா மாறுதலால் குடிகளுக்கு சௌகரியம் உண்டாகும்.

Witness No. 179. **Trichinopoly.** **9th February 1938.**

Oral evidence of Mr. Deva Goundar, Velayudampalayam, Gadoor Zamin.

The President.

Q.—நீங்கள் என்ன சொல்லிக்கொள்ளவேண்டும் ?

A.—ஜமீனில் இருக்கிற குடிகள் கஷ்டம் ரொம்ப இருக்கிறது. எங்கள் நிலத்தை சர்வே செய்து கொடுத்து பெர்மனெண்ட் செட்டில்மெண்டு செய்து கொடுக்கவேண்டும். கிஸ்தி அயன் கிராமங்களில் இருப்பதைப்போல் ஒரே விதமாக இருக்கவேண்டும். தரம் தீர்வை இருக்கக்கூடாது. கூட்டுப் பட்டாவாக இருக்கிற பட்டாக்களை தனித்தனிப் பட்டாவாக பிரிக்க சௌகரியமான எற்பாடுகள் செய்யவேண்டும். எரி குளங்கள் ஜமீனில் மராமத்து செய்யாமலிருந்தாலும் தீர்வை போடாமலிருப்பதில்லை. நாங்கள் சொந்த செலவில் கிணறு முதலியவை வெட்டி சாகுபடி செய்தால் அதற்கு ஜாஸ்தி தீர்வை போடக்கூடாது. புல் தரிசாக இருந்து அதை சாகுபடிக்கு கொண்டுவந்தால் அதற்கு ஜாஸ்தி தீர்வை போடுகிறார்கள். ஒருதரம் சாகுபடி செய்துபார்த்து அது சரியாக விளையவில்லை என்று மறுமுறை சாகுபடி செய்யாமல் விட்டுவிட்டாலும் அந்த தீர்வையை கழிக்கிறதில்லை மனுக் கொடுத்தாலுங்கூட அதை கழிக்கிறதில்லை. எதோ எகதேசம் தயவு தாக்ஷண்யத்தின்பேரில் குறைக்கிறார்கள். எங்களிடத்திலிருந்து கிஸ்தி வசூல் செய்கிறதில் அந்த செலவு இந்தச் செலவு என்று அதிகப்படிகூட வாங்குகிறார்கள். அந்தச் செலவுகளெல்லாம் குறைக்கவேண்டும். புரம்போக்கிலிருக்கிற மரங்களை விவசாயிகள் எதோ ஒரு அவசர ஆத்திரத்துக்குக்கூட எடுத்துக்கொள்ள முடிகிறதில்லை. ஒரு குச்சி ஓடிக்கிறதாக இருந்தாலும் Permit வாங்கித்தான் ஆகவேண்டும். பட்டா நிலங்களில் இருக்கிற மரங்களை வெட்டுகிறதற்குகூட Permit வாங்கித்தான் வெட்டவேண்டும். நிலத்திற்கு வேறு தீர்வை, மரங்களுக்கு வேறு தீர்வை போடுகிறார்கள். நிலத்திற்கு தீர்வை வாங்குகிறதால் அந்த நிலத்திலிருக்கிற மரத்துக்கு வேறு தீர்வை வாங்கக்கூடாது என்பது எங்கள் கோரிக்கை.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—நிலங்களை சர்வே செய்தால் அதிகப்படியாக இருந்தால் அதை என்ன செய்கிறது ?

A.—சர்வே செய்தால் ஜாஸ்தியாக நிலமிருந்தால் எந்தப் பட்டாதார் நிலத்திலிருக்கிறதோ அதே பட்டாதாருக்கு அளவு ஜாஸ்தி இருக்கிறதையும் கிரயமில்லாமல் விட்டுவிடவேண்டும். அந்த அதிகப்படியாக இருக்கிற நிலத்திற்கும்தான் சேர்த்து கிஸ்தி அந்த பட்டாதார் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார். சில கிராமங்களில் கிராம பஞ்சாயத்தார்களே சந்தை மார்க்கெட்டுகளை எற்படுத்தி இருக்கிறார்கள். அதில் வசூலாகிற பணத்தை ஜமீன்தாரே எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். அயன் கிராமங்களில் சந்தைகளில் வசூலாகிற பணத்தில் பாதியை கிராம பஞ்சாயத்துக்கு கவர்ன்மெண்டில் கொடுக்கிறார்கள். அதேமாதிரி ஜமீனும் பாதி சந்தைப்பணத்தை கிராம பஞ்சாயத்துக்கு கொடுக்கும்படி செய்யவேண்டும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—இந்த தீர்வை ஆதிகாலத்திலிருந்து இருக்கிறதா ?

A.—கொஞ்ச காலமாக ஒரே மாதிரிதானிருக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்தமட்டில் கொஞ்ச நாளாக உயர்த்தி இருக்கிறார்கள். எப்போதிலிருந்து ரேட் உயர்த்தினதென்பது தெரியாது.

Q.—உங்களுக்கு நிலம் இருக்கிறதா. எவ்வளவு இருக்கிறது ?

A.—சுமார் 200 குழி இருக்கிறது. நஞ்சை, புஞ்சை, தோட்டம், கிணறு இருக்கிறது.

Q.—உங்கள் ஊரில் எந்த குளம் சரியாக இல்லை ?

A.—எங்கள் ஊரில் குளமே கிடையாது. மழைபெய்ந்தால் 2 நாள், 3 நாள் தண்ணீர் வரும். அந்த தண்ணீரைப் பாச்சினால் அதற்கு தீர்வை போடுகிறார்கள். அது கூடாதென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். சாசுவதமான பாசன வசதி ஏற்பட்டிருந்து அதன் மூலமாக ஜலம் பாய்ச்சினால் தீர்வை போடுவது நியாயம். ஒன்றுமே இல்லாதபோது மழைத் தண்ணீருக்கு வரி போடக்கூடாதென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—வரியை உயர்த்துகிறார்கள் என்று சொன்னீர்களே. என்ன ரேட்படி உயர்த்துகிறார்கள் ?

A.—5, 6, 7, 8 அணாவாக உயர்த்திக்கொண்டே போகிறார்கள். எதற்காக உயர்த்துகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. நான்கு வருஷத்துப் பட்டாவைப் பார்த்தால் கடைசி வருஷத்தில் 10 அணா, 8 அணா கூடுதலாகவே இருக்கும். விஸ்தீரணம் அதேதான் இருக்கிறது. ஆனால் பட்டா கொடுக்கிறபோது ரேட்டு தான் ஜாஸ்தியாக தெரிகிறது. ரூ. 5 போன பசலியில் இருந்தது. இந்த பசலியில் ரூ. 5½ ஆகி விடுகிறது.

Q.—இதற்கு ஆதாரம் இருக்கிறதா ?

A.—இங்கே கொண்டுவரவில்லை. ஆனால் ரிகார்டுகள் இருக்கின்றன.

The ZAMINDAR OF MIRZAPURAM :—

Q.—தீர்வை ஜாஸ்தியாக போடுகிறார்கள் என்றால் பூமி ஜாஸ்தியாக சாகுபடி செய்தால்தானே போடுவார்கள் ?

A.—நிலம் ஜாஸ்தி சாகுபடி ஆகிறதில்லை. வருஷா வருஷம் அதே தனைதான் சாகுபடி செய்கிறோம். பட்டாவில் பார்க்கும்போது தீர்வை ஜாஸ்தியாகப் போட்டிருப்பதாகத் தெரிகிறது.

Witness No. 180. Trichinopoly, 9th February 1938.

Oral evidence of Mr. V. Govindaswami Nayudu, Officiating Superintendent, Chatram Department, West Tanjore District Board.

The CHAIRMAN : *Q.*—What are you please ? *A.*—I am the officiating Superintendent of the Chatram Department of the West Tanjore District Board. These chatrams have been vested in the West Tanjore District Board.

Q.—What is the extent of the lands attached to these chatrams? *A.*—We have got 79 entire inam villages and 49 part inam villages forming part of other villages, in which other people have got also interest.

Q.—What is the total income ? *A.*—Rs. 2,00,000 for land rent alone.

Q.—What is the total extent of lands ? *A.*—About 40,000 acres.

Q.—Of which how much is wet and how much dry ? *A.*—About 20,000 are wet and they are river-fed and also tank-fed.

Q.—By which river ? *A.*—Cauvery, Vadavar, Vennar and Pamaniyar.

Q.—How much of that is tank-fed ? *A.*—All the villages in the Pattukottai and Arantangi taluks which come to about 12,000 acres in all are tank-fed. These tanks are rain-fed and also fed by jungle streams which carry water from other sources.

Q.—Are they natural streams ? *A.*—Yes.

Q.—For how long have these lands been under the management of the District Board ? *A.*—Under the Madras Local Boards Act, 1884, these chatrams were vested in the District Board and before that it was managed by the Collector as the Agent of the Revenue Board.

Q.—All these villages belong to Tanjore palace ? *A.*—Yes, we have got one Sanod now which is extant. (Here the witness filed the Sanad in original and was asked by the Chairman to file a copy and take back the Sanad.)

Q.—What is the wet rate ? *A.*—It varies from Rs. 2–4–0 to Rs. 18–0–0 per acre. because the villages do not lie contiguously. They are scattered throughout the district, In certain portions they are charged only Rs. 2–4–0 and in other taluks they are charged Rs. 18–0–0 per acre.

Q.—What is the dry rate ? *A.*—The lowest is annas 4. The highest is Rs. 2–10–0.

Q.—Have you got garden lands ? *A.*—Yes.

Q.—What is the rate for that ? *A.*—It also varies from Rs. 2–8–0 to Rs. 3–12–0.

Q.—What about the repairs for irrigation resources ? *A.*—We are having all these tanks and irrigation sources in good condition.

Q.—How many tanks are there ? *A.*—About 90.

Q.—The tanks, the irrigation channels, and the supply channels, all these are being maintained by the Board in good condition ? *A.*—Yes.

Q.—What is the cost of irrigation repairs per year ? *A.*—About Rs. 15,000. I suppose there was some complaint made about the bad condition of the irrigation sources maintained by these chatrams by one of the tenants from Umayalpuram village. Mr. Rutherford who had occasion to investigate into this matter has certified that we are maintaining these irrigation sources in good condition.

Mr. CHAIRMAN : That is all right. Mr. Rutherford as Inspector of Local Boards would have certified so, for showing that his administration of local boards was good.

Q.—Now what is the method applied in your villages for collecting the rent ? *A.*—It is a system of division by shares which is commuted. We enter into a lease for 5, 10 or 15 years as the case may be.

Q.—Originally it was a sharing system ? Even today it is a share system ? *A.*—We have not settled the rent permanently.

Q.—It is supposed to be prevailing even now ? *A.*—Yes.

Q.—You said just now that you enter into an agreement for 5 years, or ten years and that you fix the rate and also the period up to which it should hold good ? I suppose you fix the money value and also the period ? *A.*—Yes. There are also certain places where we have fixed the rent once and for all.

Q.—How many villages like that have you got ? *A.*—Eight villages, where there is no question of variation.

Q.—With regard to the first sort, i.e., Amani villages, you fix the rates periodically according to the rates of prices for paddy, which vary ? *A.*—Yes. They are varying, but now they are less than what they were originally.

Q.—If the prices go up, you charge more, I suppose. Varying means what ? *A.*—Whenever we fix a certain rate, we take into consideration the prevailing prices for the last 10 or 12 years and we arrive at a figure and we have that rate during that period. Practically the rates will be going higher during that period.

Mr. CHAIRMAN : Why do you say it will be going higher practically ? The witness *A.*—It is now going down.

Q.—So your arrangement with the tenants has been of two kinds. In one you enter into an arrangement with the ryot by which the rate will be varied periodically according to the rise or fall in prices. That is one method. Another method is one by which the rate will be fixed without any regard to the price current in the market. These two things are prevailing in your Estates ? *A.*—Yes. In certain cases we are receiving a portion of rent in kind also

The CHAIRMAN : *Q.*—Is there any dispute between the tenants and the Board with regard to the rates ? *A.*—Never, such cases are very rare.

Q.—How long have you been connected with this management ? *A.*—For the last one year, before that I was the manager of the Chatram Superintendent's office for about 20 years.

Q.—Are there any disputes between the tenants and the District Board ? *A.*—There are.

Q.—What are the disputes ? *A.*—In a few cases, they will not enter in muchilkas ; they will evade. A major portion of the village may come to agreement, but a minor portion may remain and take advantage of the season. Whenever we want to collect rent from them, they will give some pretext or other and try to lead us into litigation and we will have to attach all the lands and recover arrears of rent in such cases.

Q.—How much litigation has the District Board now against the tenants ? *A.*—More than 700 rent suits are pending; some of them have even been decreed.

Q.—What is the nature of the decrees ? Default in payment.

Q.—All money suits ? *A.*—Yes.

Q.—No ejectment suits ? *A.*—I do not remember if we have any ejectment suits.

Q.—How do your rates compare with the rates of the Government ryoti lands in the neighbourhood ? *A.*—In some cases, they will be a little more than the Government rates ; but in some five or six villages, the rates are far less than the Government rates even in the same village, on account of the Cauvery-Mettur Project.

Q.—Are there any forests in your estate ? *A.*—In Muthupet, we have a reserved forest of about 12 acres ; the portion contiguous to it is called unreserved forest.

Q.—What are the rights enjoyed by the tenants ? *A.*—We are issuing permits for the grazing of cattle in the reserved forest area.

Q.—What about unreserved forests ? *A.*—There are no restrictions there ; they are free.

Q.—How much of reserved forests have you got ? *A.*—12,000 acres.

Q.—What are your permit rates ? *A.*—The same rates as are prevalent in the adjoing Government forests. Some time back, we were managing the Government forests also for about 10 years, and we used to devide the income half and half. When it came into our hands, they yielded a bit more. If Rs. 2,000 was the income and Rs. 1,200 was the expenditure for the Government forest, we used to divide the balance of Rs. 800 into Rs. 400 for each, i.e., for the chatram department and for the Government. In Manamelkudi in the Arantangi taluk also we have got a patch of forest land.

Q.—In Perambur village, what is the rate of rent, wet, double crop and single crop ? *A.*—Rs. 18 per acre in Perambur village in the Mannargudi taluk. It once went before the High Court and the High Court have decreed that it should be always Rs. 1–4–0 per kalam.

Q.—That is for single crop ? *A.*—Yes, but there is no double crop there.

Q.—What is the highest rate ? *A.*—This is the highest prevailing rate in our chatram lands. Half of the first crop rate is the rate for the second crop prevailing everywhere. If the rate for the first crop in a village is Rs. 12, then we charge half of that for the second crop.

Q.—For the double crop in Perambur village, are you charging Rs. 32–14–0 and for single crop Rs. 22–8–10 ? *A.*—Yes. It may be so, because it is *Panguveetham* village, and it is divided into 108 *pangus* ; but sometimes the pangus carry more rates.

Q.—What is the rate in the neighbouring Government lands ? *A.*—We have not ascertained.

Q.—Your rents are collected regularly ? *A.*—They do fall into arrears.

Q.—How much arrears remain now ? *A.*—About three lakhs.

Q.—How much of it will have to be wiped out under the new legislation ? *A.*—Nearly Rs. 1,96,000 will have to be wiped out. We have been granting annas 6 remission to the village, seeing that rate was really high. We have been giving such remissions for the past three or four years only in cases in which the ryots have entered in muchilkas, not for amani villages.

Q.—In amani villages, if the land does not yield, what do you do ? *A.*—We can get only a share of the actual produce.

Q.—You cannot compel them to give ? *A.*—No, they cannot be compelled. Particularly for this village, we have given a remission of annas 6 taking into consideration the fact that the rates are unfair.

Mr. A. Rangaswamy Ayyangar : *Q.*—You say in your memorandum : " The Government is not free from illegal exactions from the ryots and this fact may be clearly seen from a decided case ". You also say that " the Government have got power to prosecute if the ryots are not paying rent ". *A.*—Yes, for wilful default ; the Government have got such a power.

Q.—Have you known cases where Government have prosecuted a ryot for non-payment of rent ? *A.*—There is a provision in the Act that they have the power.

Q.—And you want similar powers for the landholders to put ryots into jail if they do not pay ? *A.*—There must be some provision like that, I say.

Q.—And without that power, you think it is not possible for the landholders to collect rents ? *A.*—Now, the process is very tedious for the landholders.

Q.—But, if you convert the dry lands into house sites and refuse to pay the rent, would it be fair ? *A.*—When the village is thickly populated and we are not able to get sites for building houses, where are we to go ? We only build houses on dry lands belonging to us.

Q.—You want remission on the portions of land on which you build houses. Why should the proprietor lose on account of your building houses and thus making his lands uncultivable ? *A.*—Or else, let him supply houses for us ; we shall pay the rent.

Mr. KUMARASWAMI RAJA : *Q.*—Where are you living, in the Government area or in the zamin area ? *A.*—In the zamin area.

The CHAIRMAN : *Q.*—Does the zamindar take any objection to the building of the houses ? *A.*—No.

Q.—Even after you have built houses, you are paying the same rent as before ? *A.*—Yes.

Q.—What is your complaint ? Is it that you want remission on the ground that you are not cultivating the lands on which houses have been built ? *A.*—We only want that remission should be given in such cases.

Q.—You can ask for remission if for want of rain, crops have failed ; but you have built houses thereon ? *A.*—The dry lands do not yield anything at all. That is why we have built houses and we want remission.

Mr. KUMARASWAMI RAJA : *Q.*—Is it not a fact that even in Government villages, if houses are built on dry lands, you have to pay land tax, or, if in the Union or Panchayat area, a house-tax ? *A.*—We only request that provision should be made in the Act in regard to this matter.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—Do you also sell these house sites ? *A.*—Nothing of the sort has happened so far.

The CHAIRMAN : *Q.*—Has there been any remission when there was a failure of crops ? *A.*—In the case of non-commuted lands, there was such a remission.

Q.—Have you any grazing rights ? *A.*—We used to send our cattle for grazing in the tank beds, whenever there was no water ; but now those lands have been leased out by the zamindar, and we are not allowed to send our cattle to graze there.

Q.—Are there any other communal lands for grazing purposes ? *A.*—There was a cattle stand in our village which was communal land. The zamindar sold it away to one of his servants, who has since built a house thereon.

Q.—When was that ? *A.*—Some thirty years back.

Q.—Are there documents to show that ? *A.*—Yes, there is a registered document. We applied to the District Collector for the ejection of the tenant ; that was enquired into by the Revenue Inspector and it was finally disposed of. It was decided that we had no rights over that portion of the land.

Q.—Have you anything else to say ? *A.*—The temples in our mitta are managed by the zamindars. Before the year 1924, they were in our possession and as there was a successive failure of crops for a number of years, we were not able to pay the rent due on the temple lands to the zamindar. Then the zamindar attached the lands ; as we were not in a position to pay the rent due, we handed over the entire management of the temple properties to the zamindar. Now, our complaint is . . . .

Q.—Are you a tenant of temple lands ? *A.*—No.

Q.—Was the zamindar a trustee of these temples ? *A.*—As I said the villagers were managing these temples prior to the year 1924 and they were managing the temple lands also. When there was a successive failure of crops for a number of years, we were not able to pay the rents due on the lands to the zamindar. Consequently, the temple lands were attached. That was in the year 1924. We thereupon handed over the lands to the zamindar and the management of the temples also was being attended to by the zamindar from that year. Our complaint now is that the temples are not properly managed. Some provision must be made in the Act by which these temples and endowed properties may be protected for the benefit of the public.

Q.—Who is now cultivating these temple lands? *A.*—The zamindar is leasing out the temple lands and getting the yield.

Q.—What is the extent of these lands ? *A.*—About 12 or 13 acres.

Q.—What is the income realised from them ? *A.*—Nearly Rs. 500.

Q.—And what is the expenditure of the temple, roughly ? *A.*—About Rs. 16 per month. The village deities have to go on hunger-strike for some days in the month. The doors of the temple are locked up and the servants of the temple are not being properly paid.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—You said that the temple was managed by the villagers before 1921 ? *A.*—Yes.

Q.—Were the lands belonging to the temple also managed by the villagers ? *A.*—Yes.

Q.—So you admit that you were unable to manage the temple and therefore you handed over the temple to the zamindar ? *A.*—Because there was successive failure of crops we were not able to pay the assessment to the zamindar. And therefore we handed over the management of temple to the zamindar.

Q.—To whom the assessment goes ? *A.*—To the zamindar. For non-commuted lands he made enormous charge ; the crops successively failed for a number of years ; there was no cash in the credit of the villagers ; they were unable to pay the assessment to the zamindar ; he attached those lands ; and so the villagers handed over the lands to the zamindar.

Q.—I suppose that these lands were granted to the temple by the zamindar ? *A.*—Certainly not, they were all granted by the villagers.

Q.—Have you got any record to show ? *A.*—We have got only receipts.

Q.—The receipts show that you have paid rent for the lands ? *A.*—Yes.

Q.—No other record ? *A.*—No.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—You suggested that you were paying two-third of the gross produce as rent to the zamindar ? *A.*—Yes, for the non-commuted lands. There are commuted and non-commuted lands for each and every patta but for the non-commuted lands also, the zamindar is entitled according to the decrees executed in 1897 to receive the grain rent.

Q.—According to a provision in the Estates Land Act, you can apply to the Collector for charge of grain rent into cash ? *A.*—We do not know that there is such a provision. We are not lawyers and we poor people cannot be expected to know all these things. In our mitta there was a public road which was in possession of Government before 15 years but it was handed over by the Government to the zamindar, and the lands covered by this road have been kept by the zamindar for his own use.

Q.—You say it is a public road? How long ago it was a public road? *A.*—For hundreds of years it has been in existence and it was in possession of the Government but before 14 or 15 years back it was handed over by the Government to the zamindar, and he did not pay any compensation for it. The zamindar is not charged anything for that road and no peshkash is levied for it.

Mr. Mahboob Ali Baig: *Q.*—You say that this road has come into existence not after the permanent settlement, but before it? *A.*—Yes, about 100 years ago.

My zamindar told you that he has no collection agents in his mitta. He has got collection agents and he has signed receipts. The receipts have already been filed.

In the end I request that the zamindari system may be abolished.

The Zamindar of Mirzapuram: *Q.*—What is the extent of land you have in the zamin? *A.*—5 kotahs of lands.

Q.—Is that all wet? *A.*—Wet and dry.

Q.—You cultivate the lands yourself? *A.*—Yes.

Q.—As regards the mismanagement of the temple, did you apply to the Religious Endowments Board? *A.*—No.

Q.—Do you know whether any ryots in your village lease out their lands for cultivation? *A.*—Yes.

Q.—Do you know how much they get per acre? *A.*—They make contracts that a certain number of kotahs should be paid and the maximum that is fixed is 16 kotahs of paddy per kotah of land. One hundred and twelve Madras measures make one kotah.

Q.—That is to say the ryot gets about Rs. 128 from his under-tenants? *A.*—Yes.

Q.—How much he pays to the zamindar as his rent? *A.*—He pays Rs. 18 per kotah of land as rent to the zamindar. The zamindar has received 250 rupees per kotah of land as compensation for commuting the rent.

Q.—May I know the price of such land? *A.*—About Rs. 1,500 per kotah of land.

Q.—You said that the zamindar is even now taking Rs. 250 as compensation per kotah of land? *A.*—I remember that he has executed two or three deeds to this effect.

Q.—You cannot say for certain? *A.*—No.

Q.—You have no personal knowledge of all things that you have stated? *A.*—I have personal knowledge of all the facts with regard to commutation. I have no personal knowledge of recent commutation.

Then the witness withdrew.

Witness No. 211. **Madura.** **22nd February 1938.**

Oral evidence of Mr. Kandaswami Tevar, Sankarankoil taluk, Sivagiri Zamin.

Mr. P. S. Kumaraswami Raja:

எங்களுடைய எஸ்டேட்டில் பாதி நஞ்சை வாரம். பாதி புஞ்சை ரொக்க தீர்வை. வார நஞ்சை தீர்வையானது ஒரு எக்கருக்கு ரூ. 3–3–9 முதல் ரூ. 6–8–0 வரையில் இருக்கிறது. எங்கள் ஊருக்குப் பக்கத்தில் திருமலாபுரம் என்று அயன் கிராமம் இருக்கிறது. அதன் தீர்வை ரூ. 4 முதல் ரூ. 5 வரையில் இருக்கிறது. எங்கள் சமஸ்த்தானத்தில் இருக்கிற நிலம் ஒரு போகம் தான். பழைய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் கட்டுகள் எங்கள் ஜமீன் எஸ்டேட்டுக்கும், அயன் நிலங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. அது பிளானில் தெரியும். கவர்ன்மெண்டு நிலங்களின் பொழிக்கல்லும் எங்கள் ஜமீன் எஸ்டேட் பொழிக்கல்லும் ஒன்றாய் இருக்கிறது. அதற்கும் பிளான் கொடுக்கிறேன். எங்கள் ஜமீன் எஸ்டேட்டில் பாதி வார நஞ்சை, பாதி தீர்வை நஞ்சை.

Mr. P. S. Kumaraswami Raja:

Q.—தீர்வை விகிதம் எப்படி?

A.—வார நஞ்சைக்கு ஒரு எக்கருக்கு 40, 43 ரூபாய் வரையில் இருக்கிறது.

(Files a patta of Viswanathapuri village.)

The President:

Q.—கவர்ன்மெண்டு நிலத்திற்கு என்ன தீர்வை?

A.—ரூபாய் 4 முதல் ரூ. 5 வரையில் இருக்கிறது.

Q.—என் தீர்வை இவ்வளவு ஜாஸ்தி?

A.—வாரமாக இருந்ததை நீக்கி இதை **commutation**-ல் செய்து இந்த மாதிரி தீர்வை போட்டிருக்கிறார்கள்.

Q.—இதே **estate**-ல் முன்னால் **cash payment** கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்களே வாரம் இல்லாது?

A.—அதாவது தீர்வை நஞ்சைக்கு ரூ. 3–3–9 முதல் ரூ. 6–8–0 வரையில் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

Q.—எவ்வளவு வருஷ காலமாக ?
A.—சுமார் 70 வருஷ காலமாக.

Q.—இந்தத் தீர்வையைப்பற்றி ஆக்ஷேபம் இல்லையா ?
A.—இல்லை. **Collector** கோர்ட்டில் **settlement** செய்தது.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—**Commutation** செய்தது எப்பொழுது ?
A.—1913-ம் வருஷத்தில்.

The President :

Q.—கோர்ட்டில் செட்டில்மெண்டு செய்தது என்று சொன்னீர்களே எந்த கோர்ட்டு ?
A.—**Revenue Court.**

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—இதற்கப்பால் ஏதாவது செய்தீர்காளா ?
A.—இதை ஆக்ஷேபித்து **High Court** வரையில் போனோம். ஆனால் **Collector** அவர்கள் **settlement**-ல் செய்தது ஊர்ஜிதம் ஆகிவிட்டது.

Witness :

40 ரூபாய் முதல் 43 ரூபாய் வரையில் தீர்வை ஏற்படுத்தப்பட்டிருப்பதைப்பற்றிய காரணம் என்னவென்றால் **commutation** போட்டபோது அகவிலை ஜாஸ்தியாக இருந்தது. அப்பொழுது நெல் விலை 18, 19 ரூபாய் வரையில் இருந்தது. இப்பொழுது 5 ரூபாய் முதல் 6 ரூபாய் வரையிலிருக்கிறது. நாங்கள் கிணறுவெட்டி சாகுபடி செய்திருந்தாலும்கூட நஞ்சைக்கு தண்ணீர்பாய்ச்சி சாகுபடி செய்ததாக தீர்வை போட்டுவிடுகிறார்கள். அறுவடையான பிறகு சுவாமி போகம், அய்யனார் போகம், குளம் வெட்டு முதலிய செலவுகளைக்கூட நீக்காமல், நாங்கள் சிரமப்பட்டு களை வெட்டியும், கட்டி, மண்ணு, கல்லு இவைகளை எடுத்து சாகுபடி செய்தால் அவைகளையும் நீக்காமல் இவர்களுக்கு லாபம் இருக்கிறதென்றும் **commutation** போடலாம் என்று சொல்லி தீர்வையை உயர்த்திவிட்டார்கள். அந்த மாதிரி செலவுகள் எல்லாம்கூட வருமானம்தான் என்று சொல்லி தீர்வையை உயர்த்தி விட்டார்கள். இரண்டு ஏக்கர் நிலம் ஒருவருக்கு இருந்தால் ஒரே நாளில் அறுவடை செய்யமுடியாது. ஒரு நாள் அறுத்து ஒரு இடத்தில் கொண்டு வந்து அறுத்ததை அடித்து அம்பாரம் போட்டிருப்பான். மறு நாள் இன்னொரு ஏக்கர் நிலத்தை அறுத்து அதே இடத்தில் அடிப்பார்கள். பிணையல் போட்டு மாடு ஓட்டும்போது தப்பித்தவறி மாடுகள் ஏற்கனவே போட்டிருக்கிற அம்பாரத்தை மிதித்துவிட்டாலோ அல்லது மாடுகள் வாய் வைத்து தாளைப்பிடுங்கி இழுத்தாலோ ஜமீனில் போட்டிருந்த குறி அழிந்திருக்கிறதென்று சொல்லி அதற்காக கால் கோட்டை அரை கோட்டை சேர்த்து **commutation** சேர்த்து அதிக தீர்வை போட்டுவிடுவார்கள். ஒரே குளத்தில் பாய்ச்சலில் ஜமீனுக்கு பண்ணை நிலம் கொஞ்சம் இருக்கும். சம்சாரிகளுக்கும் நிலம் இருக்கும். இப்படி இருக்கும்போது ஜமீன் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக அரைவாசியை அடைத்து அந்த தண்ணீரை திருப்பி தாங்கள் நிலத்துக்கு பாய்ச்சுகொள்ளுவார்கள். அந்தமாதிரி தண்ணீரை அடைத்து திருப்பிக்கொண்டு போவதை நாங்கள் ஆக்ஷேபித்தால் எங்கள் பேரில் **criminal case** போட்டுவிடுவார்கள். அதனால் குடிகள் நிலங்கள் சரியாக விளையாது. இதைப்பற்றி ஜமீன்தாரிடத்தில் தாவா செய்துகொண்டால் எங்கள் நிலம் தண்ணீர் பாய்ந்து விளைந்திருக்கிறபோது உங்கள் நிலம் விளையவில்லை என்பது சுத்த தப்பு. அது உங்களுடைய அஜாக்கிறதையால்தான் ஏற்பட்டது. ஆகையால் தீர்வை தள்ளிக்கொடுக்க முடியாதென்றும் ஏற்பட்ட தீர்வையைக்கட்டித்தான் ஆகவேண்டுமென்றும் கட்டாயப்படுத்துகிறார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—இந்த விஷயங்கள் உங்களுக்கு நேரில் தெரியுமா ?
A.—நானும் ஒரு சம்சாரி, எனக்கு நன்றாய் தெரியும்.

Witness :

எங்கள் ஊரில் காட்டு மிருகங்கள் ஜாஸ்தி. அவைகளால் அனேக தடவைகளில் பயிர்கள் நாசமாக்கப்பட்டிருக்கிறது. சேதம் ஜாஸ்தியாகவும் ஏற்பட்டிருக்கிறது. இப்படி அழிவு ஏற்பட்டாலும் சரி, காற்றாலும், பூச்சி, புழுக்களாலும், வெள்ளத்தாலும் சேதம் ஏற்பட்டாலும்கூட இது எல்லாம் உங்கள் சுவஸ்தியால் ஏற்பட்டதென்று சொல்லி தீர்வையை போட்டு விடுவார்களே தவிர **remission** கொடுக்கமாட்டார்கள். எங்களுக்கு ஒரு நாளும் வஜா கிடையாது. மழையே இல்லாமல் போனாலும், கிணற்றில் தண்ணீர் இல்லாமல் போனாலும் நாங்களே எங்கள் சொந்த செலவில் கிணறு வெட்டி தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்தாலும் சரி, எது எப்படி கெட்டுப்போனாலும் சரி எங்களுக்கு வஜா என்பது கிடையாது. பக்கத்திலிருக்கிற சர்க்கார் நிலங்களுக்கு வஜா கொடுத்தாலும் எங்களுக்கு வஜா என்கிற பேச்சே கிடையாது. எங்கள் நிலங்களுக்கு **survey** கிடையாது. ஆனால் ஜமீனிலே ஏதோ சர்வே செய்ததாக ஒரு ரிக்கார்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அதில் குடிகள் அனுபோகத்திலிருக்கிறதும், சாகுபடி ஆகிற நிலங்களிலும் கூடுதல் குறைச்சலிருக்கும். இதை நிவர்த்திக்க ஒரு வழியும் கிடையாது. ஜமீனில்போடுகிற தீர்வையைக்கட்டித்தான் ஆகவேண்டும்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—**Court of Wards**-ல் **survey** செய்யப்படவில்லையா ?
A.—**Survey** ஆகி இருக்கிறது ஆனால் **settlement** ஆகவில்லை. எங்களுக்கு **jamabandi** கிடையாது. எந்த மகசூல் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது எந்த மகசூல் எழுதப்படவில்லை என்பது எங்களுக்கு தெரியாது. நாங்கள் ராகி **(ragi)** சாகுபடி செய்திருந்தால் ஜமீனில் நெல் சாகுபடி என்று எழுதியிருந்தால் அதன்படித்தான் தீர்வை செலுத்தவேண்டும். எந்த நிலத்திற்கு எந்த விதமான தீர்வை போட்டிருக்கிறதென்பதுகூட எங்களுக்குத்தெரியாது. ஆகையால் கவர்ன்மெண்டில் எங்களுக்கு ஜமாபந்தி நடத்திக்கொடுக்கவேண்டும்.

The President :

Q.—உங்கள் ஜமீந்தார் எங்கே குடியிருக்கிறார்கள் ?
A.—முந்தின ஜமீந்தார் அனேகமாக ஊரில் இருந்ததேயில்லை. ஆனால் இப்பொழுது இருக்கிற ஜமீந்தார் அனேகமாக ஊரில்தான் இருக்கிறார்.

Q.—உங்கள் ஜமீனில் **Manager or Diwan** இருக்கிறாரா ?

A.—இருக்கிறார்.

Q.—அவர்கள் ஒன்றும் செய்கிறதில்லையா ?

A.—அவர்கள் வரி வசூல் செய்கிறதில்தான் அக்கரையாக இருக்கிறார். ஜமீந்தார் சொல்லுகிறதை அமுல் நடத்துகிறாரே தவிர குடிகள் ஏதாவது குறைகள் சொன்னால் அதை கவனிப்பதே கிடையாது.

Q.—**Zamin**-ல் **Receiver** இருந்தாரா ?

A.—இருந்தார். அவர் சரியாக நடக்கவில்லை என்று புகார் செய்ததால் அவரை நீக்கிவிட்டார்கள்.

Q.—நஞ்சைமேல் புஞ்சை தீர்வை எப்படி ?

A.—இரண்டு பேர்களும் ஒப்புக்கொண்டால் அதற்கு 4 ரூபாய் தீர்வை. அதாவது புஞ்சை தீர்வைக்கு மேல் 4 ரூபாய் தண்ணீர் தீர்வை போடுகிறார்கள்.

Q.—உங்களுக்கு இதில் என்ன ஆக்ஷேபம் ?

A.—பக்கத்திலிருக்கிற அயன் நிலங்களுக்கு 4 ரூபாய் முதல் 8 ரூபாய் வரையில் இருக்கிறது. ஆனால் அதே நிலங்களுக்கு 40 ரூபாய் ஏற்பட்டிருக்கிறதென்பதுதான் எங்களுக்கு இருக்கிற குறை. இன்னும் தீர்வை வசூல் செய்கிறதில் எங்களுக்கு எவ்வளவோ கஷ்டம் இருக்கிறது. பட்டா போடுகிறார்களே அதற்கு கூட ஜமீந்தாருக்கு ஏதாவது ரூபாய் கொடுக்கவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—உங்கள் ஜமீன்தாருக்கு நேரில் பணம் கொடுக்கிறதுண்டா ?

A.—ஆம். நானே நேரில் கொடுத்திருக்கிறேன்.

Q.—தீர்வையை வசூல் செய்கிறது யார் ?

A.—தீர்வையை எங்களிடத்திலிருந்து வசூல் செய்கிறதற்கு மணியம் மட்டும் வரமாட்டார்கள். அவருடன் 40, 50 போக்கிரிகளையும் கூட்டிக்கொண்டு வருவார். தீர்வையை இப்பொழுது செலுத்துவது கஷ்டமாக இருக்கிறது இன்னும் கொஞ்ச நாள் கழித்து செலுத்துகிறோம் என்று சொன்னால் கேட்கமாட்டார்கள். கூட வந்திருக்கிற ஆள்களைக்கொண்டு ஆடுமாடுகள், இதர ஜங்கம சொத்துக்களை பலாத்காரமாக எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அவர்களை எதிர்த்து நிற்க எங்களுக்கு பலம் கிடையாது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—புஞ்சைக்கு தீர்வை என்ன ?

A.—10 அணா. நஞ்சைமேல் புஞ்சைக்கு ரூ. 0–12–4. இந்த நிலத்தில் பக்கத்தில் நஞ்சையாக இருப்பதால் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும் அதில் புஞ்சை தான்யம் விளையாது இருந்தாலும் தீர்வை கொடுக்கவேண்டும். அதை நஞ்சையாகச்செய்யவேண்டுமானால் அதற்கு 4 ரூபாய் தீர்வை கொடுக்கவேண்டும்.

Q.—கவர்ன்மெண்டு புஞ்சைக்கு தீர்வை எப்படி ?

A.—0–13–0 முதல் ரூ. 1–2–0 வரையிலிருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—தோட்டத்திற்கு என்ன தீர்வை ?

A.—புஞ்சை ரேகட்தான். ஆனால் சிலதோட்டங்களுக்கு அதிக தீர்வை வாங்கி யிருக்கிறார்கள். புஞ்சை நிலத்தில் கிணறு வெட்டி பாயும்படி செய்து கரும்பு, வெற்றிலை முதலியவைகள், சாகுபடி செய்தால் 14 ரூபாய் முதல் 18 ரூபாய் வரையில் தீர்வை போடுகிறார்கள்.

Q.—கிணறு வெட்டுகிறதற்கு முன்னால் 10 அணா தீர்வை இருக்கிறபோது கிணறு வெட்டி சாகுபடி செய்தால் அதற்கு ஜாஸ்தி தீர்வை போடுகிறார்கள் என்று சொன்னீர்களே அதற்கு ரசீது இருக்கிறதா ?

A.—ரசீது கொடுக்கமாட்டார்கள்.

Q.—ஜமீந்தார் குளம், கால்வாய் மராமத்து செய்கிறதுண்டா ?

A.—இதுவரையில் குளம், கால்வாய் முதலியவைகளை மராமத்து செய்ததே கிடையாது. **Petition** போட்டாலும்கூட ஒருவரும் கேட்கமாட்டார்கள். இது சம்பந்தமாக கோர்ட்டில் ஒரு கேஸ் நடத்தினோம். **Collector**-க்கு பெட்டிஷன் (**petition**) போட்டோம். **Divisional Officer**-க்கு அனுப்பினார்கள். அவர் குடிகளுக்கு அனுகூலமாக ரிப்போர்டு செய்தார். **Collector**-ம் குடிகளுக்கு அனுகூலமாக குளங்களையும், கால்வாய்களும் ரிப்பேர் செய்து கொடுக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார். ஆனால் ஜமீந்தார் அவர்கள் **High Court** வரையில் போனார்கள். **High Court**-ல் அவருடைய பெட்டிஷனை தள்ளிவிட்டார்கள். 1925-ம் வருஷத்தில் ஒரு பெரிய உடைப்பு வந்தது. 1932-ம் வருஷத்தில் ஹைகோர்ட்டில் எங்களுக்கு அனுகூலமாக உத்தரவு கிடைத்தது. ஆனால் ஜமீந்தார் இதுவரையில் ஒரு விதமான **repair**-ம் செய்யவில்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—அதன் பேரில் Collector-க்கு மனு ஏதாவது போட்டீர்களா ?

A.—இல்லை. இது வரையில் எங்களுக்கு இந்த விஷயத்தில் எவ்வளவோ பணம் செலவு ஆயிற்று. இன்னும் ஒரு விதமான அனுகூலமும் ஏற்படவில்லை. அதற்கு மேற்கொண்டு பணம் செலவழிக்க எங்களிடத்தில் பணம் இல்லை. **Commutation** செய்துவிட்டதால் அவர்களுக்கு தீர்வை எப்படியாவது வந்துவிடும் என்ற நம்பிக்கையால் அவர்கள் குளம் முதலியவைகளை மராமத்து செய்கிறதில்லை என்று அவர்கள் ஒரு தீர்மானம் செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் புஞ்சைகளை எல்லாம் சாஸ்வதமான நஞ்சையாக வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அது எங்களுக்கு ரொம்ப பிரதிகூலமாக இருக்கிறது.

Q.—இன்னும் என்ன **forest** முதலியவை இருக்கிறதா ?

A.—எங்கள் ஜமீனில் 32 சதுர மைல்—8 மைல் நீளம், 4 மைல் அகலம் **forest** இருக்கிறது. ஒரு மைல் நீளம் 4 மைல் அகலமுள்ள காட்டை மாடுகள் மேய்ச்சலுக்காகவும், விவசாயத்திற்கு வேண்டிய எரு, கொடி, தழை முதலியவைகள் எடுத்துக்கொள்ளுவதற்காக குடிகள் வசம் ஏதோ சொல்ப தீர்வையின் பேரிலிருந்தது. முன் இருந்த ஜமீந்தார் இதையும் எல்லா **forest**-ஓடு சேர்த்து குடிகளுடைய ஆடு மாடுகள் மேய்ச்சலுக்காக கொடுக்கிறோம், இன்னும் தழை முதலியவை

கள் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறோம் என்று சொன்னதின் பேரில் விட்டுக்கொடுத்தோம். ஆனால் எங்களுக்கு அதில் சில உரிமைகள் கிடைத்ததாலும் விட்டுக்கொடுத்தோம். ஆனால் அந்த உரிமைகள் எல்லாம் அபகரிக்கப்பட்டது. அப்பேர்ப்பட்ட பாத்யங்களை பணக்காரர்களும் தௌஷ்டியமாக இருக்கிற ஜனங்களும்தான் அந்த பாத்தியங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். சாதாரண ஜனங்களுக்கு ஒருவிதமான அனுகூலமும் இல்லை. இந்த நிலங்களை விற்க கூட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—யாருக்காவது இந்த காடுகளை விற்று இருக்கிறார்களா ?

A.—ராஜபாளையத்திலிருக்கிற ஒரு **razu**-க்கு 250 எக்கரா விற்றிருக்கிறார்கள். அவர் அந்த மலையிலிருக்கிற மரங்களை வெட்டி ஏலத்தோட்டம் போட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். இந்த மரங்களை வெட்டுகிறதால் அடர்ந்திருக்கிற இடம் பொட்டலாகப்போகிறது. அதனால் கொஞ்ச நஞ்சம் பெய்கிற மழைகூட தங்குகிறதில்லை. வழிந்து ஓடிவிடுகிறது. அதனால் எங்கள் நிலங்களின் விளைச்சலுக்குக்கூட கெடுதல் ஏற்படுகிறது. இதுமட்டுமல்ல. களம், புறம்போக்கு பொது ஜனங்கள் நடபாதை முதலியவைகளைக்கூட ஜமீந்தார் யார் யார் ரூபாய் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு விற்கப்போகிறதாக இப்பொழுது இரண்டு வருஷ காலமாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

The President :

Q.—இதுவரையில் ஏதாவது அப்படி விற்றிருக்கிறார்களா ?

A.—சென்ற வருஷமும் அதற்கு முந்தின வருஷமும் கொஞ்ச நிலங்களை இப்படி விற்றிருக்கிறார்கள்.

Q.—சுமார் எவ்வளவு இந்த மாதிரி விற்றிருக்கிறார்கள் ?

A.—சுமார் 200 எக்கர் வரையில் சில கிராமங்களில் விற்றிருக்கிறார்கள்.

Q.—நீங்கள் தாவா சொல்லவில்லையா ?

A.—ஜமீன் மானேஜர் முதலியவர்களிடத்தில் போய் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஜமீந்தார் உத்தரவுக்கு மாறாக நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார்கள்.

Q.—கோர்ட் ஆப் வார்ட்ஸ் சர்வேயில் இவைகள் காட்டப்பட்டிருக்கிறதா ?

A.—ஆம்.

Q.—நீங்கள் தாக்கல் செய்திருக்கிற ரிஜிஸ்டரில் களம், புறம்போக்கு முதலியவைகளை விற்றிருக்கிறதாக சொல்லும் நிலங்களின் நம்பரை காட்டமுடியுமா ?

A.—ஆம். **(shows an item in the register).**

Mr. B. Venkatachallam Pillai :

Q.—இந்த மாதிரி செய்திருப்பதற்கு கிரய பத்திரம் ஏதாவது தாக்கல் செய்யமுடியுமா ?

A.—எங்கள் ஜமீனில் கிரய பத்திரம் செய்து கொடுக்கமாட்டார்கள். புதிதாக பட்டாதான் போட்டுக்கொடுப்பார்கள்.

Q.—அந்த பட்டாவை தாக்கல் செய்யமுடியுமா ?

A.—அந்த பட்டாக்கள் எங்கள் வசமில்லை. அவர்கள் ஜமீந்தாருக்கோ அல்லது அவர்கள் மானேஜர் முதலியவருக்கு வேண்டியவர்களாக இருப்பதால் அவர்களிடத்தில் அந்த மாதிரியான பட்டாக்களிருக்கும்.

ஒருவர் நிலம் கிரயமாகி கைமாறினாலும் பட்டா மாற்றுகிறதில்லை. பெட்டிஷன் கொடுத்தாலும் மாற்றுகிறதில்லை ஜாயிண்டு பட்டாதார்களில் ஒருவர் தீர்வை செலுத்தாமலிருந்தாலும் நிலம் ஏலம் போய்விடுகிறது. நிலச்சுவான்தாருக்குத்தெரிகிறதேயில்லை. உடனே பட்டா மாறவேண்டும். அதிகமாக தீர்வை ஏற்பட்டதினால் நிலத்தைக் கிரயத்துக்கு வாங்குகிறவர்கள் கிடையாது. கடன் கேட்டாலும் கிடைக்கவில்லை. தீர்வை வசூலில் 200 ரூபாய் பாக்கி இருந்தால் 500 ரூபாய் பெறுமான நிலத்தை எழுதி வைத்து ஏலத்தில் விட்டுவிடுகிறார்கள். இது எங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. பெறுமான கிரயத்துக்கு தகுந்தபடி எழுதிவைக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். என்னோடு இருக்கிற ஜாயிண்டு பட்டாதார் தீர்வை செலுத்தாமல் இருந்தால் என் நிலத்தை ஏலம் போட்டுவிடுகிறார்கள். ஜமீந்தாரிடத்தில் சொன்னாலும் கேட்கிறதில்லை.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—ஜமீன்தார் ஏலத்தில் விட்டால் யார் எடுக்கிறார்கள் ?

A.—500 ரூபாய் பெறுமான நிலத்தை எழுதிவைத்து 250 ரூபாய் பாக்கியிருந்தால் அதற்கு மாத்திரம் அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—மற்ற ஜமீன்தார்கள் ஒரு அணா பாக்கிக்காக 100 ரூபாய் சொத்தை ஏலத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார்களே இது நல்லதுதானே ? *A*.—எங்களுக்கு இது நஷ்டம்தானே. ஒரு நிலத்துக்கு தீர்வை செலுத்தினால் எந்த நிலத்துக்கு அது செலுத்தப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறதில்லை.

(He produces a patta.)

Q.—பட்டா நம்பர் இருக்கிறதே அந்த நிலத்துக்குத்தானே என்று அர்த்தம் ? *A*.—அந்தப் பட்டா நம்பரில் எந்த நிலத்துக்கென்று சொல்வதில்லை. எங்கள் ஊரில் சத்திரம் தேவஸ்தானத்துக்கு என்று வரி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதாவது **Head-quarters**-க்கு கிராமங்களிலிருந்து வருகிற சமுசாரிகளுக்கு சத்திரத்தில் சாப்பாடு போடவும் எளிய மக்களுக்கு சாப்பாடு போடவும் கொடுத்துக்கொண்டிருந்தோம். இப்போது அதெல்லாம் நடக்கிறதில்லை. எங்களுக்கு வசூல் முறை கவர்ன்மெண்டில் நடக்கிறமாதிரி வேண்டும். ஜமாபந்தி கவர்ன்மெண்டில் நடக்கிறமாதிரி நடக்கவேண்டும். மராமத்தெல்லாம் **Estate**-ல் நடக்கிறதேயில்லை. கவர்ன்மெண்டே நடத்திக் கொடுக்கவேண்டும். **Forest** சமுதாயங்களையெல்லாம் கவர்ன்மெண்டாரே எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு உபயோகப்படும்படி செய்யவேண்டும். ஜமீன்தாரிடத்தில் இருக்கிறதினால் கவர்ன்மெண்டாரே சீர்திருத்திக்கொடுத்தாலும்கூட அவர்கள் நல்ல நடப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை. ஜமீன்தார் முறையே இல்லாமல் இருக்கவேண்டும். கவர்ன்மெண்டுக்குப்பொறுப்பான ஒரு ரெவினியூ உத்தியோகஸ்தரைப்போட்டு அவர்களே எல்லாவற்றையும் நடத்தவேண்டும். வரும்படியை வேண்டுமென்றால் ஜமீன்தார் எடுத்துக்கொண்டு போகட்டும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—பொது ஜனங்களை ஜமீன்தார்கள் மனம்போல் நடக்கும்படி விடாமல் அடக்குமுறைகளைக் கையாண்டு மனிதர்களின் சுதந்திர உரிமைகளைத்தடுப்பதால் கவர்ன்மெண்டார் ஜமீன்தார்களுக்கு கொடுத்த சன்னது ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு ஒப்பந்தத்தில் கண்ட பாத்தியங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்களே. அவர்கள் என்ன செய்தார்கள், எப்படி உரிமையைப்பறித்தார்கள் ? *A.*—ஒரு மனிதன் மெம்பராக இருக்க முடியாது. ஜமீன்தார்கள் சொல்லுகிற மனிதருக்குத்தான் நிலச்சுவான்தார்கள் வோட்டு போடவேண்டும். வோட்டு போடா விட்டால் ஹிம்சிக்கிறார்கள். ஓட்டுரிமைகளை ஜமீன்தார்கள் தடைப்படுத்துகிறார்கள்.

Q.—முனிசிபாலிடி எலெக்ஷனிலா, டிஸ்ட்ரிக்ட் போர்டு எலக்ஷனிலா ? *A.*—எந்த வோட்டு ஆனாலும் சரி எந்த ஆளுக்கு போடவேண்டுமென்று சொன்னார்களோ அவர்களுக்குத்தான் போட வேண்டும்.

Q.—தாசில்தார் மூலமாக யாதாஸ்துகள் அனுப்பியிருக்கிறார்களா ? ஜமீன் Head office லிருந்து இன்னாருக்குத்தான் வோட்டு போடவேண்டுமென்று யாதாஸ்து அனுப்பியிருக்கிறார்களா ? அவர்களுடைய சிப்பந்திகள் மூலமாக ஏதாவது அந்தமாதிரி உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ? *A.*—எழுத்து மூலமாக கொடுக்கமாட்டார்கள். வேலைக்காரர்களை விட்டு சொல்லியனுப்புவார்கள். சில சமயங்களில் bit notice அச்சடித்து அனுப்புவார்கள். ஜனங்களை இழுத்துக்கொண்டு போய் வோட்டு போடும்படி சொல்லுவார்கள்.

Q.—என்ன கட்டாயமா ? அவருடைய உத்தரவை மீற முடியாதா ? *A.*—மீறி வோட்டு செய்தால் அவனுடைய மாடுகளை பண்ணை நிலங்களில் மேய்ந்ததாகச்சொல்லி பவுண்டில் அடைத்து விடுவார்கள். புஞ்சைக்கு தண்ணீர் பாய்ச்சினான் என்று சொல்லி தண்டத்தீர்வை போட்டுவிடுவார்கள். Forest-ல் விறகு வெட்டினானென்று சொல்லி கேஸ் போடுவார்கள்.

Q.—வேறு என்ன சுதந்திர உரிமையை தடுக்கிறார்கள் ? *A.*—எங்களிடத்தில் நல்ல மாடு நல்ல ஆடுகள் இருந்தால் அவர்கள் கேட்டு உடனே கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—ஜமீன்தார்களா கேட்கிறார்கள் ? *A.*—ஜமீன்தார்கள் கேட்டுவிடுவார்கள். கொடுக்காமல் போனால் தொந்தரவு பண்ணுவார்கள்.

Q.—உங்களிடத்தில் நல்ல மாடு ஆடுகள் இருப்பது எப்படித்தெரியும், ஜமீன்தார்களே பார்த்துக் கேட்கிறார்களா ? *A.*—ஜமீன்தார்கள் மேல் வீட்டில் இருப்பார்கள். ஒருவன் ஒரு நல்ல பசுமாட்டையோ காளை மாட்டையோ ஒரு ஆட்டுக்குட்டியையோ தெருவழியாகக்கொண்டு போகிறான். அவைகளைப் பார்த்தால் கேட்பார்கள் கொடுத்துவிடவேண்டும்.

Q.—கொடுக்காவிட்டால் ? *A.*—மேற்சொன்னபடி கஷ்டம் வந்துவிடும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—உங்களுக்கு பொதுஜன உபயோகத்துக்காக ஏதாவது நன்மை செய்திருக்கிறார்களா ? ஸ்கூலோ, ஆஸ்பத்திரியோ மற்ற சௌகரியங்களோ செய்து கொடுத்திருக்கிறார்களா ? *A.*—Court of Wards-ல் இருக்கையில் ஆஸ்பத்திரிக்கு கொஞ்சம் பணம் கொடுத்தார்கள். ஜமீன்தார் வந்தவுடனே ஒரு மைனர் ஜமீன்தார் இருந்தார். அவர் ஒரு வருஷம் கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் இறந்து போன பிறகு நிறுத்திவிட்டார்கள். வெடரினரி ஆஸ்பத்திரி வைத்திருந்தார்கள். அதையும் எடுத்துவிட்டார்கள். பண்ணையையும் எடுத்துவிட்டார்கள்.

Q.—விவசாயத்தை விர்த்தி பண்ணுவதற்காக நல்ல விதை, மாடுகள், இவைகளையெல்லாம் வைத்திருக்கிறார்களா ? *A.*—Court of Wards-லிருந்தபோது கவர்ன்மெண்டு பண்ணையில் வேலை பார்த்த ஒருவரைக்கொண்டு வந்து கவர்ன்மெண்டு பண்ணை மாதிரி நடத்திக்காட்டும்படி சொல்லியிருந்தார்கள். கோர்ட் ஆப் வார்ட்ஸ் போன பிறகு அதற்கு இடம் இல்லை.

Q.—எல்லாம் கவர்ன்மெண்டு சம்பந்தமாக ஆகி, ஜனங்கள் பட்டாதார்களாகப்போய்விட்டால் நல்லது ஏற்படுமென்று சொல்லுகிறீர்களே. ஆகையினாலே ஜமீன்தார் முறையை எடுத்துவிட்டு ஜமீன்தாருக்கு compensation கொடுத்துவிடவேண்டும்என்று சொல்லுகிறீர்களா ? *A.*—ஆம். இல்லாவிட்டால் ஒரு கமிஷனரை நியமிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—ஏன் allowance கொடுத்துவிட்டால் என்ன ? *A.*—பொது ஜனங்கள் பேரில்தான் அந்தக் கஷ்டம் வந்து ஏற்படும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் ஏதாவது விவகாரம் ஏற்பட்டால் குடிகளிடத்தில் பணம் இல்லாததாலும் மற்ற வசதிகள் இல்லாததாலும் ஜெயம் பெறமுடியவில்லையென்று சொல்லியிருக்கிறீர்களே அது என்ன ? *A.*—ஜெயிக்க முடியவில்லை பணமும் மற்ற வசதிகளும் இல்லாததினாலும்.

Q.—அதாவது குடிகளுக்கு விரோதமாக கோர்ட்டுகளில் முடிந்துவிடுகிறதா ? *A.*—ஊர்க்காரர்கள் 10 பேர்கள் சேர்ந்து ஒரு கேஸ் போட ஆரம்பித்தால் ஆரம்பிக்கும்போது அதில் சில பேர்களுக்கு எதையோ கொடுத்து அந்த ஜனங்களை ஏமாற்றி அந்தக்கேஸை போடவிடாமல் நிறுத்திவிடுவார்கள். இல்லாவிட்டால் கேஸ் நடக்கிறபோது சாக்ஷிகளைக்கலைத்து விடுவார்கள். அவர்களோடு போராட முடிகிறதில்லை. மகாராஜா எங்களை பக்ஷமாக நடத்துகிறதில்லை.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—அடக்கு முறையைக்கையாளுகிறார்கள் என்று சொன்னீர்களே அது என்ன ? *A.*—சமுசாரிகளிடத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் கொடுத்துவிட வேண்டும். அதுதான் அடக்குமுறை.

Q.—காட்டையெல்லாம் அழித்து விடுகிறார்கள் என்று சொன்னீர்களே அது மாதிரி செய்திருக்கிறார்களா ? *A.*—அழித்திருக்கிறார்கள்.

Q.—எந்தக் காடு என்று சொல்ல முடியுமா ? *A.*—முடியும். அதாவது உள்ளாற்றுப்பனே, தெரியாற்றுப்பனே, கோம்பைக்காடு, வடுகனூற்று.

The Zamindar of Mirzapuram :

Q.—காடெல்லாம் போய்விட்டதா ? *A.*—மரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—ரயட்ஸ் சங்கம் இருக்கிறதா ? *A.*—இல்லை. இப்பொழுது சாக்ஷி சொல்வதற்காக ரயத்திகளெல்லாம் கூடி வந்திருக்கிறோம்.

Q.—அடிக்கடி ஜமீன்தாரை சந்திக்க முடியாதா ? *A.*—அவருடைய மனம்போல் நடக்கிறவர்கள் ஜமீன்தாரைப் பார்க்கலாம். மற்றவர்கள் முடியாது.

Q.—உங்களுக்கும் அவருக்கும் நேரே தொடர்பு இருக்கிறதா என்று கேட்கிறேன் ? *A.*—கிடையாது.

Q.—ஜமீன்தாருக்கு அவர்கள் சிப்பந்திகள் போய் சொல்வதினால்தான் தெரியுமா ? *A.*—அவர்கள் சொன்னால்தான் தெரியும். அவர்களுக்கு வேண்டியபடி கூட்டிக் குறைத்துத் தான் சொல்வார்கள்.

Q.—அவர்கள் **suit** போடுகிறதுண்டா ? *A.*—நிறைய **suit** கள் இருக்கின்றன.

Q.—**Summary suit** கள் வருஷத்தில் எவ்வளவு போடுகிறார்கள் ? *A.*—100, 150 கேஸ்கள் போடுகிறார்கள்.

Q.—**Summary suit** களில் வாரண்டில் பிடிக்கிறார்களா ? *A.*—இல்லை.

Q.—சர்வே ஆயிருக்கிறதா ? *A.*—கோர்ட் ஆப் வார்டில் இருக்கிறபோது சர்வே ஆயிருக்கிறது. ஆனால் சுத்தமான செட்டில்மெண்ட் ஆகவில்லை.

The Zamindar of Mirzapuram :

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? *A.*—9 எக்கர் நஞ்சையும் 10 எக்கர் புஞ்சையும் இருக்கிறது.

Q.—சிவகிரி ஜமீனிலா ? *A.*—ஆமாம்.

Q.—கவர்ன்மெண்டு கிராமங்களில் நிலம் இருக்கிறதா ? *A.*—என்னுடைய தகப்பனாருக்கு நிலம் இருக்கிறது. அதையெல்லாம் என்னுடைய சகோதரர்களுக்கு விட்டுவிட்டேன்.

Q.—நீங்களே பயிரிடுகிறீர்களா ? *A.*—நானும் பயிரிடுகிறேன். குத்தகைக்கும் விடுகிறதுண்டு.

Q.—குத்தகைக்கு விட்டால் எவ்வளவு எக்கருக்குத் தருகிறான் நஞ்சையில் ? *A.*—ஒரு எக்கர் நஞ்சைக்கு 10 ரூபாய் கொடுப்பான்.

Q.—அதற்கு ஏதாவது அக்ரிமெண்ட் இருக்கிறதா ? *A.*—இல்லை.

Q.—அந்த நிலத்துக்கு எக்கருக்கு என்ன தீர்வை கொடுக்கிறீர்கள் ? *A.*—நான் கொடுக்கிற தீர்வையெல்லாம் 9 எக்கருக்கும் 45 ரூபாய் கொடுக்கிறேன்.

Q.—குத்தகைதார்களுக்கும் வாரதார்களுக்கும் நில பாத்தியதையைக் கொடுக்கலாமா ? *A.*—கொடுக்கக்கூடாது.

Q.—ஏன் கொடுக்கக்கூடாதென்று கேட்கிறேன் ? *A.*—கவர்ன்மெண்டில் கொடுக்கிறதாக அபிப்பிராயப்பட்டால் நானும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—நிலத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கிறீர்களா ? *A.*—தயாரா யிருக்கிறோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—உங்களுடைய சொந்த அபிப்பிராயமா ? அல்லது சங்கத்தின் அபிப்பிராயமா என்று கேட்கிறேன் ? *A.*—இந்த அபிப்பிராயத்தைப் பற்றி எல்லாரிடத்திலும் கலந்து கொள்ளவில்லை. என்னைப்பற்றிய மட்டில் சொல்லுகிறேன்.

Q.—உங்களுடைய சங்கம் ஒத்துழைக்குமா ? *A.*—சொன்னால் ஒத்துழைக்கும்.

Q.—தேர்தல் காலங்களில் யாராவது ஒரு அபேக்ஷகருக்கு வோட்டு கொடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் உங்களுடைய சொந்தக்காரர்களையும் அவருக்கு வோட்டு போடச் சொல்லுகிறதில் என்ன தப்பு ? அது நியாயம் தானே ? *A.*—நான் அப்படி சொல்லுகிறதில்லை. அவர்களுடைய இஷ்டப்படித்தான் செய்கிறார்கள்.

Q.—நீங்கள் போய் கான்வாஸ் பண்ணுகிறதில்லையா ? *A.*—இல்லை.

Q.—நீங்கள் யாருக்கு வோட்டு போட்டீர்கள் ? *A.*—காங்கிரஸ்காரருக்குத்தான் போட்டேன்.

Q.—மீட்டிங்கில் காங்கிரஸ்காரருக்கு வோட்டு போடுங்கள் என்று சொல்லவில்லையா ? *A.*—நான் சொல்லவில்லை.

Q.—ஏன் அப்படிச் சொன்னால் அதில் என்ன தப்பு ? *A.*—உண்மையைச் சொன்னால் தப்பு கிடையாது. ஆனால் நான் சொல்லுகிறதில்லை. அவரவர்கள் இஷ்டப்படிதான் வோட்டு பண்ணுவார்கள்.

Q.—ஜமீன்தார் ஒருவருக்கு வோட் போடச்சொன்னால் அதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? *A.*—எஸ்டேட்டுக்கு யார் நன்மை செய்வார்களோ அவர்களுக்குத்தான் வோட் போடச் சொல்வார்கள். அப்பொழுது எங்களுடைய உரிமை பறிமுதல் செய்யப்படுகிறது. அதில் எங்களுக்கு நன்மை இல்லை.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—தேர்தல் முறையில் வர்ணப்பெட்டி தான் இப்பொழுது வந்துவிட்டதே. ஒருவருக்கும் பயப் படவேண்டியதில்லையே. யாருக்கு வோட்டு போட்டாரென்பது அவருக்குத்தானே தெரியும் ? *A.*—இன் னாருக்குத்தான் அவன் வோட்டு போட்டான் என்று ஒருவர் போய் சொல்லிவிட்டால் போதும். அவ னுக்கு கஷ்டம் வந்து விடும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—என்னுடைய காரிலேயே வந்து இன்னொருவனுக்கு ஓட்டு போடுகிறார்கள். அவன் காரில் வந்து எனக்கும் வோட்டு போடுகிறார்கள். அந்த மாதிரி எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களே ? *A.*—The witness did not answer.

Witness No. 212. Madura. 22nd February 1938.

Oral evidence of Mr. Annamalai Naicker of Thenmalai village, Sivagiri estate.

தென்மலையில் குடிகளின் உபயோகத்திற்காக cattle stand ஒன்று இருக்கிறது. சர்வே 109-ம் நம்பர் அதில் 3 ஏக்கர் 51 செண்டை ஜமீன்தார் தன் தாயார் பேருக்கு assign பண்ணி பட்டா கொடுத்திருக்கிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அந்த செட்டில்மெண்ட் ரிஜிஸ்தரைக்கொண்டு வந்திருக்கிறீர்களா ? *A.*—இல்லை. அதில் தெப்பக்குளம் ஒன்று இருந்தது. ஜலம் இல்லாத காலத்தில் ஜனங்களுக்கு அது உபயோகமாக இருந்தது. அதை ஜமீன்தார் பட்டா பண்ணி மூடிவிட்டார்கள். இப்பொழுது அதில் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். செட்டில்மெண்டில் அது குளம் என்று இருக்கிறது.

Q.—அது பிளானில் இருக்கிறதா ? *A.*—தென்மலைக்கு ரிஜிஸ்தர் இல்லை, பிளானில் இருக் கிறது.

Q.—அந்த பிளானைக் கொண்டுவந்திருக்கிறீர்களா ? *A.*—பிளானைக் கொண்டுவரவில்லை. எங்கள் வில்லேஜுக்குக் கிடைக்கவில்லை. ஊரில் போய் ரிக்கார்டு அனுப்புகிறேன்.

Q.—சாக்ஷியம் கொடுக்கத்தானே வந்திருக்கிறீர்கள் இங்கே ஏன் கொண்டுவரவில்லை ? *A.*—கைவசம் இல்லை. கோர்ட்டில் இருக்கிறது. வாபஸ் வாங்கி அனுப்புகிறேன்.

Q.—பட்டா கொடுத்து இப்பொழுது எத்தனை வருஷம் ஆகிறது ? *A.*—4, 5 வருஷம் ஆச்சு.

Q.—பெட்டிஷன் கொடுத்தீர்களா ? *A.*—கலெக்டருக்குப் போட்டோம், பிரயோஜனம் இல்லை.

Q.—எத்தனாவது நம்பர் பட்டா ஜமீன்தார் தாயாருக்கு இருக்கிறது ? *A.*—722-ம் நம்பர் பட்டா.

Q.—Rent எவ்வளவு ? *A.*—ஏக்கருக்கு ரூ. 3–3–9 அதில் 3 ஏக்கர் 51 செண்டு இருக்கிறது.

Q.—இந்தப் பட்டா நெம்பர் எப்படி தெரிந்தது ? *A.*—கணக்கப்பிள்ளையிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

குளம் ரிப்பேருக்காக 1925-ம் வருஷத்தில் ஒரு பெட்டிஷன் போட்டோம். கீழக்கரிசல் குளம் 22-ல் பிரீச் ஆய்விட்டது. 1926-ல் Mr. Tampoe ஒரு வருஷத்துக்குள் ரிப்பேர் பண்ணவேண்டுமென்று Order போட்டார்கள். அது இந்த நிமிஷம் வரையில் நிறைவேற்றப்படவில்லை.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அந்த ஆர்டரைக்கொண்டு வந்திருக்கிறீர்களா ? *A.*—கொண்டுவரவில்லை எல்லாவற்றையும் சீக்கிரத்தில் அனுப்பிவிடுகிறேன். அதே மாதிரி 35-ம் வருஷத்தில் பெட்டிஷன் போட்டோம். 36-ம் வருஷம் ஏப்ரலுக்குள் ரிப்பேர் செய்து கொடுக்கிறோமென்று written statement போட்டார்கள். அதின்படி வேலை செய்யவில்லை. கலெக்டர் Executive Engineer ஆர்டர் போட்டு estimate எடுத்து 37-ம் வருஷம் அக்டோபருக்குள் வேலை செய்துகொடுக்கவேண்டும் ; இல்லாவிட்டால் அதற்கு ஏற்பட்ட estimate costஐ கலெக்டர் கோர்ட்டில் deposit பண்ணவேண்டுமென்று order போட்டார்கள். அந்தப் படியும் செய்யவில்லை.

Q.—டிபாசிட் பண்ணியிருக்கிறார்களா ? *A.*—ஒரு வருஷம் டயம் கேட்டிருக்கிறார்கள். 4-ல் ஒரு பாகம் தீர்வை செலுத்துகிறவர்கள் சேர்ந்து பெட்டிஷன் போடவேண்டுமென்றிருக்கிறது. அந்தப்படி சேர்ந்து போடுகிறது கஷ்டமாக இருக்கிறது. இல்லாவிட்டால் deposit கட்டவேண்டுமென்றிருக்கிறது. அந்த மாதிரி deposit கட்ட ஜனங்களிடத்தில் ஐவேசும் இல்லை. ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இஷ்டம் உள்ளவர்கள் யாரும் வியாச்சியம் போடலாமென்று ஆக்டை சீர்திருத்தம் பண்ணவேண்டும். வாரம் landக்கு commutationபடி 4 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை தீர்வை இருக்கிறது. வரும்படி ரொம்பக் குறைச்சலாயிருக்கிறது. அயனில் 3 ரூபாயிலிருந்து 6 ரூபாய் வரையில் தீர்வை இருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—எத்தனை ஏக்கர் 25 ரூபாய் ரேட்டில் இருக்கிறது ? *A.*—100 ஏக்கர் வரையிலும் இருக்கிறது.

Q.—அதற்கு காகிதம் கொண்டு வந்திருக்கிறீர்களா ? *A.*—இருக்கிறது. (He produces a patta).

17-ம் நம்பர் பட்டாவில் இருக்கிறது. தென்மலை வில்லேஜில் 5 குளம் இருக்கிறது. சிவகிரி முதலிய குளங்களிலிருந்து surplus water தான் வரவேண்டியது. அங்கே புஞ்சையை நஞ்சை யாக மாற்றி ஜலத்தைத் தடுத்து விடுகிறார்கள். அதனால் இங்கே தண்ணீர் வருகிறதில்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—எத்தனை வருஷ காலமாக அப்படி பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் ? *A.*—10 வருஷ காலமாக.

Q.—கலெக்டருக்கு பெட்டிஷன் போட்டிருக்கிறீர்களா ? *A.*—இல்லை. 1927-ல் commutation டிக்கிரியாச்சு. அப்பொழுது நெல் 15 ரூபாய், 18 ரூபாய் விற்றுக்கொண்டிருந்தது. இப்பொழு து விளைவும் இல்லை விலையும் குறைந்து போச்சு. இந்த ஸ்திதியில் கஷ்டப்படுகிறோம். 40 ரூபாய் commutation பண்ணியிருக்கிறார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—பழையபடி வாரமாக பிரித்துக் கொடுக்கத்தயாராயிருக்கிறீர்களா? *A.*—அப்படிக் கொடுத்தால் குடிகளுக்கு லாபம்தான். ஆனால் வேலைக்காரர்களுடைய கஷ்டம் அதிகமாயிருக்கிறது. தொந்திரவு இல்லாமல் கலெக்ட் பண்ணினால் நல்லதுதான். கண்ட நெல்லைப் பிரித்து வாங்கிக்கொண்டு போய்விட்டால் நல்லதுதான்.

Q.—அந்த மாதிரி இல்லாதபடி என்ன செய்யலாம் ? *A.*—அக்கம் பக்கம் அயன் ரேட்டை அனுசரித்து வாங்கவேண்டும்.

Q.—பாதி வாரம் கொடுக்கிறதில் நஷ்டம் என்ன ? *A.*—அது நல்லது தான்.

Q.—முந்தி எப்படிக் கொடுத்துக்கொண்டிருந்தீர்கள் ? *A.*—10 கோட்டை ஆனால் அவர்களுக்கு 5½ கோட்டை கொடுத்துக்கொண்டிருந்தோம்.

Q.—பாதிக்கு மேல் கொஞ்சம் செலுத்தினீர்கள் ? *A.*—ஆமாம்.

Q.—அது நியாயம் தானே ? *A.*—ஜாஸ்தி தான்.

Q.—இப்பொழுது இருக்கிறதைக் காட்டிலும் அது ஜாஸ்தியா என்று கேட்கிறேன் ? *A.*—விலைவாசியினால் கஷ்டமாயிருக்கிறது.

Q.—நெல்லாய் கொடுக்கிறதாயிருந்தால் கஷ்டம் தெரியாதல்லவா ? *A.*—அது சரிதான், வேலைக்காரர் ரொம்ப ஹிம்சை பண்ணுகிறார்கள்.

Q.—அது இருக்கட்டும். அந்த மாதிரி செய்தால் நல்லதுதானே ? *A.*—ஆமாம். நல்லது தான். குடிகளுக்கு அது சௌகரியம்தான்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே. அயன் கிராமத்தில் என்ன செலுத்துகிறார்கள் ? *A.*—3 ரூபாயிலிருந்து 4½ ரூபாய் வரை செலுத்துகிறார்கள்.

Q.—அதைவிட இது கஷ்டம் தானே ? *A.*—ஆமாம். இரிகேஷனை கவர்ன்மெண்டு மேல்பார்வையில் வைத்துக்கொள்ளவேண்டும். தீர்வை விஷயத்தையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

Q.—கவர்ன்மெண்டு மாதிரி செட்டில்மெண்டு பண்ணவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ? *A.*—ஆமாம். அது மாதிரி செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன்.

Witness No. 213. Madura. 22nd February 1938

Oral evidence of Mr. Rangasami Nayudu of Visvanathapur, Sivagiri Zamin.

ஒரே நம்பர் நிலத்தில் வாழை போட்டிருந்தால் அதில் கத்திரிக்காயும் ஈருள்ளியும் வைக்கிறதுண்டு. ஒவ்வொரு மகசூலுக்கும் Penalty போடுகிறார்கள். ஜூனில் பட்டா கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது டிசம்பரில் பட்டா கொடுத்துக்கொண்டு பசலியை ஜாஸ்தியாக்கிக்கொண்டு நேரத்தில் பட்டாக்களை கொடுக்கிறதில்லை. இந்த நிலைமையில் அவர்கள் இஷ்டம்போல் கணக்கனை தயார் பண்ணிக்கொண்டு வரியோடு வந்ததன்றைக்குத்தான் எங்களுக்குத் தீர்வை எவ்வளவு என்று தெரியும். சர்வே யாயிருக்கிறது. Settlement இல்லை. முன் இருந்தபடி பைமாஷ் படி எவ்வளவு நிலம் இருந்தது. இப்பொழுது சர்வேயில் எவ்வளவு இருக்கிறதென்று தெரிய settlement கிடையாது. நெல் போட்டால் ஒரு rate வாழைக்கு ரூ. 14–0–0 கொடிக்காலுக்கு ரூ. 14–0–0, ஏக்கருக்கு கிரமமாக ஏற்பட்டது ரூ. 0–12–4, 0–10–5, 0–7–8 புஞ்சைக்கு இருக்கிறது. அந்த நிலத்தில் கிணறு வெட்டி வெள்ளாமை செய்தால் ஒரு ஏக்கருக்கு ரூ. 14–0–0 வாழைக்கு, 14 ரூபாய் கத்திரிக்கு, 14 ரூபாய் ஈருள்ளிக்கு என்று 3 சார்ஜ்பண்ணுகிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—கரும்பு போட்டால், வாழை போட்டால் தனியே தீர்வை போடுகிறார்கள் என்று சொல்லுகிறீர்கள் ? *A.*—வாழை போட்டாலும், கத்திரி போட்டாலும், ஈருள்ளி போட்டாலும், அதாவது ஒரு ஏக்கரில் இந்த மூன்றும் போட்டிருந்தால் 3 ஏக்கருக்கு சார்ஜ் பணணுகிற மாதிரி போட்டு விடுகிறார்கள்.

கம்மாய் புறம்போக்கு, பனந் தோப்பு இன்னும் அநேக நிலங்களை பட்டா கொடுத்து விட்டார்கள். ஜமீன்தார் வைப்பாட்டி வைத்திருக்கிறார்கள். முத்து குளத்தை அந்த அம்மாளுக்கு பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். சர்வே நெ. 80. 11 ஏக்கர் 50 செண்டு நீர்ப்பிடி நிலம் மேலப்பண்ணையில் 4 ஏக்கர் பட்டா கொடுத்திருக்கிறார்கள். தென்மலையில் 2 ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். சின்னுளப்பேரியில் கொடுத்திருக்கிறார்கள். பனம் தோப்பை யெல்லாம் விட்டிருக்கிறார்கள். மாடு மேய்கிறதற்கு இடமில்லை. ஒதுக்கிவைக்கப்பட்ட காடுகளை யெல்லாம் பட்டா கொடுத்து இடஞ்சல் பண்ணியிருக்கிறார்கள். குன்றுகளில் மணல், கல் எடுக்கிறது வழக்கம் உண்டு. அதற்கு வண்டிக்கு இப்பொழுது அரைக்கால் ரூபாய் (0–2–0), ஒரு அணா (0·1–0), என்று வாங்குகிறார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—ஏதாவது காகிதம் கொண்டு வந்திருக்கிர்களா ? *A.*—இப்பொழுது இல்லை.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—நீங்கள் அந்த மாதிரி. கொடுத்திருக்கிறீர்களா ? *A.*—என்னைப்போல வாயாடிகளுக்கெல்லாம் இனமாகக் கொடுப்பார்கள். ஜமீன்தாரை மீறி விடுவேன் என்று தெரியும். என்னைக் கொடுக்கும்படி சொல்லமாட்டார். காட்டில் 20,000 ஏக்கர் இருக்கிறது. எவர்கிரீன சோலை, Semi சோலை லோயர் கிரவுண்டு என்று இருக்கிறது. அதில் நாங்களும் ஜமீன்தாரும் பிரவேசிக்கலாம். எவர்கிரீன் சோலை, செமி சோலைகளில் ஜமீன்தாரும் நாங்களும் பிரவேசிக்கக்கூடாது. மழை பெய்கிறதற்காக வைத்திருந்தார்கள் அதை இப்பொழுது 400 ஏக்கர் பட்டா கொடுத்து விட்டார்கள். எவர்கிரீன் சோலையில் மரத்தை வெட்டி காப்பி, டீ போட பட்டா கொடுத்திருக்கிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—மரம் வெட்டினால்தானே காடு விர்த்தியாகும். *A.*—மரம் வெட்டினால் மழை பெய்யாது.

Q.—காட்டில் ஒன்றும் வெட்டக்கூடாதென்று சொல்லுகிறீர்கள் ? *A.*—வெட்டக்கூடாது. லோயர் கிரவுண்டில் மட்டும் நாங்களும் ஜமீன்தாரும் விறகு வெட்டிக்கொள்வது உண்டு.

Q.—இடையிடையே மரங்களை வெட்டினாலொழிய மரங்கள் உண்டாகாதென்று சொல்லுகிறார்களே ? *A.*—Forest-ல் வெட்டினால் மழை பெய்யாது. எல்லாம் வறண்டு போகும்.

Q.—கொஞ்சம் கொஞ்சமாக வெட்டினால் நல்ல மரங்கள் உண்டாகுமே ? *A.*—இல்லை. வெட்டினால் உண்டாகாது.

A.—கவர்ண்மெண்டு ரிசர்வில் மரங்களை வெட்டுகிறார்களா இல்லையா ? *A.*—லோயர் கிரவுண்டில் வெட்டுவார்கள். மேலே வெட்டமாட்டார்கள்.

Q.—கவர்ண்மெண்டு காட்டில் மேலே கூட வெட்டுகிறார்களே, தெரியுமா ? *A.*—வெட்டவில்லை. எங்களுக்கு பக்கத்தில் கவர்ண்மெண்டு forest-ம் இருக்கிறது. அங்கே மேலே வெட்டுகிறதில்லை.

1952-ம் வருஷம் வரைக்கும் வெட்டுகிறதாக ஒப்பந்தம் பண்ணியிருந்தது. அதை இப்பொழுதே வெட்டிவிட்டார்கள். 1960-ம்வருஷம் வரையில் வெட்டலாம் என்று இப்பொழுது கண்ட்ராக்ட் விட்டுவிட்டார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—அதற்கு ஏதாவது ரிக்கார்டு இருக்கிறதா ? *A.*—அவர்களிடத்தில் கணக்கு இருக்கிறது. கம்மாயைப்பட்டா கொடுத்ததைப்பற்றி மனு கொடுத்திருந்தோம். ஜமீன்தார் வைப்பாட்டிக்கு கொடுத்திருந்த நிலத்தைப்பற்றி அது அக்கிரமம் என்று கலெக்டர் உத்திரவு பண்ணிவிட்டார்கள். அவர்கள் இப்பொழுது High Court-ல் அப்பீல் பண்ணியிருக்கிறார்கள். எங்களுக்கு சம்மன் வந்திருக்கிறது. எங்களிடத்தில் இருந்த ரிக்கார்டுகளை வக்கீலிடத்தில் கொடுத்திருக்கிறோம்.

MR. P. S. KUMARASWAMI RAJA :

Q.—தீர்வை வசூலில் வேறு ஏதாவது வரி வசூல் பண்ணுகிறார்களா ? *A.*—சில பேர்கள் ஆச்சி ஆடு வாங்குகிறார்கள். சிலபேர்கள் மாடு வாங்குகிறார்கள்.

Q.—அது எப்படி இரண்டு மாடு வைத்திருக்கிறவர்கள் ஒரு மாட்டை கொடுக்கிறதா ? *A.*—கொடுக்கத் தான் செய்யவேண்டும். இல்லாவிட்டால் குடிகள் இருக்கமுடியாது.

Q.—வருஷா வருஷம் பட்டாவுக்கு போட வேண்டிய தீர்வையோடு கூட வேறு ஏதாவது வரி வாங்குகிறார்களா ? *A.*—ஜமீன்தாருக்கு பட்டா மாற்றுவதற்கு கொடுக்க வேண்டும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—Court of Wards-ல் எப்படியிருந்தது ? *A.*—காலத்தில் எல்லாருக்கும் லஞ்சம் கொடுத்தோமென்று சொல்லமுடியாது. இப்பொழுது கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது ஜமீன்தார் முதற்கொண்டு லஞ்சம்தான்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—எவ்வளவு வசூலாகிறது ? *A.*—குறைந்தது 20,000 ரூபாய் வசூலாகும்.

Q.—Account இருக்கிறதா ? *A.*—அதற்கு கணக்கு இருக்காது.

Q.—மாமூலோ லஞ்சமோ கொடுக்கிறீர்களா ? *A.*—வழக்கமாகத்தான் வாங்குகிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—நீங்கள் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா ? *A.*—நான் கொடுக்கமாட்டேன்.

Q.—வேறு யார் கொடுக்கிறார்கள் ? *A.*—தெரியாதவர்கள் கொடுப்பார்கள்.

Q.—அவர்கள் இங்கே யாராவது வந்திருக்கிறார்களா ? *A.*—இல்லை. எனக்குத் தெரியாது.

Q.—நீங்கள் என் கொடுக்கிறதில்லை ? *A.*—எங்களை கேட்டால் எங்களால் ஜமீன்தாருக்கு கஷ்டம் உண்டாகுமென்று எங்களைக் கேட்கிறதில்லை.

Q.—Estate ஆபீசர்களுக்கு கொடுக்கிறீர்களா ? *A.*—கொடுக்கவேண்டியதுதான். கொடுத்தால் தான் தகவல் தெரியும், இல்லாவிட்டால் ஒரு தகவலும்கிடையாது. அவர்களுக்கு 5, 6 மாசமாக சம்பளம் கிடையாது.

Q.—கவர்ன்மெண்டில் லஞ்சம் கிடையாதா ? *A.*—கவர்ன்மெண்டாபீசிலும் லஞ்சம் வாங்குகிறார்கள். எல்லாருக்கும் தெரிந்த வியாபாரம்தான். கவர்ன்மெண்டிலேயே தவறாயிருக்கிறதென்று சொல்லுகிறபோது ஜமீனைப்பற்றி கேட்கவேண்டுமா ?

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? *A.*—70 ஏக்கர் இருக்கிறது, 40 ஏக்கர் நஞ்சை, 30 ஏக்கர் புஞ்சை.

Q.—நீங்கள் அதைச் சொந்தப்பயிரிடுகிறீர்களா ? குத்தகைக்கு விடுகிறீர்களா ? *A.*—நானே பயிரிடுகிறேன்.

Q.—கொடைக்கானல் மலையிலே ஏலக்காய் போடுகிறதற்கு பட்டா போட்டுக்கொடுக்கிறார்களே, தெரியுமா ? *A.*—தெரியாது. எஸ்திமீரா கொடுக்கிற காலத்தில் சாகுபடி செய்கிற இடத்துக்கு மாத்திரம் தீர்வை. இதெல்லாம் (மற்ற இடங்கள்) ரயத்துகளுக்கும் ஜமீன்தார்களுக்குமாக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டது. புறம்போக்கு பாதை, களம் புறம்போக்கு, மயானம் forest இப்படி அநேக இடங்கள் இருக்கின்றன. இவைகளை நீக்கி சாகுபடி நிலத்துக்கு மட்டும் ஆதியில் தீர்வை போடப்பட்டிருக்கிறது. இவைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் பட்டாக் கொடுக்க ஜமீனுக்கு அதிகாரம் இல்லை. அப்படி யிருந்தால் ரயத்துகள் தான் அந்த லாபத்தை அடைய வேண்டும். அவர்கள் (ஜமீன்தார்கள்) யதேச்சாதிகாரமாகச் செலவு செய்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்பார்கள் கிடையாது. கவர்ன்மெண்டுக்கு எத்தனையோ மனுக்கள் கொடுத்தோம் அதைப்பற்றியும் ஒன்றும் கேள்வி இல்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—சில பெரிய சமுசாரிகள் பட்டா நிலத்தை இன்னொரு விவசாயிக்கு குத்தகைக்கு அல்லது வாரத்துக்கு விட்டால் அந்தக் குடியாத்தியதையை அவர்களுக்கு விட்டு விடலாமா ? *A.*—எனக்கு அர்த்தமாகவில்லை ?

Q.—100, 200 ஏக்கர் ஒருவருக்கு இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அநேகம் பேர்கள் குத்தகைக்கோ வாரத்துக்கோ பயிரிடுகிறார்கள். அந்த நிலப்பாத்தியத்தை அந்தப் பயிரிடுகிறவர்களுக்கே விட்டு விடலாமா ? *A.*—பேஷாக விட்டு விடலாம். கிரமமாக யார் பாடு படுகிறானோ அவனுக்கு கொடுப்பதைப்பற்றி ஆக்ஷேபனை கிடையாது.

Q.—மற்ற விவசாயிகளுக்கும் இந்த அபிப்பிராயம் இருக்குமா ? *A.*—மெஜாரிடிக்கு இந்த அபிப்பிராயம்தான் சில பேர்கள் ஆக்ஷேபிக்கலாம்.

Witness No. 214. Madura. 22nd February 1938.

Oral evidence of Mr. Diravia Thevar of Veerakeralampudur Uthumalai Zamin.

சாக்ஷி, திரவியதவர், வீரகேரளம்புதூர், ஊத்துமலை ஜமீன் : எங்களுக்கு தீர்வை அயன் தீர்வையை விடக்கூடுதலாயிருக்கிறது. சுரண்டையில் 6 ரூபாய் இருக்கிறது. எங்களுக்கு 30 ரூபாயுமிருக்கிறது. 18 ரூபாயும் இருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—பட்டா கொண்டு வந்திருக்கிறார்களா ? *A.*—கொண்டு வந்திருக்கிறேன் (He produces the patta) ஜமீன்தாரணி காலத்தில் தீர்வை 12½ ரூபாய்ரேட்டில், இருந்தது. அதே பட்டாவுக்கு இப்பொழுது ரூ. 30–0–0 இருக்கிறது.

Q.—அதே பட்டாவுக்கா ? *A.*—அதே கிராமத்தில் அடுத்த நிலத்துக்கு. சில நிலங்களுக்கு மட்டும் சாஸ்வதம் செய்திருக்கிறார்கள். அந்த நிலங்களுக்கு தீர்வை குறைவு. பக்கத்திலிருக்கிற நிலங்களுக்கு 30 ரூபாய் ஏக்கருக்கு போட்டிருக்கிறார்கள்.

Q.—முந்தி வாரத்துக்குத்தான் இருந்திருக்கும். எப்பொழுது ரூபாயாச்சு ? *A.*—சாஸ்வத land-க்கு 3 ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரையில் இருக்கிறது. வார ரேட்டுக்கு இருந்த நிலத்துக்கு 18 ரூபாயிலிருந்து 22 ரூபாய் வரை போகிறது. பண்ணை நிலத்துக்கு அவர்கள் சொந்த இருவார நிலத்தை கேசுக்கு 12 ரூபாய்க்கு விடுகிறார்கள். பக்கத்திலிருக்கிற நிலங்களுக்கு 25 ரூபாய் ஆகிறது. ஒரு கோட்டை அதாவது 160 செண்டுக்கு ரூ. 20–0–0 தீர்வை. அவர்கள் 12 ரூபாய்க்கு விட்டிருக்கிறார்கள்.

Q.—என்ன காரணம் ? *A.*—இன்னதென்று தெரியவில்லை. கரம்பையை கிரயத்துக்கு விற்கிறார்கள். சில பேர்களுக்கு மட்டும், குளம், கம்மாய், பரும்பு இவைகளையெல்லாம் சிலபுள்ளிகளுக்கு குத்தகைக்கு விட்டு எளிய ஜனங்களிடத்தில் ஜாஸ்தி வசூல் பண்ணுகிறார்கள். சில பெயர்களிடத்தில் வசூல் பண்ணுகிறதில்லை (he produces some receipts).

Q.—குத்தகைக்கு வாங்குகிறவர்கள் ரசீது கொடுக்கிறார்களா ? *A.*—இல்லை. புல் குத்தகைக்கு குளத்தை விடுகிறார்கள் நான் வாங்கியிருக்கிறேன். என் மாடுகள் மேய்கிறதற்கு சில புள்ளிகளுக்கு விடுகிறது. சில புள்ளிகளுக்கு இல்லை. அதை இலவசமாகக் கொடுக்கவேண்டும். எல்லா சமுசாரிகளும் மாடுகளை மேய்க்கவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—இந்த மாதிரி எத்தனை வருஷமாக பண்ணுகிறார்கள். *A.*—5, 6 வருஷமாகப்பண்ணுகிறார்கள். மற்ற குளங்களையெல்லாம் இலவசமாக விட்டிருக்கிறார்கள். இந்த குளத்தை மட்டும் குத்தகைக்கு விடுகிறார்கள். உள்ளூரில் மட்டும் இடஞ்சல் பண்ணுகிறார்கள். மருப்பு இருக்கிறது. கலப்பை குத்திக்கு மரங்கள் கிடைக்கும். அதை எடுக்க விடுகிறதில்லை. கரம்பையை விற்கிறார்கள். மராமத்து பண்ணுகிறதில்லை. இந்தமாதிரி இடைஞ்சல் பண்ணுகிறார்கள். அயன் மாதிரி எங்களுக்கு வேண்டும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—யார் காலத்தில் commute பண்ணினார்கள். *A.*—Court of Wards காலத்தில். 1912-ல்.

Q.—அதை தாவா பண்ணினீர்களா ; ஏதாவது suit போட்டிருக்கீர்களா ? *A.*—கோர்ட்டில் நடவடிக்கை நடத்தினோம். சப்கோர்ட்டில் விபரீதமாகப்போச்சு. இப்போது ஜில்லா கோர்ட்டில் அப்பீல் பண்ணியிருக்கிறோம்.

Q.—யார் போட்டிருக்கிறார்கள் ? *A.*—குடிகள்தான் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்துக்கு ஒவ்வொரு பட்டாதார் போட்டிருக்கிறார்கள். கிராமத்துக்கு பொதுவாகப் போட்டிருக்கிறார்கள்.

Witness No. 215. Madura. 22nd February 1938.

Oral evidence of Mr. Ramasami Mudaliyar Avargal, Veerakeralampudur, Uthumalai Zamin.

சாக்ஷி, ராமசாமி முதலியார், வீரகேரளம்புதூர், ஊத்துமலை ஜமீன் : சாஸ்வத நிலம் மேல வயல் கிழக்கு வயல் எனக்கு இருக்கிறது. மேல வயலுக்கு 12½ ரூபாய் வாங்குகிறார்கள். கீழ வயலுக்கு 26 ரூபாய் வாங்குகிறார்கள்.

Q.—அப்பொழுது இதையும் சாஸ்வதம் பண்ணவில்லையா ? *A.*—அப்பொழுதிருந்த கணக்குப்பிள்ளை முடியவொட்டாமல் செய்து விட்டார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—சாஸ்வதமாகச் செய்ய நிலங்கள் எதாவது ரூபாய் கொடுத்து பண்ணிக்கொண்டிருந்தீர்களா சாஸ்வதம் ஒழுங்காகத்தான் நடந்துகொண்டிருந்ததா ? *A.*—ராஜாச்சார் வந்து பண்ணினார்கள். நியாயமாக பண்ணவில்லை. அது விஷயமாக தாவா நடத்தினோம். அப்பொழுது சீனிவாசாசாரியார் என்று ஒரு மானேஜர் இருந்தார். அவர்கள் சிபார்சின்பேரில் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. எங்களுக்கு விரோதமாகப் போய் விட்டது. இப்பொழுது அப்பீலில் இருக்கிறது. சூரண்டையில் 6 ரூபாய் தான் வாங்குகிறார்கள். 40, 60 வருஷமாக குடியிருந்து கொண்டிருந்தோம் இப்பொழுது civil suit-ல் நடக்கிறது. எங்களுக்கு பாத்தியம் இல்லையென்று சொல்லி suit நடந்து கொண்டிருக்கிறது. நாங்கள் தாவாப்பண்ணிகொண்டிருக்கிறோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—நத்தநிலமா ? *A.*—குடியிருப்பு இடம்தான். நாங்கள் ரொம்ப நாளாக குடியிருந்து கொண்டிருக்கிறோம். அதை இப்பொழுது அவர்களுக்கு சொந்தம் என்று சொல்லுகிறார்கள்.

Q.—திருமப்பிளான் இருக்கிறதா ? எதாவது ரிகார்டு இருக்கிறதா ? *A.*—கொண்டு வரவில்லை ஊரில் இருக்கிறது.

Q.—நீங்கள் எதோ கேஸ் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னீர்களே அதை File பண்ண முடியுமா ? *A.*—இப்போது இல்லை. பின்னால் அனுப்புகிறேன்.

Witness No. 216. Madura. 22nd February 1938.

Oral evidence of Paramasiva Thevar, Kilaveeranam, Uthumalai Zamin.

சாக்ஷி பரமசிவ தேவர், கீழவீரணம் ஊத்துமலை ஜமீன்.

1912-ம் வருஷத்தில் ஊத்துமலை ஜமீனில் முதல் முதல் கம்மியுடேஷன் டிக்ரி வாங்கி இருக்கிறார்கள். அதற்கு முன்னதாக 90,000 ரூ. ஜமீனுக்கு வரும்படி. 20,000 ரூ. ஜமீனில் பேஷ்கஸ்து செலுத்தி இருக்கிறார்கள். இப்பொழுது இந்த ஜமீனுக்கு அதே நிலங்கள்தான் இருக்கின்றன. 2 லக்ஷ ரூபாய் வரவுகிடைக்கின்றது. கம்மியுடேஷன் செய்த காலத்தில், 2, 3 தரமாக நிலத்தை பிரித்திருக்கிறார்கள். உயர்ந்த தரமாக 85 பெர் செண்ட் போட்டிருக்கிறார்கள். குறைந்த தரம் 15 பெர் செண்ட் பாக்கி இதர விதமான நிலங்கள் இந்த மாதிரியாக வேறுபாடு செய்து டிகிரி வாங்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக எகர் ஒன்றுக்கு 21 ரூ. தீர்வை எற்படுத்தி இருக்கிறார்கள். அடுத்த அயன் கிராமங்களில் எக்கருக்கு $6\frac{1}{4}$ ரூ. தீர்வை. ஜமீனில் ஒரு குறுணிக்கு (8 செண்ட்ஸ்) 44 ரூ. விலை. அயனில் ஒரு எகருக்கு 2,000 ரூ. விலை. ஒரு ஆற்று பாசானத்திலுள்ளே இருக்கிறது அயன் கிராமமும் ஜமீன் கிராமமும். அந்த ஆற்றில் தண்ணீர் வந்தால் இரண்டு நிலங்களுக்கும் பாய்கிறது. அயனில் அப்படி இருக்கிற நிலத்திற்கு எக்கருக்கு $6\frac{1}{4}$ ரூ. தீர்வை. அதே பாசனத்திலிருக்கிற ஜமீன் நிலத்திற்கு 21 ரூ. தீர்வை. கோர்ட்டில் விவகாரத்திற்கு போனால் கேலி செய்கிறார்கள். கவர்மெண்டில் கடன் கொடுத்தால்கூட ஜமீன் நிலங்கள் நீங்கலாக என்று எற்பாடு செய்திருக்கிறார்கள். ஜமீனில் தொந்திரவு ஜாஸ்தியாக இருக்கிறதால் அதை (நிலத்தை) வாங்குகிறவர்கள் கூட இல்லை. தீர்வை போட வழி இல்லாமல் போனால் நிலங்களை எலம் போடும் நிலைமைக்குத்தான் வந்து விடுகிறது. எனக்கு 17, 18 எக்கர் நிலம் இருந்தது. 7, 8 வருஷத்திற்குள்ளாக 7, 8 எக்கர் நிலத்தை விற்று விட்டேன் கிஸ்தி கட்டமுடியாமல் தான். பாக்கியை நானும் ஒரு பட்டாதார் என்று பெயர் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தால்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன் **(Files documents to show the prices of land in the respective areas).** புஞ்சை நிலத்திற்கு ஒரு கோட்டைக்கு—29 எகர் 12 செண்ட்ஸ் அதற்கு 9 ரூ. தீர்வை போட்டிருக்கிறார்கள். அயனில் ஒரு எக்கருக்கு 5 அணா. அதை புஞ்சையை தோட்டக்கால் பழய புஞ்சை என்று பிரித்திருக்கிறார்கள். நாங்களே எங்கள் சொந்தச் செலவில் கிணறு வெட்டிபயிருடுகிற காலத்தில்கூட, தோட்டக்காலுக்கு வேறு ரேட். பழய புஞ்சைக்கு வேறு ரேட் இப்படி போட்டுக் கொண்டிருக்கிறார்கள், புஞ்சை என்றால் ஒரே ரேட்டாகத்தான் இருக்கவேண்டும். வித்தியாசம் இருக்ககூடாது அயனில் இருக்கிற மாதிரி ஒரே விதமாகத்தான் இருக்க வேண்டும்.

ஜப்தி செய்து கலெக்ஷன் வசூல் செய்கிறார்களே அதில் குடிகளுக்கு ரொம்ப செலவு ஆகின்றது. அயன் கிராம வழக்கப்படி சாதாரணமாக கிராம் முன்சீப், கர்ணம் முதலியவர்கள் மூலமாக ஸ்டாம்பு, ஜப்தி, செலவு இல்லாமல் வசூல் செய்யலாம், எங்களுக்கு தீர்வை கொடுக்கிறதற்கு கஷ்டமாக இருக்கிற காலத்தில்தான் நாங்கள் தீர்வை பாக்கியாக இருக்கவேண்டியிருக்கிறது. எங்களுக்கு தீர்வைகளைக் குறைத்தால் நாங்கள் உத்திரவுக்கு கட்டுப்பட்டுத்தான் தீருவோம். எஸ்டேட் லாண்டு ஆக்ட் மூலமாக வரி வசூல் இருந்தால் எங்களுக்குஎப்பொழுதும் கஷ்டமாகத்தான் இருக்கும். ரெவினியு அதிகாரிகள்மூலமாக வசூல் செய்கிறதாக இருந்தால் அது சட்டப்படி நடக்கும். ஜமீனில் மானேஜர் முதலியவர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜமீன்தார் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறதால் ஜமீன்தார் உத்திரவுப்படிதான் அவர்கள் நடப்பார்கள் ஜமீன்தார் நன்மையைத்தான் அவர்கள் எப்பொழுதும் தேடுவார்கள். குடிகளுக்கு எதாவது நன்மை வேண்டி கோறினால் ஜமீன்தார் உத்தரவு இருந்தால்தான் முடியும். ரெவினியு அதிகாரிகளாக இருந்தால் அவர்கள் சட்டப்படி நடப்பார்கள். ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை. ஆகையால் எங்களுக்கு ஸ்டாம்பு முதலிய செலவுகள் இல்லாமல் விஷயங்கள் நடக்கவேண்டும். ஜப்தியில் எவ்வளவோ அக்கிரமம் நடக்கிறது. ஒரு ரூபாய் தீர்வைக்காக 100 ரூ. பெறுமான நிலத்தை ஜப்தி செய்து எலத்திற்கு கொண்டுவருவார்கள். அப்படி எலம் போடுகிறதிலும்கூட சரியான விலைக்கு எலம் போடமாட்டார்கள்.

எங்களுக்கு சில்லரை லெவ்வீஸ் கூடுதலான முறையில் வசூல் செய்கிறார்கள். வீடு கட்டுகிறதற்கு பாரையில் கல் உடைக்கிறதற்கு ஒரு வண்டிக்கு 2 அணா லைசென்ஸ் கட்டணம் வாங்குகிறார்கள். கல் ஜமீனுக்கும் பாத்தியமில்லை. எங்களுக்கும் பாத்தியமில்லை அவைகள் எல்லோருக்கும் பொது. யார் யாருக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுது அதை எடுத்துக்கொள்ள உரிமை இருக்கவேண்டும். பரம்பு. புறம்போக்கு முதலியவைகளில் அனுபவ பாத்தியம் குடிகளுக்கு இருக்க வேண்டும். ஓனர்ஷிப் கவர்ன்மெண்டுக்கு இருக்கவேண்டும் இது இரண்டும் இல்லாத நிலைமையில்

எங்களிடத்தில் குத்தகை முதலிய தீர்வையை வாங்கி விடுகிறார்கள். (Files documents) கரம்பையை குளங்களில் இருந்து எடுத்தால் அதற்கு தீர்வை போடுகிறார்கள். அதை குடிகள் நிலங்களுக்கு எடுத்துக் கொண்டு போடுவதால் குளங்களை ரிபேர் செய்கிற மாதிரி ஆகும். (Files documents to show the levy of fees on கரம்பு.) பரம்பு புறம் போக்கு முதலிய இடங்களிலிருந்து கொளிஞ்சி ஆவாரை முதலிய தழைகளை குத்தகைக்கு விட்டு அதற்கும் வரி போடுகிறார்கள். இவைகள் குளங்களின் கரைகளிலும் மத்தியிலும் இருக்கும். இவைகளை அறுத்துக்கொண்டுபோக பீஸ் கட்டவேண்டும். இவைகள் பரம்பு, புறம்போக்கு, குளக் கரை முதலிய இடங்களில் இயற்கையாகவே உண்டாகிறது. சுண்டைக்காய்ச்செடி முதலியவை கள் தானாகவே உண்டாகி இருக்கின்றன. இவைகளை 200, 300 ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டு விடு கிறார்கள். குத்தகைக்காரர்கள் ஜனங்கள் தப்பித்தவறி அந்த இடங்களுக்கு போனால் அவர்கள் பேரில் கேஸ் போடுகிறார்கள். சாணி எரு பொறுக்கப் போகிற பெண்களை அவர்கள் படுத்துகிற தொல்லைக்கு அளவே இல்லை. இவைகளில் யாராவது வீட்டு கொழம்புக்காக சுண்டக்காய் கொஞ்சம் பறித்துக்கொண்டு வந்துவிட்டால் அதற்காக ஏராளமாக காம்பென்சேஷன் போடுகிறார்கள். ஊர் ஓரங்களில் இருக்கக்கூடிய குட்டைகளில் இருக்கிற மண், களத்தில் சேர்ந்திருக்கிற நெல் செத்தை குப்பை, கூளம் முதலியவைகளைக்கூட குத்தகைக்கு விட்டு பணம் வாங்குகிறார்கள். இவைகள் ஜனங்களுக்குத்தான் பாத்தியம். அப்படி இருக்க அவைகளுக்கு பணம் வசூல் செய் கிறது அக்கிரமம். காலி நிலங்கள் கிராமாந்திரங்களில் ஆடு மாடுகள் மேய்க்க வேண்டியதாய் இருக்கிறது. குளக்கரைகளில் சுரை முதலிய படர் பயிர் போடுகிறார்கள். அவைகளையும் குத்த கைக்கு விடுகிறார்கள். ஜனங்கள் நிலங்களில் வேலை செய்து விட்டு வருகிற காலத்தில் கால் நடைகள் தப்பித்தவறி கரைகளிலிருக்கிற புல்லை மேய்ந்தால் அல்லது பச்சையில் வாயைவைத்து விட்டால் அதற்கு உடனே காம்பென்சேஷன் போட்டுவிடுகிறார்கள். இவைகள் முந்தின ஜமீன்தார் காலத்தில் இல்லை. இந்த விதமான தீர்வைகள் எல்லாம் இப்பொழுதுதான் ஏற்படுத்தி இருக்கி றார்கள். இவைகளை நாங்கள் சம்மதப்பட்டு கொடுக்கிறதில்லை. இவைகளைப்பற்றி அடிக்கடி தகரார் செய்துகொண்டே வந்திருக்கிறோம். நாங்கள் மீன் சாப்பிடுக்கிறவர்கள். குளத்தில் பாசிக்குத்தகை விடுகிறார்கள். ராத்திரியில் குளக்கரைப் பக்கம் போனால் மீன்கள் பக்கத்தில் (கரை ஓரத்தில்) திரியும் அவைகளை யாராவது பிடித்தால் உடனே அவர்கள் பேரில் கிரிமினல் கேஸ் போடுகிறார்கள் கீழ் கோர்டில் அநேகம் கேஸ்களில் ரூ. 15, 20 அபராதம் போட்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டுக்கு போனபோது கேசை தள்ளி விட்டார்கள். எங்களுக்கு மீன் பிடிக்கிற பாத்தியம் இருக்கவேண்டும். குளத்தைவிட்டு மடை, கலுங்கு இவைகளில் மீன் வரும். அவைகளைக்கூட குத்தகைக்கு விடுகிறார்கள். குளத்தைவிட்டு வெளியே வருகிற மீன்களை பிடிக்கக்கூட எங்களுக்கு பாத்தியம் இல்லை.

எங்களுக்கு சர்வே செய்து செட்டில்மெண்ட் செய்து கொடுக்கவேண்டும். பட்டாவில் இருக்கிற நிலம் அளவு சரியாக இருக்கிறதா, குறைந்து இருக்கிறதா ஜாஸ்தி இருக்கிறதா என்பது தெரிகிற தில்லை. கம்யுடேஷனில் தாவா வந்த காலத்தில் மதிப்பின்பேரில்தான் தீர்வை ரேட் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மராமத்து சரியானபடி செய்கிறதில்லை. ஏதோ எஸ்டிமேட் போடுகிறார்கள். ஆனால் எஸ்டிமேட் பிரகாரம் செய்கிறதில்லை. சுருக்கமாக ஏதோ சொல்ப ரிபேர் செய்கிறார்கள். பூராவும் செய்கிறதில்லை. மராமத்து பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் மேல் பார்வையில் இருக்கவேண் டும். எஸ்டிமேட்டுகளை கலெக்டருக்கோ அல்லது வேறு ரெவினியு மேல் அதிகாரிக்கோ அனுப்ப வேண்டும். பி. டபிள்யு.-டி மேல் அதிகாரிகளைக்கொண்டு மராமத்துகள் நடத்தப்படவேண்டும். எஸ்டேட்டில் ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்கிறதில்லை. மடை உடைத்திருக்கிற தென்று சொன்னால் அதற்கு தாத்காலீகமாக ஏதோமண்ணை வெட்டிக்கொட்டி மூடுவார்கள் அதுவும் தண்ணீர் எல்லாம் அடித்துக்கொண்டுபோனபிறகுதான் செய்வார்கள். சரியான படி சரியான காலத்தில் ரிப்பேர் செய்யமாட்டார்கள். வெள்ளச் சேதத்தினாலோ, அல்லது மழையே இல்லாமல் பயிற்கள்காய்ந்து சாவியாய்ப்போனால் அயன் கிராமங்களில் பூரா வஜா கொடுத்தால் ஜமீனில் பாதிகூட வஜா கொடுக்கமாட்டார்கள். ஜமீன் மானேஜர் முதலியவர்கள் யாராவது நல்லவர்களாக இருந்தால் ஏதாவது சொல்ப வஜா கொடுப்பார்கள். நான் ரூ. 144 வாயிதா கட்டவேண்டியிருக்கிறது. அதில் எனக்கு ரூ. 64 வஜா கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் புஞ்சைக்கு கொஞ்சம்கூட வசூலாக வில்லை. எந்தக் காரணத்தைக்கொண்டு ரூ. 64 வஜா கொடுத் தார்கள் என்பது தெரியவில்லை. தீர்வை வசூல் விஷயத்தில் தண்ணீர் சப்ளை நிலைமை கவனிக்கப் படவேண்டும். தண்ணீர் குறைவாக இருக்கிற காலத்தில் சரியானபடி எங்களுக்கு வஜா கொடுக்கப் படவேண்டும். வருஷா வருஷம் ரெவினியு அதிகாரிகள் வந்து பார்வையிட்டால் தான் எங்களுக்கு. சரியானபடி வஜா கிடைக்கும். தவிற ஜமீன்தார் அவர்களுக்கு பிரைவேட் சொத்து இருக்கிறது. அதாவது அவர்கள் சொந்தப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த சொத்து இருக்கிறதால் குடிகள் அதை ஒட்டி நிலங்கள் வைத்திருக்கிறது அவர்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—அப்படி பிரைவேட் சொத்து எவ்வளவு இருக்கிறது ? *A.*—சுமார் 400, 500 ; எக்கர் நிலமிருக்கிறது.

Q.—ஜமீன்தார் அந்த நிலங்களை என்ன செய்கிறார்கள் ? *A.*—அவர்கள் அதை குத்தகைக்கு விடுகிறார்கள்.

Q.—அதனால் குடிகளுக்கு என்ன கஷ்டம் ? *A.*—எங்களுடைய நிலங்களுக்கு ஒரு கோட்டை விரைப்பாட்டுக்கு ரூ. 21 கிஸ்தி குத்தகைக்கு நிலத்தை எடுத்திருக்கிறவர்களுக்கு கம்மியுடேஷன் ரேட்டில் பாதி விகிதம் தீர்வை. ஜமீன்தார் அவர்களுக்கு எங்கள் ஊரில் ஒரு தோப்பு இருக்கிறது. குளத்திலிருக்கிற தண்ணீரை தோப்புக்குப் பாய்ச்சுகிறார்கள். ஜனங்களுக்கு நிலத்திற்கு தண்ணீர் தேவையாக இருக்கும்போது தோப்புக்கு தண்ணீர் அவசியம் வேண்டுமென்று சென்றவருஷத்தில் 10, 20 ஆள்களைக்கொண்டு வந்து தண்ணீரை மறித்தார்கள். அகரத்தில் சில வெள்ளாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தண்ணீர் கொண்டுபோகவந்தவர்களை அடித்தார்கள் என்று ஜமீன் தாரிடத்தில் போய் சொன்னார்கள். அதன் மூலமாக தண்ணீரை அடைக்கவந்த வெள்ளாளர்கள் பேரில் அடித்து மண்டையை உடைத்து விட்டார்கள் என்று கேஸ் போட்டார்கள். 1,000, 1,500 ரூபாய் செல வழித்து அவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். தவிற மீன் (பாசி) குத்தகைவிட ஆரம்பித்துவிட்டார்கள். இதனாலும் குடிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்படுகிறது. சாகுபடிக்கு தண்ணீர் வேண்டும்போது மடையைத்துரந்து தண்ணீர் பாய்ச்ச முடிகிறதில்லை. மடையைத்துரந்தால் பாசிக் குத்தகைக்காரர்கள் உடனே வந்து விடுகிறார்கள். இதனால் சண்டை சச்சரவு ஏற்படுகிறது.

குடிகள் சரியானபடி நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச முடிகிறதில்லை. ஆகையால் ஜமீன் பண்ணை நிலத்திற்கு கலக்டரோ அல்லது மற்ற எந்த மேல் அதிகாரியோ என்ன காம்பென்சேஷன் கொடுக்கச் சொல்லுகிறார்களோ அதை வாங்கிக்கொண்டு அந்த நிலங்களை சம்சாரிகளுக்கே விட்டுவிடும்படி ஏற்பாடுசெய்யவேண்டும். அப்பேற்பட்ட நிலங்களை பட்டாதார்களுக்கு கொடுத்துவிடவேண்டும். ஜமீன் தாருக்கு பிரைவேட் லான்ட் என்பது இருக்கக்கூடாதென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். நாங்களும் பிரிடிஷ் குடிகள்தான். அயன் குடிகள் சௌகரியமாக வாழ்ந்து கொண்டிருக்க ஜமீன் குடிகள் இவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. ஒரு ஆற்றின் இரண்டு பக்கங்களில் இருக்கிற ஜனங்களில் ஒரு பக்கத்திலிருக்கிற அயன் குடிகள் சுகமாக இருக்கிறபோது மற்றொரு பக்கத்திலிருக்கிற ஜமீன் குடிகள் சாகவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் கோரிக்கை.

The Zamindar of Mirzapuram:

Q.—பண்ணை நிலங்களை எல்லாம் ரயத்துகளுக்கு கொடுக்க வேண்டுமா?

A.—ஆமாம்.

Q.—உங்களுக்கு எவ்வளவு ஏகர் நிலமிருக்கிறது? *A.*—நஞ்சையில் 7, 8 ஏகர் நிலம் இருக்கிறது. நஞ்சைமேல் புஞ்சை இரண்டு, மூன்று ஏக்கர்கள் இருக்கின்றது. இவைகள்தானிருக்கிறது. மற்றவைகளை விற்று தீர்வை செலுத்தி விட்டேன்.

Q.—நிலமே இல்லாதவர்கள் உங்கள் ஊரில் அநேகம் பேர்கள் இருக்கிறார்களா? *A.*—இருக்கிறார்கள்.

Q.—ஜமீன்தாருக்கு நிலத்தில் அவர்களுக்கு சர்வசுதந்திர பாத்தியம் இருக்கிறதா? *A.*—ஜமீன்தாருக்கு இப்பொழுது இருக்கிறது. அவர்களுக்குமேல்வாரம்தான் இருக்கவேண்டும். ஆனால் சொந்தத்தில் அவர்கள் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது.

Q.—ஜமீன்தார் பண்ணை நிலங்களை மாத்திரம் கொடுக்க சொல்லுகிறீர்களே உங்கள் நிலத்தில் நிலம் இல்லாதவர்களுக்கு நீங்கள் ஏன் கொடுக்கக்கூடாது? *A.*—நாங்கள் ரொக்க ரூபாய் கொடுத்து வாங்கினோம். நாங்கள் தீர்வை கொடுத்துக்கொண்டு வருகிறோம். எங்கள் நிலங்களை வேறு ஒருவருக்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை. தவிரவும் எங்கள் நிலங்களால் குடிகளுக்கு ஒருவிதமான இடஞ்சலும் இல்லை. ஜமீன் சொந்தப் பண்ணை வைத்திருப்பதால் தண்ணீர் தகரார் முதலிய சச்சரவுகள் ஏற்படுகின்றன. அதனால் குடிகளுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகையால்தான் நாங்கள் அந்தப் பண்ணை நிலங்களை குடிகளுக்கு கொடுத்து விட்டு ஏதாவது காம்பென்சேஷன் வாங்கிக்கொள்ளட்டும் என்று சொல்லிகிறோம்.

Q.—பரம்பரையாக இருக்கிற ஜமீன்தார்களிடமிருந்து அநேகம் பேர்கள் அநேகம் லக்ஷ ரூபாய் கொடுத்து வாங்கி இருக்கிற நிலங்களை விட்டுக்கொடுக்கச் சொன்னால் அது சரியா? *A.*—பரம்பரை பாத்தியத்திற்காகஇஸ்தி மீராபடிக்கு அவர்கள் மேல்வாரம்தான் வாங்கிக்கொள்ளவேண்டும்.

Mr. A. Rangaswami Ayyangar:

Q.—ஜமீன் பண்ணை நிலங்களை பங்கு போட்டுக்கொள்ளுகிற காலத்தில் நீங்கள் குடிகளுடன் உங்கள் நிலங்களை பங்கு பிரித்துக்கொள்ள தயாராக இருக்கிறீர்களா? *A.*—ஜமீன்தார் நிலங்களை பிரித்துக் கொடுக்கிறபோது நாங்களும் பிரித்துக்கொடுக்கத்தயாராக இருப்போம். அதை சாதாரணமாகச் செய்யலாம். அதில் என்ன கஷ்டம் இருக்கிறது. **(Laughter).**

The Zamindar of Mirzapuram:

Q.—தீர்வை ஜாஸ்தியாக இருந்தால் ஏன் நிலத்தை ஜமீன்தாரிடத்தில் கொடுத்துவிடக்கூடாது. *A.*— எங்களுக்கு உரம்போட லாயக்கில்லை. தண்ணீர் சப்ளை சரியாக இருக்கிறதில்லை. சாகுபடி வசதிகளை சரியாக ஏற்படுத்திக் கொடுத்தால் நாங்கள் சரியான சாகுபடி செய்யமுடியும். தீர்வையும் செலுத்தமுடியும். தவிரவும் தீர்வை ஜாஸ்தியை அயன் தீர்வை மாதிரி குறைத்துப்போடவேண்டும். இவைகளைச் செய்தால் நாங்கள் தீர்வை செலுத்துவதில் என்ன கஷ்டம் ஏற்படப்போகிறது. நாங்கள் எங்கள் நிலங்களை விட்டு விட்டு வேறு எங்கே யாவது போனால் எங்கள் ஜீவனத்திற்கு வழி இருந்தால் நாங்கள் இந்த தொல்லைகளை எல்லாம் விட்டொழித்துவிட்டு சுகமாக வேறு கிராமங்களுக்குப் போவோம். அப்பேற்பட்ட நிலைமை இப்பொழுது இல்லாது இருக்கையில் நாங்கள் கிராமத்தை விட்டு எங்கே போகிறது. அப்படியும் சில குடிகள் கஷ்டம் சகிக்கமுடியாமல் இருக்கிற காடு கரைகளை வந்த வரையில் விற்று விட்டு வெளிநாடுகளுக்கு பிழைப்புக்காக போகிறவர்களும் இருக்கிறார்கள். போயும் இருக்கிறார்கள்.

Q.—Then in the zamin forests are not the ryots allowed to take manure leaves? *A.*—அங்கே பெரிய காடுகள் இல்லை. எங்கள் கிராம பக்கத்தில் பெரிய காடு ஒன்றுமில்லை. பரம்பு புரம்போக்கு முதலிய இடங்களில்தான் தாழை இருக்கிறது. அந்த தழை முதலியவைகளை எடுத்துக்கொள்ள எங்களுக்கு உரிமை இருக்க வேண்டாமா என்று கேட்கிறேன்.

Q.—உங்களுக்கு எவ்வளவு வஜா சொடுத்தார்கள்? *A.*—ஏதோ கொஞ்சம் வஜா கொடுத்தார்கள். எஸ்டேட்டில் மொத்தம் எவ்வளவு வஜா கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ரூபாய்க்கு எவ்வளவு ரேட் வஜா என்பது தெரியாது. அவர்கள் மனம்போன வாக்கில் கொடுக்கிறார்கள். நான் சம்மந்தப்பட்டவரையில் 74 ரூ தீர்வை செலுத்தினேன். மற்றவர்களுக்கு எவ்வளவு ரெமிஷன் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் இஷ்டம் போல் கொடுத்தார்கள். ஜமீன்தாருக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் சௌகரியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். சாதாரண குடிகளுக்கெல்லாம் ரொம்ப சொல்பம் தான்.

Q. பூரா தள்ளிக்கொடுக்கவேண்டுமென்றால் என்ன அர்த்தம்? *A.*— விளைச்சல் இல்லாத நிலங்களுக்கும், சாவியாகப் போன நிலங்களுக்கும், தீர்வையை பூரா தள்ளிக்கொடுக்க வேண்டும்.

Q. ஜமீன்தார் பேஷ் கிஸ்து கொடுக்க வேண்டுமென்று தெரியுமா உங்களுக்கு பூரா வஜா செய்து கொடுத்தால் எப்படி அவர்கள் பேஷ் கிஸ்து செலுத்துகிறது? *A.*—ஜமீன்தார் பேஷ் கிஸ்து கொடுக்கவேண்டுமென்று தெரியும். எங்களுக்குமட்டும் ஜமீன்தார் தீர்வையை உயர்த்தி இருக்கிறார். ஆனால் பேஷ் கிஸ்து உயரவில்லை. அது ஆதிகால முதல் ஒரே மாதிரியாகத் தானிருக்கிறது. எங்களிடமிருந்து அடித்து பிடித்து வசூல் செய்த பணத்தில் 24 லக்ஷ ரூபாய் மிச்சம் வைத்திருக்கிறார். அந்தப் பணத்திலிருந்து கொடுக்கட்டுமே. (சிறிப்பு.)

Witness No. 217. Madura. 22nd February 1938.

Evidence of Mr. Ramaswami Konar, an advocate practising in Tinnevelly.

The WITNESS :—I am an advocate practising in Tinnevelly. I am a tenant in the Talavankottai village, Thirumalainayakan Pudukudi Estate, Sankarankoil taluk.

The SECRETARY : *Q.*—Have you given any written memorandum ? *A.*—I am a member of the sub-committee appointed by the congress committee. I have added a note along with that memorandum. Besides the points mentioned in the memorandum, I am producing pattas for three estates, viz., Thalavankottai, Thirumalainayakan Pudukudi and Veeriruppu and pattas for the neighbouring Government lands.

The SECRETARY : *Q.*—What is the difference in rates of assessment ? *A.*—That also I have given. In the Talavankottai Estate there is a certain village in which Rs. 21–14–0 is the highest rate per acre of zamin land and in the adjacent ryotwari areas, it is Rs. 8–8–0, although the tanks in both the areas are served by the same irrigation channel and they have got the same irrigation facilities. Again in another village Perukulam the highest rate is Rs. 12, while in the adjoining ryotwari village the rate is Rs. 5. These villages are only divided by a road that leads from Sankarankoil to Puliyangudi. Even in Thirumalainayakan Pudukudi, the highest rate is from Rs. 13–12–0 to Rs. 16–12–0, while in the adjoining ryotwari area it is from Rs. 4–12–0 to Rs. 6–4–0. So far as Thirumalainayakan Pudukudi is concerned, I have to state this : when it was permanently settled in 1915, the zamindar was given Rs. 115 as premia for commuting the waram rent into money rent. I have also to state that previous to this settlement, the mittadar was leasing out his lands on certain terms and after it was permenently settled and the lands were commuted, he is getting an additional amount of Rs. 3 to the original rate. I have also got a copy of the previous settlement for ten years in which the rates of rent range up to Rs. 17. For Veeriruppu Rs. 300 was paid as premia and the rate of rent fixed per kotah of land was Rs. 15. That would amount to Rs. 9 per acre. While this is the case, in the adjoining ryotwari land in Nayanar village, the highest rate is Rs. 6–14–0. So I am of opinion that the ryotwari rates of assessment should be fixed for the zamindari areas also, and we should get remission for failure of crops. In the Talavankottai Estate, in the patta issued by the zamindar there is a clause which states, that if Government declares a particular year as famine year the ryots in that estate will be entitled to remission. In fasli 1344 it was a complete failure of crops in Tirumalainayakan Pudukudi, much more than in Sankarankoil taluk where the Government allowed dry remission. If there are exceptional failures of crops owing to seasonal conditions and if there is a widespread calamity, according to the clause contained in the patta referred to above, if the Government declares such a year as a famine year, then the ryots of that estate will be entitled to get remission. But unfortunately for us the Government refused to declare the year 1935 as a famine year. When compared with the rates prevailing in ryotwari areas the rates in Tirumalainayakan Pudukudi is the highest in the presidency. While the presidency average rate is Rs. 6–4–0 in Thirumalainayakan Pudukudi Rs. 10 is the highest rate per acre. For Tamparaparni the highest rate is Rs. 22–8–0 and the average is Rs. 13. We have submitted so many memoranda about the highest rate prevailing in Tinnevelly district.

The CHAIRMAN : *Q.*—The rate prevailing in Tanjore is the highest ? The witness—There are very few acres bearing that rate.

So far as rent is concerned, in certain estates there are cropwar assessments. For lands cultivated by new wells they do not charge cropwar rent. But in the case of lands watered by the old wells they charge cropwar rent. I say that no charge should be levied on the different crops raised at the same time.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—These wells were constructed by the land. holder ? *A.*—No, not a pie was spent by the zamindar. I am quite emphatic about this.

So far as the settlement of rent is concerned, I am for settling the rates only after the year 1931. My reason is this : before 1931 it was a boom period when prices were abnormally high, and that period must be excluded. Only the depression period from 1931 onwards must be taken into consideration if rates are to be settled in future. If rates are to be settled, the principles laid down in section 39 (*a*) of the Estates Land Act must be applied along with the modifications that I am going to suggest just now. Section 39 (*a*) says 'the average price for the 12 months' etc. Under that section the Collector publishes two sets of prices for the year, that is to say, the first sort and the second sort. I have got a copy showing these sorts. When we say that the average of both the first and the second sort should be taken into consideration, the Collector says that the average commuted price should be taken into consideration. Commutation was settled long ago and the presumption is that both the first and the second sort were included in the commutation rate. With that presumption in view I submit that both the first and the second

sort should be taken into consideration in settling the current average prices. In the appeal I have preferred to the Collector I have stated that the first and second sort should be taken into consideration and not the average of both. I am filing the order of the Collector on the appeal I made. Then it is stated in the Act that the average prices of the last twelve months must be taken into consideration. My submission is that the average prices of the selling months from March to April must be taken into consideration. The section gives only a discretion to the officer to work out the percentage per acreage. That must not be left to the discretion of the officer. As in the ryotwari area, a percentage must be fixed for merchants' profit.

So far as section 39 is concerned, I submit that section says that the matter may be referred to a Court of law in this case the Divisional Officer. I submit when settling accounts for a particular fasli they should say that the ryot is entitled to remission for such and such fasli under section 39. When rates are settled according to ryotwari basis, that can form the basis for the rates of rents to be fixed or changed afterwards. When the average price is also fixed by taking' into consideration the current average prices of paddy for a given number of years, then it will be easy for the zamindar to see whether the rate of rent could be reduced or not.

The Zamindar of Mirzapuram : *Q.*—It is just like the ryotwari system ? *A.*—Yes, yes.

What I submit is as the prices rise the rates ought not to be enhanced. On this principle alone in the Punjab Government they fix the commutation average and the Government are not entitled to enhance the rates.

The Secretary : *Q.*—Is that the rule in the Punjab ? *A.*—Yes. That is what I understand to be. They take the average prices for 10 years and they fix the commutation average and the ryots are entitled to remission when the current average price has fallen down. Government cannot claim enhancement on the ground that the prices have risen.

The Chairman : *Q.*—That is not what they are doing at present ? *A.*—The witness. That is my recollection.

So far as collection of rent is concerned, it is not as satisfactory as it ought to be. There is a lot of difference between ryotwari and zamindari areas. There are two reasons for this : One is the absence of remission and the other is the highest rate of assessment prevailing. If these two defects are removed, then the difficulties in connection with the collection of revenue would be greatly minimised. I would submit that the collection work may be taken over by the Government and the collection made by them and after deducting the peshkash due by the zamindar to the Government, if there remains anything it may be given to the zamindar. My information is that in Travancore Government the State collects the rent for the Janmies. I may also state that so far as certain estates are concerned, the agents of the Zamindars of those estates collect the rent, whereas in certain other estates, the village officers collect the rent. So far as the agents are concerned, the zamindar has one agent to-day and another agent tomorrow. This leads to a lot of difficulties. The first agent when collecting the rent goes on issuing receipts, and all on a sudden he is dismissed and a fresh agent comes in and begins to collect the rent. Although the ryot has paid the rent to the former agent, the zamindar says that he has already dismissed him and his receipt is not binding on him. So what I submit is the agents of these zamindars must be registered before the Collector as authorized agents of the zamindars. My impression is that such provision was found in the amending Act, but it was finally dropped when the Bill became an Act.

Another point is this : when very valuable lands are sold for arrears of rent they are sold for almost nothing. The procedure to the ryots adopted in the Estates Land Act is most comprehensive and although it gives protection to the ryots, it is not possible to carry it out. If a land is sold, the owner will have to move the Munsif's Court to set aside the sale on the ground of fraud. All of us know how difficult it is to prove fraud. It is beyond all human possibility to prove fraud. The reason for the less valuation of land in Zamindari tracts is this : when a land is mortgaged to a certain person, the mortgagor does not allow the mortgagee to pay the rent and pay it off to the Zamindar. So when the rent falls in arrears, and when the land is sold in auction, without any notice to the mortgagee, the land is sold for incredibly low price. The mortgagee is not given any notice when the land is sold in auction. He has no other remedy except to file a suit for fraud. So in cases where the lands are sold for arrears of rent, those who have got a mortgage right over the property should be given notice of by the landholder.

So far as irrigation is concerned, sections 137 and 138 provides for fixing up of ayacut. If the ayacut is fixed the ryot or the landholder may apply to the Collector for increasing or decreasing the capacity of the irrigation. My submission is that it is not practicable

for the ryot to do so. My proposal is that all the irrigation sources must be examined with reference to their capacity and the area of the ayacut which they can irrigate, and then once for all fix the capacity of the irrigation sources and the area of the ayacut. In the present amended act, the provision relating to repair of irrigation sources is a great improvement over the previous provision. Even then there is a lot of delay. We have to apply to the landholder to repair the irrigation works and when he refuses he will have to apply to the Collector. The Collector asks the landholder to repair the irrigation works, and when he refuses he asks him to deposit a certain sum of money and when the landholder deposits the money the collector will begin to repair the tank. All this entails much delay. My submission is that the Government should survey all irrigation works and prepare a programme of work to be carried out and then collect the amount from the zamindar without following the cumbersome procedure enumerated above. One of the witness from Sivagiri Zamindari spoke about it. From my own personal experience I find that even after the 1935 Act came into force, the ryots applied to the Collector for carrying out the necessary repairs and nothing has been done till now. The Collector was asking the zamindar to deposit money and he has not done so. The Collector has now suspended the collection of wet assessment for the period from 1935–39. The repair work has not been commenced. If the Government accept the reponsibility for carrying out the repairs, then a good deal of delay would be avoided.

So far as the question of transfer of pattas is concerned, it is a scandalous state of things. Pattas stand in the name of the same gentleman for 4 or 5 generations. We are unable to trace the person from whom the property is derived. The present Act provides that even the Sub-Registrar may give notice to the parties. But in practice this is not done and a good deal of delay is caused. So what I subimt is that the Revenue authorities may be given the power to transfer pattas and do the needful. Whenever there is no sanction compelling the landholder to transfer the patta he does not lose anything by not transferring the patta. If there is a sanction behind the provisions made in the Act, then it will be helpful for transferring the pattas. Therefore my submission is that there must be some provision in the Act itself disabling the landholder to sell the property for arrears of rent, till the patta is transferred.

So far as survey and record of rights is concerned there is ample evidence to show that the expenses for making a survey and record of rights must be borne by the landholder, if the ryotwari principle is accepted.

THE ZAMINDAR OF MIRZAPURAM: *Q.*—Supposing a certain amount is due to the Zamindar on a particular patta, what do you suggest ? *A.*—For that amount he has got a charge on the land for which he can proceed against the property at any time.

Q.—Supposing the land is subdivided, and some Rs. 30 is due to the Zamindar from that land for which there is only one patta, viz., No. 1 you want that patta No. 1 to be divided into two and the amount collected from both ? *A.*—You can proceed against both the lands which have been divided.

Mr. B. VENKATACHALAM PILLAI: *Q.*—I suppose if the ryot has paid his kotah for this land, then the patta can be transferred so far as he is concerned and the landholder can proceed against the other subdivided land ? That is your point ? *A.*—Yes.

Then the witness continued—So far as trees are concerned, there is a distinction made between the trees grown before 1908 and the trees grown after 1908. My submission is that the zamindar has nothing to do with the trees. All the trees belong to the tenants. On account of this distinction there is a lot of dispute between the ryots and the zamindar. I will give an instance which I know from my own personal experience. A tree which was worth Rs. 45 was under dispute and both the zamindar and the ryots spent thousands of rupees in law courts each trying to establish his claim to the tree. The zamindar filed a criminal complaint and it cost thousands of rupees to the ryot prove that it was not criminal on his part to have cut away the tree. I have not a copy of the judgment in that case but I have sent for it.

THE ZAMINDAR OF MIRZAPURAM: *Q.*—You want to cut away the trees without paying compensation to the zamindar for the same ? *A.*—Yes.

Mr. MAHBOOB ALI BAIG: *Q.*—You say that the trees were planted before 1908 ? *A.*—Yes.

The tree tax should be abolished on the ground that it is double taxation.

In certain estates the trees belong to certain persons and the lands on which those trees stand belong to certain other different persons. This leads to lot of difficulties. These difficulties must be removed.

So far as section 20 is concerned, if there are no lands existing in the estates for communal purposes, cattle shed and such like, they must be acquired at the cost of the zamindar.

Now the tenants have got customary rights of grazing their cattle, cutting timber, and leaves for green manure. My submission is that these rights must be statutorily provided without allowing the ryots to prove their custom. In the Talavankottai Estate of which I am a ryot, we have filed a suit claiming our right to take green manure. The matter first went to the district court and then it is now in the High Court.

So far as fisheries are concerned, there is no uniform practice in all the estates. It is different in different estates.

In certain villages they pay a fixed fee as money rent. The practice is different in different villages. The ryots should be made to enjoy the fisheries by paying a nominal sum to the zamindar. A person who holds the ayacut lands must pay the landholder something in lieu of enjoying the fisheries. This condition should also form part of the patta and the right of fishing must go along with the land to the purchaser of the land whenever it is sold.

THE ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—Do you know what is the practice in the Government villages ? *A.*—The ryots enjoy the fishing right and they pay only a nominal sum to the Government. In certain cases this right is registered in the name of the Ayanar temple.

So far as cess is concerned, it should be made payable by the zamindar. If the local board cess is An. 1 or As. 1½, the zamindar collects it at the rate of As. 2 and As. 2–3 and thereby also makes a profit.

So far as suits are concerned, suits which are of an administrative nature, suits for reduction or for enhancement of rent or things like that may be left in the hands of the Revenue Department. So far as suits relating to title of the land are concerned, they may be left to civil courts. My submission is that there will not be any difficulty if the ryotwari principle is accepted, in taking up the management of the estates by the Government. If Government take over the management of the estates and administer them on ryotwari principle, then there will not be a lot of litigation between the ryots and the zamindars.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—What have you got to say about attachment of movables ? *A.*—I go to the extent of saying that attachment of all movables should be dropped, as it is done in Bengal. For a sum of As. 4 which is due to the zamindar, if an attachment is made by the zemindar we will have to pay Rs. 6–4–0.

THE ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—What is the extent of land that you own ? *A.*—I own 10 to 12 acres of wet lands and 40 to 50 acres of dry lands.

Q.—Do you sub-let those lands or cultivate them yourself ? *A.*—I cultivate them myself.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—What about the rights of the ryots to build houses in patta lands ? *A.*—I would say that as in ryotwari area, if some 20 years rent are collected from the ryots, they must be allowed to build houses on ryoti lands also.

The committee then rose at 6 p.m. to meet again at 11 a.m. the next day.

The Committee met at the Collector's Office Buildings, Madura, at 11 a.m. on 23rd February 1938.

Witness No. 218. Madura. 23rd February 1938.

Oral evidence of Mr. W. P. A. Soundarapandiyan, son of Mr. Iya Nadar, age 44 of Pathiveeranpati, Madura district.

கனம் சேர்மன் அவர்களுக்கும், மற்ற அங்கத்தினர்களுக்கும் கன்னிவாடி குடியானவர் சங்கத்தின் சார்பாக இந்த மெம்மோராண்டத்தை தங்களுக்கு நான் முதன் முதலில் சமர்ப்பிக்கின்றேன். நாங்கள் எங்களுடைய மெம்மோராண்டத்தில் சொல்லியிருக்கின்ற விஷயங்களைத் தங்கள் இடம் சமர்ப்பிக்கின்ற பலவிதமான ரிக்கார்டுகள் மூலமாக ஆஜர் செய்து எங்களுடைய குறைகளைச் சொல்லப் பிரியப்படுகின்றோம். எங்கள் முதலாவது குறை என்னவென்றால் எங்கள் ஜமீந்தாரியிலுள்ள தற்சமயம் உள்ள முப்பது கிராமங்களுக்கும் 1802-ம் வருஷத்திலேயே 38,140 ரூபாய் பேஷ்கிஸ்து ஆக நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் ஜமீந்தார் பங்கு 54,485 ரூபாய் ஆகையால், 17 ஆயிரம் அதிகமாக ஜமீந்தாருக்கு கிடைத்துக்கொண்டுவந்தது. தற்சமயம் 47 பசலிக்காக தற்சமயத்திலுள்ள பசலி லாண்டு ரெவினியூவில் ஜமீந்தார் 1,88,934 ரூபாய் தீர்வையாக வசூல் செய்கின்றார். இந்த தீர்வையானது பல இடங்களிலே அதிகத் தீர்வையாக பைசல் ஏற்பட்டு இருக்கின்ற தீர்வையை விட அதிகமாகவே வசூல் செய்யப்பட்டிருக்கின்றதென்பதை வெகு வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். அதற்கு ஆதாரமாக எக்ஸிபிட் 1, 2, 3, 4 சொல்லக்கூடிய இந்த பட்டாக்களிலே இந்த தீர்வை எந்த விதமாக அவர் அதிகப்படுத்தியிருக்கின்றார் என்பது நிதர்சனமாகத் தெரிய

வரும். எக்ஸிபிட்ஸ் 3, 4-ல் அவைகளின் வித்யாசமானது நன்றாய்த் தெரிகிறது. 20 மடங்குத் தீர்வை ஒரு குழி 60 செண்ட் நிலத்துக்கு 1827 தாரணையானது 25 பணம். பின்னால் 1916-ம் வருஷத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பது நன்கு தெரியலாம். அதே மாதிரி 15 பணம் 17 பணமாக இருக்கிறது. 18 பணம் 20 பணமாக இருக்கிறது.

The Chairman :

Q.—என்ன வருஷம் அது ? A.—1916-ம் வருஷம். அதிகமாக ஏற்பாடு செய்திருக்கின்ற பட்டா முந்தினது. 1296-ம் பசலி ஏறக்குறைய 51 வருஷத்துக்கு முன்பாக.

Witness :

இதைத் தங்கள் முன்பாகச் சமர்ப்பிக்கப் பிரியப்படுகின்றேன். அடுத்த படியாக ஜமீந்தாருக்குத் தீர்வைகளை உயர்த்துவதற்குச் சட்டபூர்வமாக ஒருவிதமான நியாயம் இல்லாமல் இருக்கின்றபோது தோட்டத்தீர்வை வாங்குகிறார். புஞ்சை நிலங்களை சம்சாரிகள் தாங்கள் பாடுபட்டுக் கிணறு வெட்டி நிலத்தைப் பண்படுத்தி இருக்கிறார்கள். அதற்கும் அதிகத் தீர்வை. பின்னால் நான் காண்பிக்கின்ற இந்த பட்டயங்கள் மூலம் நிரூபிக்கின்றேன். புஞ்சை நிலங்கள் 60 செண்டுக்கு 4 பணம், 2 பணம் இருந்ததை 15 பணமாக அதிகப் படுத்தியிருக்கின்றதை இந்த பட்டயம் காண்பிக்கிறது. 256 சர்வே நம்பர் 4 பணம், 10 பணம், 15 பணம் உயர்ந்திருக்கிறது. இந்த பட்டயம் நிரூபிக்கின்றது. (Witness files the Pattas) 103 சர்வே நம்பர் ஒரு கிராமத்திலுள்ளது. இதேமாதிரி எல்லா கிராமங்களில் இருக்கும். உதாரணமாச காண்பிக்க ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கின்றேன். 133 சர்வே நம்பரில் 3 பணம் இருந்ததை 12 பணமாக உயர்த்தி யிருக்கிறார்கள். அடுத்தபடியாக ஜமீன்தாருக்குச் சொந்தமில்லாத மற்ற (பிரைவேட் டான்க்ஸ்) குளங்கள் அதாவது டான்க்ஸ், அவைகளில் நஞ்சை தீர்வை வசூல் செய்கின்றார்.

The Chairman :

Q.—ஒரே ரேட் எத்தனை வருஷமாக இருக்கின்றது இந்த எஸ்டேட்டில் ?

A.—1917, 1918-லிருந்து இருக்கலாம்.

Witness :

ஒரே ரேட் இருக்கிறது 1908-வது வருஷம் எஸ்டேட் லாண்டு ஆக்ட் அமெண்டு செய்த காலத்திற்கு பிற்பாடு ஏறக்குறைய ஒரேவிதமான தீர்வை என்று சொல்லலாம். 1217-ம் பசலியில் பீட்டர் கலெக்டராய் இருந்த காலத்தில் தீர்வை குறைந்து யிருந்தது. "மனோ ராஜி" தாரணை மூலமாக இதை அதிகப்படுத்தியிருக்கிறது. குடியானவர்களுக்கும் ஜமீன்தாருக்கும் ஒருவ சமான ஒப்பந்தம் ஏற்பட்டதாக சட்டமூலம் அதிக தீர்வை வைத்திருக்கிறார்கள். அடுத்தபடி இரண்டாம் பாராவில் சொல்லயிருக்கிறபடி 'சொந்த குளம்' உடை குளத்துக்கும் நஞ்சை தீர்வை வசூலிக்கிறார்கள். அவைகளை இந்த பட்டாக்கள் மூலம் நிர்ணயம் செய்யமுடியும். (Witness files pattas.) அதேமாதிரி கெட்டுப்போய் இருக்கின்ற உடைந்துபோய் இருக்கின்ற குளங்களுக்கு நஞ்சை தீர்வை விதித்து இருக்கிறார்கள். இம்மாதிரி சட்டபூர்வமாயுள்ள நியாயங்களுக்கு குடியானவர்கள் ஒருவிதமான ஏற்பாடு செய்வதற்கு ஜமீந்தாரோடு சண்டை போட முடியாமல் இருக்கிறார்கள். குடியானவர்கள் ஒன்று சேர்ந்து இருப்பதற்கு வசதியில்லாமல், தாங்கள் பணச் செலவு செய்து இரண்டு மூன்று கோர்ட்டுகளுக்குப் போய் தங்களுடைய நியாயமான உரிமைகளுக்கு வழக்காடி ஜயிப்பதற்கு முடியாத காரணத்தால் இம்மாதிரி குடியானவர்கள் ஜமீந்தாருடன் சண்டை போட்டு தங்கள் உரிமையை நிலைநாட்டமுடிவதற்கில்லை. ஆகவே, சட்ட பூர்வமாகவே அம்மாதிரியான கஷ்டம் இல்லாதபடி செய்வதற்கு எஸ்டேட் ஆக்டில் சரியானபடி ஒரு பெனால்டியோ அபராதமோ செய்திருந்தால், இந்த கஷ்டம் ஒழிந்து போகலாம் என்பது என் அபிப்பிராயம்.

The Zamindar should not get enhanced rents than what he is legally entitled to and if he collects such enhanced rents knowing or having reason to believe that he is not entitled to such rent, he should be made liable to ryots for damages or penalty summarily recoverable in a revenue court not exceeding 20 times of the enhanced rent illegally obtained by him. This will act as a check against oppressive exactions of enhanced rates without proper justification that is what we suggest. The Chairman obeserved " I do not know how far it will be possible ".

Mr. B. Venkatachalam Pillai :

Q.—கோர்ட்டுக்குத்தான் போகச் சொல்லுகிறீர்கள்.

A.—மனுவில் அவர்கள் பயப்படுவார்கள்.

Witness அடுத்தபடி, 'மனோராஜி', என்கிற ஏற்பாடானது எவ்வளவு அக்ரமம் என்பதை நான் இந்த பட்டாக்கள் மூலமாக காண்பிக்கிறேன். 3 விதமான பட்டாக்களிலே ஷரத்துகள்போட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த பட்டா ஆனது இந்த 'மனோராஜி' ஏற்பாடு செய்வதற்கு முன்னால் 1313-ம் பசலியிலே இதில் இருக்கின்ற ஷரத்துகளை தயவு செய்து நீங்கள் பொறுமையை இழக்காமல் இருந்தால் நான் வாசிக்கின்றேன்.

Witness 29-ல் அதை மாற்றி வேறுவிதமாக எழுதியிருக்கிறது. "நீங்களும் உங்களுடைய வார்சுகளும்" என்று கண்டிருக்கிறது. இந்தவிதமாக அக்ரிமெண்டு ஏற்பாடு செய்து அதை ஊர்ஜிதம் செய்வதற்கு நாங்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டதாகச் சொல்லுகிறார்கள். அது நியாய விரோதமானது என்பது எங்கள் அபிப்பிராயம். (Witness filed 3 pattas.)

சாட்சியின் தொடர்ச்சி.—கோடை சாகுபடி சம்பந்தமாக (சகிண்டு கிராப்) எங்களிடமிருந்து தீர்வை வசூல் செய்யப்படாது என்பது எங்களுடைய அபிப்பிராயம். இந்த விஷயங்கள் கொண்டுள்ள ஒரு ஜி.ஓ. நெ. 2730-ஆர், 1865-ம் வருஷத்திலே (10–10–1865) ரெவினியு போர்ட்ஸ் ஆர்டர் நெ. 50, 51, ஜி.ஓ. நெ. 540, 1869-ம் வருஷம் மார்ச்சு மாதம் 3 தேதி, 1882-ல் இருக்கின்ற ரெவினியூ போர்ட் ஆர்டர் நெ. 1865-ல் இருக்கின்ற ஜி.ஓ. இந்த ஜி.ஓ.-க்களில் கோடை தீர்வை குடியானவர்களிடம் வசூல் செய்வதற்கு நியாயமில்லை என்று இருக்கிறது. அதற்கு காபி வேண்டுமென்று குடியானவர்கள் கேட்டபோது அது மறுதளிக்கப்பட்டு கவர்ன்மெண்டால் கொடுக்கப்படமட்டாது என்று ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் எக்சிபிட்டாக பைல் பண்ணுகிறேன்.

மரத்தீர்வை என்பது வெகு விநோதமான விஷயம். மரத்தீர்வை என்பது 1908-ம் வருஷத்துக்குப்பின்னால் இருக்கின்ற மரங்களுக்குத் தீர்வையில்லை என்று சட்டபூர்வமாகயிருக்கின்றது. 1908-ம் வருஷத்துக்குப் பின்னால் இருக்கின்ற மரங்களுக்குத் தீர்வையில்லை என்று இருக்கின்றது. 1908-ம் வருஷத்தில் ஏறக்குறைய 30 வருஷங்களுக்கு முன்னால் இருக்கின்ற மரங்களில் அநேக மரங்கள் கெட்டுப்போயும் பட்டுப்போயும் பலந்தராமல் இருக்கின்றபோது அவைகளுக்குந் தீர்வை வசூலிக்கிறார்கள். அவைகளை விலக்கிவிடவேண்டுமென்று குடியானவர்கள் கேட்டால், ஜமீந்தாரிடமிருந்து பதில் இல்லை. எனக்குப் பின் சொல்லும் சாட்சி இதன் சம்பந்தமாகச் சொல்வார். இந்த மாதிரி தீர்வைகள் வசூல் செய்யப்பட்டு இருக்கின்றது. அநேக மரங்கள் இல்லை என்பதை எப்படி பார்க்கமுடியும் என்றால் இந்த கமிட்டி மெம்பர்கள் யாராவது ஒருவர், அதற்கு ஏற்பாடு செய்து வந்தால் பார்க்கலாம். வேறு உத்தியோகஸ்தர் எவராவது இந்த பட்டாவில் கண்டுள்ள மரங்கள் உயிருடன் பலன் தந்துகொண்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்தால் அது நிதர்சனமாகத் தெரியும். இரண்டு பட்டாக்களை மரத்தீர்வை அக்ரமமாக வசூல் செய்யப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதற்காக பைல் பண்ணுகிறேன்.

கிராஸ் டாக்ஸ்—புல்வரி.—புல்வரி என்பது குடியானவர்கள் குளங்களில் இருக்கின்ற உள்வாய் தரை, டான்க் பண்ட் இவைகளிலிருக்கின்ற புல்களை எடுத்துக்கொள்ள குடியானவனுக்கு ஏகபோக உரிமையிருக்கிறது. இந்த உரிமைகளை மறுத்து தற்சமயம் சன்னம், சன்னமாக ஜமீந்தார் உரிமைகொண்டாடுகின்றார். எளிய குடியானவர்கள் இருக்கின்ற நிலங்களில் நிர்ப்பந்தப்படுத்தி புல்வரி என்றும், எஜுகேஷன் செஸ் என்றும் இந்த மாதிரி செஸ்ஸுகளை வசூல் செய்துகொண்டு வருகிறார். அதற்கு ஆதாரமாக இந்த பட்டாவைப் பார்த்தால் தெரியவரும். ஜமீந்தாருக்கு உரிமையில்லை நெல்சன்ஸ் மானுயல் 37, 38-ம் பக்கங்களில் சொல்லியிருக்கிறது.

WITNESS: நீர்ப்பாசன சம்பந்தமாக ஜமீந்தாரியில் எல்லா 'கண்மாயி' களும், எவ்வளவு கேவலமான க்ஷீண திசையில் இருக்கவேண்டுமோ, அந்த திசையில் இருக்கின்றது. அவைகளைப் பற்றி எனக்குப் பின்னால் சொல்லக்கூடிய சாம்பசிவ அய்யர், விரிவாகவும், ஆதாரத்துடனும் எடுத்துச் சொல்வார்.

அடுத்த விஷயம் காட்டு (பாரெஸ்ட்) கஷ்டம். எங்களுக்கு இருக்கின்ற பாரெஸ்ட் உரிமைகள் என்னவென்றால், குடியானவன் நிலங்களுக்குப்போடும் "கொழை", கிரீன் மானியூர் தாராளமாக ஒருவிதத் தீர்வை இன்றி எடுத்துக்கொள்ளும் உரிமையுண்டு. வீடு மேய்வதற்கு கோரைப்புல், கம்பு, கோல், வரிச்சு, கல்மண் ஜமீன் பாரெஸ்டு புரம்போக்கில் எடுத்துக்கொள்ள எங்களுக்கு உரிமையுண்டு. இந்த உரிமைகளுக்காக தற்சமயம், சன்னம் சன்னமாக கிராமத்தில் அபிப்பிராய பேதம் உண்டாக்கி குடியானவர்களிடத்திலும், தங்களுடைய வேலைக்காரர்கள் சம்பளத்துக்கு ஏற்பாடு செய்து, அவர்கள்மூலம் ஒருவித கட்சி உண்டுபண்ணி, ஏழைக்குடியானவர்களை இம்சை செய்கிறார்கள். இம்மாதிரி வரி வசூல் செய்யப்படுவதை அநேக சாட்சிகள் மூலம் சொல்லமுடியும். இங்கு எனக்கு அநேக நஞ்சை நிலங்கள் உண்டு. என்னைப்போல உள்ளவர்களிடம் இந்த வரி வசூல் செய்வதில்லை. அக்ரமமாக, இளைத்தவனுக்குப் போட்டுச் சன்னம் சன்னமாகத் தாங்கள் அதை ஆர்ஜிதம் செய்யப் பிரயத்னம் செய்கிறார்கள்.

MR. A. RANGASWAMI AYYANGAR:

Q.—புல்வரி எவ்வளவு? *A*.—விறகு, கம்பு கட்டுக்கு 2 அணா. கிரீன் மானியூர்ஸ் அரையணா.

WITNESS: இன்னொரு விஷயம். எங்கள் ஜமீந்தாரியில் நிலம் இல்லாத ஏழைக்குடியானவன் சுமார் 140 வருஷங்களுக்கு முன் இருந்து, ஒரு மண்வெட்டி, அரிவாளோ அதைக் கொண்டு நிலம் இல்லாத குடியானவன் மலையடிவாரங்களிலுள்ள கரடு ஷிரப் ஜங்கில் சிறு குற்றுச்செடிகள் இவைகளை வெட்டி ஒரு வருஷம் சாகுபடிசெய்து பின்னால் அதன் வளம் குறைந்தவுடன் அடுத்த இடத்துக்குப்போய் சாகுபடி செய்கிறது வழக்கம். ஒரு மண்வெட்டிக்கு 3 அணா 4 பை வசூல் செய்கிறார்கள். இது அநியாயம். ஆட்டிஸ் ரிபோர்ட்டிலும் நெல்சென்ஸ் மானியூலில் 39, 44 பக்கங்கள், சாப்டர் 11 இலும் காணப்படுகிறது. அர்ட்டிஸ் என்பவர், மதுரை நிலத்தீர்வையை நிர்ணயம் செய்தவர். சென்ற வருஷத்திலே ஜமீன்தார் இதை ஸ்தாபிப்பதற்காகவே 10 குடியானவர்கள்மேல் கேஸ் ஒன்று உண்டாக்கி, தங்களுக்கு அதில் ஏகபோக உரிமையிருக்கிறதாகவும், குடியானவர்கள் பாரெஸ்ட் அழித்துக் கெடுத்துவிட பிரயத்னம் செய்தார்கள் என்று அந்த 10 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரிக்கார்ட்மூலம் எழுதியிருக்கிறது. (The witness filed the records) வில்லேஜ் முனுசீப், கர்ணம் இந்த மாதிரி வழக்கம் இருந்தது என்பதை அவர்கள் ஸ்டேட்மெண்டில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வழக்கத்துக்கு அன்னியமாகவுள்ள விஷயங்களைச்செய்துக் குடியானவனை இம்சைசெய்து, கோர்ட்டுகள் மூலம் அவனை அலக்கழிப்புபண்ண பிரயத்னம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

டிஸ்டெரயின்ட்.—எனக்கு நேரில் தெரிந்தது ஒன்றுதான். ஜமீந்தார் கிஸ்தி வசூல் செய்வதற்கு நியாயமான முறைகளைக் கையாளுவதை விட்டு விட்டு துப்பாக்கி தாங்கிய ஒரு சேவகனை அவனைக்கூட்டிக்கொண்டு போய், அவன் மூலம் குடியானவனைப் பயமுறுத்தி வசூல் செய்கின்றார். இந்த வசூல் செய்கின்ற முறையை என் கண்கூடாகப் பார்த்து இருக்கின்றேன். இதைவிட மோசமான முறைகளைச்செய்து இருக்கிறார்கள் என்பதை பின்னால் வருகிற சாட்சிகள் நேரில் பார்த்ததை சொல்லுவார்கள். இவைகள் எங்கள் முக்கியமான குறைகள் நாங்கள் கேட்டு இருக்கின்ற வேண்டுகோள்.

மேய்ச்சல் தரிசு.—ஆடு மாடுகள் மேய்வதற்கு தரிசு. இப்போது தீர்வை அதிகமாகயிருக்கிறது. 4 பணம், 5 பணம். அதை 1 பணம் (3 அணா 4 பை) ஆகப் போட்டால், மேய்ச்சல் தரிசாகப் போடலாம். இடயகோட்டை ஜமீந்தார் மேய்ச்சலுக்கு ஒதுக்கிவைத்த தரிசுக்கு ஒரு பணம் தீர்வை போடுகிறார்: தரிசுபோட்டு சாகுபடி செய்தால் 2 பணம், 3 பணம் வசூல் செய்கிறார்கள். அம்மாதிரி செய்தால் எங்கள் மேய்ச்சல் நிலங்களுக்கு 4 பணம் தருவதைவிட ஒரு பணம் கொடுக்க வசதியாய் இருக்கும். நாங்கள் கேட்பது நியாயம். ஜமீந்தார் செய்வது அநியாயம். இதற்கு ரிகார்டு கொண்டுவரவில்லை.

கிஸ்தி எப்படி நாங்கள் நிர்ணயம் செய்யவேண்டுமென்று பிரியப்படுகிறோம் என்றால் அடுத்த பக்கத்திலுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களுக்கு எம்மாதிரி ஆக, **ryotwari lands** இல் எம்மாதிரி வசூல் செய்கிறார்களோ, அம்மாதிரி ஏறக்குறைய செய்தால் போதும். இப்படி தீர்வை வசூல் செய்தால் நன்றாய் இருக்கும். (Witness files pattas.) இவைகள் **ryotwari lands** இல் இருக்கின்ற பட்டாக்

கள். இந்தப்பட்டாக்களில் இருக்கின்ற ஒரு குழி 60 செண்ட். எங்கள் ஜமீந்தாரியில் 60 செண்ட்டுக்கு ¾ ரூபாய், 14 அணா, 1¼ ரூபாய்தான் போடவேண்டும். ஆனால் புஞ்சை நிலங்களுக்கு அதிக வரி 4 பணத்திலிருந்து ¾ ரூபாயிலிருந்து 11 ரூபாய் வரை புஞ்சை நிலங்களுக்குக் கொடுக்கிறோம். நாங்கள் கேட்கிறது 1 ரூபாய் 7 அணா 9 தம்பிடிக்குமேல் புஞ்சை நிலத்துக்குப் போடக்கூடாது. நிலத்துத்தன்மைக்குத்தக்கபடி தகுந்த தீர்வைகள் விதிக்கவேண்டும். அப்படி விதித்தால் அனுகூலமாகயிருக்கும். கமிட்டியார்களுக்கு விருப்பம் எப்படியிருக்கிறதோ அப்படி செய்யலாம். நஞ்சை நிலத்துக்கு 3 ரூபாய் 6 அணா 4 தம்பிடிக்குமேல் அதிகமில்லாமல் தீர்வை விதிக்கவேண்டும்.

எங்கள் பக்கத்திலுள்ள ஜமீந்தாரி கண்மாய்கள் மானம் பார்த்த கண்மாய்கள். ஒருவிதமான பெரிய நீர்ப்பாசன வசதியுள்ள ‘ கண்மாய் ’ என்று சொல்லமுடியாது.

ஒன்று இரண்டு இடங்களைத்தவிற மற்ற இடங்கள் எல்லாம் நல்ல நீர்பாசன முறையில் இருக்கிறது என்று சொல்லமுடியாது. மேட்டுப்பாங்கு கண்மாய்களுக்குத் தீர்வை, **ryotwari lands** இல் இருக்கிறபடி, அதிகமாகச் செய்வது பொருத்தமாக இருக்காது. சரியான வழியில் இருக்காது என்பது எனது அபிப்பிராயம்.

பீஹாரில் கொஞ்ச நாளைக்குமுன் செய்த லெஜிஸ்லேஷன்படி செய்யவேண்டும்.

(The witness filed a cutting from the Hindu paper.)

The CHAIRMAN :

Q.—பீஹார் லெஜிஸ்லேஷனில் என்ன இருக்கிறது ? **Gist** சொல்லுங்கள்.

The witness said that specific suggestions were made for the disposal of rent suits, realization of rent decrees. There should be separate munsiffs for trying rent suits in every subdivision.

இன்னமொரு வேடிக்கையான நிலைமையிருக்கின்றது. மலைகிராமங்கள் எங்கள் ஜமீந்தாரியில் 4 இருக்கின்றன. இந்த மலைகிராமங்களிலே ஒருவன் சாகுபடி செய்வதற்கு, எதாவது ஒரு நிலத்தில் மலைவாழை சாகுபடி செய்தால் 5 முதல் i0 வருஷம் வரை நல்ல நிலைமையில் இருக்கும். பின்னால் அந்தக்குடியானவன் வேலைசெய்வதற்கு முடியாமல், வாழையை வெட்டாமல் விட்டு விட்டால், மலையேறிப்போய்விடும். அதற்கு என்ன வசூல் செய்கிறார்கள் என்றால் 60 செண்டுக்கு 8 பணம் தீர்வை. தரிசா இருக்கிறபோது சாகுபடிசெய்து நல்ல நிலைமையில் கொண்டுவந்தாலும் 60 செண்டுக்கு 8 பணம் தீர்வை. இந்த நிலங்கள் புனம்மாறினபோது 8 பணம் தீர்வை வசூல்செய்வது அநியாயம். அதனால், உத்தியோகஸ்தர்கள் நிலத்தின் சொந்தக்காரன், செடி ஏறிப்போகின்றது என்று மனு கொடுத்தவுடன் பரிசீலனைசெய்து சாகுபடி இல்லை என்பதைத் தெரிந்து அந்தத் தீர்வையைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வளவும் குடியானவர் சார்பாக எனக்குச் சொந்தமாகத் தெரிந்த சாட்சியம் என்று தெரிவித்துக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம்கொடுத்து பொறுமையாகக் கேட்டதற்கு **Chairman** அவர்களுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்திக் கொள்ளப்பிரியப்படுகின்றேன்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—ரெண்ட் ரோல் கொஞ்சமாகவும், இப்போது ஜாஸ்தியாகவும் இருக்கிறது. அந்த காலத்தில் இருந்த கல்டிவேஷன் எக்ஸ்டென்டில் இப்போது இருக்கிற **extent of cultivation** தெரியக்கூடியதாயிருக்கிறதா ? இப்போது இருக்கிற விவசாயம் அதிகமாக இன்கிரீஸ்ட் பிரோபோர்ஷன் எவ்வளவு **increased rent** ஆகச் சொல்லலாம் ? எவ்வளவு **proportion** ஆகச் சொல்லலாம் ? ஒரு **fasli** சொல்லுங்கள் ?

A.—சொல்லமுடியவில்லை. தெரிந்தமட்டில் **1212 fasli** யில் 54 ஆயிரம் கொடுக்கிறதற்கு பின்னால், அதிக நிலங்கள் குடியானவர்களால் சாகுபடி செய்யப்பட்டுவந்து இருக்கிறதை மறுக்க முடியாது.

Q.—நஞ்சை புஞ்சை கிராப் டோட்டல் ஜமீந்தாரிடம் ரிகார்ட் இருக்கிறதா ? *A.*—இருக்கும்.

Q.—இரிகேஷன் ஒர்க்ஸ் இப்போது இருக்கிற ஆக்ட் பொறுத்தமட்டில் குடிகள் **deposit** பண்ணமுடியாது என்று சொல்லியிருக்கிறது. இரிகேஷன் ஒர்க்ஸ் பொறுத்தமட்டில் கவர்ன்மெண்டு எடுத்துக்கொண்டு, அதை **maintain** பண்ணி, அந்த **cost**-டை ஜமீன்தாரிடமிருந்து வசூல் பண்ணலாம். குடிகளுக்கு அதனால் நன்மையிருக்கும் என்று சொல்லுகிறீர்களா ? *A.*—ரொம்ப நன்றாய் இருக்கும். அதுதான் வேண்டுமென்று சொல்லுகிறோம்.

Q.—**Armed sepoy** யைக் கொண்டுபோய் பயமுறுத்தி வரிகளை வசூலிக்கிறார்கள் என்று சொன்னீர்கள் கவான்மெண்டு மூலம் **collection** பண்ணி குடியானவர்கள் இடத்தில் ஜாஸ்தியாக **arrears** விழாமல் **Government control** இல் **collection** பண்ணினால் நன்றாய் இருக்குமா ? *A.*—குடியானவன் வரி செலுத்துகிற தற்குப் பயந்தவன் அல்ல. ஜமீந்தார் செய்கிற அக்ரமத்தினால், அவர்கள் செய்கிற வேலைக்குறைவினால், இந்த வரி சரியாய்க்கொடுக்க முடியவில்லை.

Q.— கவர்ன்மெண்டு சார்பாக வரி வசூல் பண்ணுகிறதாய் இருந்தால், வரி ஒழுங்காய் வசூல் ஆகுமா ? *A.*—இதைச் சட்டபூர்வமாகச் செய்யமுடியுமே. **Village munsiff** தான் செய்யவேண்டும்.

Q.—கிராமமுனிசீப் யார் அதிகாரத்துக்கு உட்பட்டு வசூல் செய்யவேண்டுமென்று நினைக்கிறீர்கள் ? A.—வரி வசூல் ஜமீந்தார்கிட்டதான் இருக்கவேண்டும். கவர்ன்மெண்டு எடுத்துக்கொண்டால் யாராவது வசூல் செய்யலாம்.

Q.—நடந்துவருகிற முறையில், ஜமீந்தார் மூலமாக, எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின்படி கஷ்டமிருக்கிறதா ? *A.*—ஆள்கள் போய் தொந்தரவு பண்ணுகிறது, இந்த முறைகள் கூடாது என்று சொல்லுகிறேன்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—சர்வே ஆய் இருக்கிறதா ? *A.*—**Yes ; a part.**

Q.—ரேட்ஸ் எப்படி இருக்கிறது ? பயிர் வாரியா ? *A.*—நஞ்சை, தோட்டம், புஞ்சை 3 விதம்.

Q.—எந்தப்பயிர் செய்தாலும் ஒரே தீர்வையா ? *A.*—கரும்பு, வாழை இந்த சாகுபடிகளுக்கு தீர்வைகூட போடுகிறார்கள்.

Q.—புஞ்சை ஒரே தீர்வை? *A.*—**Yes,** ஆனால், புகையிலைக்கு அதிகம் போடுகிறார்கள்.

Q.—புஞ்சை நஞ்சையாகப்பண்ணியிருக்கிறார்கள். பட்டாவில் தீர்வையுண்டா? *A.*—தீர்வையுண்டு.

Q.—**Collection of kistinstalment system** த்தில் வசூல்பண்ணுகிறார்களா? எப்படி? *A.*—**Adjust** செய்கிறார்கள். **Fasli** ஒரே கணக்கு ஒரே தடவையில் வசூல் செய்கிறார்கள். உழவு மாடுகளை ஜப்தி செய்கிறார்கள். என்னிடத்தில் செய்கிறதில்லை. ஏழை குடியானவனிடத்தில் செய்கிறார்கள்.

Q.—செலவு யார் இடம் வசூல் செய்கிறார்கள்? *A.*—குடியானவனிடத்தில் வசூல் செய்கிறார்கள். அது ரொம்ப கஷ்டமாய் இருக்கிறது.

Mr. MAHABOOB ALI BAIG : *Q.*—There is already provision in the Act to alleviate those grievances mentioned by you. You have said high rents are being realised even after 1908, by some means or other by a process called "Compromise". According to the Act, a man is not bound to pay higher rent than the rate prevailing in 1908. No legislature can help such a fraud. *A.*—I have proved by records.

Section—110. தீர்வையைக் கொடுத்து செலுத்திவிடுகிறோம். ஜப்தி பண்ணவேண்டாம். தீர்வை, தாவா செய்துகொள்ளப்போடுகிறோம் என்று சொன்னாலும், தாவா செய்துகொள்ள போட்டதாக எழுதி ரசீது கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். **'Paid under protest'** என்று எழுதி ரசீது கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். இந்த செக்ஷனில் மாறுதல் செய்யவேண்டும்.

Section 112.—Notice of intention to sell holding.

டிபால்டருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. என்ஜாயிரையும் சேர்த்து கொடுக்க வேண்டும்.

The CHAIRMAN.

Q.—**You want an amendment to every section.**

A.—**I have dismissed.**

என்ஜாய்மெண்ட் ரெஜிஸ்டர் எஸ்டேட்டுகள் **up to date**-ஆய் கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையானால் டிபால்டர் பட்டாதார்கள் குற்றத்துக்காக என்ஜாயருக்கு விஷயம் தெரியாமலே நிலம் ஏலத்தில் போய்விடுகிறது. என்ஜாயருக்கு ஒரு நோட்டீஸ் கொடுக்கும்படி செய்ய வேண்டும்.

Section 117.—பப்ளிக்கேஷன் ஆப் சேல் ஆர்டர் அண்டு பிராக்களமேஷன் முதலான விஷயங்களில் செலவுகள் இருக்கிறது. ரயட்டுக்கும் என்ஜாயருக்கும் பிராக்களமேஷன் முதலிய விஷயங்களைப் பற்றி ரெஜிஸ்டர் தபால் மூலம் அறிவித்தால் போதும்.

Section 126.—ஜப்தி பண்ணுகிற விஷயத்தில் 10 ரூபாய் பாக்கிக்காகவேண்டி ஜாஸ்தி பொறுமான நிலங்களை, 5 பட்டாவில் சேர்ந்த நிலங்களை ஜப்தி பண்ணுகிறார்கள். தாசில்தார் மூலமாக ஆவது கேட்டு அப்செட் பிரைஸ் ஏற்படுத்தவேண்டும்.

கோர்ட் விஷயங்கள்.

கோர்ட் விஷயங்களில் டிஸ்டிரிக்ட் காங்கரஸ் கமிட்டி மெமோராண்டம் செட்டில்மெண்ட் ஆப் ரெண்ட் விஷயத்தில், ரெண்ட் விஷயமாக அப்பில்கள் ரெவினியூ கோர்ட்டுக்கும் ரெவினியூ போர்டுக்கும் அப்பீல் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கக்கூடாது. ரெவினியூ கோர்ட் சமாசாரம் எப்படி இருக்கிறது என்றால், சம்மரி சூட்டை ஒரு காரியமாகவே நினைக்கிறதில்லை. எந்த மாஜிஸ்ட்ரேட்டும் கவனிக்கிறது இல்லை. 5 மணி வரையிலும் கிரிமினல் கேஸ்களை விசாரித்து, அப்புறம் வாய்தா போடுகிறது. சம்மரி சூட்டில் ஆளைத் தாறுமாறு செய்கிறார்கள். அதனால் சப்-கோர்ட் இருக்கவேண்டும். சிவில் கோர்ட் கொடுத்தாலும், சிவில் கோர்ட்டில் வேறு கேஸ்கள் இருக்கின்றன. எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டின்படி சப்-கோர்ட் டிஸ்ட்ரிக்ட் எட் கோர்டர்ஸில் இருக்கவேண்டும்.

The CHAIRMAN:

Q.—டிஸ்டிரிக்ட் எட்கோர்டர்ஸில் இருந்தாலும், கிராமங்களிலிருந்து மதுரைக்கு வருகிறதற்கு கஷ்டம் இல்லையா?

A.—**Sub-court may be in a central place.** ஜில்லாவுக்கு ஒன்று போதும் என்று சொல்லுகிறேன்.

ஜமாபந்தி.

ஜமாபந்தி கடைசியாக நடத்தக்கூடாது. ஒரு மாதத்துக்கு முந்தி நடத்தவேண்டும். ஜமாபந்தியில் **Facsimile signature** குத்துகிறார்கள். ஒரு **enquiry** பண்ணுகிறது கிடையாது.

Endowment Estates.

என்டேமெண்ட் எதற்காக ஏற்பட்டதோ அதற்கு உண்டான தொகையில் பாக்கி போக சர்ப்ளஸில் ரயட்ஸுக்கு சௌகரியம் செய்துகொடுக்கவேண்டும். 1871-ல் 7 ஆயிரம் ரூபாய் சர்ப்ளஸ் இருக்கிறது என்று பக்கள் துரை ரிபோர்ட் பண்ணியிருக்கிறார்.

" There is no justification whatever for such rack-renting especially when the institution is under the Government management " என்று **Mr. R. Kanckle** ரெவினியு போர்டுக்கு ரிபோர்ட் பண்ணியிருக்கிறார்.

(Witness filed the copy of the letter of recommendation to the Board of Revenue).

The CHAIRMAN :

Q.—சர்ப்ளஸ் என்ன ஆச்சு.

A.—பில்டிங்ஸ் கட்டுகிறதிலும், லிடிகேஷனிலும்போகிறது.

Q.—உங்களுடைய ப்ரபோஸல் என்ன ?

A.—ரயட்ஸுக்கு சௌகரியம் பண்ணிக்கொடுக்கவேண்டும். **Irrigation facilities** செய்து கொடுக்க வேண்டும். இப்போது இருக்கிற ரெண்டைக் குறைத்து சௌகரியம் பண்ணவேண்டும்.

பசலி ஜாஸ்தி வசூல் பண்ணக்கூடாது. 1334-ம் பசலி வரைக்கும் வாட்டர் ரேட் கல்டிவேஷனுக்க்கு ரெஸ்ட்ரிக்ஷன் கிடையாது. ரெஸ்ட்ரிக்ஷன் இல்லாமல் இருந்ததினால் வேஸ்ட் லாண்ட்ஸ் கல்டிவேஷனுக்கு வந்தது. என்ன தீர்வை போடுவார்கள் என்றால், அக்கம் பக்கம் தீர்வை போடுவார்கள். 1334-ம் பசலிக்கு அப்புறம், அதற்கு பெர்மிஷன் வாங்கி பயிரிடவேண்டும். பெர்மிஷன் இல்லையானால் தண்டம் போடலாம் என்று சொன்னார்கள். அதற்கு முன்னால் தண்டத் தீர்வையில்லை. இப்போது தண்டத் தீர்வை வாங்கப்படுகிறது என்று ரிகார்டு ஆப் ரைட்ஸில் சொல்லியிருக்கிறது.

(Witness filed the extract from the records of rights).

Rent collection—*தீர்வை*

ரெண்ட் கலெக்ஷன் தீர்வை அயனில், இந்த விஷயம் எப்படி கவனித்து தீர்வையை தீர்மானிக்கிறார்களோ, அதே தீர்வை தீர்மானிக்கிற விஷயத்தில், 4 கிஸ்தியில் அந்த அந்த பசலியில் வசூலிக்கிறதில், எங்களுக்கு ஆக்ஷேபம் இராது. அயனில், எந்த விதமாகத் தீர்வை வசூல் பண்ணுகிறார்களோ, அதே மாதிரி வசூல் பண்ணவேண்டும் என்பது என் அபிப்பிராயம். சொற்பம் சொற்பமாகத் தீர்வை வாங்கவேண்டும். அப்படியில்லாமல் இருக்கிறதினால், பாக்கி விழுந்து அக்யூமலேட் ஆகிறதினால், நிலத்தை இழக்கிறார்கள் குடிகள். தீர்வை ரெண்டை குறைத்து 4 கிஸ்தியாக வசூல் பண்ணுகிற விஷயம் சௌகரியமாயிருக்கும். அப்படி செய்யவேண்டும்.

இந்த திருக்குறுங்குடி சத்ரம் சத்திரத்திலே கொஞ்சம் மைனர் இனாம்ஸ் இருக்கு. 1337-ம் பசலி வரைக்கும் எஸ்ட்டேட்ஸ் லாண்டு ஆக்ட் படிக்கு பட்டா கொடுத்துக்கொண்டு வந்தார்கள். எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டுபடிக்கு வசூல் செய்ய என்ன நடவடிக்கையுண்டோ அது நடத்தி வரப்பட்டது. எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டுபடிக்கு பட்டா கொடுக்காமல் டெனண்ட்ஸுக்கு ' புறக்குடி ' போல் பட்டா கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். மைனர் இனாம்ஸ் என்று கண்டதினால் எங்களுக்கு எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டுபடிக்கு பட்டா கொடுக்கிறதற்கு சட்ட மில்லை என்று சொல்லுகிறார்கள். எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டுபடி மைனர் இனாம்ஸுக்கு பட்டா கொடுத்து அவைகளை எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டில் " எஸ்டேட் " **definition** கீழ் கொண்டு வரவேண்டும்.

Witness files நம்பித் தலைவன் பட்டயம் 1 போக நிலத்துக்கு 7 ரூபா ஏக்கருக்கு. டபுள் க்ராப் $12\frac{1}{2}$ ரூபாய்.

Natham sites

நத்தம் ஸைட்ஸில் மரங்கள் இருக்கு. அவைகளுக்குத் தீர்வை வாங்கி வரப்படுகிறது. பாக்யார்ட்ஸில் உள்ள புரூட் பியரிங் ட்ரீஸ்களுக்குத் தீர்வை ஏற்பட்டிருக்கிறது. அதே தீர்வையை இன்னும் வாங்கி வருகிறார்கள். ஒரு டெனண்ட் தாவா பண்ணினார். அவருக்கு அனுகூலம் ஆச்சு. அவரிடம் வாங்கவில்லை. அடுத்த டெனண்ட் தாவா பண்ணி அனுகூலம் ஆச்சு. ஒவ்வொரு குடிகளும் தன் காரியத்துக்காக கோர்ட்டுக்குப் போய் ரெக்டிபை பண்ணிக்கொள்ளவேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறார்கள். எஸ்டேட் நத்தம் சைட்ஸில் ஹவுஸுக்குக்கூட டாக்ஸ் வாங்குகிறார்கள். நத்தம் ஸைட்ஸ் வாங்குகிற தீர்வை அக்ரமம் ஆனதால் ஹவுஸ் டாக்ஸ், ட்ரீ டாக்ஸ் வாங்கக் கூடாது.

Under tenants.

எங்கள் எஸ்டேட்டில் அண்டர்-டெனண்ட்ஸ் இல்லை. அதை மெமோராண்டத்தில் இருந்து ஒமிட் பண்ணவேண்டும். மிஸ்ரிபிரஸெண்ட் பண்ணி எழுதிவிட்டார்கள். அண்டர் டெனண்ட்ஸ் கிடையாது. ஒமிட் பண்ணும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Witness No. 221. **Madura.** **23rd February 1938.**

Oral evidence of Mr. Mahlingam Chettiyar, son of Basuvam Chettiyar of Ayakudi Zamin. He presented a memorandum and said:

நாங்கள் சொல்லவேண்டிய விவரம் எல்லாம் இதில் இருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—இதற்குமேல் ஏதாவது சொல்லப்போகிறீர்களா ?

CHAIRMAN :

ஸ்பெஷலாக இருந்தால் சொல்லுங்கள்.

A.—ஜமீனில் நஞ்சைமேல் புஞ்சை என்று இருக்கிறது. இதற்கு $18\frac{3}{4}$ பணம் போட்டிருக்கிறார்கள். ஒரு வருஷம் கழித்து கொடுப்பதாக சொல்லுகிறார்கள். ஹைகோர்ட்டில்கூட தீர்மானம் ஆகியிருக்கிறது. அந்த மாதிரி கழித்துக்கொடுப்பதில்லை. **(He field Judgement)** புஞ்சை தீர்வை தான் போடவேண்டும். நஞ்சை தீர்வை போடக்கூடாதென்று தீர்மானமாகியிருக்கிறது. ஆனால் நஞ்சை தீர்வை வசூல் செய்கிறார்கள். பட்டா டிரான்ஸ்பர் சரியாகச் செய்வதில்லை. யார் பெயருக்

காவது பட்டாயிருக்கிறது. சீக்கிரத்தில் வரும் பணத்தை வாங்கிக்கொள்ளுகிறது. ரொம்ப நஷ்டம் குடிகளுக்கு ஏற்படுகிறது. கவர்ன்மெண்ட் மூலமாக ஜமாபந்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்வே எங்களுக்கு ஆகவேண்டியிருக்கிறது. அந்த செலவை ஜமீன்தார்தான் கொடுக்கவேண்டும்.

Q.—சர்வே ஆகியிருக்கிறதா ? செலவை யார் ஒப்புக்கொள்ளவேண்டும் ?

A.—இல்லை. லாபம் அவர்கள் எடுத்துக்கொள்ளுவதால் செலவையும் அவர்கள்தான் ஒப்புக்கொள்ளவேண்டும். இப்பொழுது இருக்கும் கிஸ்தியை நாங்கள் ஆக்ஷேபம் செய்யவில்லை. இந்த ஒரு தீர்வைதான் எங்களுக்கு கஷ்டமாகயிருக்கிறது. அயன் மாதிரி விளையாத காலங்களில் தீர்வை வஜா செய்துகொடுக்கவேண்டும். கிஸ்திகளை ஜாஸ்தியாக ஏற்றினால் ரெவினியு கோர்ட்டில் தாவா செய்வதற்காக சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

Q.—இப்பொழுது சட்டம் அப்படித்தானேயிருக்கிறது.

A.—சம்மன் சரியாக எங்களுக்கு சர்வ் செய்வதில்லை. சிவில் கோர்ட்டு மூலம் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கவேண்டும். நத்தம் புறம்போக்கில் ஜமீன்தார் தன்னுடைய சொந்த உபயோகத்துக்காக கட்டடம் கட்டி கொள்ளுகிறார்கள். பளயாக்குடியில் மாடு நிற்க இடமிருக்கிறது. அதையும் தான் அடைந்து கொள்ள ஏற்பாடு செய்கிறார்கள். எங்களுடைய மாடு ஆடுகள் வெளியில் நிற்கிறது.

CHAIRMAN ;

Q.—நீங்கள் ஆக்ஷேபணை செய்யவில்லையா ?

A.—ஜமீன்தாராக இருப்பதால் குடியானவர்கள் எப்படி கேட்பது ? கேட்டால் கோபித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் எப்படி கேட்பது ? ஜமீன்தார் குளம் வண்டல்களை எடுக்கவிடுவதில்லை. ஒரு அணா, இரண்டணா கேட்கிறார்கள். நிலத்துக்கு எரு போடத்தான் கேட்கிறோம். அதை தாராளமாக எடுத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

MR. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அவர்களுக்கு காடு இருக்கிறதா ?

A.—காடுகளில் ஆறு வருகிறது. இரண்டு பக்கம் உள்ள காடுகள் சுமார் 1,000 குழியிருக்கிறது. மாடு போய் மேயமுடியாது. மழை குறைவாக யிருக்கிறது. ஏராளமாக வெட்டுகாடு வெட்டியிருக்கிறார்கள். இதற்கு முந்தி அந்த வெட்டுகாடு கிடையாது. இரண்டு, மூன்று வருஷமாகத்தான் அப்படி வெட்டியிருக்கிறார்கள். ஆடு மாடு மேய்க்க கட்டணம் இல்லாமல் மேய்த்துக்கொண்டு வந்திருக்கிறோம். இனிமேலும் தடையில்லாமல் பார்த்துகொள்ளவேணும்.

Q.—இப்பொழுது தடையில்லையே ?

A.—இல்லை. இனிமேல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேணும்.

Q.—அப்படி ஒன்றும் நடக்காது.

A.—கலப்பை செய்வதற்கு மரம் வெட்டிவந்திருக்கிறோம். அப்படியே சுதந்திரம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

Q.—வரும் என்று பயந்து ஒன்றும் சொல்லவேண்டாம்.

A.—தடி, ஏர் செய்ய வெட்டிஎடுத்துகொள்ள லைஸென்ஸ் கேட்கிறார்கள். வேண்டியவர்களுக்கு கொடுக்கிறார்கள். பாக்கி பெயர்களுக்கு கொடுப்பதில்லை. இடைஞ்சல் இப்படி யிருக்கிறது. வடவா நதிக்கு இருபத்தொரு மடைகள் இருக்கின்றன. கடைசி மடை மூன்றாவது மைலில் இருக்கிறது. அதில் பதிமூன்று பகல் பாசனம் எட்டு ராத்திரி பாசனம். செத்தை, மண் வைத்து அடைக்கிறார்கள். ராத்திரியில் பிடுங்கிவிடுகிறார்கள். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் ஜமீனில் ஒரு பாதை போகிறது. அதை அடைத்துவிடுகிறார்கள். எங்களைப் போன்ற ஏழை விவசாயிகளுக்கு விடுவதில்லை. ஆகையால் எங்களுக்கு மகசூல் சரியாக விளைவதில்லை. அவர்களுக்கு நான்கு மடை பகல் பாசனத்தில் இருக்கிறது. இரவும் பகலும் அதில் தண்ணீர் போகிறது. காசாவபள்ளி சிஸ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

MR. A. RANGASWAMI AYYANGAR :

Q.—அது யாருடைய நிலம் ?

A.—ஜமீன்தாருடைய பண்ணை நிலம். கிரயத்துக்கு கொடுத்தாலும் அந்த முறையை உபயோகப்படுத்தி கொள்ளுகிறார்கள். கிஸ்தி பாக்கி டிசம்பரிலிருந்து ஆரம்பமாகும். அதை மார்ச்சிலிருந்து வாங்கினால்தான் சவுகரியமாக இருக்கும். மத்தியில் கொடுக்கமுடியவில்லை. ஆகையால் மார்ச்சிலிருந்து ஏற்பாடாகவேண்டும். ஐந்து வருஷமாக குளத்துக்கு மராமத்து இல்லை. 1932-ல் குளம் உடைந்துபோய்விட்டது. அது விஷயமாக கனம் மந்திரிக்கும் ஒரு பிட்டிஷன் கொடுத்திருக்கிறது. முந்தி மராமத்து செய்யவில்லையென்று கேஸ் போட்டு ரூ. 2,250-க்கு தீர்மானமாகி யிருக்கிறது. அதுமாதிரி செய்யவில்லை. அணைக்கட்டால் ஒவ்வொரு வருஷமும் சாவி யேற்பட்டுவிட்டது. ஆகையால் மராமத்து விஷயமாக எங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். 1932-ம் வருஷத்துக்குப் பிறகு மராமத்து பண்ணவில்லையென்று கேஸ் போட்டு ரூ. 2,250-க்கு தீர்மானமாகியிருக்கிறது. அதை நடத்தியவர் ஜமீன் மந்திரியாக இருந்தார். ஆகையால் இதை கவனிக்கவில்லை. மறுபடியும் இந்த பார்ப்பாங்குளத்தில் நீர்மட்டம் கட்டியிருக்கிறார்கள். தண்ணீர் குறைந்தால் பலகைபோட்டு நிறுத்தினால் கொஞ்சம் ஜாஸ்தி வரும். ஜமீன்தாரைக் கேட்டதற்கு காங்கிரஸ்காரரைப்போய் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

Q.—அதனால் அவர்களுக்கு நஷ்டமுண்டா ?

A.—கீழே ரயில்வே ஸ்டேஷன் தண்ணீர் மூலம் கெட்டுப்போகும். ஆகையால் அதை சரியாக பெறுக்கவிடுவதில்லை. நீர்மட்டம் பலகை போட்டால் ரெயில்வேக்கு நஷ்டம் ஏற்படும். மேடான குளம் ஆகையால் அப்படி போடுவதில்லை. எங்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை. காங்கிரஸ்காரர்களைப் போய்க் கேட்டுக்கொள் என்று சொல்லுகிறார்கள். மராமத்து விஷயம் இருபது வருஷமாக யில்லை. எங்கள் ஊர் எம்.எல்.ஏ.-யை விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவரும் ஒரு குடியானவர். அவர்களை விசாரிக்கவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

அவரை விசாரிக்க உங்கள் சிபார்சு வேண்டாம். அவர்களே பேசுவார்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—தீர்வை எத்தனை வருஷமாக இந்த ரேட் இருக்கிறது ?
A.—என் ஞாபகத்துக்கு முந்தியே அப்படியிருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—உங்கள் ஊரில் நஞ்சை நிலம் எவ்வளவு விற்கிறது ?
A.—குழி ஒன்றுக்கு ரூ. 500. 59 சென்ட் விற்கிறது.

Q.—அணை கட்டியிருக்கிறதே அது கவர்ன்மென்ட், ஜமீன்தார் இரண்டு பெயருக்கும் சொந்தமா ?
A.—இரண்டு பெயருக்கும் சொந்தம்.

Q.—ரிப்பேர் செய்யவேண்டுமானால் கவர்ன்மென்டும் ஜமீன்தாரும் கொடுக்கவேண்டுமல்லவா ?
A.—கவர்ன்மென்டுக்கும் தண்ணீர் போகிறது. ஜமீன்தாருக்கும் தண்ணீர் போகிறது. கிஸ்தி வாங்குகிறவர்கள்தான் செய்யவேண்டும். எங்களுக்கு இதை சொல்லிக்கொடுக்கவேண்டுமா ? (laughter).

Q.—கவர்ன்மென்ட் கொடுக்கவேண்டாமா ?
A.—நாங்கள் ஜமீன்தாரைத்தான் கேட்போம். நாங்கள் குடிகள்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—1936-ம் வருஷத்தில் ஜமீன்தார் ரூ. 1,000 செலவழித்து அணைக்கட்டு ரிப்பேர் செய்திருக்கிறார்களா ?
A.—இரண்டு தரம் வெள்ளம் வந்து அதை தூக்கிக்கொண்டுபோய்விட்டது.

Q.—ஜமீன்தார் ரிப்பேர் செய்யவில்லையா ?
A.—அது எங்களுக்கு தெரியாது.

Q.—நீங்கள் ஒரு மகஸர் போட்டிருக்கிறீர்கள். அதில் நீங்கள் அப்படிச் சொல்லியிருக்கிறீர்களே?
A.—போட்டோம். மணல் மூட்டை போட்டிருந்தார்கள். அது போயிருக்கும்.
Q.—ரூ. 1,000 செலவழித்துப் போட்டும் பிரயோசனமில்லை யென்றுதான் அந்த மனுவில் எழுதியிருக்கிறீர்களே ?
A.—அது டெம்பரெரி மராமத்துதான். பெரமெனன்ட் மராமத்து அல்ல.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—கவர்ன்மென்டும் இதில் சேர்ந்து செலவு செய்யவேண்டாமா ?
A.—எங்களுக்கு ஜமீன்தார்தான் செய்துகொடுக்கவேண்டும். ஜமீன்தாருக்குத்தான் நேரில் வரி செலுத்துகிறோம். அந்த விஷயம் எங்களுக்கு தெரியாது.

Q.—இந்த மனுவில் கவர்ன்மென்டை செய்யச்சொல்லி சிபார்சு செய்யவேண்டுமென்று ஜமீன்தாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா ?
A.—அது இங்கிலிஷில் இருக்கிறது. அதன் விவரம் எங்களுக்கு தெரியாது. நாங்கள் குடியானவர்கள்.

Q.—நீங்கள் சொல்லுவதெல்லாம் மற்றவர்கள் சொல்லுவதுபோல் சொல்லுகிறீர்களா ?
A.—இங்கிலீஷ் தெரியாதவர்கள்தான் இதில் போட்டிருக்கிறார்கள். நாங்கள் தெரிந்த விவரத்தை உங்களுக்கு சொல்லுகிறோம்.

Q.—நீங்கள் கவர்ன்மென்டைத்தானே செய்யும்படி கேட்டிருக்கிறீர்கள் ?
A.—நாங்கள் ஜமீன்தாரைத்தான் கேட்போம். மராமத்து செய்யவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறோம். உள்வாயில் குளத்தில் கண்மாயில் பயிரிடுகிறார்கள். அதை நிறுத்திவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

Witness No. 222. Madura. 23rd February 1938.

Oral evidence by Mr. Karuppanna, Kavandar, son of Muthurama Kavandar of Elumalai Zamin.

எங்கள் ஜமீனில் தோட்டம், நஞ்சை நிலத்துக்கு கிஸ்தி ஜாஸ்தி.

Mr. P. S. KUMARASWAMI RAJA.

Q.—எவ்வளவென்று சொல்லுங்கள் ?
A.—தோட்டத்துக்கு 1 ஏக்கர் 62 சென்டுக்கு ரூ. 6–4–0-லிருந்து ரூ. 15 வரையிலிருக்கிறது. அதற்கு மாப்பு என்று சில இடங்கள் கழிக்கிறார்கள். சவுகரியப்படி ஆளைப் பொருத்திருக்கிறது.

Q.—எதற்காகக் கழிக்கிறது ?
A.—ஜமீனில் கேட்டால்கூட பதில் சொல்லுவதில்லை. நஞ்சைக்கு நாற்பது வருஷத்துக்கு முன்னிட்டு ஏற்பட்ட தீர்வை ஏக்கர் 1·62-க்கு ரூ. 1–8–0, ரூ. 5, ரூ. 7, ரூ. 8 ரேட். நாற்பது வருஷத்துக்குள்ளாக ரூ. 9–5–0, ரூ. 10, ரூ. 15, ரூ. 13–8–0 ரேட். கோட்டை சாகுபடி செய்தாலும் செய்யாவிட்டாலும் ரூ. 8, ரூ. 5, ரூ. 7, ரூ. 1–8–0.

Q.—உயர்த்திப்போட்டது 1908-ம் வருஷத்துக்கு முன்பா, பின்பா ?
A.—பின்னால்தானிருக்கவேண்டும். எனக்கு உறுதியாகத் தெரியாது. தோட்டத்துக்கு ஏற்பட்டதும் புஞ்சைத் தீர்வை ஏற்படுத்தவேண்டும். சொந்த கிணர் வெட்டி தண்ணீர் இறைப்பதால் புஞ்சை ரேட் ஏற்படுத்தவேண்டும். புஞ்சை கண்டேத்தம் என்று மலையோரம் இருக்கும் நிலம். 1861-ம் வருஷத்தில் ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் தகரார் ஏற்பட்டு ராஜீனமா ஏற்பட்டிருக்கிறது. சாகுபடி செய்தாலும் செய்யாவிட்டாலும் அந்தந்த ரயத்துகளுக்கு அந்த நிலம் பாத்தியம். சாகுபடியாகக்கூடிய நிலங்களுக்கு ரூ. 1–4–0 முதல் ரூ. 4 வரையில் தீர்வையிருக்கிறது.

Q.—அது என்ன விஸ்தீர்ணம் ?

A.—ஒன்றரை மைல் விஸ்தீர்ணம் அது இருக்கிறது.

Q.—இதற்கு வித்தியாசம் என்ன ?

A.—பைமாஷ் காலத்தில் புஞ்சை, புஞ்சை கண்டேத்தம் என்று பிரித்திருக்கிறார்கள். அந்த பாத்தியம் எங்களுக்கு இருக்கும்படி செய்யவேண்டும். கிஸ்தி வசூல் இப்பொழுது ஒரு பட்டா கொடுக்காததால் பட்டாதார் செலுத்தியது போக கிரயம். வாங்கின ஒரு மனிதனுக்கு ஏதாவது பாக்கி யிருந்தால் பூரா வசூல் செய்துவிடுகிறார்கள். இரண்டு தவணை வசூல் செய்வதுடன் பாக்கிக்கு ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து வசூல் செய்யவேண்டும். ஜங்கம சொத்து இல்லாவிட்டால் தொகைக்கு ஈடுபடக்கூடிய நிலத்தை மாத்திரம் ஜப்தி செய்யவேண்டும். பட்டயவரி, கன்னுவரி என்று சேர்த்து வசூல் செய்கிறார்கள்.

Q.—உங்களுக்கு எப்படி வசூல் செய்கிறார்கள் ?

A.—ரூ. 0–0–9 ஒரு பட்டாவுக்கு. கண்மாய் நஞ்சை ஒரு கோட்டைக்கு ரூ. 0–8–0. அது அந்தப் பட்டயத்திலிருக்கிறது.

Q.—முக்கால் அணா ஜமீன்தாருக்குப் போகிறதா ? வசூல் செய்கிறவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்களா ?

A.—ஜமீன்தாருக்குத்தான். அதை வசூல் செய்யாமல் இருக்கவேண்டும். இத்துடன் கணக்கில்லாமல் தீர்வை தவிர "கணக்கு நெல்" வாங்குகிறார்கள். குடிகளாக சம்மதித்து 12 படி நெல் கொடுக்கிறார்கள். வருஷா வருஷம் ஸ்வாமி கும்பிடத்தான் அதை கொடுக்கிறார்கள். இது இருபது வருஷமாக நடக்கிறது. ஆனால் ஸ்வாமி கும்பிடுவதில்லை. அதையும் வரையறை ஏற்படுத்தவேண்டும். காடுகளில் தேக்கு, வேங்கை, கடுக்காய், குங்கிலியம், தோத்தி மரத்தை தவிர பாக்கி மரங்களை உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளுவோம். பட்டாதார் ஆறு அணா கொடுத்தும் பட்டாதாரில்லாதவர் வருஷம் நாலு அணா கொடுத்தும் அனுபவித்து வருகிறோம். விவசாயத்துக்கு வேண்டிய கருவிகள் செய்ய, வீடுகட்ட, கம்பு ஆடு மாடு மேய்ச்சலுக்கு, விறகுக்கும் வீட்டு உபயோகத்துக்கும் வாங்கிக்கொள்ளுகிறோம்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—வீட்டு உபயோகத்துக்கா, அல்லது விற்பதற்கா ?

A.—பட்டாதார்கள் விறகு எடுக்க போகமாட்டார்கள். உள்ளூர் தவிர அயல் கிராமத்துக்கு பாஸ் வாங்கவேண்டும். அந்தப்படி செய்யவேண்டியது ஒன்று. அந்த ஐந்து ஜாதி மரத்தையும் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். ஜமீன்தார் குடிகள் மாத்திரம் தான் அதை அனுபவிப்பதில்லை. அடுத்த கிராமத்தார் வெட்டிக்கொண்டு போகும்போது அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஜமீன் குடிகள் போனால் மாத்திரம் தடுத்துவிடுகிறார்கள்.

Q.—மரத்தை வெட்டுவதை நீங்கள் ஏன் நிறுத்திவிடக்கூடாது. அவர்களை ஏன் தடுத்துவிடக்கூடாது ?

A.—ஜமீனில் பாரஸ்ட் ரிஸர்வ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1934-ம் வருஷம் ஜூன் மாதத்தில் திருட்டு கேஸ் போட்டு ஜமீனுக்கும் குடியானவர்களுக்கும் ரூ. 20,000 செலவு. முடிவு குடிகளுக்கு அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது. ஜமீன்தாரியில்போய் பாத்தியதையை சிவில் கோர்ட்டில் ஏற்படுத்திக்கொள்ளும்படி சொல்லுகிறார்கள். நாங்கள் மணியார்டர் செய்தாலும் அவர்கள் திருப்பிவிடுகிறார்கள். பத்து வருஷமாக வசூல் செய்யமாட்டேன் என்று சொல்லுகிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—அவர்கள் வசூல் செய்யாவிட்டாலும் நீங்கள் முன்புபோல்தானே உபயோகித்து கொண்டிருக்கிறீர்கள் ?

A.—பாத்தியம் இல்லையென்று சொல்லுவதற்காகத்தான் ரூ. 0–4–0, ரூ. 0–6–0 வாங்குவதில்லை. அதனால் நாங்கள் திருடர்கள் அல்லவென்று தீர்மானம் செய்யப்பட்டு கேஸ் ஜெயித்துவிட்டோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—இப்பொழுது காகிதம் ஒன்றும் கொண்டுவரவில்லையா ?

A.—இல்லை. பொதுஜன சவுகரியத்திற்காக புறம்போக்கு கண்மாய் நிலங்களை பட்டா போட்டு கிஸ்தி வசூல் செய்துவருகிறார்கள். ஜமீனில் அதையும் காலி செய்துகொடுக்கவேண்டும். கண்மாய் நாற்பது வருஷமாக வெட்டுவதில்லை. கோட்டைக்கு ரூ. 0–8–0 வாங்கியும் வெட்டுவதில்லை. மரம் முளைத்து தண்ணீர் நிற்க இடமில்லை. புஞ்சை காடும் மணலாகிவிட்டது. ஆகையால் புஞ்சை சாகுபடி செய்யமுடியவில்லை. எங்கள் மனுவில் சொல்லியபடி கவர்ன்மெண்டின் மேற்பார்வையில் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—ஏன் கலெக்டருக்கு மனு கொடுக்கக்கூடாது ?

A.—ஒவ்வொரு பட்டாதாரும் ஸ்டாம்ப் ஒட்டி பிராது போடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். எப்படி 3,000 பட்டாதாரிகள் செய்வது ?

Q.—எஸ்டேட் லாண்ட் ஆக்ட்படி ரூ. 250 கட்டி கலெக்டர் மூலம் செய்ய சொல்லலாமென்பது உங்களுக்கு தெரியாதா ?

A.—பணமில்லை.

Q.—கண்மாய் மராமத்து கவர்ன்மெண்டுதான் எடுத்துக்கொள்ளவேண்டுமா ?

A.—ஆம். பட்டா மாறுதல் என்பது எங்கள் ஜமீனில் கிடையாது. சப்-ரிஜிஸ்ட்ரார் மூலம் மனுக் கொடுத்தால் அவர்களுக்கு மாமூல் கொடுக்கவேணும். சிப்பந்திகளுக்கும் கொடுக்கவேணும். ஒரு பட்டா மாறுதலுக்கு ரூ. 1. ஆகையால் அந்த சிஸ்டத்தை மாற்றிக் கொடுக்கவேண்டும்.

Q.—ஏரி உள்வாய் அடமானம் செய்கிறீர்களா ?

A.—ஆம் தீர்வை போட்டுவிடுகிறார்கள். கால்வாய் உடைந்து குழி ஏற்பட்டுவிடுகிறது. அதை உழுது நெல் சாகுபடி செய்தால் நான்கு பொதி கிடைப்பது கஷ்டம். தரம் தீர்வையுடன் இரண்டு மடங்கு தீர்வை போட்டார்கள்.

Q.—அப்படி தீர்வை போட்டதற்கு ரசீது ஏதாவது கொண்டுவந்திருக்கிறீர்களா ?

A.—இதெல்லாம் வேண்டியதில்லை யென்று எங்கள் ஊரில் உள்ள பிரமுகர்கள் சொன்னார்கள். ஆகையால் இங்கு கொண்டுவரவில்லை.

Q.—இங்கு நீங்கள் வந்து எத்தனை நாளாகியிருக்கிறது ?

A.—இரண்டு நாளாகியிருக்கிறது. தெரிந்துகொள்ளவில்லை.

The Zamindar of Mirzapuram :

Q.—உங்கள் ஊரில் நிலம் என்ன விலை ?

A.—நஞ்சை பத்து, பதினைந்து வருஷமாக கோட்டை ஒன்றுக்கு (1 எக்கர் 62 சென்டுகள்) ரூ. 500.

Q.—ஜமீன் குடிகளில் பாதி ரிஸர்வ், பாதி அன்ரிசர்வ் என்று வைத்திருக்கிறார்களா ?

A.—மொத்தம் 13,000 எக்கர். இதில் ஏறக்குறைய 10,000 ரிசர்வ் என்று வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. எல்லாம் ரிசர்வ் என்றுதான் சொல்லவேண்டும்.

Q.—ரிசர்வ் செய்யாத காடுகளில் உங்களுக்கு வேண்டிய விறகு முதலியவைகள் எடுத்துக் கொள்ளலாமா ?

A.—ரிசர்வ் காடுகளிலே எல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். அன்ரிசர்வ்ட் பாரஸ்ட் என்பதே கிடையாது.

Q.—ரிசர்வ் பாரஸ்டில் பெரிய மரங்களை வெட்டுகிறீர்களா ?

A.—விறகுக்கு ஏற்ற மரம்தான் இருக்கிறது. பெரிய மரங்கள் அங்கில்லை.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—இருந்தால் வெட்டுவீர்களா ?

A.—ஐந்து ஜாதி மரம் போக—தேக்கு, வேங்கை, தோத்தி, கடுக்காய், குங்கிலியம்—பாக்கி எல்லாவற்றையும் வெட்டுவோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—நீங்கள் ஜமீன்தாரியில் ரெவினியு இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்தீர்களா ?

A.—பத்து வருஷம் உத்தியோகம் பார்த்தேன்.

Q.—பணம் கையாடியதற்காக வேலையைவிட்டு உங்களை நீக்கினார்களா ?

A.—அப்படி ஒருகாலும் ஒன்றுமில்லை. நான்தான் ராஜினாமா செய்திருக்கிறேன். 1936-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ராஜினாமா செய்தேன். அந்த மாதிரி லெட்டர் வேண்டுமானாலும் கொண்டு வந்து காட்டுகிறேன். டிஸ்மிஸ் செய்ததற்காக என்று நான் சாக்ஷி சொல்லவரவில்லை.

Q.—நீங்கள் கையாண்ட பணத்துக்காக ஜமீன்தாருக்கு பிரோ-நோட் எழுதி கொடுத்திருக்கிறீர்களா ?

A.—அல்ல. 1931-ம் வருஷத்தில் ரூ. 350-க்கு நோட் எழுதி கொடுத்தேன். கடனுக்காக எழுதிக்கொடுத்தேன்.

Q.—எதற்காக எழுதிக் கொடுத்தீர்கள் ?

A.—கிஸ்தி பணம் ரூ. 50, ரூ. 60 என்னுடைய சொந்த பணம் பாக்கி கொடுப்பதற்காக கடனுக்காக எழுதிக்கொடுத்தேன்.

Q.—1937-ம் வருஷம் வரையில் தொடர்ந்து வேலை பார்த்ததற்கு ஆதாரம் இருந்தால் கொண்டு வாருங்கள்.

A.—இருக்கிறது. போய்கொண்டுவருகிறேன்.

Mr. B. Venkapachalam Pillai :

Q.—வேலையை விட்டதற்கு என்ன காரணம் ?

A.—ஆடு மாடு அடைக்கும் இடத்திற்கு சுவரை ஜமீன்தார் வைத்தார். அப்பொழுது நான் மானேஜர். அந்த சுவரை குடிகள் இடித்துவிட்டார்கள். மறுநாள் ஒரு மனிதன் நந்தவனம் வைக்க வேண்டுமென்றும் இன்னின்னார் சுவரை இடித்துவிட்டார்கள் என்றும் என்னிடம் சொல்லிக்கொண்டார்கள்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—கேஸ் எங்கே போடப்பட்டது ?

A.—சுவர் இடித்த கேஸ் குத்தகைதார் ஸ்டேட்மென்ட் மேல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பிராது போடப்பட்டது. சேத்தூரில் முத்தய்யா தேவர் என்னுடன் இருந்தார். நல்ல பெண்டாட்டியாக இருந்தால் நாங்கள் இருக்கும்போது இடிக்கவேண்டுமென்று துவேஷமாகப் பேசினார்கள். கடைசியாக மறுபடியும் ஜனங்கள் இடிக்கப் போனார்கள். பெரிய ஆட்களைக் கொண்டு என்னை பொய் கேஸ் போடும்படி ஜமீன்தார் சொன்னார். பொய் கேஸ் போட எனக்கு சம்மதமில்லை. ஆகையால் வேலையை விட்டு வந்துவிட்டேன்.

Q.—இவ்வளவுதானே நீங்கள் சொல்லிக்கொள்ளவேண்டியது ?

A.—ஆம்.

Witness No. 223. **Madura.** **23rd February 1938.**

Oral evidence of Mr. M. N. Perumal Nayakar, aged 55, son of Nallama Naykar, Srirangapuram, Kandamanaickanur Zamin.

The CHAIRMAN :

Q.—ஏதாவது மெம்மொராண்டம் கொடுத்திருக்கிறீர்களா ?

A.—இல்லை. நாங்களே நிலங்களில் கிணர் வெட்டி தோட்டம் சாகுபடி செய்கிறது. கம்பு, பருத்தி, சோளம், கேப்பை, வெள்ளாமை செய்வதற்கு புஞ்சை ரேட் 3 பணம், குழி ஒன்றுக்கு 60 செண்ட். அவர்கள் 8, 7 பணம் என்று வருஷத்துக்கு தீர்வை சார்ஜ் செய்கிறார்கள். ஒரே கிணர், ஒரு நம்பர், 2 பட்டா. அண்ணன்தம்பி யிருந்தால் ஒரு பட்டா 3 பணம் என்றும், ஒரு குழி 8, 7 பணம் என்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 3 பணம் கொடுத்தால் புகையிலை சாகுபடி செய்யலாம். மற்றவர்களுக்கு புகையிலை வைத்தால் 8 பணம், 7 பணம் தீர்வை வசூல் செய்கிறார்கள்.

Q.—என்ன காரணம் அப்படி செய்வதற்கு ?

A.—சில குடியானவர்கள் கோர்ட்டில் விவகாரம் கொடுத்தார்கள். பிரிவி கௌன்ஸிலில் ஜாஸ்தி தீர்வை வசூல் செய்யக்கூடாதென்று தீர்ப்பாகியிருக்கிறது. இதைத் தவிர மற்ற குடியானவர்கள் மனுப்போட்டாலும் அப்படி செய்யாமல் இருந்துவருகிறார்கள். **(He filed some record as exhibit.)** ஆறும் நம்பர் கணக்குப்படி கொய்யா தீர்வை யென்று போட்டார்கள். தோட்டத் தீர்வை 8 பணத்துக்கு மேல் சார்ஜ் செய்கிறார்கள். வாழை வைத்தால் தனித்தனியாக தீர்வை போடுகிறார்கள். கொய்யாவுக்கு 4 பணம் ஜாஸ்தி. கரும்பு வைத்தாலும் அதே மாதிரி ஜாஸ்தி. அவர்கள் இஷ்டப்படி தான். நாங்கள் சொன்னால் யார் கேட்கிறார்கள். இதைத் தவிர ஒரு கிணரை அடுத்து நிலம் இருந்தால் மழையில்லாமல் காய்ந்துபோயிருந்தால், இந்தக் கிணற்றி லிருந்து தண்ணீர் இறைத்தால் 8 பணத்திலிருந்து 12 பணம் சார்ஜ் செய்து விடுகிறார்கள். ஒரு நிலத்தில் கிணர் வெட்ட அந்த நிலத்தை அடமானம் வைத்து ரூ. 500 வாங்கி வெட்டுகிறான். இதைக் கட்டமுடியாமல் அந்த நிலத்தைக்கூட விட்டுவிட்டுப்போய்விடுகிறான். கிணர் வெட்டத்தான் கடன் வாங்கிய தஸ்தாவேஜ் இது.

Q.—இதெல்லாம் பணம் கட்டி வாபீஸ் வாங்கிய பத்திரம்தானே ?

A.—ஆம்.

Q.—பந்தோபஸ்தாக இருக்கும் ?

A.—வைத்துக்கொள்ளலாம்.

Q.—கிணர் ஜலம் எவ்வளவு இருக்கும் ?

A.—எங்கள் கிணறுகள் குறைந்தது 18, 20 கஜத்துக்கு குறைந்த ஆழம் உள்ளது கிடையாது. அதிலிருந்து 30 செண்டு நிலத்துக்குத்தான் பாயும். ரூ. 1,000, ரூ. 1,500 செலவு செய்து கிணர் வெட்டினாலும் பக்கத்திலுள்ள கண்மாயில் ஜலம் இருந்தால் இதில் ஜலம் இருக்கும். ஆனால் கண்மாய் மராமத்து செய்வதில்லை. ஆகையால் தண்ணீர் வசதியில்லை. இந்த வருஷத்தில் அனேக கிணர்கள் தண்ணீர் இறைக்கமுடியவில்லை. தீர்வையும் எவ்வளவோ விதமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதோடு ஒரு பணம் என்பது ரூ. 0–3–0. இவர்கள் என்ன விதமாக எங்களிடம் வசூல் செய்கிறார்கள் என்றால் 16½ பணம், ரூ. 3–7–0, இதை ரூ. 3–8–0 என்றே வசூல் செய்து வருகிறார்கள்.

Q.—ஒரு அணாதானே ஜாஸ்தி ?

A.—குடியானவனுக்கு அந்த ஒரு அணா இருந்தால் எவ்வளவோ பிழைக்கலாம்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—ஒரு நாளைக்கு ஒரு அணாவா ?

A.—சிறுபிள்ளைக்கு வேலை செய்ய ஒரு அணா கொடுத்தால் போதும். நத்தம் புறம்போக்கில் ஒருவன் உழுதால் உடனே காலி பண்ணும்படி செய்தால் குடியானவனுக்கு சவுகரியமாகவிருக்கும். நான்கு மடங்கு தீர்வை வசூல் செய்துவிடுகிறார்கள். அதை காலி செய்யவேண்டும்.

Q.—மறுபடியும் நீங்கள் ஏன் அவர்களுக்கு விடக்கூடாது ?

A.—உழுகிறவனுக்கு இடைஞ்சலாக இருக்கும். கிராமம் நத்தம் புறம்போக்காக யிருந்தால் இடைஞ்சல் ஏற்படும்.

Q.—தீர்வை போட்டு வாங்காமல் காலி செய்யவேண்டுமா ?

A.—ஆம். விவசாயக்கருவிகளுக்குக் கலப்பை, ஏர்க்கால், குத்துக்கால், உருளை இவைகளுக்கு எங்களுக்கு இனமாக கண்மாயில் உள்ளவைகளை கொடுக்கவேண்டும்.

Q.—மலை அந்த ஜமீன்தாருடையதில்லையே ?

A.—இடையில் அவர்கள் விட்டுவிட்டால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரியா ? அந்த இடத்தை வாங்கி எங்களுக்கு இவ்வளவு கஷ்டம் உண்டுபண்ணலாமா ? ஆதியில் எங்களுக்கு எல்லா சவுகரியங்களும் இருந்தது.

Q.—அந்த மலையில் போய் நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாதா ? அந்த மலையில் நீங்கள் விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டுமா ?

A.—அதை நாங்கள் அப்படி சொல்லலாமா ? கவர்ன்மெண்டிலிருந்து அப்படி உத்தரவு செய்தால் நன்றாயிருக்கும். அவர்களுக்கு உள்ளடங்கி நடப்பவர்கள்தான் நாங்கள். வீடுகள் கட்டி குடியிருப்பதற்கு, மாட்டு தொழுவத்திற்கும் கல்லுகள் எடுக்க லைஸென்ஸ் இல்லாமலிருக்கச் சட்டம் ஏற்படுத்தவேண்டும். நிலங்களுக்கு உரம் போடுவதற்கு கொழை, எரு இவைகளுக்கு தீர்வையில்லாமல் எடுத்துக்கொள்ள உத்திரவு செய்யவேண்டும். தொழு எடுக்க பாஸ் வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

Q.—ஜமீன்தாருக்கு மலை இருப்பதாக நினைத்துக்கொண்டு கேட்கிறீர்களா ?

A.—நாங்கள் முன்பு முதலே குடிகள்.

Q.—இவர்களிடம் இல்லாததை எப்படி நீங்கள் கேட்பது ?

A.—எப்படியாவது நீங்கள் ஒன்று சேர்ந்து வாங்கிக்கொடுக்கவேண்டும். நாங்கள் ஜமீன் குடிகளாக இருப்பதால் இந்த கவர்ன்மெண்டிடத்திலிருந்துகூட அதிகமான செலவு ஏற்படுகிறது. இப்பொழுது அயன் குடிகளுக்குள்ளே யிருக்கிற ஒரு நிலத்துக்கு தாவா ஏற்பட்டால் அதற்கு தீர்வையின்மேல் மவுண்டு (**mound**) ஏற்பட்டு 10,000 சொத்தாகயிருந்தால் அந்த விவகாரத்தை கோர்ட்டில் தீர்த்துவிடுகிறார்கள். 10,000-க்குப் பெரிய சொத்தாகவிருந்தால் 10,000 மவுண்டு கட்டினால்தான் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

Q.—கோர்ட்டு **fee**யா ?

A.—ஜமீன் குடிகளாக இருப்பதால்தான் ஜாஸ்தி மௌண்டு கொடுக்கவேண்டியிருக்கிறது.

Q.—கவர்ன்மெண்டு குடிகளுக்கு அப்படியில்லையல்லவா ?

செக்ஷன் 75, கோர்ட்டு பீஸ் ஆக்ட், அடுத்த அயன் கிராமக்குடிகளுக்கு நில அடமான பாங்குகள் ஏற்படுத்திய மாதிரி எங்களையும் சேர்த்து எங்கள் கிராமங்களில் அயன் கிராமத்தின் குடிகள்போல் எங்களுக்கும் நில அடமான பாங்கிக்கும் ஒரு பாகம் கிடைக்கவேண்டும். பட்டா நிலங்களில் வீடு கட்டினால் ஜமீன்தாருக்கு தெரியப்படுத்த வேண்டுமென்ற சட்டம் குடியானவனுக்கு தெரியாது. இவர்கள் ரூ. 1,000, 2,000 செலவழித்து வீடுகட்டிவிடுகிறார்கள். ஆகையால் இருபது வருஷ தீர்வை கேட்கிறார்கள்.

Q.—இப்பொழுது வீடுகட்டதான் உரிமை யிருக்கிறதே ?

A.—இருபது வருஷ தீர்வை எப்படி கொடுப்பது ?

Q.—கவர்ன்மெண்டில் அப்படியிருக்கிறதே ?

A.—அந்த மாதிரியிருந்தாலும் உடனே நாலாம் நம்பர் என்று ஜப்தி செய்து நாலாயிரம் ரூபாய் வீட்டை நாலணாவுக்கு ஜப்தி செய்து விடுகிறார்கள். ஆகையால் இந்த கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொடுக்கவேண்டும். அயன் பாரஸ்ட் ஏல தோட்டங்களுக்கு ஜமீன் குடிகள் மனு கொடுத்தால் உனக்கு அயனில் பட்டாயிருக்கிறதா ? இருந்தால் வா என்று சொல்லுகிறார்கள். (தம்பிரான் சனல் என்று சொல்லுவார்கள்) அந்தமாதிரி கொடுக்கக்கூடிய வழிகள் செய்துகொடுக்கவேண்டும். குப்பை, கூளம் கொட்டும் இடங்களுக்கு தீர்வை வஜா செய்துகொடுக்கவேண்டும். முதலில் 50 பெயர்கள் வீடு கட்டிக்கொண்டு இருப்பார்கள். 400 பெயர்கள் பெருக ஏற்பட்டால் பட்டா நிலங்களை நத்தம் புறம்போக்குக்கு மாற்றி கொடுக்கவேண்டும். விவசாயம் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக தீர்வை அதிகரிப்பதால் இந்த சவுகரியம் அவர்களுக்கு செய்துகொடுக்கவேண்டும். நீர்ப்பாசனம் பக்கத்தில் இரண்டு மைலுக்குள்ளாக வைகையாறு போகிறது. அந்த ஆற்று தண்ணீரை கண்ணால்தான் பார்க்கிறோம். உபயோகப்படுத்துவதில்லை.

Q.—ஏன் நீங்கள் குடிப்பதில்லையா ?

A.—கோர்ட் ஆப் வார்ட்ஸ் காலத்தில் அணைகட்டி மேல்பாகத்தில் தண்ணீர் கொண்டு பாய்ச்ச ஏற்பாடு செய்தார்கள். பிறகு எங்கள் ஜமீன்தாருக்கு சவுகரியம் ஏற்படவில்லை. இப்பொழுது கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஏற்பட்டு இருப்பதால் எங்கள் கிராமத்துக்கு தண்ணீர் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

Q.—யார் அணை போடுவது ?

A.—கவர்ன்மெண்டார்தான் ஜமீன்தாரை அணை போடும்படி உத்திரவு போடவேண்டும். இந்தக் கமிட்டியார்தான் கவர்ண்மெண்டார் என்று நினைத்து எங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளுகிறோம். பட்டாதாரன் இறந்துபோனால் அந்த பசலியில் அல்லது அடுத்த பசலியில் பட்டா மாறுவது வழக்கம். ஆனால் இந்த ஜமீன் கிராமத்தில் பாட்டன் இறந்து, அந்த மகன் இறந்து, பேரன் நாற்பது வருஷமாக இருந்தாலும்கூட இன்னும் பாட்டன் பெயருக்கேதான் பட்டாயிருக்கும்.

Q.—பேரன் பெயரும் பாட்டன் பெயரும் ஒன்றுதானே ?

A.—வேறு பெயராகக்கூடயிருக்கலாம் .

Q.—ஏன் மனு போடவில்லை ?

A.—எல்லாவற்றிற்கும் வரிபோட தயாராகவிருக்கும் கணக்குப்பிள்ளைக்கு இந்தப் பெயரை தெரிந்து கொள்ள முடியாதா ? இந்த வருஷத்தில் அயன் நிலத்துக்கு ரூபாய்க்கு ஐந்து அணா. நான்கு அணா தள்ளிக்கொடுப்பதாக பிரஸ்தாபம். ஆனால் ஜமீனில் தள்ளுவதாகத் தெரியவில்லை.

Q.—புதிதாக கடன் மசோதா வரி வஜா செய்யலாமெனறு சட்டம் வந்திருக்கிறதே, தெரியுமா ?

A.—போடாதவர்களுக்கு அதில் அனுகூலமிருக்கும். வரி போட்டவர்களுக்கு அனுகூலமில்லையே ! ஏதாவது ஒரு விஷயத்துக்கு மனு கொடுக்கவேண்டுமானால் ஒரு அணா காகிதம் அவர்களிடம் வாங்கித்தான் கொடுக்கவேண்டும்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—ஸ்டாம்ப் காகிதமா ?

A.—இல்லை. ஏதோ மகாராஜா என்று அச்சடித்து வைத்திருக்கிறார்கள். அரை காகிதம்கூட இல்லை. இதில் அரை அங்குலம் குறைந்துதான் இருக்கும். அதைத்தான் வாங்கி எழுதவேண்டும்.

Q.—எதற்காக அப்படி வைத்திருக்கிறார்கள் ?

A.—ரூ. 3–7–0-க்கு பதிலாக ரூ. 3–8–0 வாங்குவது எதற்காகவென்று எங்களுக்கு தெரிந்தால் அல்லவோ இதைப்பற்றி கேட்கப் போகிறோம். ஆகையால் இதைப்பற்றி எங்களுக்கு தெரியாது. நிலங்களை ஏலம் போடுவதில் சட்டத்தை திருத்திக்கொடுக்கவேண்டும். சம்மரி சூட் போட்டு அதை ஏலம் போடுவது மாதிரி வேறு: ஆனால் குடியானவனுக்கு தெரியாமல் நோட்டீஸ் கொண்டுவந்த பின் எஸ்டேட் வேலைக்காரர்கள் வசூல் செய்வதற்கு வருவார்கள். அவர்களுக்கு சம்பளம் இருக்காது. ரூபாய்க்கு ஒரு துட்டு என்று குடியானவனிடம் வாங்கிவிடுகிறார்கள். நோட்டீஸ் எங்கேயாவது ஒட்டி விடுவார்கள். ஒரு ரூபாய் பாக்கிக்காக ஆயிரம் ரூபாய் நிலத்தை ஜமீன்தாரே ஏலத்தில் எடுத்துக் கொண்டுவிடுகிறார்கள். பாட்டன்காலத்து பாக்கி கொடுத்தால்தான் பட்டா கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொடுக்கவேண்டும். அதிக தீர்வை பைசல் ரேட் தவிர வேறு தீர்வை எதுவும் இருக்கக்கூடாது.

Q.—சட்டத்தில் அவர்கள் இஷ்டம்போல் செய்யக்கூடாது. டிவிஷன் ஆபிஸருக்கு எழுதித்தான் ரேட் போடுவார்கள் ?

A.—குடியானவர்களாகிய எங்களுக்கு இந்த விஷயம் எப்படி தெரியும் ? எங்களுக்கு தெரிந்தால் நாங்கள் ஏன் இப்படி கஷ்டப்படுகிறோம். நான் கொஞ்சம் தெரிந்தவன் என்று உத்தரவானால் எனக்கு ரூ. 15 கொடுத்தால் நானும் அந்தக் கக்ஷியில் சேர்ந்தாலும் சேர்ந்து கொள்ளுவேன். இந்த மாதிரி எத்தனையோ பெயர்கள் இருக்கிறார்கள். (Laughter.) தெரியாதவனுக்கு சகாயம் செய்யவேண்டுமென்றுதான் இருக்கவேண்டும். தெரிந்தவனுக்கு என்று செய்யக்கூடாது. பிரிவி கௌன்ஸிலில் தீர்மானப்படி மூன்று பணம் ரேட் போட்டிருக்கிறார்கள். ஆகையால் 1855-ம் வருஷத்துக்கு முன்பு இருக்கும் கிணர்கள் பிந்தி இருக்கும் கிணர்கள் என்று சொல்லுகிறார்கள். எல்லாவற்றையும் ஒரு சட்டம் ஆக்கி அதிகத் தீர்வையில்லாமல் செய்யவேண்டும்.

The Chairman :

Q.—பிரிவி கௌன்ஸிலில் தீர்ப்பு எங்கே ?

A.—இங்கு கைவசமில்லை. அவர்களே ஒப்புக்கொள்ளுவார்கள்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—உங்கள் நிலங்களை நீங்களே சாகுபடி செய்கிறீர்களா ?

A.—நாங்களே.

Q.—எவ்வளவு ?

A.—எங்களுக்கு 100 குழி 60 ஏக்கர் நிலம்.

Q.—உழுவதெல்லாம் உங்களுக்குள் ஆட்களை வைத்திருக்கிறீர்களா ?

A.—நாங்கள் அண்ணன், தம்பி, மச்சான் எல்லாரும் சொந்தமாகச் சேர்ந்து வெள்ளாமை செய்கிறோம். சொந்தத்திலும் கூலியாட்களை வைத்துக்கொண்டு வேலை செய்வோம். அன்றாடம் கூலி கொடுத்து வைத்துக்கொள்வோம்.

Q.—அந்த ஊரில் சாகுபடி செய்யாமல் மற்றவர்களிடத்தில் ஒப்படைத்து இருப்பவர்கள் இருக்கிறார்களா ?

A.—அப்படி ஒப்படைத்தால் எங்களுக்கு ஒன்றும் கிடையாது. எங்களுக்குக் கட்டாது.

Q.—ஒரு மனிதன் நிலத்தை உழுதால் அடுத்த வருஷத்திலும் அவனேதான் உழுவானா ?

A.—அப்படியுமிருக்கும். நான்கு கோட்டை இருக்குமிடத்தில் இரண்டு கோட்டை கொடுத்தாவது உழுது கொள்ளலாம் என்று சொல்லுவதுண்டு.

Q.—அவர்களுக்கு நிலத்தில் பாத்தியம் இல்லையா ?

A.— கூலிதான் வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

Q.—புகையிலை போட்டால் ஜாஸ்தி தீர்வை போடுகிறார்களா ?

A.—அதிக தீர்வை எங்களுக்கு வேண்டாமென்று சொல்லுகிறோம்.

Q.—நெல் ஜனங்களுக்கு சவுகரியம். புகையிலை ஜனங்களுக்கு அசவுக்கியமல்லா ? நீங்கள் வியாபாரத்துக்காகத்தானே அதைச் செய்கிறீர்கள்.

A.—நிலங்களுக்கு உறம் போடுவதற்கும், மற்ற செலவுகளுக்காகவும்தான் அப்படிச் செய்கிறோம். ஆகையால் இந்த அதிக வரியை எடுத்துவிடவேண்டும்.

Witness No. 224. **Madura.** **23rd February 1938.**

Oral evidence of Mr. C. Sankaralingam Pillai, aged 38, son of Chinnaswami Pillai, Thevaram Zamin, Periyakulam taluk.

நிலங்களுக்குப் போட்டிருக்கும் தீர்வை அயனில் இருப்பதுபோல ஜமீனில் நிரந்தரமாகயில்லாமல் வெள்ளாமை பொறுத்து கிணர் வெட்டியதற்குக்கூட போட்டிருப்பதால் புஞ்சைக்கு ஒரு ரேட், நஞ்சைக்கு ஒரு ரேட்டும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது ஒன்று. ஜமீனில் நஞ்சை என்று சொல்லும் இடங்களில் தண்ணீர் விடுவதாக இருந்தால் வாட்டர் ரேட் தீர்வை போட்டு நிலத்துக்கு தீர்வை வேறு வாங்கி கொள்ளுகிறார்கள். நீர்வாடை என்று வாங்குகிறார்கள். எட்டு பணம் என்றும் தண்ணீருக்கு வேறு வாங்குகிறார்கள். ஊற்று நிலத்தில் உண்டாகிவந்தாலும் குழிக்குக் கலம் என்றுவாங்குகிறார்கள். இப்பொழுது ரூ. 4, ரூ. 4½ வசூல் செய்கிறார்கள். கொடுக்காதவர்களுக்கு தண்ணீர் விடுவதில்லை. ஒழுங்காக **repair** செய்து கொடுப்பதில்லை. ஆகையால் நஞ்சை **rate**, புஞ்சை **rate**-ம் ஏற்படுத்தவேண்டும். தோட்டத்துக்கு சொந்த கிணறுக்கு தீர்வை போட்டிருக்கிறார்கள். கொடிக்காலுக்கு 50 பணம் தீர்வை போடுகிறார்கள். ஒரு குழி நிலத்தில் 50 ஜனங்கள் பிழைக்கிறார்கள். 50, 60 பணம் தீர்வை போடுவதால் குடியானவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. அதற்கும் ஒரே தீர்வை போடவேண்டும். புஞ்சைக்கு 7, 6, 5 பணம் போடுகிறார்கள். ஆகையால் அயனில் இருப்பது போல் செய்துகொடுக்கவேண்டும். ஆதியில் காட்டுத் தழை ஆடுமாடு மேய்வதற்கு, விவசாயத்துக்கு வேண்டிய கருவிகள் செய்துகொள்ள வசதியிருந்தது. 70, 80 வருஷத்துக்கு முன்பு. பிறகு ஜமீன்தாருக்கு வேண்டியவர்கள் உண்டாகி இப்பொழுது காட்டுக்கு கேப்பை என்றும் பத்து ரூபாய்க்கு ஒரு ரூபாய் என்றும் பாரஸ்டில் வசூல் செய்து குடியானவர்களுக்கு ஹிம்சை செய்கிறார்கள். ஆகையால் வெள்ளைஜாதி மரங்களை வெட்டுவதற்கு, விவசாயிகள் கருவிகளை செய்துகொள்ள வசதி செய்துகொள்ளவேண்டும். இது விஷயமாக சூட் போட்டு கேஸ் நடக்கிறது. புதிதாக கல், மண் போன்றவைகளுக்கு எடுக்க தீர்வை கொடுக்கவேண்டுமென்று புதிதாக ஏற்பாடு செய்கிறார்கள். இன்னும் அது அமுலுக்கு வரவில்லை. இரண்டொருவரிடத்தில் அதிகம் வேண்டுமென்று கேட்டதாகக் கேள்விபட்டோம். ஆகையால் சூட் போட்டிருக்கிறோம். இவைகளை சீர்திருத்தம் செய்து கொடுக்கவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—சமீபத்தில் கிரிமினல் கேஸ் நடந்ததா ?

A.—கொலை கேஸ், ஷூட்டிங் கேஸ் நடந்தது. தண்ணீர் விடமுடியாதென்று தடுத்ததற்காக ஷூட்டிங் கேஸ் ஜமீன் தரப்பில் குடியானவர்கள்மேல் கேஸ் போட்டிருக்கிறார்கள். இப்போதுகூட ஜமீன் தரப்பில் ஒருவர் இறந்துபோயிருக்கிறார்.

The CHAIRMAN :

Q.—எந்த ஜமீன் ?

A.—தேவாரம். ஆடக்கட்டில்லாத நஞ்சைக்கு நீர்வாடகை வாங்குகிறார்கள். இதுதான் எல்லாவற்றிற்கும் காரணம். இடையில் ஊத்துகளை மறித்து குழிக்கு கலம் வாங்கி திருப்பிவிடுவதால்தான் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது.

Q.—சர்வே நடந்திருக்கிறதா ?

A.—1898-ல் சர்வே நடந்தது. இபபொழுது சர்வே செய்யவேண்டியது அவசியம்.

Witness No. 225. Madura. 23rd February 1938.

Oral evidence of Mr. Arunachalam Chettiyar, aged 40, son of Ayyaswami Chettiyar of Thevaram.

He filed certain documents and judgments concerning forest and some receipts for the collection of ragi tax.

He continued.

1892-ல் கொள்ளையடித்து கொலை நடந்துவிட்டது. ஜமீன் சம்பந்தமானவர்களுக்கு 6 மாதம் தண்டனையாகியிருக்கிறது. அது சம்பந்தமான தஸ்தாவேஜு.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—ராகி வரி கேட்கவந்ததற்காக இந்த கேஸ் போட்டதா ?

A.—ஆம். அதை கேட்க வந்ததற்கு பெண்டுகளைப்பிடித்து இழுத்தார்கள் என்று கேஸ்.

Q.—ராகி வரி எவ்வளவு ?

A.—ராகி வரி ரூ. 0–12–0. 10 ரூபாய்க்கு உட்பட்டவர்களுக்கு ரூ. 1–0–0. மேலே போனால் ரூ. 0–2–0 அதிகம் ரூபாய்க்கு.

Q.—ஆடு, மாடு மேய்க்க இந்த அதிகப்பணம் கேட்கிறார்களா ?

A.—ஆம். வேண்டியவர்களாக இருந்தால் அனுமதி கொடுப்பார்கள். இல்லாவிட்டால் அனுமதிக்க மாட்டார்கள்.

Q.—இப்பொழுது அந்த வழக்கத்துக்கு மாறுதல் ஏதாவதிருக்கிறதா ?

A.—ராகி வரி கொடுத்து அனுபவித்து வந்தோம். சிலர் கொடுப்பார்கள். சிலர் கொடுக்க மாட்டார்கள். இவர்கள் காலத்தில் 9 பெயர்கள்வரையில் 13 லக்ஷம் ரூபாய் வரி கொடுக்க வேண்டுமென்று சூட் போட்டிருக்கிறார்கள். இது நூதனமாகயிருப்பதால் நாங்கள் வரி கொடுக்க முடியாதென்று சொன்னோம். இதற்காகத்தான் சூட் நடக்கிறது.

வாடர் ரேட்.—குளத்தை மராமத்து செய்யவேண்டுமென்று சாங்க்ஷன் செய்தும் ரிபேர் செய்யாமலிருக்கிறார்கள். இது விஷயமாக ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிறது.

He then filed the water-rate demand notices by the new zamindar, as well as the cropwar statement and some judgment. He then continued :

எஸ்டேட் நிலம் ஒரு அணா எலத்துக்கு எடுத்துகொண்டு ஒரு வருஷத்துக்கு குழி ஒன்றுக்கு ரூ. 10–0–0 செலுத்தினால் பட்டா கொடுக்கிறார்கள். ஒரு அணா எலத்தில் எடுத்தத 1,000, 2,000 பெறும் நிலம். எஸ்டேட் ரூ. 0–1–0 எலம் என்று ஜமீன் அடங்கலில் போட்டிருக்கிறார்கள். ரூ. 10 செலுத்திவிட்டால் மற்றவர்களுக்கு பட்டா கொடுத்துவிடுவார்கள்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—இந்த அடங்கள் எப்படி கிடைத்தது ?

A.—பழைய ஜமீன்தாரரிடமிருந்து வாங்கிவந்தேன்.

Q.—எந்த வருஷம் அடங்கல் ?

A.—1926-ம் வருஷ அடங்கல்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—யார் ப்ரொப்ரைட்டர் ?

A.—எஎல். விஆர். எஸ். டி. சிதம்பரம் செட்டியார்.

Q.—இந்த ரிகார்ட் எல்லாம் எங்கிருந்து கொண்டுவந்திருக்கிறீர்கள் ?

A.—எங்களிடமிருந்துதான்.

Q.—எப்படி கிடைத்தது ?

A.—பழைய ஜமீன்தார் போனபிறகு வக்கீல்களிடமிருந்து எங்களுக்கு சம்பந்தம் இருந்ததால் நாங்கள் வாங்கி வந்திருக்கிறோம்.

Q.—பழய ஜமீன்தார் இருக்கும்போது இந்த கஷ்டமெல்லாம் உண்டோ, இல்லையோ ?

A.—தொடர்ச்சியாகத்தான் இருந்துவந்திருக்கிறது. கொலை, கொள்ளை எல்லாம் அப்பொழுது முதலே இருந்து வந்தது. செட்டியார் வந்த பிறகு ரொம்ப கடினமாக இருக்கிறது.

பாரெஸ்டுக்கு ராகி வரி சிலர் எழுதிக்கொடுக்கிறார்கள். சிலர் இல்லை. எழுதிக் கொடுக்காததற்கு, அவர் வீட்டில் போய் வரி கேட்கிறார்கள். கொடுக்கமுடியாதென்று சொன்னால், ஜமீன்தார் மானேஜர் போய் அந்த ஆள் மக்களை இழுத்துவிடச்சொல்லி சாமான்களை கொள்ளையடித்து வீட்டை காலி செய்தார்கள். அதனால் கொலையும் நடந்தது. எல்லாம் ஜமீன்தார் ஆட்கள்தான். மானேஜருக்கு 3 மாதமும், மற்றவர்களுக்கு 6 மாதமும் தண்டனை கிடைத்திருக்கிறது.

Witness No. 226. Madura. 23rd February 1938.

Oral evidence of Mr. O. N. Ramaswami Ayyar, Diwan, Kannivadi Zamin.

Mr. O. N. Ramaswami Ayyar : This is the reply which I am submitting to the memorandum of the Ryots' Association. (Document put in.)

Mr. Chairman : *Q.*—How many villages are there in your estate ? *A.*—30 villages 4 — in the hills and 26 in the plains.

Q.—What is the income of your estate ? *A.*—About Rs. 1,80,000.

Q.—What are the rates of rent ? *A.*—There are three classes of land—dry, wet and garden. The rates vary according to the situation of the land and its quality. Here is a statement which gives complete information about the various rates. (Statement put in.)

Q.—Have these rates been varying since the Estates Land Act of 1908 ? *A.*—Yes.

Q.—Has there been any enhancement ? *A.*—No, there has been neither enhancement nor reduction. There was a maximum rate called the holusu rate which the zamindar was entitled to collect according to the decisions of the High Court. This rate was fixed by the settlement of one Mr. Hardy who settled the zamindari areas in about 1800. Then there is another reduced rate called the manosib rate. Both these rates were entered in the pattas of the tenants and the zamindar took the higher or the lower rate as it pleased him. There was uncertainty about what the tenants had to pay.

Q.—For how long were these two rates entered in the pattas ? *A.*—For several years, I think it was ever since the zamindar got his estate. About 1909, the Midnapur Zamindari Company came into possession of the estate by virtue of purchase from the Commercial Land Mortgage Bank which had bought it at a court auction in execution of a decree for a debt. The Managing Director of the Company found it inconvenient to have these two rates and in consultation with the ryots and with the informal consent of the Revenue Officers—I say informal because there has been no legal decision on the point and I can only speak from a perusal of the correspondence—he arrived at some sort of agreement with the ryots by which a rate midway between the holusu rate and the manosib rate was fixed. This was called the manoraji rate.

Q.—This was not done through the Revenue Officers ? *A.*—No, it was a matter between the ryots and the proprietor. When the pattas were issued on the basis of the manoraji rate, some of the ryots who had been paying the manosib rate objected to their rates being raised and filed suits before the Sub-Collector of Dindigul. The Sub-Collector decided that the manoraji rate was a proper rate. An appeal was filed before the District Judge of Madura. He upheld the decision of the Sub-Collector. The case went up to the High Court and the Hon. Sir V. Ramesam gave a lengthy judgment confirming the decision of the two lower courts. I have filed a copy of the judgment of the High Court.

Q.—Please file also copies of the judgments of the two lower courts. *A.*—Yes, Sir, I will.

Q.—What is the difference between the manoraji rate and manosib rate ? *A.*—There was some difference, but I cannot say exactly how much. But I may say that as a result of the introduction of the manosib rate the total income of the zamindari rose by Rs. 20,000. The total income before the introduction of the manoraji rate was Rs. 1,43,000.

Q.—Is this the only variation since the Estates Land Act ? *A.*—Yes, I have already submitted to the Committee a statement showing the revenue for each year from 1909.

Q.—What was the origin of this estate ? *A.*—It was one of those palayams granted by the previous Government for military services rendered.

Q.—How long ago ? *A.*—I think it was about 300 years ago. The Midnapur Zamindari Company got the sanad only in 1905 though it was issued under the Regulation of 1802.

Q.—Prior to that it was unsettled ? *A.*—Yes.

Q.—What was the system of rent—cash or kind ? *A.*—So far as I can trace it, from the year 1795 or so it has been cash. There were some changes. Nelson's District Manual and the Gazetteer give a vivid account of the changes that were made by the various Collectors and Settlement officers in settling these palayams which later on became zamindaris. The fifth Report gives us plenty of figures on which the settlement was made.

Q.—What was the amount of peshkush fixed for the original grantee ? *A.*—Rs. 38,140. I have filed a copy of the sanad to show that.

Q.—What was the income of the zamindar at that time ? *A.*—About Rs. 70,000.

Q.—When and how did that Rs. 70,000 increase ? *A.*—By gradual extension of cultivation and by excess areas discovered in survey which was made in 1921–22.

Q.—Can you say how much of the increase was due to these two causes? *A.*—I can probably find it out if I rummage the records, but this much is certain that the whole increase was due to these two causes alone.

Mr. T. Viswanatham (Secretary): *Q.*—What was the income of the estate at the time of the Permanent Settlement? *A.*—Probably about Rs. 1,20,000. I shall find out and let you know.

Q.—You were saying something about 1921–22? *A.*—Yes, the survey of the estate was made for the first time by the Government at the cost of the zamindar.

The Chairman: *Q.*—What was the increase in the income after the survey? *A.*—About Rs. 20,000. The total income rose to Rs. 1,80,000.

Q.—Who is the present zamindar? *A.*—Mr. R. Ramjee Das Ayyar. His father bought it from the Midnapur Zamindari Company in 1920.

Q.—How did the Company come into possession of the estate? *A.*—The estate was mortgaged to the Commercial Bank and was eventually purchased by them. The Bank became the proprietor and later on the Midnapur Zamindari Company bought the estate from the bank.

Q.—How long have you been connected with the estate? *A.*—Four years.

Q.—What is the rate for nanja lands in your estate. *A.*—It varies from As. 11–7 to Rs. 10–13–5 per acre. The average rate got by dividing the total wet assessment by the total acreage comes to Rs. 3–7–1.

Q.—What is the rate for dry lands? *A.*—It varies from As. 5–9 to Rs. 6–8. The largest area is under an assessment of Rs. 2. The average dry rate is Rs. 1–5–9. The statement gives all these details.

Q.—What about the garden rate? *A.*—It varies from As. 11–7 to Rs. 9–0–6. The average is Rs. 3–3–9.

Q.—Are there any other adjoining estates? *A.*—Yes, the Ammayanayakanur zamindari.

Q.—Are there adjoining Government lands? *A.*—Yes, we are in the midst of Government villages.

Q.—With regard to wet rate how does your wet rate compare with the rates in the adjoining Government villages? *A.*—The District Manual will show that our wet rates are lower than the Government wet rates.

Q.—Which are the adjoining Government villages? *A.*—Athur and several others.

Q.—What about the dry rates? *A.*—In certain areas, the rates are higher than the Government rates. In some cases, it must also be admitted that they are a little excessive too. I am stating only my personal opinion. There are small pattas of land where the rate is rather excessive.

Q.—You admit that? *A.*—Yes, I will say later on what remedies I am going to apply.

Q.—How do the garden rates compare with the Government rates? *A.*—There is no classification of garden lands under the Government. They are all classed as dry. These garden lands are a peculiarity of the zamindaris, not only of this but of all the zamindaris.

Q.—With regard to your estate how much do you think will be a reasonable garden rate? *A.*—I am afraid I am unable to answer that question.

Q.—No doubt it is a difficult question? *A.*—I must confess it is a difficult question and my difficulty is shared by all the zamindars in common and I should not embarrass either my principal or his brother zamindars by making an inconvenient statement. I request I may be excused from giving my personal opinions in this matter. I do not want to be a partisan. I am prepared to be candid. But on this point I should not, I submit, be asked to give my personal opinions.

Q.—That is quite right.

Mr. A. Rangaswami Ayyangar: Will it work out to half net or half gross?

The Chairman: Let us leave him alone. I think we may work it out ourselves.

The Zamindar of Mirzapuram: *Q.*—Do not the ryots get more income from garden lands than from other dry lands? *A.*—Yes, they do.

Mr. Venkatachalam Pillai: *Q.*—Have zamindars dug wells in garden lands? *A.*—Not to my knowledge.

The Chairman: *Q.*—Are there cases in your estate were the tenant has improved his garden lands by digging wells and doing other things? *A.*—The ryots are no doubt making improvements to their lands.

Q.—At their own expense ? *A.*—Yes.

Q.—The zamindar has not been doing anything to improve the garden lands of the tenants ? *A.*—Not to my knowledge.

Q.—For the improvements effected by the tenant either by sinking wells or by other means, are you charging higher rates ? *A.*—No, emphatically no.

Q.—I am asking you because it is stated so in a memorandum. *A.*—I emphatically refuse it.

Q.—Have you been collecting wet rates where you have no right to collect them ? *A.*—No, not to my knowledge. I have explained the matter in my reply to the ryots' memorandum.

Q.—It is stated here that in the case of lands irrigated by tanks in the patta lands of the ryots, the zamindar collects wet rates ? *A.*—There are instances where the tank-bed is patta land. It has come about in this way. There are about 80 small tanks in the estate with a total ayacut of 700 acres. They are all scattered all over the estate. They are left in charge of the ryots interested in the small ayacuts under each one of them as it is obviously inconvenient for the zamindar to fritter away his resources of staff and money on so many small tanks. I presume it is for that reason that these lands are given to the tenants at a much lower rate than the ordinary rent. They are all concessional rates. The ryots are given the right of pasturage, right to cut trees and catch fish in those small tanks. In consideration of these small concessions, the ryots have been maintaining these tanks. In course of time some of these tanks became neglected and the ryots were not compelled to keep them in repair. There was no uniformity. Some tanks were in porambokes and some were in patta land. The ryots asked the zamindar to assign the tank-bed of the poramboke tanks to them so that they may have the exclusive privilege of using them and the zamindar usually gave pattas for such tank-beds also. This was, I think what must have happened in the case of these tanks. The zamindar will be glad to have all the tank-beds back if the present holders will relinquish them and see to their proper repair. In one or two cases where the tanks are out of order I asked the present holders to relinquish them to the zamindar so that he may repair them but they stoutly refused to do that and the zamindar is helpless.

Q.—Does the zamindar claim any tank as his own ? *A.*—They are not his own.

Q.—The tanks are not the zamindar's ? *A.*—No. In some cases the tank-bed is patta land and in other cases the tanks are on porambokes. Whether the porambokes are the property of the zamindar or not is a matter in which I should consult lawyers.

Q.—So far as your zamindari is concerned the duty of keeping the tanks in proper repair is not upon him ? *A.*—These 80 tanks do not exhaust all the irrigation sources. There are other sources also.

Q.—I am coming to that. But so far as these 80 tanks are concerned, the zamindar owes no duty to keep them in proper condition and so there has been no default on his part ? *A.*—No complaint has been made to the zamindar during these four years of my time.

Q.—From the records do you find anything ? *A.*—I have not found any instance of complaint from the ryots about the non-repair of tanks and about the zamindar's failure to repair them whenever necessary.

Q.—All these 80 tanks are like that ? *A.*—Not all of them are like that.

Q.—Besides these 80 tanks are there other irrigation sources ? *A.*—There are about 15 other tanks and three anicuts.

Q.—On what rivers ? *A.*—Kodavanar, Manja. . . . Marutha. . . and Morattar.

Q.—அந்த பதில் தந்தியைகொண்டுவந்திருக்கிறார்களா ?

A.—இங்கே கொண்டுவரவில்லை. கிராமங்களில் மந்தை முதலியவைகளை பார்த்தால் பெயரளவில் மந்தை களம் என்றுதானிருக்கிறது. சரியானபடி மந்தை வெளி, களம் என்பது கிராமங்களில் கிடையவே கிடையாது. மந்தைவெளி என்றால் ஜனங்கள் ஸ்டேல் சைட், முதலியவைகளுக்காகவும் ஆடுமாடுகள் மடக்கவும் ஏற்படுத்தப்பட்ட நிலங்களுக்கு பெயர். மாடுகளை மடக்கும் இடத்திற்கு மாட்டுமந்தை என்று சொல்லுவார்கள். ஜனங்களுக்கு வெளிக்குப்போகிறதற்கு ஆண்களுக்கு ஒரு மந்தை, பெண்களுக்கு ஒரு மந்தை என்று ஒதுக்கப்பட்டிருந்தது. அவைகள் எல்லாம் இப்பொழுது இல்லை. முன் காலத்தில் ஒரு 10 காணி நிலம் இனக்குடியாக இருந்திருக்கிறது. இதற்கு இப்பொழுது நஜர் **(naya)** வாங்கிக்கொண்டு பட்டாபோட்டுவிட்டார்கள். இப்பொழுது பொதுப்பாட்டைகள் கிடையவே கிடையாது. பாதைகளாக இருந்த இடங்களெல்லாம்கூட பட்டா போட்டுவிடப்பட்டன.

ஒரு புஞ்சையில் ஒருவன் கிணறு வெட்டி கொடிக்கால் சாகுபடி செய்தால் 50 பணம் தீர்வை வசூல் செய்கிறார்கள். இப்பேற்பட்ட கிராம சம்பந்தமான விஷயங்களில் ஜமீனில் ஜனங்கள் ஒருவிதமான நன்மையையும் அடைய முடிகிறதில்லை. ஆகையால் எந்தெந்த கிராமத்திற்கு எவ்வளவு தொகை கிராம நன்மைக்காக ஒதுக்கி வைக்கவேண்டுமென்று ஒரு கமிட்டியாரைக்கொண்டு நிர்ணயித்து அந்த அளவு பிக்ஸ் பண்ணி அந்த அளவு தொகையை பஞ்சாயத்தார்கள் இடத்தில் ஒப்படைத்தால் பஞ்சாயத்தார்கள் அதை வசூல் செய்துகொண்டு செலவிடக்கூடிய முறையில் பழைய காலத்து பஞ்சாயத்து முறையில் ஒரு சட்டம் ஏற்படுத்தினால் குடிகள் சுபிக்ஷமாக வாழ வழியுண்டு.

Q.—கிராம அபிவிருத்திக்காக தொகை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களே, கிராம அபிவிருத்தி என்றால் என்ன ?

A.—போக்குவரத்து சாதனம், சுகாதாரம், நல்ல குடிதண்ணீர், காடு முதலியவைகளுக்கு வண்டிப் போக்குவரத்து சாதனம், கண்மாய், குளம் இவைகளை வருஷா வருஷம் ரிபேர் செய்து கொள்ளுகிறதற்கும், இன்னும் அனேகவிதமான பொதுநன்மைக்காக செலவிடக்கூடிய வகையில் அந்தப் பணம் உதவியாக இருக்கவேண்டும்.

Q.—சமுதாய நிலங்களை பட்டா போட்டு கொடுத்ததாக சொன்னீர்களே, அது எப்பொழுது ?

A.—சுமார் 10, 15 வருஷமாக நடக்கிறது.

Q.—அந்த கிராம குடிகளுக்கா அல்லது வேறு கிராம குடிகளுக்கா ?

A.—முன் காலத்தில் குளம், குட்டை என்று இருந்திருக்கிறது. அவைகளை நஜர் வாங்கிக் கொண்டு பட்டா போட்டுவிட்டால் ஜனங்களுக்கு எப்படி தெரிகிறது. அந்த நிலங்களை சீர்படுத்துகிற போதுதான் தெரிகிறது. அந்த மாதிரி சில அயலூர்க்காரர்களும் வாங்கி இருக்கிறார்கள். இதனால் அடிக்கடி குடிகளுக்குள் சண்டைச் சச்சரவு ஏற்படுகிறது.

Q.—இந்த சமுதாய நிலங்கள் என்ன ?

A.—இந்த சமுதாய நிலங்கள் எல்லாம் புஞ்சையில்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு பாரம்ஸ் விற்கிறார்கள் என்கிறீர்களே. அது ஸ்டாம்பு பீஸாக விதிக்கிறார்களா ?

A.—பாரம் அச்சடித்து வைத்திருக்கிறார்கள். வாங்குகிறபோது ஷராப் கையெழுத்துப் போட்டு, தேதி போட்டு ஒரு ரூபாய் என்று போட்டு கொடுக்கிறார்கள். இப்படி வசூலாக்கிற பணத்தை எஸ்டேட்டில் வரவு வைக்கிறார்கள். இந்த மாதிரி மனு பட்டா ட்ரான்ஸ்பருக்குக்கூட உபயோகிக்கவேண்டும். வேறு விதமாக மனுக் கொடுத்தால் கவனிக்கமாட்டார்கள். தற்காஸ்துக்கும் ஒரு ரூபாய் கொடுத்து வாங்கித்தான் மனு கொடுக்கவேண்டும். வேறு விஷயங்களுக்கு வெள்ளை காகிதத்தில் மனுக் கொடுத்தால் போதும்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—அணைக்கட்டு, கலுங்கு முதலியவைகளை ரிபேர் செய்தது எப்போ ?

A.—சுமார் ஆறு வருஷங்களுக்குமுன்னால் ஒரு பெரிய அணைக்கட்டில் ஒரு பெரிய உடைப்பு உடைத்திருந்தது. குடிகளே அநேக ரூபாய் வசூல் செய்து ஜமீனில் ரூ. 200 கொடுத்தது போக காணாத பணத்தைப்போட்டு ரிபேர் செய்திருக்கிறார்கள். எவ்வளவோ பணம் செலவழிந்தும் அதற்கு சரியான ஈடாக ஒன்றும் ஜமீனில் செய்கிறது கிடையாது. குடிகளே எவ்வளவோ பணத்தை செல விட்டு அந்த ரிப்பேரை செய்திருக்கிறார்கள். குடிகளுக்கும் ஜமீன்தாருக்கும் இதனால் சச்சரவு ஏற்பட்டு கிஸ்தி கட்டாமல் நிறுத்திவைத்திருந்தார்கள். பிறகு குடிகளிடத்தில் ஒருவிதமான ராஜியை செய்து கொண்டு கிஸ்தியை வாங்கியிருக்கிறார்கள்.

Q.—உங்கள் ஊரில் ஜமீன் அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களிடத்தில் சொன்னால் நடக்காதா ?

A.—எவ்வளவோ சொல்லிப்பார்த்தாகிவிட்டது. ஒன்றுமே நடக்கிறதில்லை. அவர்கள் காதில் போட்டுக்கொள்ளுகிறதே இல்லை. யாராவது பணம் கொடுக்கிறதாக முன் வந்தால் அப்பொழுது கவனிப்பார்கள்.

Q.—உங்கள் ஊரில் வரி வசூல் செய்கிறது யார் ?

A.—கிராம முன்சீப்புகள் வசூல் செய்து ஜமீன்தாருக்கு கொடுக்கிறார்கள். சில சமயங்களில் ஜமீன்தார் டெம்பரரி ஆட்களை நியமித்துக்கொண்டு வசூல் செய்கிறார்கள்.

Q.—குளங்களை பட்டா போடுகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே. அயலூர் குடிகளுக்கா ? உள்ளூர் குடிகளுக்கா ?

A.—வெளியூர் ஜனங்களுக்கும், உள்ளூர் ஜனங்களுக்கும் தர்காஸ்து கொடுத்திருக்கிறார்கள்.

Q.—காடுகளில் பட்டா போடுகிறதாக சொன்னீர்களே அது எப்படி ?

A.—உள்ளூர்க்காரர்களும் வெளியூர்க்காரர்களும் தர்காஸ்து வாங்கி இருக்கிறார்கள். அந்த விவரங்களை இப்பொழுது நான் தாக்கல் செய்திருக்கிற ரிக்கார்டுகளில் காணலாம்.

Q.—பெரியார் ஜலம் வருகிறதற்கு முன்னால் எந்த ஜலம் பாய்ந்தது ?

A.—சுருளியார் ஜலம் பாய்ந்தது.

Q.—அதற்கு என்ன தீர்வை.

A.—ரூ. 6 முதல் ரூ. 18 வரை.

Q.—தண்ணீர் தீர்வைக்காக எவ்வளவு கொடுக்கிறீர்கள்.

A.—ரூ. 320 ஒரு ஏக்கருக்கு தண்டத் தீர்வை போட்டு வசூல் செய்திருக்கிறார்கள். இது கவர்ன்மெண்டார் வசூல் செய்திருக்கிறார்கள். பெரியார் ஜலம் சுருளியாற்றில் வந்து கலக்கிறது. அது ஜமீன் நிலங்கள் வழியாக போகிறது. குடிகள் சுருளியாற்று ஜலத்தை பாய்ச்சிக் கொள்ள வதற்கு இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த தண்ணீருக்காக தண்டத்தீர்வை போட்டிருக் கிறார்கள்.

Q.— அந்த தண்ணீர் பாயாமல் வேறு தண்ணீரால் விளையுமா ?

A.—சுருளியாற்று தண்ணீர் பாய்ந்தால்தான் விளையும். வேறு பாய்ச்சல் அந்த நிலங்களுக்கு கிடையாது.

Q.—எப்பொழுதும் வழக்கமாக அந்த ஜலம் பாய்ந்து கொண்டிருக்கிறதா ?

A.—ஆமாம்.

Q.—அந்த தண்டத்தீர்வை போட்ட நிலத்திற்கு வேறு ஜலம் பாயுமா ?

A.—பாயும். கிணற்றிலிருந்து இரைத்துப் பாய்ச்சவேண்டும்.

Q.—அந்த நிலத்திற்கு வேறு தீர்வை உண்டா ?

A.—வேறு ஒன்றும் கிடையாது.

Q.—எப்பொழுது அந்த தண்டந்தீர்வை வசூல் செய்தார்கள்.

A.—1333-ம் பசலியில் ரூ. 320 செலுத்தி இருக்கிறோம்.

Q.—ஒரு கிராமத்துக்கு மாத்திரம் அந்த ஜலம் பாய்கிறதா அல்லது நெட்டுக்கு அந்த ஜலம் பாய்கிறதா ?

A.—ஆம். நெட்டுக்குத்தான் அந்த ஜலம் வருகிறது. அதை நாங்கள் என்றைக்கும் பாய்ச்சக் கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். நாங்கள் பாய்ச்சிக்கொள்ளலாம் என்று ஏற்பட்டது. ஒரு பக்கத் தில் இந்த மாதிரி பாய்ச்சினதற்காகத்தான் தண்டந்தீர்வை போட்டார்கள்.

Q.—பெரியார் ஜலம் வருகிறதற்கு முன் நஞ்சையாக இருந்ததே. அவைகளுக்கு பாய்ச்சுகிறதற்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்களா ?

A.—ஆமாம். 1212-ம் பசயிலில் (125 வருஷங்களுக்குமுன்) 1,700 குழி பைசல் ஆகி இருக்கிறது. பூராவும் சர்வே பண்ணி எடுத்தால்கூட அந்த 1,700 குழி இப்பொழுது இருக்காது.

Q.—பெரியார் ஜலம் வருகிறபோது அந்த நிலங்கள் (தண்டந்தீர்வை போட்டது) நஞ்சையாக இருந்தத்ா ? புஞ்சையாக இருந்ததா ?

A.—நஞ்சையாகத்தானிருந்தது. ஜமீன்தாருக்கு நஞ்சைத் தீர்வைதான் கொடுத்திருக்கிறோம். அகவல் கணக்கில் ஜமீன்தார் ஒரு ரிக்கார்டு மூலமாக ஒரு குடியானவருக்கு பட்டா கொடுத்திருக்கிறார்.

Q.—இப்பொழுது அந்த ஜலம் எவ்வளவு நிலத்திற்கு பாய்கிறது ?

A.—சுமார் 1,000 குழி இருக்கும். அதில் சுமார் 30 குழிக்குத்தான் அந்த தண்டத்தீர்வை போட்டார்கள்.

Q.—எதற்காக போடுகிறார்கள் ?

A.—அந்த நிலம் பைசல் நிலம் இல்லை என்று ஆக்ஷேபித்து அந்த தீர்வை போட்டார்கள். ஜமீன்தாரும் நீலத்தீர்வை வாங்குகிறார். சர்க்காரும் தீர்வை வாங்கிறார்கள். பாலையார் என்று ஒரு ஆறு இந்த ஜமீனில் உற்பத்தியாகிறது. அது அயன் கிராமங்களிலும் பிரவேசிக்கிறது. அப்படியி ருந்தும் ஜமீன்தார் அயன் குடிகளிடத்தில் தீர்வை வாங்குகிறதில்லை. அயனில்தான் தீர்வை வாங்கு கிறார்கள். அதே மாதிரி சுருளியாற்றுத் தண்ணீர் ஜமீனில் பிரவேசித்த பாய்கிற நிலங்களுக்கு சர்க்கார் தீர்வை விதிக்ககூடாதென்று ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி தீர்வை வாங்கினதை கண்டித்து தீர்மானம் செய்து அனுப்பி இருக்கிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—ஜமீந்தாருக்கு மிச்சப்படுகிற தொகையை உங்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களா ?

A.—ஜமீன்தாருக்கு ஒரு லக்ஷத்து சொச்ச ரூபாய் வசூலாகிறது. பேஷ்கேஷ், செஸ் முதலியவைகள் ரூ. 25,000 போக பாக்கி 75 ஆயிரத்து சொச்ச ரூபாய் மிஞ்சுகிறதென்று தெரிகிறது. அதில் ஒரு பகுதியை கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கி வைக்கவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்.

Q.—ஒரு பாகம் என்றால் எவ்வளவு உங்கள் அபிப்பிராயம் ?

A.—ஒரு பாதியையாவது ஒதுக்கி வைக்கலாம் என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

Q.—உங்கள் ஜமீனில் கொஞ்சம் பேஷ்கேஸ் செலுத்துகிறார்கள். இதர ஜமீன்களில் சரிபாதி கொடுக்கிறார்களே அவர்களுக்கு என்ன ?

A.—எங்கள் ஜமீன் சம்மந்தப்பட்ட மட்டில்தான் நாங்கள் சொல்லுகிறோம்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—பட்டா மாறுதலுக்கும் இந்த ஜமீன்தார் வந்தபிறகு வரி வசூல் செய்கிறார்களா ?

A.—புது ஆக்டு வந்த பிறகு ரிஜிஸ்ட்ரேஷன் ஆபிசில் பணம் (fees) வாங்குகிறார்களே. அதற்கு பிந்திக் கிடையாது. இந்த ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டுக்கு முந்தியதாக டிரான்ஸ்பர் ஏதாவது இருந்தால் அவைகளுக்கு அந்தப் பணம் கட்டித்தான் மனுப் போடவேண்டும்.

Q.—இந்த பட்டா டிரான்ஸ்பர் விஷயமாக கலெக்டர் அவர்களுக்கு மனுச் செய்துகொள்ள முடியாதா ?

A.—முடியும். ஆனால் பணம் செலவு செய்துதான் ஆகவேண்டும். அதுவும் அதிக நாள் பிடிக்கும்.

Q.—நீங்கள் கொடுத்திருக்கிற மெம்மோராண்டத்தில் காட்டியிருக்கிற வரி சரியான வரிதானே ? அதைப்பற்றி உங்களுக்கு ஆக்ஷேபணை இல்லையே ?

A.—அந்த வரியில் தோட்டம் தீர்வை (பயிர்வாரி தீர்வை) விதிக்காமல் புஞ்சைத் தீர்வை விதிக்கவேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை.

Q.—புஞ்சைக்குப் போட்டிருக்கிற இரண்டு பணம் என்ன ?

A.—அது தீர்வை ஜாஸ்தியில்லை.

Q.—உங்கள் ஆக்ஷேபணை தோட்டக்காலில் குடியானவர்கள் கஷ்டப்பட்டு பயிர் செய்கிறதால் அதிக வரி போடக்கூடாதென்பதுதானே ?

A.—ஆமாம்.

Q.—பக்கத்திலிருக்கிற அயன் கிராமங்களைவிட இது எப்படி இருக்கிறது ?

A.—அயன் கிராமங்களில் தோட்டத்திற்கு அதிக தீர்வை விதிக்கிறதில்லை. புஞ்சைக்கு இரண்டு இரண்டு பணம் இருக்கிறதைப்பற்றி ஆக்ஷேபணை இல்லை. குடிகளால் சொந்தச் செலவில் கண்மாய் வெட்டியும் அல்லது கிணறு வெட்டியும் தண்ணீர் பாய்ச்சி பயிரிட்டு சாகுபடி செய்தால் சொந்தமாக செய்கிற முயற்சிக்கு புஞ்சைத் தீர்வைதான் இருக்கவேண்டும். நஞ்சை தீர்வை போடக்கூடாது. ஜமீந்தார் வேண்டிய மராமத்துக்கள் செய்து அதற்கு வேண்டிய பராமரிப்பு செய்து கொடுத்து பாசன வசதிகள் செய்துகொடுத்தால்தான் ஜாஸ்தி தீர்வை கேட்கலாம். அப்படி இல்லாமல் இருக்கிறபோது ஜாஸ்தி தீர்வை கேட்கக்கூடாதென்பதுதான் எங்கள் கட்சி.

Q.—பஞ்சாயத்து மூலம் என்று சொன்னீர்களே அது என்ன ?

A.—பழைய காலத்தில் 40 குறுக்கம் இருக்கிற குடிகள் இருபது வருஷ காலத்திற்கு குறைவாக இல்லாத உள் புள்ளிகளாக இருக்கிறவர்கள், இன்னும் பெரியதனக்காரர்கள்தான் பஞ்சாயத்துதார்களாக எடுக்கப்படுவார்கள். அவர்கள் 40 குருக்கக்காரர்கள் உள் புள்ளிக்காரர்கள் இவர்கள் கொடுக்க வேண்டிய தீர்வையை வசூல் செய்து ஜமீன்தார் அவர்களுக்கு செலுத்தி வந்திருக்கிறார்கள்.

Q.—பஞ்சாயத்து முறையில் வசூல் செய்தால் தேவலை என்று சொல்லுகிறீர்களா ?

A.—ஆமாம்.

WITNESS CONTINUES :

நிலத்தை ஜப்தி செய்து நடவடிக்கை எடுத்து ஏலத்திற்கு கொண்டுவருகிறபோது ரூ. 25, ரூ. 30 ஜாஸ்தியாகிறது. பஞ்சாயத்தார்கள் மகசூலையோ ஜங்கம சொத்தையோ ஜப்தி செய்து அந்தந்த கிராமத்தில் விற்று தொகையை வசூல் செய்யவேண்டுமென்ற ஏற்பாடு வந்தால் இப்பேற்பட்ட செலவு இனங்கள் இல்லாமலே இருக்கும். இவ்விதமான நன்மையை செய்துகொடுத்தால் கிராம ஜனங்கள் கட்டுப்பாடு உடையவர்களாகவும் ஒற்றுமையாகவும் கஷ்டமில்லாமலும் இருப்பார்கள். ஆகையால் இத்தகைய வசதிகளை செய்து கொடுக்கவேண்டும்.

Q.—கோர்ட்டுகளுக்கு நீங்கள் அடிக்கடி போகிறதில்லையே ?

A.—நாங்கள் கோறுகிறதை ஜமீன்தார் செய்து கொடுத்தால் நாங்கள் அதிகமாக குறை சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் கோறுகிறது என்னவென்றால் எங்கள் ஜமீன்தாருக்கு கொஞ்சம் மனம் இளகவேண்டுமென்பதுதான். அவர்கள் என்னவோ நல்ல மனது உடையவர்கள்தான். ஆனால் அவர்களிடத்தில் நேரில் எங்கள் குறைகளைச் சொல்ல எங்களுக்கு ஹோது இல்லை. அவர்களைக் கண்டு பேசுவது என்பது சுலப சாத்தியமல்ல. அவர்களிடத்தில் நேரில் போய் எங்கள் கஷ்டங்களைச் சொல்ல வசதிகள் அவர்களுடைய சிப்பந்திகள் கொடுக்கிறதில்லை. ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி நாங்கள் ஜமீந்தாரிடத்தில் நேரில் போகாமலிருக்கும் வழியைத் தேடிவிடுவார்கள். அப்படி யாராவது பிடிவாதமாகப்போய் ஆகவேண்டுமென்றால் அவர்களுக்கு எவ்வளவோ இடஞ்சல் ஏற்படும். இதை எல்லாம் உத்தேசித்துத்தான் ஜமீந்தாரிடத்தில் நேரில் போகிறதில்லை. இப்படி எல்லாம் எங்களை கஷ்டத்திற்கு ஆளாக்காமல் எங்கள் குறைகளை இனிமேலாவது எங்கள் ஜமீன்தார் நேரில் கவனித்து அதற்குத் தேவையான பரிகாரம் செய்து கொடுப்பாரானால் அவர்கள் மற்ற ஜமீன்தார்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பார்கள்.

Q.—சர்வே ஆகியிருக்கிறதா ?

A.—1875-ம் வருஷத்தில் ஒரு சர்வே ஆகியிருக்கிறது. அது அனுஷ்டானத்திற்கு வரவில்லை.

Q.—உங்களுக்கு சர்வே அவசியம் என்று சொல்லுகிறீர்களா ?

A.—நிலங்களை அளந்து ஒரு ஒழுங்கு செய்து வைத்துக்கொள்ளவேண்டியது அவசியந்தான். அது ஜமீன்தார் அவர்களுக்கும் குடிகளுக்கும் மிக்க நலமாய் இருக்கும்.

Q.—செட்டில்மெண்டு வேண்டியதில்லையா ?

A.—இப்பொழுது இருக்கிற குறைந்த தீர்வை வீதப்படி செட்டில்மெண்டு செய்துகொடுத்தால் தான் வேண்டும்.

Q.—சமுதாய நிலங்கள் விஷயமாக மனுக்கொடுத்துக் கேட்டுக்கொள்ளவில்லையா ?

A.—நாங்கள் ஒருவிதமான மனுக் கொடுத்து கேட்கவில்லை. ஆனால் சில வருஷங்களுக்குமுன் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி இவைகளைப்பற்றி பேசி ஜமீன்தார் அவர்களுக்கு தெரியப்படுத்தினோம். ஒரு பயனுமில்லை. ஆகையால்தான் மனுக்களை கொடுத்து கேட்கவில்லை.

Q.—ஐம்பது பணம் போடுகிறது ஜாஸ்திதானா ?

A.—கொடிக்காலுக்கு 50 பணம் போடுகிறது ஜாஸ்திதான். அந்த நிலத்திற்கு ஏற்கனவே நஞ்சை தீர்வை செலுத்துகிறோம். அந்த நஞ்சையில்தான் கொடிக்கால் சாகுபடி செய்கிறோம். எங்கள் செலவில் எங்கள் சிரமத்தைக்கொண்டு சாகுபடி செய்கிறதற்கு இவ்வளவு தீர்வை போடுகிறது நியாயமில்லை. தவிரவும் விவசாயத்திற்கு வேண்டிய எரு, தழை, கொளை முதலியவைகளை முன்காலத்தில் கொடுத்தபோது ஒரு சுதந்திரமாக கொடுத்திருக்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்னால் இந்தக் கொளை சம்பந்தமாக குடிகள் பேரில் ஒரு கேஸ் எடுத்து அதில் கோர்ட்டு காவலும் காவல் தண்டனை கொடுத்தார்கள். அப்பீல் செய்ததில் அந்தக் கொளையை எடுத்துக்கொள்ளுகிறதற்கு குடிகளுக்கு உரிமை இருக்கிறதென்று தீர்ப்பு செய்து விடுதலை செய்திருக்கிறார்கள் (**files copies of judgment, etc.**).

Q.—கொளை, எரு முதலியவைகள் விவசாயத்திற்கு முக்கியமானவை. தவிர வேறு சாதனங்களும் அவசியம். ஆனால் அவைகளை சேகரிக்கிறதிற்கு லைஸென்ஸ் வாங்கிக்கொள்ளவேண்டும். அடவூரிலிருந்து வந்து ஜமீனில் நேரில் வாங்கவேண்டும். காருக்கும் சாப்பாட்டு செலவுக்கும் ரூ. 1, ரூ. 1–8–0 செலவழித்து லைஸென்ஸுக்கும் ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டுவந்தால் காவல்காரர்கள் அநேகம் விதத்தில் இடையூறு செய்துவருகிறார்கள். அந்தந்த கிராமங்களில் விவசாயத்திற்கு வேண்டிய கொளை முதலியவைகள் இதர சாதனங்கள் தேவையானவைகளை எடுத்துக் கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

Witness No. 228. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. Suruliandy of Bodinayakkanur.

கொளை, தழை முதலிய எருக்கள், சிறு சரக்குகள் என்று (மைனர் புரொடியூஸ்) என்றும் லைசென்சு எடுக்க வேண்டுமென்றும் அவைகளை குத்தகைக்கு விடுகிறார்கள். சில்லரை மகசூல் மாதிரி குத்தகைக்கு விடுகிறார்கள். மேல் மலையிலிருந்து நார், ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் மிருகத்தோல், கடுகு இவைகள் திருவாங்கூர் மலையிலிருந்து இறங்கினால்கூட தீர்வை வாங்குகிறார்கள். எங்கள் ஜமீன் மலையிலிருந்து வரக்கூடியதற்கும் லைசென்சு வாங்க வேண்டுமென்று நிர்பந்திக்கிறார்கள். எங்கள் ஏலத் தோட்டத்திலிருந்து வரக்கூடிய புதிதாக செய்யப்பட்ட சொளகு முதலியவைகளைக் கொண்டுவந்தால் அதற்கும் தீர்வை வாங்கி விடுகிறார்கள் (**files counterfoil of receipts books**)

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—மாடுகள் கொண்டு போகிறதற்கு வரி வாங்குகிறார்கள் என்று சொன்னீர்களே அடிமாடுகளுக்குத்தானே ?

A.—அடிமாடுகளுக்காக கொண்டுபோகிறதாக இருக்கிறவைகளுக்குத்தான் வாங்குகிறதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் குடிகள் அக்கம்பக்கங்களிலிருக்கிற இடங்களுக்கு தோட்டங்களுக்கு கொண்டுபோகிற மாடுகளுக்குகூட வரி கொடுக்கவேண்டி இருக்கிறது. அது கூடாதென்று தான் சொல்லுகிறோம்.

Q.—கிஸ்தி வசூல் சம்பந்தமாக ஏதாவது சொல்லவேண்டுமா ?

A.—கிராம முன்சீப், கர்ணம், இவர்களுக்குத்தான் சம்பளம். வசூல்தார் எனது ஜமீனில் சிலரை நியமிக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கிடையாது. பட்டாவுக்கு இவ்வளவு என்று வாங்குகிறார்கள். பட்டாவுக்குத் தகுந்தபடி 4 அணா முதல் 2 ரூ. வரையில் வாங்குகிறார்கள்.

Q.—இதை பட்டாவில் சேர்க்கிறதில்லையே ?

A.—இல்லை.

Q.—இதைப்பற்றி ஜமீன்தார் அவர்களிடத்தில் சொல்லுகிறதுதானே ?

A.—நாங்கள் இதைப்பற்றி சொல்லி இருக்கிறோம். இன்னம் இதர இடங்களில் இந்த மாதிரித் தான் வசூல் செய்கிறார்கள். நாங்கள் ஒன்றும் புதிதாய் செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்தமாதிரி வசூல் கூடாது. இவைகள்தான் நான் சொல்லிக்கொள்ளவேண்டியது.

Witness No. 229. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. Nithyanantham, Bodinayakkanur.

முன்னால் மகாநாடு நடத்தி கவர்மெண்டு 12 கேள்விகளுக்கு மகாநாட்டின் வாயிலாக பதில் சொல்லியிருக்கிறோம். இந்த கமிட்டியார் முன்பு சில விஷயங்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். நஞ்சைக்கும் புஞ்சைக்கும் 2 வரிதான் போடவேண்டும். நஞ்சை என்றால் ஒரே விதமாக இருக்கவேண்டும். புஞ்சை என்றால் ஒரே விதமாக இருக்க வேண்டும். விவசாயிகள் 2 வட்டி 3 வட்டிக்கு கடன் வாங்கி, கிணறு வெட்டி, கவலைபோட்டு இறைத்து ஓயாது வேலை செய்து கஷ்டப்பட்டு ஏதாவது செலவழிக்கின்ற பணத்திற்கும், படுகிற சிரமத்திற்கும் ஏதாவது ஊதியம் பெறுகிறதற்கு வழி தேடினால் அந்த தோட்டத்திற்கு 7 பணத்திலிருந்து 15 பணம் முதல் 50 பணம் வரையில் தீர்வை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja:

Q.—இதைக்காட்டுகிறதற்கு பட்டா கொண்டுவந்திருக்கிறீர்களா ?

A.—ஜமீன்தார் அவர்களைக் கேட்டால் அவரே ஒப்புக்கொண்டுவிடுவார். கேழ்வரகுக்கும் சோளத்திற்கும் 7 பணம், புகையிலைக்கு 12 பணம், வெங்காயம், மஞ்சள் இவைகளுக்கு 10 பணம், கத்திரி, அரைக்கீரை போட்டால் 5 பணம். கிணற்றுப் பாய்ச்சலில் கொடிக்கால் சிலர் போட்டால் 10 பணத்திலிருந்து 50 பணம் வரையில் தீர்வை போடுகிறார்கள். புகையிலை தோட்டமாக இருந்தால் ஒரு குளிக்கு ஒரு வருஷத்திற்கு 12 பணம், புகையிலை போடாத தோட்டமாக இருந்தால் 7 பணம் ஒரு வருஷம் புகையிலை போட்டால் போதும். எப்பொழுதும் அந்த நிலத்திற்கு அதே தீர்வைதான். இந்த மாதிரி வரி போடக்கூடாதென்று விவசாயிகள் சம்மரி கேஸ் போட்டு அநேகம் ஜெயித்திருக்கிறார்கள். ஒரு ஜட்ஜ்மெண்டில் $3\frac{1}{2}$ பணம், இன்னொன்றில் $2\frac{1}{2}$ பணம் தீர்ப்பு ஆகியிருக்கிறது. சம்மரி சூட்ஸ் போட்டதிலிருந்து ஜமீனில் இருக்கிற கஷ்டம் என்னவென்றால் குடியானவர்கள் அனேகமாக இன்சால்வென்ட்ஸ் ஆகிவிடுகிறார்கள். இந்த மாதிரி முறை ரொம்ப அநீதியானது. இந்த மாதிரி அநீதி அயனில் இல்லை. இதை நீண்ட காலமாக நூற்றுக்கணக்கான வருஷங்களாக வாங்கிக்கொண்டு வருகிறார்கள் இதனால் விவசாயிகளுக்கு பெரியகஷ்டமும் சங்கடமும் ஏற்படுகிறது. அடுத்தாற்போல் எதாவது ஏகசால் பட்டா இருந்து களம் பட்டா செய்துகொள்ளவேண்டுமென்றால் நஜர் காணிக்கை கொடுத்துத்தான் தீரவேண்டும். காணிக்கை வாங்காமல் கொடுக்கிறதில்லை 10 வருஷமோ, 12 வருஷமோ ஒரு மனிதன் ஏகசால் பட்டா வாங்கி ஏகசாலாக உழுதுகொண்டிருந்தாலும் கூட மூன்றாவது மனிதன் பணம் கொடுத்தவுடனே அவனுக்கு உடனே பட்டா மாற்றிவிடுகிறார்கள். கோர்ட்டுக்குப் போய் அந்த நஜர் வாங்கக்கூடாதென்று தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது **(Files Judgment copy)**. நஜர் வாங்குகிறதென்பது ரொம்ப அநீதியான காரியம்.

Q.—நஜர் வாங்கக்கூடாதென்று தீர்ப்பு ஆகி இருக்கிறது. நீங்கள் பட்டா கேட்டால் உங்களிடத்தில் நஜர் வாங்கக்கூடாதென்று தீர்ப்பு ஆகிவிட்டது, பட்டாகொடுக்கமாட்டேன் என்று சொன்னால் என்ன செய்கிறது ?

A.—நஜர் வாங்காமல் பட்டா கொடுக்கும்படி செய்யவேண்டுமென்பது தான் எங்கள் கோறிக்கை. நஜர் வாங்கும் வழக்கத்தை அடியோடு போக்கவேண்டியது.

Q.—தெரிந்து வாங்குகிறதை நிருத்திவிட்டு தெரியாமல் வாங்கினால் என்ன செய்கிறது ?

A.—தெரியாமல்வாங்க முடியாது. குண்டேரி கிராமத்தில் மலையில் 500 குழி. குழி ஒன்றுக்கு 42 ரூபாய் வீதம் நஜர் வாங்கிக்கொண்டு ஒரு புள்ளிக்கு சமீபத்தில் விடப்பட்டிருக்கிறது. அனேகம் குடிகள் தங்களுக்கு நிலம் விடவேண்டுமென்று ஜமீன்தாருக்கு பெடிஷன் செய்தும் சும்மா விடமுடியாதென்று சொல்லிவிட்டார்கள். எங்கள் ஜமீனில் குடிகள் போய் எதாவது கேட்டுக்கொள்ளவேண்டுமென்றால் பெரிய கஷ்டம். நேரில் குறைகளை சொல்லிக்கொள்ள முடியாது. வீட்டிலிருந்து புறப்படுகிறபோது ஜமீன்தாரிடத்தில் சண்டை போட்டு வாங்கிக்கொண்டு வரவேண்டி புரப்பட்டு போனால் ஆஜாரத்திற்குப் போன உடனே பேர்பாதி அந்த வேகம் குறைந்து போகும். நீங்கள் போனாலும் $2\frac{1}{2}$ மணி நேரம் காத்துத்தான் இருக்வேண்டும். இந்த மாதிரி போய் காத்திருந்தாலும் காவல்காரர்கள் அதட்டி மிரட்டி அனுப்பி விடுகிறார்கள். அதையும் மீறி போனால் ஒருசமாசாரமும் சொல்ல முடிகிறதில்லை. நான் அடிக்கடி ஜமீன்தாரை போய்பார்க்கிறதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

Q.—குடியானவர்களும், விவசாயிகளும் எல்லோரும் ஜமீன்தாரைப்பார்த்து கஷ்டங்களை தெரிவித்துக்கொள்ளுகிறதற்கு சௌகரியம் வேண்டுமென்று கேட்கிறீர்களா ?

A.—ஆமாம்.

Mr. B. Venkatachalam Pillai:

Q.—விவசாயிகள் சங்கம் எவ்வளவு நாளாக ஏற்பட்டிருக்கிறது ?

A.—எட்டு, ஒன்பது மாத காலமாக ஏற்பட்டிருக்கிறது ?

Q.—சங்கத்தின் மூலமாகப் போனால் சௌகரியமாகப்பார்க்க வசதி ஏற்படுமே ?

A.—சமீப காலமாக ஜமீந்தார் அவர்கள், மதராசிலேதான் இருக்கிறார்கள்.

மேல்மலை துடர்ச்சியில் மரங்கள் முதலியவைகள் வெட்டிக்கொள்ளலாம் என்று 1863-ம் வருஷத்தில் கொடுவல் அகவல் ரிகார்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. குடிகள் வெட்டிக்கொள்ளலாம் என்று அகவல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு குச்சிகூட தொடமுடியாது. விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளுக்கோ அல்லது விறகு வெட்டிகொள்ளுவதற்கோ முடியாது. ஊரில் தீப்பிடித்து வெந்து விட்டால் கைமரம், கொம்பு முதலியவைகளை வெட்டிக்கொள்ளலாம் என்ற வழக்கம் 20 வருஷத்திற்கு முன்னால் தாராளமாக நடந்தது. இப்பொழுது அது கிடையவே கிடையாது. ஒரு பச்சை மரத்திலிருக்கிற ஒரு குச்சியை கொண்டுவந்துவிட்டால் உடனே பாரஸ்டுகாரர்கள் கைப்பிடியாய்க் கொண்டுபோவார்கள். அரண்மனையில் அபராதம் போட்டுவிடுவார்கள்.

Q.—அவர்களுக்கு தீர்வை கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்ளலாமா ?

A.—ஆம்.

Q.—தீர்வை எப்படி ?

A.—ஒரு கட்டுக்கு ஒரு ஆணுக்கு ஒரு அணா, பெண்ணுக்கு $\frac{1}{2}$ அணா, ஒரு வண்டிக்கு $\frac{1}{2}$ ரூ. ஏற்பட்டிருக்கிறது.

Q.—தீர்வை வாங்கக்கூடாதென்று ஏன் கோர்ட்டுக்குப் போகவில்லை ?

A.—பணச் செலவு ஜாஸ்தியாக ஏற்படுகிறதால்தான் நாங்கள் கோர்ட்டுக்குப் போக முடிவதில்லை.

ஜப்தி முறை மிக கஷ்டமாக இருக்கிறதால் கண்டிக்கத்தக்கதாய் இருக்கிறது. விளைவு ஆகிற போது ஜப்தி எடுக்க வருகிறார்கள். அதற்கு சட்டம் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். கலெக்டரிடம் இருந்து ஜப்தி வரவேண்டிய முறை இருக்கிறது. பாரஸ்டுகாரர்களைக்கொண்டும் போலீஸ்காரர்களைக்கொண்டும் ஜப்தி எடுக்கிறார்கள். அறுவடைக்கு லாயக்காக இருக்கிற சமயத்தில் ஜப்தி எடுப்பதால் மகசூலை குடியானவர்கள் கண்டு முதல் செய்ய முடியாமல் போகிறது. அதனால் மகசூல்

நஷ்டமாகிறது. அதை அறுவடை செய்யவேண்டுமென்று யாராவது கேட்டால் இப்போ முடியாது அப்போ முடியாதென்று சாக்குப் போக்கு சொல்லுகிறார்கள். ஜமீன் உத்தியோகஸ்தர்களுக்கு தயவு வருகிறபோதுதான் அறுவடை செய்யமுடியும். அப்படி அவர்கள் அறுவடைக்கு வருகிறதற்கும் சம்திங் கொடுக்கவேண்டும். இது எல்லாம் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. இது எந்த சட்டப்படி எடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—தீர்வை போடாவிட்டால் அவர்களுக்கு பணம் எப்படி வசூல் ஆகிறது ?

A.—தவசத்தை ஜப்தி செய்யலாம் அல்லது கோர்ட்டுக்குப் போய் நிலத்தை ஜப்தி செய்யலாம். ஆடு மாடு ஜங்கம சொத்து இவைகளை ஜப்தி செய்யக்கூடாது.

Q.—உங்களுக்கு 10 எக்கர் நிலமிருந்தால் தீர்வை பாக்கிக்காக எவ்வளவு எடுத்துக்கொள்ளுகிறது ?

A.—ஒரு நம்பரில் எவ்வளவு எக்ஸ்டண்ட் தீர்வைக்கு எலம் போட முடியுமோ அவ்வளவுதான் போடவேண்டும்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—மகசூல் ஜப்தி வைத்துக்கொள்ளலாமா ?

A.—ஆம். மகசூல் ஜப்தி வைத்துக்கொள்ளலாம்.

Q.—வீட்டுக்குள் உள்ள நெல்லை ஜப்தி செய்யலாமா ?

A.—களத்தில் ஜப்தி செய்யலாம். நாங்கள் செலுத்தவேண்டியதற்கு எவ்வளவு எடுத்துக் கொள்ளக்கூடுமோ அவ்வளவைதான் ஜப்தி செய்யலாம். அதற்குமேல் ஜப்தி செய்யக்கூடாது. விவசாயக் கருவிகளை ஜப்தி செய்யக்கூடாது.

Q.—இந்தக் கஷ்டங்களை சொல்லுகிறதற்கு நீங்கள் எவ்வளவு பேர்கள் ஜமீன்தார் இடத்தில் போய் இருப்பீர்கள் ?

A.—நாங்கள் சமீபத்தில் ஒருவரும் போகவில்லை.

Q.—நீங்கள் எப்பொழுதாவது போய் தீர்வை வஜா கேட்டிருக்கிறீர்களா ?

A.— இல்லை.

Q.— மலைக்குப்போய் வேண்டிய தழை, கொளை முதலியவைகள் எடுத்துக்கொள்ளுவதற்கு லைசென்ஸ் பீஸ் வாங்குகிறதைப்பற்றி நீங்கள் ஆக்ஷேபனை செய்திருக்கிறீர்களா ?

A.—குடிகள் செய்திருக்கிறார்கள். நான் போகவில்லை.

Q.—ஜமீன்ஏரியாவில் உங்களுக்கு எவ்வளவு நிலமிருக்கிறது ?

A.— எனக்கு 10 எக்கர் இருக்கிறது. போடி ஜமீனில் இல்லை. கொட்டகுடியில் இருக்கிறது. கொட்டகுடி போடி ஜமீனில் ஒரு பகுதி. அது இப்பொழுது அளகண்ணன் செட்டியார் வசமிருக்கிறது.

Q.— அந்த 10 எக்கர் நிலம் மலையிலா ?

A.—ஆமாம்.

Q.—என் சாகுபடி செய்கிறீர்கள் ?

A.—நான் ஒன்றும் சாகுபடி செய்யவில்லை.

Q.—நீங்கள் நேரடியாக விவசாயம் செய்கிறவர் இல்லையே ?

A.—இல்லை.

Q.—நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் ?

A.—வைத்தியம் செய்கிறேன்.

Q.—விவசாயிகள் குறைகளை எடுத்து சொல்லுவதற்காக ஏதாவது சங்கம் வைத்திருக்கிறீர்களா ?

A.—ஆமாம். எனக்கு அதே வேலைதான்.

Q.—விவசாயிகளுக்கு நீங்கள் உதவி செய்கிறதுண்டா ?

A.—ஆமாம். அவர்களுக்கு என்ன என்ன சௌகரியம் வேண்டியிருக்கிறதோ அதைச்செய்ய வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

Q.—விவசாயிகளுக்கு மருந்து கொடுத்து உதவி செய்கிறீர்களா என்ன ?

A.—விவசாயிகள் குறைகளைப்பற்றியும் அதற்கு வேண்டிய பிரசாரம் செய்வதும் அவர்களுக்கு எந்தெந்த வகையில் அனுகூலம் செய்யமுடியுமோ அதைச் செய்கிறதும்தான் என் முக்கியமான வேலை. இதோடுகூட குடிகளுக்கு வைத்தியமும் செய்கிறேன்.

Q.—நீங்கள் விவசாயம் நேரில் செய்யாததால் அவர்களுடைய கஷ்ட நஷ்டங்கள் உங்களுக்கு நேரில் தெரியாதல்லவா ?

A.—நான் நேரில் விவசாயம் செய்யாமல் போனாலும் அவர்கள் கஷ்டம் நஷ்டம் எல்லாம் எனக்கு நன்றாய்த்தெரியும்.

Q.—நீங்கள் அடிக்கடி கிராமங்களுக்கு போய் விவசாயிகள் கஷ்டங்களை தெரிந்துகொள்வதுதான் வேலையா ?

A.—ஆமாம்.

Q.—நீங்கள் **Bodi Agriculturists' Association President** தானே ?

A.—ஆமாம்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—நீங்கள் விவசாயிகளுக்கு உதவி செய்கிறேன் என்று சொன்னீர்கள். அந்த உதவியை நீங்கள் ஜமீன்தாரிடத்தில் நேரில் போய் என் குடிகளுக்கு இந்த இந்த கஷ்டங்கள் இருக்கிறதென்று சொல்லிக்கொள்ளக்கூடாது ?

A.—தற்காலமாக ஜமீன்தார் ஊரில் இல்லை. அதற்கு முன் சம்மரி சூட்கள் போட்டும் கவனிக்காததால் காங்கிரஸ் கமிட்டியில் இருக்கிறபோது சில சந்தர்ப்பங்களில் போய் முயற்சி செய்தும் சொல்கிறதற்கு முடிகிறதில்லை. நான் காங்கிரஸ் கக்ஷியில் இருந்ததாலும் ஜமீன்தார் அவர்கள் அதற்கு எதிராக இருந்ததாலும் நேரில் போய் சொல்லிக்கொள்ள முடியவில்லை.

Q.—காங்கிரஸில் இருந்ததால் சொல்லிக்கொள்ள முடியவில்லை என்று சொல்லுகிறீர்களே விவசாயிகள் காங்கிரசில் இருந்தால் ஏன் ஜமீன்தாரிடத்தில் சொல்லிக்கொள்ளக்கூடாதென்று கேட்கிறேன் ?

A.—அப்படி ஒன்றுமில்லை. அவர்களிடத்தில் போய் சொல்ல சந்தர்ப்பமே கிடைக்கிறதில்லை. அவர்களிடத்தில் நாங்கள் போய் சொன்னால் நாங்கள் சொல்லுகிறதை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களிடத்தில் அலைந்து திரிந்து எவ்வளவு தரம் போனாலும் சந்தர்ப்பம் கிடைக்கிறதில்லை. அப்படி சந்தர்ப்பம் கிடைத்துப் போனாலும் அவர்கள் அனுகூலம் செய்வார்களோ செய்யமாட்டார்களோ என்ற நிச்சயமில்லை. அதனால்தான் நாங்கள் சொல்லிக்கொள்ள முடிகிறதில்லை.

Q.—ஜமீன்தாரைப் போய் குடிகளைப் பார்க்கக்கூடாதென்று சட்டம் இருக்கிறதா ?
A.—அப்படி ஒன்றுமில்லை.

Q.—அப்படி இருக்க எல்லோரும் போய் தாராளமாக பார்க்கலாமே ?
A.—ஆனாலும் சகஜமாகப் போய் பார்க்கமுடிகிறதில்லை.

Q.—நீங்கள் இதுவரையில் பிரயத்தினம் செய்யவில்லையே ?
A.—பிரயத்தினம் செய்தும் பார்க்கமுடியாத நிலைமையிலிருக்கிறோம்.

Q.—நிலங்களை தரமாக பிரித்து இருக்கிறது ரீ-செட்டில்மென்ட்க்கு முந்தித்தானே ?
A.—ரொம்ப நாளாக இருக்கிறது.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—நீங்கள் கிராமத்தில்தானே குடி இருக்கிறீர்கள் ?
A.—நான் போடியில் குடியிருக்கிறேன்.

Q.—நீங்கள் கிராமங்களில் போய் வைத்தியம் செய்கிறதுண்டா ?
A.—ஆமாம் நான் கிராம ஜனங்களிடத்தில் அடிக்கடி பழகுகிறதுண்டு. கிராம வாசிகள் எல்லோரும் விவசாயிகள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—ஜமீனில் கொளைக்கும், விறகுக்கும் இனமாக பாஸ் கொடுக்கிறதில்லையே ?
A.—இனமாக பாஸ் பணக்காரர்களுக்கு இருக்கிறதென்று கேள்வி. ஆனால் ஏழைகள் அரண்மனையிலிருந்து சீட்டு வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும்.

Q.—புகையிலை போட்டால் ஜாஸ்தி தீர்வை போடுகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே அதற்கு என்ன போடவேண்டும் ?
A.—புஞ்சை தீர்வைதான் போடவேண்டுமென்று சொல்லுகிறோம். ஜனங்கள் சொந்தப் பணத்தைக்கொண்டு கிணறு வெட்டி கஷ்டப்பட்டுத்தான் சாகுபடி செய்கிறார்கள். அதனால்தான் புஞ்சைத் தீர்வைதான் போடவேண்டுமென்று சொல்லுகிறோம்.

Q.—புகையிலை ஒரு கெடுதலான வஸ்து ஜனங்களுக்கு சௌகரியமான வஸ்து இல்லை. அது வியாபார நன்மைக்காக செய்கிற சாகுபடி தானே ?
A.—எல்லா ஜனங்களும் அதை அனேக விதமாக உபயோகப்படுத்துகிறார்கள். வியாபாரத்திற்காக பயிர் செய்வதாக வைத்துக்கொண்டாலும் ஏராளமாக பணத்தைச் செலவு செய்து கஷ்டப்பட்டு உண்டாக்குகிற பயிர்தான் அது.

Q.—அதிக லாபத்தை உத்தேசித்துத் தானே இதைப் பயிர் செய்கிறது ?
A.—ஏதோ சொல்ப லாபம் கிடைக்கிறது. ஜனங்கள் அதை உபயோகப்படுத்துகிறார்கள். அதனால்தான் அதைப் பயிர் செய்கிறார்கள். அப்படிப் பார்த்தால் எல்லாப் புஞ்சை தானியமும் தான் வியாபாரம் ஆகிறது. அவைகளுக்கும் உயர்ந்த தீர்வை போட்டிருக்கலாமே.

Q.—ஜனங்களுக்கு பாதகமான வஸ்துக்களுக்கும் நன்மையான வஸ்துக்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டாயா ?
A.—புகையிலை பாதகமான சாமான்தான். ரொம்ப பாதகத்தை விளைவிக்கக்கூடிய சாமான் என்று சொல்லமுடியாது. ஆனாலும் ஜனங்கள் அதை ஜாஸ்தி உபயோகிக்கிறார்கள். ஆகையால் அதை சாகுபடி செய்கிறார்கள். குடிகளுக்கு அதில் அதிக ஆதாயமில்லை. அதை எடுத்துவிட குடிகள் சம்மதிக்கமாட்டார்கள்.

Q.—குடிகளுக்கு ஆதாயமிருக்கிற வகையில் ஜமீன்தாருக்கு ஆதாயம் கிடைக்கவேண்டாமா ?
A.—குடியானவர்களுக்கு வேறு விதமான வரும்படி ஒன்றும் கிடையாது ஜமீன்தாருக்கு எவ்வளவு வரையில் வரும்படி கிடைக்கிறது குடியானவர்கள் அவர்கள் காலக்ஷேபத்திற்கு வரும்படி கிடைக்கக்கூடிய வகையில் பயிர் செய்தால் ஏதோ அந்த வகையில் சிறிது ஆதாயம் கிடைக்கிறதென்று ஜாஸ்தி வரி போடக்கூடாது. இன்றும் எங்கள் ஜமீன்தாரியில் ஆடு மாடுகள் விற்பனை விஷயத்திலும் தரகு குத்தகைக்கு விடுகிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPUR :

Q.—உங்களுக்கு ஜமீனில் இருக்கிற தீர்வை ரேட்டை திருத்தி அமைக்கவேண்டுமென்று சொல்லுயிருக்கிறீர்களே அது ரயத்துவாரி கிராமத்தில் இருக்கிற விகிதப்படி வரவேண்டுமென்று நினைக்கிறீர்களா ? ஜமீன்தாருக்கு வரும்படி குறைந்து போகாதா ?
A.—ஜமீன்தார் 95,000 ரூபாய் செஸ் இல்லாமல் வசூலாகிறது. 13,000 சொச்ச ரூபாய் சர்க்காருக்கு வாரம் கொடுக்கிறார்கள். அது தவிர ஏராளமாக பல இனங்களில் ஜமீன்தாருக்கு வரவு இருக்கிறது. ஆகையால் நிலத் தீர்வையை குறைத்துத்தான் ஆகவேண்டும்.

Q.—ஜமீன்தாருக்கு வருகிற வரும்படியில் 3-ல் ஒரு பங்கோ அல்லது அதிகமாகவோ பேஸ்கஸ் ஆக கட்டவேண்டியிருக்கிறதென்று தெரியுமா ?
A.—ஜமீன்தாருக்கு 95,000 ரூபாய்க்கு மேலேயே வசூலாகிறது. 13,000 சொச்சம் ரூபாய்தான் பேஸ்கஸ் செலுத்துகிறார். கிஸ்தி ஜாஸ்தியாக வசூல் செய்கிறதால், பேஸ்கஸ் ஜாஸ்தியாக அவர் செலுத்தவில்லை.

இதற்கிடையில் ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் வேண்டிய வசதிகளை செய்துகொள்ளவேண்டுமானால் ஒரு ஏஜென்ட் அதாவது மதராஸ் கவர்ன்மென்ட் சேர்வன்டாக இருந்த ஒரு ஏஜென்ட், இருக்கவேண்டும். ஜமீன்தாரிடத்திலிருந்து சம்பளத்தை வாங்கி அவர்களுக்கு கொடுத்து அவர்கள் மூலமாக எங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டிய வழி இருக்கும்படி செய்துகொடுக்க வேண்டும்.

Witness No. 230. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. S. P. Hussain, Municipal Councillor, Bodinayakanur.

இப்பொழுது நான் கொடுக்கிற ஸ்டேட்மெண்டை போடி ஜமீன்தாரிக்கும் கொட்டகுடி ஜமீன்தாரிக்குமாக ரிகார்டு செய்து கொள்ளவேண்டும். போடி ஜமீன் சர்வே ஆகாமல் இருக்கிறது. முதலாவதாக அதை சர்வே செய்யவேண்டும். அது மேற்கு மலை தொடர்ச்சி அடிவாரத்திலிருக்கிறது. முனிசிபல் லிமிட்க்கும் மலைக்கும் 10 மையில் தூரம் இருக்கிறது. ஜமீனில் இருக்கிற கணக்கு பைமாஷ் கணக்கு. அதன்படி ஒரு நம்பர் எவ்வளவோ விஸ்தீரணம் இருக்கிறது. திருவாங்கூர் மலை அடியில் இருக்கிற பூமியை ஜமீன்தார் இஷ்டப்பட்டால் முனிசிபல் லிமிட்டுக்கு ஒரு மையில் தூரத்தில் இருப்பதாக காட்டலாம். பைமாஷ் நெ. 10 மையில் தூரத்திற்கு ஓம்ர நம்பராக இருக்கும். ஜமீன்தார் இஷ்டப்பட்டால் தூரத்தில் இருக்கிற நிலத்தை முனிசிபல் லிமிட்டிலோ அல்லது பக்கத்தில் இருக்கிறதாகவோ காட்டலாம். ஆகையால் சர்வே செய்யவேண்டியது ரொம்ப அவசியம். அது இரண்டுபேர்களுக்கும் அனுகூலம். கிஸ்தி விஷயமாக இப்பொழுது இருக்கிற கிஸ்தி அமுலில் இல்லாமல் போய்விடுமாறு எல்லோருக்கும் ஒருவிதமான ரெண்ட்ஸ் ஏற்படும். புகையிலைக்கு ஒரு தீர்வை, நெல்லுக்கு ஒரு தீர்வை என்பதை எடுத்துவிட்டு தரம் வாரியாக தீர்வையை ஏற்படுத்தவேண்டும். குடியானவர்கள் கிணறு வெட்டி தங்களுடைய கஷ்டத்தின்பேரில் விவசாயம் செய்கிற பூமிக்கு புஞ்சைத் தீர்வைக்குமேல் தோட்டத்தீர்வை போட்டு அதிக தீர்வை வசூல் செய்கிறார்கள். அது ரத்தாக வேண்டும். இன்னும் சில தீர்வைகள், சட்டவிரோதமான தீர்வைகள், வசூல் செய்கிறார்கள். திருவாங்கூர் எஸ்டேட்டில் வேலை செய்கிற கூலிகளுக்கும், கங்காணிகளுக்கும் கூட ஜமீனில் ஒரு விதம் வரி போடுகிறார்கள். அந்த பூமியில் விவசாயம் செய்து சாப்பிடும் சாமான்கள் ஏதாவது கொண்டுவந்தால் ஒரு டேடி வசூல் செய்கிறார்கள். கொட்டகுடி ஜமீனிலும் போடி ஜமீனிலும் கிழங்கு, தோல் முதலியவைகள் கொண்டுவருகிறதற்கு ஒரு தீர்வை வசூல் செய்கிறார்கள். சில்லரை மகசூலுக்குத்தான் தீர்வை வசூல் செய்கிறதற்கு உரிமை இருக்கிறது. தவிர போடி ஜமீனுக்கு 10 மையிலுக்கு அப்பால் இருந்து வந்து ஆக வேண்டியிருக்கிறது. வண்டியில் பூட்டி இருக்கிற மாடுகள் ரோட்டில்தான் போகிறது. அதற்கு புல்வரி தீர்வை என்று வசூல் செய்கிறார்கள் (பைல்ஸ் எ ரிசீட்). பப்ளிக் ரோட்டில் போகிற வண்டிமாடுகளுக்கு தீர்வை வாங்குகிறது நியாயமல்ல. தவிறவும் பொதிமாடுகளுக்கு தீர்வை வாங்குகிறார்கள். அதற்கு காரணம் சொல்லுகிறார்கள். அவைகளை அவிழ்த்து விட்டால் பக்கத்திலிருக்கிற காடுகளில் போய் மேயுமாம், அதற்காக தீர்வை வசூல் செய்கிறோம் என்கிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—இந்த தீர்வை யார் போட்டது ?

A.—கொட்டகுடி ஜமீன்தார் அயன் கிராமங்களில் கல் கட்டிடங்களுக்கு எடுக்கிறதற்கு ஒரு வண்டி ஒன்றுக்கு ஒரு அணாகூட தீர்வை கிடையாது. ரயத்துக்கள் மனுக்கொடுத்தால் 100 வண்டி, 200 வண்டிகள் எடுத்துக்கொள்ளலாம். போடி ஜமீனில் ஒரு வண்டி பாரத்திற்கு 12 அணா கட்டவேண்டும், எனக்கு சுமார் 40 வயது ஆகிறது. இந்த 40 வருஷத்திற்குள்ளாக தண்ணீர் பாய்ச்சல் மராமத்து விஷயத்தில் எப்பொழுதாவது 100 ரூபாக்கு மேலநடந்ததாக தெரியவில்லை.

The Zamindar of Mirzapuram :

Q.—இந்த விஷயமாக மனுக்கொடுத்து இருக்கிறீர்களா ?

A.—குடியானவர்கள் மனுக்கொடுத்து நடவடிக்கை நடத்துகிறார்கள். செல்வாக்குள்ள குடியானவர்களுக்கு மலையில் 10 எக்கர் நிலத்தை கைகாட்டிவிடுகிறார்கள். அவர்கள் சும்மா இருந்துவிடுகிறார்கள்.

Q.—டிவிஷனல் ஆபீசருக்கு மனுக்கொடுத்து நடவடிக்கை நடத்தி இருக்கிறீர்களா ?

A.—அளகணன் செட்டியார் நடவடிக்கை நடத்தி இருக்கிறார்கள். இதர கிராமங்களில் இருக்கிற ஜனங்கள் மனுக்கொடுத்திருக்கிறார்களோ என்னமோ எனக்குத் தெரியாது.

தவிரவும் விவசாயத்திற்கு லாயக்கான பூமிகளை நஜர் வாங்கிக்கொண்டு குடியானவர்களுக்கு ஜாரி செய்கிறதென்ற சிஸ்டம் போகவேண்டும். பணம் ஜாஸ்தியாக கொடுக்கிற பட்டாதாருக்கு ஜாரிசெய்து கொடுக்கிறது வழக்கமாக இருக்கிறது. மற்ற ரயத்துகளுக்கு காலக்ஷேபத்திற்கு தகுந்த பூமி கிடைக்கிறது துர்லபமாக இருக்கிறது. ஆகையால்தான் இந்த நஜர் வாங்கிக்கொண்டு கொடுக்கிற சிஸ்டம் போகவேண்டுமென்று சொல்லுகிறேன்.

கண்மாயில் இருக்கிற பாசியை ஜமீன்தார் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதில் 400, 500 ரூபாய் வருகிறது. ஆகையால் அவைகளை மராமத்து செய்கிறதில்லை. மழை இல்லாத அருந்தல் காலத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் நஞ்சைதான் விளையும். மற்ற நிலங்கள் தரிசாக இருக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. செட்டில்மெண்ட் இல்லாமல் இருக்கிறதால் கொட்டகுடி ஜமீன் வழியாக தண்ணீர் சோர்ஸ் இருக்கிறதால் அவர்கள் புதிது புதிதாக அணைகட்டி தண்ணீரை கொண்டுபோகிறார்கள் அவர்கள் ஒரு ரைட் ஏற்படுத்திக்கொண்டு தண்ணீரை கிரயத்திற்கு விற்கிறார்கள். ஒரு ராத்திரி தண்ணீருக்கு 10 ரூபாய் 15 ரூபாய் என்று விலைவாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்தப் பழக்கம் இருக்கிறது. இந்த விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. சட்டமூலமாக இல்லாத வரிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சல் முதலியவைகளுக்கும் எஸ்டேட் லாண்டு ஆக்டில் பரிகாரம் இருக்கிறது. ஆனால் குடியானவர்கள் தங்கள் பாத்தியதையை அநுபவிக்கமுடியாமல் இருக்கிறது. ஜமீன்தாரோடு குடியானவர்கள் ஏழைகளாக இருப்பதால் போராடி அனுகூலம் பெற்றுக்கொள்ள சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். கவர்மெண்டில் ஒரு ஏஜெண்டு நியமித்து சமஸ்தானங்களில் இருக்கிற லிடிகேஷன்கள் கோர்ட்டுகளுக்குப் போகாமல் இருக்கும்படி செய்து கொடுக்கவேண்டும். 8, 10 ஜமீன்களை ஒரு குரூப்பாக சேர்த்து அந்த ஏஜண்டைக்கொண்டு அந்த விவகாரங்களை கவனிக்கும்படி செய்யவேண்டும். பெரிய சமஸ்தானங்களில் இப்போது ஏற்பட்டிருக்கிற ஏஜண்டுகள் மாதிரி ஒரு ஏஜண்டு நியமிக்கப்படவேண்டும்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—எந்த ராங்கில் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ?

A.—ஒரு டிபுடி கலெக்டர் ராங்கில் இருக்கிறவர் இருக்கவேண்டும்.

Q.—இப்பொழுது இருக்கிற டிவிஷனல் ஆபீசர்கள் ஏஜண்டுகள் மாதிரியாகத்தானே இருக்கிறார்கள் ?

A.—ஜமீன் குடிகள் குறைகளை பூராவும் கவனிக்க அந்த ஆபீசர்களுக்கு அவகாசம் இல்லை. அவர்கள் ரெவினியு, கிரிமினல் முதலிய விஷயங்களையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் உள்ள விவகாரங்களை கவனிக்க ஸ்பெஷலாக ஒரு ஆபீசர் இல்லை. லேபர் கமிஷனர் மாதிரி உத்தியோக முறையில் ஜமீன் குடிகளுடைய குறைகளை கவனித்து எந்தெந்த விதத்தில் தகராறு ஏற்படுகிறதோ அவைகளை சீர்திருத்தம் செய்யலாம். கவர்மெண்டுக்கு அவ்வப்போது ரிபோர்டுகள் அனுப்பக்கூடிய டிபார்ட்மெண்டு மாதிரி இருந்தால் தேவலை என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

Witness No. 231. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. T. A. V. Ramaswami Chettiyar, Madura, dated 24th February 1938.

டொம்புசேரிக்கு நஞ்சைத் தீர்வையும் புஞ்சைத் தீர்வையும் அதிகமாக வசூல் செய்கிறார்கள். ஜாயிண்ட் பட்டாவில் இருக்கிற நபர்களில் ஒரு பட்டாவில் 45 பேர்கள் இருக்கிறார்கள். ஒருவர் கிஸ்தி செலுத்துகிறார். ஒரு பைமாஷ் நம்பருக்கு ஒருவர் செலுத்துகிறார். இன்னொருவரிடத்தில் கிஸ்தி வாங்காமல் இருக்கிறார்கள். ஒருவர் பாக்கிக்காக நிலத்தை ஏலத்தில் விட்டு பூராவையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒருவர் இடத்தில் பூரா எஸ்டேட் தீர்வையையும் வசூல்செய்து வாங்கி இருப்பதற்கு தஸ்தாவேஜு தாகல் செய்கிறேன். (பைல்ஸ் தி ரிசீட்ஸ்). கண்மாய் எல்லாம் எங்கள் சொந்தக் கண்மாய். ஜமீன்தார்களுக்கு அதில் பாத்தியம் கிடையாது. ஜமீன்தார்கள் அவைகள் தங்களுடையதென்று சொல்லி அவைகளை எல்லாம் பட்டா போட ஆரம்பித்தார்கள். அது விஷயமாக ஒரு கேஸ் நடந்தது. அந்த ரிகார்டை தாகல் செய்கிறேன். (பைல்ஸ் எ டாகுமெண்ட்) கிஸ்தியை சொந்த ஆள்களை வைத்து வசூல் செய்துகொண்டு கையாடல் செய்துகொண்டு விடுகிறார்கள். தீர்வை பாக்கியை எம். ஓ. மூலமாக அனுப்பினால் அதை வாங்காமல் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். 4, 5 பேர்கள் பாக்கி இருந்தால் எல்லோரும் சேர்ந்து தீர்வைகட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பட்டா கொடுக்காமல் கிஸ்தி கேட்கிறார்கள். அது விஷயமாக தாவா செய்திருக்கிறோம். அதற்காக எங்கள்பேரில் 144-வது பிரிவுப்படி கேஸ் போட்டார்கள். 145-வது பிரிவுபடியும் கேஸ் போட்டார்கள். அது எல்லாம் எங்களுக்கு அனுகூலம். இப்பொழுது சிவில் கேஸ் எடுத்திருக்கிறார்கள். ஒரு கிராம நில விஷயமாக ஒரு தாவா ஏற்பட்டது. அது ஆதி காலத்திலிருந்து குடிகளுக்கு பொதுவாக ஏற்பட்டிருக்கிற நிலம். அது சம்பந்தமாக டாகுமெண்ட் இப்பொழுது எங்கள் கையில் இல்லை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் அது விஷயமாக ஒரு இன்ஜங்ஷன் சூட் நடக்கிறது. அந்த கேசில் அதை தாக்கல் செய்திருக்கிறோம்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—இவ்வளவுதானே நீங்கள் சொல்லிக்கொள்ளவேண்டியது ?

A.—ஆமாம்.

Witness No. 232. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. P. T. Devar, the Divan of Bodinayakkanoor.

Mr. P. T. Devar : Sir, the rates obtaining for dry lands vary from As. 5–9 to Re. 1–4–0 per acre ; for garden lands they vary from Rs. 2–8–0 to Rs. 4–5–0 per acre, except in the case of betel, for which the rate is Rs. 17–15–0 per acre. As regards betel cultivation, which is for three years, for the first year nothing is charged and only for the second and third years this sum of Rs. 17–15–0 is charged. In the whole zamindari betel cultivation will cover an area of 10 to 15 acres.

The Chairman : *Q.*—What is the total extent of the zamindari ? *A.*—153 square miles. The total area of dry lands is 25,000 acres, that of wet is 6,000 acres and that of garden is 10,000 acres. The wet rate varies from Rs. 2–8–0 to Rs. 6–8–0. These rates have been in existence from the time of the permanent settlement and the adjacent ryotwari rate is double our wet rate. We have got two villages also, viz., Uchchanoor and Uppukkottai. In the zamin lands the ryots pay some Rs. 4 or Rs. 4–8–0 per acre whereas in the Government lands the ryots pay from Rs. 7–8–0 to Rs. 11–4–0 per acre. I shall show the old adangal accounts where the entries are made on a cropwar basis.

Q.—That is prevailing now ? *A.*—It has been prevailing from the time of the permanent settlement.

Q.—It has been continuing ? *A.*—It has been continuing without any alteration. The ryots were complaining here about the garden rates. Sir, these garden rates have been in existence from the time of the settlement classified and the garden lands on a cropwar basis.

Q.—What have you got to show that the garden rates now prevailing are the same as those that prevailed at the time of the permanent settlement ? *A.*—Yes, Sir. For tobacco, etc., we are charging the same number of panams as of old. No ryot has complained about that. I have in my hands the old adangal accounts of 1863. It gives the old mamul rates for tamarind, cholam and so on. (The witness handed over this document to the

Chairman.) Sir, I have got several judgments of 1860 to show that the customary cropwar rates have been accepted by the civil courts. I am submitting herewith the old records prepared by the Court of Wards in 1875 showing the jama classification as wet, dry and so on. Some witnesses complained about tree-tax. Since the passing of the Estates Land Act of 1908 we are not charging tree tax. Prior to that the custom in the zamindari was that all the tamarind trees either in patta or poramboke land belong to the zamindar and they were leased out at 4 annas per tree. We have records to show this. Subsequent to the passing of that Act, we have been leaving these trees to the ryots themselves.

Mr. P. S. Kumaraswami Raja : *Q.*—If they are cut and removed ? *A.*—We do not interfere.

The Chairman : *Q.*—The fruits are enjoyed by the ryot ? *A.*—Yes. The custom is that if a ryot wants to cut down a tree, he should pay 12 years assessment.

Mr. P. S. Kumaraswami Raja : *Q.*—After that you do not charge anything ? *A.*—We deduct it from the patta. We of course verify the fact and then only reduce the tax. Then, Sir, about this patta transfer business. Since the passing of the Act we have been trying to effect as many transfers as possible, but there are practical difficulties in the way. Some applications for transfer are delayed on account of the need for taking summary proceedings against the tenant for the recovery of arrears of rent. Applications for transfer are sometimes delayed on account also of the fact that the karnams do not do their work properly and satisfactorily. And we have no control over them. Unless collection is made easy by some means, needless charges have necessarily to be made on the tenant ; Rs. 15 becomes Rs. 50 and it does no good to the zamindar also. I have mentioned cases like that in my memorandum. The rent sale proceedings are very bad. If there is more rigour allowed in the matter of collection, if we can forcibly collect the small dues from him, it will be beneficial to him. He need not pay the charges. It is the collection proceedings that create trouble and irrigation. The ryots wait and wait and ultimately pay double the normal dues. If the control over village officers is not given to the proprietor, it is practically useless. Even in cases where there is embezzlement, if we want to take action, a report has first to be made to the Deputy Collector, an elaborate enquiry has then to be made and, at the end, after a lapse of six months, the man is let off with a small fine of Rs. 2 or 3. This is no deterrent. The man again goes on in his usual way. The present sort of control is detrimental to both the Government and the zamindar. Then about the rent sale, Sir. No rent sale is sustainable in a Civil Court because so many things are found to have been not properly done and the sale is declared illegal. The proprietor is thus in a double difficulty. He neither realizes the cost, nor does he get possession. That procedure must be completely simplified in the interests of both parties. In my estate there is not much dispute between the zamindar and the ryot, but still, if there is a sort of responsibility felt by the villagers themselves, a good deal of trouble can be avoided. The tanks are in good condition in our estate. We are doing all the repairs necessary.

The Chairman : *Q.*—How many tanks are there in your estate ? *A.*—There are 15 tanks. Six of them are maintained by the estate and the rest are maintained by the ryots under kudimaramath.

Q.—Are they rainfed or river-fed ? *A.*—River-fed. There are two or three rivers. We have the Pottakkuti river, the Pichankarai river and the Muthukombai river. My estate is very fertile. People grow cardamom, coffee, cotton and so on.

Q.—Cotton cultivation in dry lands ? *A.*—Yes on dry lands adjoining the hills. We have spent about Rs. 14,000 on irrigation works from 1925–36.

Q.—Mr. P. S. Kumaraswami Raja : For 10 years ? *A.*—Yes. We have only to maintain these tanks. At Kuchchanoor we have spent Rs. 6,000. It was done by the ryots.

Q.—Was it cheaper when it was done by the ryots ? *A.*—There is an important ryot in our estate. He was allowed to do the work and asked to send the bill on to us. He did it very cheaply.

The Zamindar of Mirzapuram : *Q.*—Do you prepare an estimate before you give the work to the ryots ? *A.*—The ryots themselves propose an estimate and we allow the work to be done by them.

Mr. Venkatachalam Pillai : *Q.*—So far as kudimaramath is concerned, you collect wet rates ? *A.*—Yes, because it is our water. The tank is maintained by the ryots and they engage themselves in fisheries and so on and take the karivela trees.

The Chairman : *Q.*—What other benefit the ryots get ? For what else you do not charge them ? *A.*—Nothing more, Sir. As for the forest facilities, we give to each pattadar a free permit to remove manure leaves, grass, fuel, stones, thorns and all these things. This has been going on from time immemorial.

Mr. P. S. KUMARASWAMI RAJA : *Q.*—In Kuchanoor village there is difficulty about this ? *A.*—We propose giving them help by having an agency there.

The CHAIRMAN : *Q.*—You said you were giving free permits from time immemorial ? *A.*—Yes, ever since 1921, when the present zamindar assumed charge.

Q.—From the records you find that even before that, for a very long time, the ryots were enjoying free permits ? *A.*—Yes. We give the ryots agricultural implements, manure leaves, and stones for the sinking of wells.

Q.—Are there any estates adjacent to yours ? *A.*—Yes. There is the Thevaram estate ; there is the Gandappanayakanoor estate and there is the Arasakananoor estates ; all within a radius of 10 miles. Sir, whatever things the ryots are allowed to take from the forests, there must be some regulation. Otherwise the forests will be denuded completely. We do not derive any income at all from the forest. We, on the other hand, employ a staff and incur an expenditure of Rs. 4,000, on a forest covering 75 square miles.

Q.—What is the arrear of rent in your estate up to fasli 1345 ? *A.*—Collection is very slack on account of this trouble caused by the Debt Relief Bill. Nearly 35,000 rupees are in arrears. For fasli 1346 only about 15 per cent has been collected.

Q.—What is the total income of your estate ? *A.*—The rent roll is Rs. 90,000 ; the peshkash is Rs. 13,800. We have then one Dhoodappura village from which we get an income of Rs. 4,800 and pay a peshkash of Rs. 774. We have to pay Rs. 9,000 as cess, a quit-rent of Rs. 1,500 and a municipal tax of Rs. 2,500. After all nothing remains to the zamindar.

Q.—What is the amount of the cess paid ? *A.*—Rs. 9,000. Of this, half is paid by the ryots. What all the ryots want from the forest we are giving free now without any complaint.

The CHAIRMAN : *Q.*—Are there any disputes between the tenants and the zamindar on account of the excessive nature of the rent ? *A.*—The rent is far lower than in the ayan lands. So there is no dispute. There is no case of any tenant filing a suit against the zamindar for reduction of rent.

Q.—You have given a statement showing the rates for forest trees ? *A.*—Those are sale rates. Suppose a tenant wants more cartloads than he is entitled to, under our free permit system, then he must pay according to a scale laid down for the purpose.

Q.—The same thing with regard to wood that may be required ? *A.*—If a tenant is a big pattadar, we give him two or three cartloads. Sometimes headloads also allowed.

Q.—The rates you have shown in your statement for manure leaves, viz., Rs. 1–8–0, are for the excess over the allowance under the free permit ? *A.*—Yes. As a matter of fact I can show that the income we have realized from manure leaves for the year 1935 is only Rs. 300. People from the neighbouring ayan villages also come and apply for permits for removal of manure leaves, etc. On account of the selection difficulty, even in the best managed estates, we are not able to collect more than 50 per cent. If collection is made just like that in the ayan tracts, we can make better collections.

Q.—How long have you been feeling this trouble ? *A.*—Ever since the passing of this clumsy Estates Land Act. Under it, even summary suits take nine months for disposal. Rent sales take two or three years.

Q.—Do you mean to suggest that the tenants who are able to pay are withholding payment ? *A.*—That is my view. In my estate most of the tenants are very prosperous. Only 20 per cent of them are poor. But it is only people who can afford to pay that are in arrears. They say they know something and will wait.

Q.—So, poor people pay promptly ? *A.*—Yes.

Q.—When crops fail, do you give remission ? *A.*—Of course. But ever since I became the Diwan there has been no failure of crops.

Q.—What was the practice in your estate prior to that ? *A.*—Prior to that also they did not give remission. All the wet lands are double crop lands and we charge only one assessment.

I have mentioned about the survey. This survey is necessary, but the cost is prohibitive. If some method is devised whereby the cost could be apportioned between the tenants and the landholder, it would be better. My estate was surveyed in 1875 when it was under the Court of Wards. But that was not acted upon. It was found to be wrong. Then, Sir, the *sattavari* which some witness has mentioned is no complaint at all. I have told my village munsifs that they need not collect it. The tenants can come to our office and pay the kist and if they do so they would not experience any difficulty. There is, however, this mamul obtaining in ryotwari areas also. There are 13 major villages in my estate and 58 minor villages.

Q.—How far is the headquarters from the farthest village ? *A.*—All the villages are within a radius of six miles from the estate. Pichanoor is about 10 miles off.

Mr. P. S. KUMARASWAMI RAJA : *Q.*—Have you asked that the patta transfer application should be made in a particular paper ? *A.*—It was in practice till recently, but now I do not insist upon it. I have received numerous transfer applications on ordinary paper.

Q.—Are you selling new forms in your office like the one complained of ? *A.*—No.

Q.—Have you a stock of these printed forms in your office now ? *A.*—There may be some.

Q.—You have not completely dispensed with them ? *A.*—There may be some old forms in the office, but I have told the tenants that they need not spend one rupee for the form.

Q.—Why not you destroy the stock on hand ? *A.*—Yes.

Mr. A. RANGASWAMI AYYANGAR : *Q.*—How long has this system continued? *A.*—For 23 years. They were only paying 1 rupee as a sort of fees for stationery and printing.

Q.—No stamp fee, I suppose ? *A.*—No.

Mr. P. S. KUMARASWAMI RAJA : *Q.*—They produced a receipt granted for fees paid for cattle, sheep and so on coming down the hills ? *A.*—The idea is this : There is the Manoor estate there. A number of Europeans are living there. Every year a lot of cattle is butchered there and when these are taken to the butcher's shop through our estate over a distance of 15 miles of forest area, we charge them grazing fees.

Q.—Cattle pass through your forest ? *A.*—They take them there for killing.

The CHAIRMAN : *Q.*—They do not belong to your tenants ? *A.*—They do not. But I have received complaints against the contractor that he is charging my tenants also. I am investigating it and I will remove the grievance, if any.

Mr. P. S. KUMARASWAMI RAJA : *Q.*—What right have you to collect this tax when they simply pass through your forest ? *A.*—In my opinion it is not illegal.

The CHAIRMAN : *Q.*—Why should they pass through his estate ? *A.*—Yes, Sir.

Mr. P. S. KUMARASWAMI RAJA : *Q.*—Is it not a highway path ? *A.*—It is not a highway path. There are other roads along which you can reach the hills.

குஞ்சியம்மாளுடைய ஆடுகளும் இன்னும் **5** பேர்களுடைய ஆடுகளும் ஒன்றாய் மேய்ந்து கொண்டிருக்கின்றன. அவள் ஆடுகளுக்கு **19** வெள்ளாடுகளுக்கு சீட்டு போட்டிருந்தது. சில ஆடுகளுக்குப் போடாமல் இருந்தது மீதி ஆடுகளுக்கு சீட்டு போடுவதற்கு ஒரு மாசம் தவணை கேட்டாள். பாரஸ்ட் வாட்சர் இடஞ்சல் செய்கிறது. அவர் எங்களிடத்தில் ஏதாவது ரூபாய் கொடுத்தால் சாதகமாயிருப்போம் என்று சொன்னார். அவர் முத்துவீராசாமி நாயக்கர் அவருக்கு **4** ரூபாயும் கொடுத்தாள் ஒரு மாசம் கழித்து சீட்டு போட்டுக்கொள்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்—**5, 6** நாள் கழித்து திரும்பவும் சிலவுக்கு ரூபாய் வேண்டுமென்று கேட்டார். அவள் ஒரு வாரம் கழித்து தருவதாகச் சொன்னார். இரு, என்று வர்மித்துக்கொண்டு போய் விட்டார். அயன் காட்டில் மேய்ந்துவிட்டு தண்ணீருக்கு கொண்டுபோகிற காலத்தில் ஆடுகளைப்பத்திக்கொண்டு போய் அடைத்து **200** ரூபாய் காம்பன்சேஷன் போட்டிருக்கிறார்கள். வெள்ளாடு மேயவேகூடாது. ரிசெர்வ் காட்டில் மேய வெள்ளாட்டுக்கு $1\frac{1}{4}$ ரூபாய். சீல் குத்தின ரசீதாயாயிருந்தால் எங்கேயும் மேயலாம். ஏற்பட்ட ரூபாயைக் கொடுத்தால் ஒரே பீட்டில்தான் மேயும். பாரஸ்ட்டில் பாட்டைகள் போட்டுக்கொள்ள அநுமதி யிருக்கவேண்டும். எரு, குழை வேண்டிய யளவு எடுத்துக்கொள்ள அநுமதியிருக்கவேண்டும். நாங்கள் விற்கக்கூடாது அவர்களுக்கு பாத்தியம் இருக்கிறது எங்களுக்கும் பாத்தியம் இருக்கிறது.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—நத்தம், களம், பாதை, புறம்போக்கு முதலிய இடங்களில் ஜமீன்தாரவர்கள் அணாவசியமாய் பொது நன்மைக்கு விரோதமாக கெடுதி செய்கிறார் என்று சொல்லியிருக்கிறீர்களே அது என்ன ?

A.—நான் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு ஒரு ரோட்டுக்காக ஒரு இடத்தை வேண்டுமென்று கேட்டேன். கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். 3,000 ரூபாய் வேலைசெய்ய லோகல் போர்டிலிருந்து ஆர்டர் வந்துவிட்டது. ஜமீன்தாரை நேரே கேட்டேன். எழுத்துமூலமாகவும் கேட்டேன், கொடுக்கவில்லை. கலெக்டருக்கு ரிப்போர்டு பண்ணினேன். ரோட்டுபோட முடியாமல் நின்று போச்சு. 3,500 ரூபாயும் போச்சு. ரோட்டுபோட இடம் கொடுக்கவில்லை.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—கலெக்டரை அக்குயர் பண்ணச் சொன்னாலென்ன ?

A.—நீங்களே நேருக்கு நேரே பண்ணிக்கொள்ளவேண்டும். நாங்கள் அக்குயர் பண்ண ரொம்ப நாளாகும் என்று சொல்லிவிட்டார்கள்.

Q.—வேறு என்ன கெடுதி செய்திருக்கிறார்கள் ?

A.—மந்தையில் மரங்களை வைத்துக்கொண்டு ஆடுமாடுகள் அடைய விடுகிறதில்லை. முன்னோர்கள் காலத்தில் வெட்டப்பட்ட ஊரணி. அதில் வேலை செய்யவேண்டுமென்று கேட்டால் செய்து கொடுக்கிறதில்லை. சாகுபடி செய்துவிடுகிறார்கள். அது இப்போது மெத்திப்போச்சு. எங்களை சாகுபடி செய்யவிடுகிறதில்லை. நாங்கள் வெட்டுகிறோம் என்று சொன்னாலும் எங்களை வெட்டவிடுகிறதும் இல்லை. மருமத்து செய்ய இடம் கொடுக்கிறதுமில்லை. பொதுக் களம்—அதைச் சாகுபடி செய்ய விட்டிருக்கிறார்கள்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—சாகுபடிக்கு பத்தடைப்பு பண்ணுகிறார்களா ?

A.—பத்தடைப்பு பண்ணிக்கொடுக்கிறதில்லை. ஜமீன்தாரே நேரில் வாங்கிக்கொள்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களுடைய ஏஜெண்டுகள் வாங்கிக்கொள்கிறார்கள்.

Q.—ஜமீன்தார் உத்தரவின்பேரில்தானே ஏஜெண்டுகள் வாங்குகிறார்கள் ?

A.—ஜமீன்தார் உத்திரவு மூலமாகத்தான் வாங்குகிறார்கள். பாதையில் குளேகள் இருந்தால் நாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். அதை எடுக்கவொட்டாமல் தடை செய்கிறார்கள். கம்மாய்க்கு வருகிற தண்ணீரைத் தடுத்து பண்ணை புஞ்சைகளுக்குப் பாய்ச்சி ஆயக்கட்டு நஞ்சைகளுக்குத் தண்ணீர் விடுகிறதில்லை. அயனுக்குப் போகிற தண்ணீரை சொந்தத்தில் மடைகளை உண்டாக்கி தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். அவைகள் உடைப்பு எடுத்து குடிகளுக்கு ஆயிரம், இரண்டாயிரம் நஷ்டம் உண்டாக்கியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் மனுப்போட்டிருக்கிறோம்.

நத்தத்தில் ஜனங்கள் ரொம்ப நாட்களாகக் குடியிருக்கிறார்கள். அவர்களை இப்பொழுது காலி பண்ணச் சொல்லுகிறார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—மடை வைத்து கரை போட்டு தண்ணீர் அவர்கள் சொந்த நிலத்துக்கு பாய்கிறதென்று சொன்னீர்களே, அதினால் உங்களுடைய நிலங்களில் உடைப்பு எடுத்துக்கொண்டு போகிறதென்று சொன்னீர்களே, அது யாருடைய நிலம் ?

A.—அவர்களுடைய சாகுபடிதான்.

Q.—ஜமீன்தாருடைய சொந்த பண்ணை நிலமா ?

A.—இந்த மாதிரி குடிகளிடத்திலிருந்து ஏலத்தில் எடுத்த நிலம்தான். சுடுகாட்டைக்கூட சாகுபடி செய்திருக்கிறார்கள். புறம்போக்கு எங்களுக்குச் சொந்தமானது.

The Zamindar of Mirzapuram :

Q.—ஜமீன்தாருடைய பண்ணை நிலத்துக்குத்தானே பாய்ச்சுகிறார்கள். அது அவர்களுக்கு பூர்வீகமாக ஏற்பட்ட நிலம்தானே ?

A.—இல்லை. ஏலத்தில் வாங்கின நிலம்தான்.

Q.—எப்பொழுது ஏலத்தில் எடுத்த நிலம் ?

A.—193-ம் நெம்பர் பட்டா. 20 வருஷத்துக்கு முன்னால் ஏலம் எடுத்தது.

Q.—ஏலத்தில் எடுத்த நிலமென்று காட்டமுடியுமா ?

A.—இவர்களைச் சேர்த்து சூட் போட்டிருந்தான்.

Q.—யார் பெயருக்கு பட்டா இருக்கிறது ?

A.—ஜமீன்தார் பெயர்க்கு பட்டா இருக்கிறது.

The President :

Q.—அந்த சூட் ரிகார்டு எங்கேயிருக்கிறது ?

A.—கொண்டுவரவில்லை. அந்த ரிக்கார்டு கையில் இல்லை.

The Zamindar of Mirzapuram :

Q.—ஏலத்தில் எடுத்த நிலம் இல்லை. சொந்த நிலம் என்று சொல்லுகிறார்களே ?

A.—பொய். 8, 9 வருஷத்துக்கு முன்னால்தான் சாகுபடியாயிருக்கிறது.

Q.—யார் காலத்தில் ஏலம் எடுத்தது ?

A.—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில்தான் ஏலத்தில் எடுத்தது, புறம்போக்கில் வீடுகட்டியிருக்கிறார்கள். அதற்கு வரி விதிக்கிறார்கள்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—நத்தம் புறம்போக்கில் கட்டின வீடுகள் ஜமீன்தாருடைய இடத்தில்தானே இருக்கிறது ?

A.—எங்கள் முன்னோர்கள் காலத்திலேயே வீடு கட்டியிருக்கிறார்கள்.

Q.—எப்படி அவர்களுடைய பட்டாவில் சேர்ந்திருக்கிறது ?

A.—அது என்னமோ எனக்கு தெரியாது.

Q.—சர்வேயாயிருக்கிறதா ?

A.—ஆயிருக்கிறது.

Q.—அப்பொழுது என் ஆக்ஷேபிக்கவில்லை.
A.—அப்பொழுது வரி கேட்கவில்லை. எங்களுக்கு நோட்டீஸும் வரவில்லை.

Q.—கவர்ன்மெண்டு சர்வே பண்ணினதா ?
A.—கவர்ன்மெண்டார் தான் சர்வே பண்ணினார்கள்.

Q.—சர்வே கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில்தானே நடந்தது ?
A.—ஆமாம்.

நிலத்தை ஜப்தி எழுதிவைத்து விற்பனைக்கு கொண்டுவருவதற்கு வேண்டியதற்கும் சேர்த்து ஸ்டாம்பு பணத்தை வாங்கிக்கொள்கிறார்கள். விற்பனைக்குப் போகாமல் பாக்கியை கட்டிவிட்டால் ஸ்டாம்பு தொகையை வாபஸ் வாங்கிக்கொள்கிறார்கள். எங்களுக்கு அதை திருப்பிக் கொடுக்கிறதில்லை. கலெக்டர் ஆபீஸிலிருந்து வாபஸ் வாங்கிவிடுகிறார்கள். எங்களுக்குத் திருப்பிக் கொடுக்கிறதில்லை.

பழைய கரம்பு, தரிசு நிலங்களை வெட்டித் திருத்தி சாகுபடிக்கு கொண்டுவந்தால், கணக்கப் பிள்ளை தவணை போட்டால் அதற்கு தீர்வை விதிக்கிறதில்லை. தீர்வை ஏற்படுத்தவேண்டுமென்று கலெக்டர் தாசில்தாருக்கு மனு போட்டோம். ஜமீன் விஷயங்களில் தலையிடுகிறதில்லை யென்று அவர்கள் எண்டார்ஸ் பண்ணியிருக்கிறார்கள். நிலங்களை மனுதார் கோரியபடி சாரி செய்யத்தக்கதில்லை. உடனே காலி பண்ணவேண்டியதென்று ஆர்டர் போட்டுவிடுகிறார்கள். இன்னொருவனுடைய நிலம் பிரட்யூசிங் சர்டன் ரிக்கார்டு கிஸ்தி பாக்கிக்காக ஏல விற்பனைக்கு வந்து பாக்கியை கட்டியாச்சு. 1347-ம் பசலி கிஸ்திக்காக மாசூலை அறுக்கவொட்டாமல் தடுத்து மாசூலை கொண்டு போகப் பார்க்கிறார்கள். உசிலம்பட்டி கலெக்டருக்கு மனு கொடுத்தான். அவர் செலெக்ட் கம்மிட்டி நடக்கிறது. அங்கே போய் தெரிவித்துக்கொள் என்று சொல்லிவிட்டார்.

பொறொட்யூசிங் அனதர் பட்டா.—இந்தப் பட்டாதாரிடமிருந்து தீர்வை அதிகமாக 30 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். ரசீது இருக்கிறது. ஏழை பள்ளன்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—என் அப்படி வாங்கிக்கொள்ளுகிறார்கள் ?
A.—தெரியாதவனிடத்தில் அப்படி வாங்கிக்கொள்கிறது. 453-ம் நெம்பர் சுப்ப குடும்பன்.

Q.—பட்டாவில் ஏற்பட்ட தீர்வை எவ்வளவு ? வசூல் பண்ணியிருக்கிறது எவ்வளவு ?
A.—கொடிக்குளம் 453-ம் நெ. பட்டாதார் சுப்ப குடும்பன். 90 சொச்சம் தீர்வை ஏற்பட்டது. 120 சொச்சம் வாங்கியிருக்கிறார்கள். **Regarding the patta he says.** பட்டாவில் 94 சொச்சம் ரூபாய் இருக்கிறது. 130 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். நடை முதல் பசலிக்குத்தான் வாங்கியிருக்கிறார்கள். 1345-ம் பசலிக்கு.

The Zamindar of Mirzapuram :

Q.—முன்னால் பாக்கி கிடையாதா ?
A.—கிடையாது.

Q.—எப்படி சொல்ல முடியும் ?
A.—பாக்கி இல்லை ஒரே பசலிக்கு என்றுதான் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். சர்க்காரால அங்கீகரிக்கப்பட்டு நஞ்சைக்கு ஒரு தீர்வையை விதித்திருக்கிறார்கள். இஸ்தி மீராவில் ஜமீன்தாருக்கு யாதொரு பாத்தியமும் இல்லை யென்று இருக்கிறது. கால சாகுபடிக்கு குயிட் ரெண்ட் சர்க்காருக்குச் செலுத்தியிருக்கிறோம். சத்திரவரி யென்று 6 ரூபாய் வாங்குகிறார்கள். கோடை விளைந்தால் அக்கம்பக்கத்துக்கு ஒப்பந்தம் $24\frac{1}{2}$ ரூபாய் ரேட். 18 ரூபாய் சொச்சம் கொடுக்கிறார்கள். ஐகோர்ட் வரை போச்சு. 2,000 ரூபாய் செலவு. கடைசியாக வந்திருக்கிறது. **(He shows some records)** கம்மாய் மராமத்து செய்யவேண்டுமென்று மனுக்கள் கொடுத்தோம். ஓவர்சீயர் லாண்ட் ரிக்கார்டு இன்ஸ்பெக்டர் சர்வேயர் என்று இருந்தார்கள் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில். அதற்கப்புறம் சரியாய் நடக்கிறதில்லை. கலெக்டருக்கு இதையெல்லாம் சரி பண்ணிக்கொடுக்கவேண்டுமென்று மனுக்கொடுத்தோம். மானேஜரைக் கூப்பிட்டுச் சொன்னார்கள். அவ்வளவுதான் ஊருக்கு சப்-கலெக்டர் வந்தால் ஜமீன்தார் **guest** ஆக இறங்குகிறார். அவரிடத்தில் குடிகள் என்ன எதிர் பார்க்க முடியும்.

Mr. P. S. Kumaraswami Raja

Q.—டிவிஷனல் ஆபீஸரைக் கேட்டதில் ஜமீன்தார் பங்களாவில் இறங்கிக்கொண்டு அனுகூலம் பண்ணவில்லையென்று சொல்லுகிறீர்களே, கலெக்டரிடத்தில் மனு கொடுத்திருக்கிறீர்களா ?
A.—இல்லை. பெரிய கலெக்டருக்கு மனுப்போட்டோம். டிவிஷனல் ஆபீஸரை அனுப்பினார்கள்.

The Zamindar of Mirzapuram :

Q.—கலெக்டர் வந்திருக்கிறார்களா ?
A.—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில் வந்தார்கள்.

Q.—வந்தால் ஜமீன்தார் விருந்தினராக இருக்கிறதுண்டா ?

Before the witness answered the question.

Mr. A. Rangaswami Ayyangar put the next question.

Q.—வேறு இடம் இருக்கிறதா ?
A.—வேறு இடம் இல்லை. 3 மைலுக்கு அப்பாலிருக்கிற பங்களாவில் போய் இறங்கலாமே.

By the Zamindar of Mirzapur after referring to the patta produced by the witness to show that Rs. 30 was collected in excess of the usual rent.

Q.—1343-ம் பசலி ரசீதை 1345-ம் பசலியில் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி ஜாஸ்தி வசூல் பண்ணினதாக சொல்லமுடியும் ?
A.—அந்த ஊர் கணக்கப்பிள்ளையிடத்தில் காட்டினோம். ஜாஸ்தியாகத்தான் தெரியாத்தனமாக வசூல்பண்ணியிருக்கிறார்களென்று கணக்கப்பிள்ளை சொன்னார்.

Q.—இதை வைத்து எப்படி ஜாஸ்தி என்று சொல்ல முடியும் ?

A.—எனக்கு நிச்சயமாகத் தெரியும். எவ்வளவுதான் கட்டவேண்டுமென்பது தெரியும். அதிகமாக வாங்கியிருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. **1343**-ம் பசலி பட்டாவும் **1345**-ம் பசலி பட்டாவும் ஒன்றுதான்.

ஒரே ஆற்றின் தண்ணீர் எங்கள் கம்மாய்க்கும் அயனுக்கும் போகிறது. எங்களுக்கு வருகிற தண்ணீருக்கு ஏக்கருக்கு **24** ரூபாய் ரேட்டு தீர்வை ஏற்பட்டிருக்கிறது. அயன் கம்மாயில் $6\frac{3}{4}$ ரூபாயாயிருக்கிறது. **(he shows the plan)** கம்மாயில் வெள்ளத்தினால் உடைப்பு ஏற்பட்டது. இரண்டு மூன்று தடவை சொன்னோம். ஒரு மாதம் காத்திருந்தோம். நாங்கள் அடைத்தோம். ரெவினியூ இன்ஸ்பெக்டரும் பார்த்தார். ஜமீன்தாரவர்களுக்கு மனு எழுதினோம். நாங்கள் வரி போட்டு வசூல்பண்ணி செலவழித்திருக்கிறோம் என்று சொன்னோம். மனு போட்டோம். **(he shows petition) 1933**-ம௵ டிஸம்பர்௴ 7௳ வரை சமுகத்தில் அடைக்கவில்லை. நாங்கள் அடைத்தோம். சிலவைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டோம். பதில் ஒன்றும் கிடையாது. நாளது வரையில் பணமும் கொடுக்கவில்லை. $123\frac{3}{4}$ ரூபாய் செலவழித்தோம். அயன் கிராமம், பூதிகுளம் கம்மாயில் கான்சாபுரம் கிராமம் $6\frac{3}{4}$, $8\frac{1}{2}$ ரூபாய் தீர்வையிருக்கிறது. எங்களுக்கு **24** ரூபாய் **20** ரூபாயாயிருக்கிறது.

The Zamindar of Mirzapur :

Q.—**1909**-ல் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில் ரெண்டை உயர்த்தினார்களா ?

A.—ஆமாம். கோர்ட் ஆவ் வார்ட்ஸ் டயத்தில் **(time)** தான் உயர்த்தினார்கள்.

Q.—அதற்குப் பிறகு மாறுதல் கிடையாதே ?

A.—கிடையாது.

Q.—அதற்குப் பிறகு தீர்வையைக் குறைக்கவேண்டுமென்று குடிகள் சூட் போடவில்லையே ?

A.—**1930**-ம் வருஷத்தில் போட்டோம். மொத்தப் பணத்தையும் கட்டிவிட்டு தாவா சொல்லுகிற பணத்துக்குமட்டும் போடு என்று சொன்னார்கள். எங்களால் கட்ட முடியவில்லை.

Q.—டெப்டி கலெக்டர் கோர்ட்டில் என்ன ஆச்சு ?

A.—தாவா பணத்தை பிடித்து வைத்துக்கொண்டு மொத்தப் பணத்தையும் கட்டு என்று சொன்னார்கள். மொத்தமாக கட்டமுடியவில்லை. சூட்டைத் தள்ளிவிட்டார்கள்.

Q.—ஜில்லா கலெக்டரிடத்தில் தள்ளுபடியானது பிசகு என்று அப்பீல் போட்டீர்களா ?

A.—அவர்களும் கீழ் கோர்ட்டில் சொன்னபடி பணத்தைக் கட்டு என்று சொன்னார்கள்.

Q.—டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் பணத்தைக் கட்ட டைம் கொடுத்தார்களா ?

A.—இல்லை.

Q.—ஜட்ஜ்மெண்டு காப்பி இருக்கிறதா ?

A.—இல்லை.

Q.—இருந்தால் அனுப்புகிறீர்களா ?

A.—நாங்கள் காப்பி எடுக்கவில்லை.

Q.—கரூர் சீனிவாச அய்யங்கார் நிலத்தை பட்டா மாற்றவில்லையென்று சொன்னீர்களே. அதில் ஏகமாக கிரயதார்கள் இருக்கிறார்களா ?

A.—இருக்கிறார்கள்.

Q.—கிரயதார்கள் எல்லாருக்கும் நோட்டீஸ் அனுப்பினார்களா ?

A.—கிடையாது.

Q.—கிரயம் **1912**-ம் வருஷத்தில்தானே நடந்தது ?

A.—ஆமாம்.

Q.—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்திலா ?

A.—ஆம்.

Q.—அந்த காலத்தில் பட்டா மாற்றவேண்டுமென்று மனு செய்துகொண்டீர்களா ?

A.—மனு செய்திருப்பார்கள். அதைப்பற்றி நான் கேட்கவில்லை.

Q.—**1922**-ம் வருஷம் வரையில் கோர்ட் ஆப் வார்ட்ஸில் தானே இருந்தது.

A.—ஆமாம்.

Q.—இப்பொழுதும்கூட பங்குதார்கள் ஒன்று சேர்ந்து மனு போடவில்லையே ?

A.—ஒன்று சேர்ந்து மனு கொடுத்திருக்கிறார்கள்.

Q.—எப்பொழுது கொடுத்தது ?

A.—**1934**-ம் வருஷத்தில்.

Q.—அதற்கு காபி இருக்கிறதா ?

A.—கொண்டுவரவில்லை.

Q.—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில் பாரஸ்டை ரிசெர்வ் பண்ணினார்களா ?

A.—ஜமீன்தார் காலத்தில்தான் ரிசர்வ் பண்ணினார்கள்.

Q.—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் காலத்தில் இல்லையா ?

A.—இல்லை. எங்களுக்கு அந்த மாதிரி நோட்டீஸ் கிடையாது.

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?

A.—**5** ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது. **2** ஏக்கர் புஞ்சை இருக்கிறது.

Q.—சொந்த சாகுபடி பண்ணுகிறீர்களா ?

A.—ஆமாம்.

Q.—நஞ்சை நிலம் என்ன விலை விற்கிறது ஏக்கர் ?

A.—ஏக்கர் **400, 300, 500** வாங்குவார்கள் கிடையாது.

Q.—**5, 6** வருஷமாக கிரயமே கிடையாதா ?

A.—கிடையாது.

Q.—கிராமத்தில் குத்தகைக்கு விடுகிறார்களா ?
A.—கிடையாது. தாங்களாக உழுகிறார்கள்.

Q.—ஜமீன்தாருக்கு நிலம் இருக்கிறதா ?
A.—இருக்கிறது.

Q.—அந்த நிலங்களை குத்தகைக்கு விடுகிறார்களா ?
A.—விடுகிறார்கள்.

Q.—ஜமீன்தாருக்கு என்ன கிடைக்கும் ?
A.—தெரியாது. எக்கருக்கு எவ்வளவு வருகிறதென்று தெரியாது.

Q.—அந்த ஊர் கிராம வாசிகளே குத்தகைக்கு ஒப்புக்கொள்ளுகிறார்கள் ?
A.—அடுத்த ஊர்க்காரர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

Q.—அவர்கள் ஜமீன் குடிகளா, அயன் குடிகளா ?
A.—இரண்டொருவர் ஜமீன் குடிகளும் இருக்கலாம்.

Q.—ஆனால் உங்கள் ஊரில் ஒப்புக்கொள்கிறதில்லையா ?
A.—எடுத்ததாகத் தெரியவில்லை.

Q.—அயன் குடிகளும் ஜமீன் குடிகளும் குத்தகைக்கு ஒப்புக்கொள்கிறார்களல்லவா ?
A.—ஆமாம்.

Q.—1343 பசலிக்கு கூட வசூல் பண்ணினார்கள் என்று சொன்னீர்களே திரும்ப **refund** கேட்டீர்களா ?
A.—மனு கொடுத்திருக்கிறான்.

Q.—**Register** பண்ணி அனுப்பியிருக்கிறானா ?
A.—நேரில் போய் மனு கொடுத்ததாகச் சொன்னான். மருத குடும்பன், பட்டாதார்.

Q.—அந்த ஆள் வரவில்லையே ?
A.—வரவில்லை.

Q.—எழுத்து மூலமாக கேட்டானா ?
A.—எழுத்து மூலமாகத்தான் கொடுத்தேன் என்று சொன்னான்.

Q.—ஜமீன்தார் என்ன பதில் சொன்னார் ?
A.—ஜமீன்தாரிடமிருந்து பதில் வரவில்லை.

Q.—கலெக்டரிடத்தில் மனு செய்துகொள்ளவில்லையா ?
A.—போகவில்லை. பணம் செலவழிக்க முடியாதே.

Q.—ஜமீன்தார் சமுதாய நிலங்களை பட்டா கொடுத்திருக்கிறார்களா ?
A.—பட்டா கொடுத்ததாகயில்லை. கொடிக்குளம் கண்மாயில் மட்டும் 4, 5 செண்டு பட்டா கொடுத்திருக்கிறார்கள்.

Q.—24 ரூபாய் நஞ்சை தீர்வை என்று சொன்னீர்களே அதற்கு குறைந்த தீர்வை கிடையாதா ?
A.—10 ரூபாய் குறைந்ததும் இருக்கிறது. 16,18-ம் இருக்கிறது.

Q.—அந்தந்த தீர்வையில் எவ்வளவு இருக்கும் ?
A.—24 ரூபாய் **rate**-ல் 250 ஏக்கருக்கு குறையாது. குறைந்த **ரூபாயில்** 5 அல்லது 6 ஏக்கர் இருக்கலாம். கொடிக்குளம், குணவேந்தனேரி, புங்கங்குளம், கண்மாயில் 24 ரூபாய் ரேட் இருக்கிறது.

Q.—**Zamin ryot**களுக்கு தண்ணீர் கொடுக்ககூடாதென்று கவர்ன்மெண்டார் ஜமீன் குடிகள் மேல் **suit** போட்டார்களா ?

A.—குடிகளுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடாதென்றல்ல. அணையினுடைய தாவாவுக்காக நடந்தது. அணைக்கட்டுக்கு ஒரமாக ஜாஸ்தி ஆழம் வெட்டுகிறார்களென்று தாவா நடந்தது. அயன் கிராமத்துக்காரர்கள் ஜமீன்தார்பேரிலும் ஜமீன்தார் அயன்காரர்கள்பேரிலும் **suit** போட்டார்கள்.

Q.—ஜமீன்தாருக்கு செலவு ஆச்சா ?
A.—இருக்கும். எனக்கு தெரியுமா ?

Q.—உங்களுக்கும் ஜமீன்தாருக்கும் விரோதம்தானே ?
A.—எங்களுக்கு விரோதம் இல்லை.

Witness No. 235. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. Muthu Maniam of Saptur.

மற்ற கிராமங்களில் 2, 3 மைல் தூரத்திலுள்ளவர்கள் தங்கள் நிர்ப்பந்தத்தை தெரியபடுத்த வந்திருக்கிறார்கள். கஸ்பாவில் நாங்கள் கஷ்டத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். ஜமீன்தார் பட்டத்துக்கு வந்து 16 வருஷமாகிறது. இதுவரைக்கும் பட்டா கொடுக்கிறதில்லை. அது மூலமாக நாங்கள் மனு கொடுத்தோம். நேரிலும் சொன்னோம். எங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. அந்தப் பட்டா மாறுதல் இல்லாததோடு கிஸ்திப் பணம் கர்ணம், நாட்டாண்மைக்காரர்கள் என்ன கேட்கிறார்களோ அதைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அவர்கள் கொடுத்த ரசீதை வாங்கிக்கொள்ள வேண்டும். அதற்கு மேல் ஏதாவது கேட்டால் நாங்கள் காலக்ஷேபம் பண்ண முடியாது. இதற்கு முன் **Court of Wards** காலத்தில் 150 ரூபாய் 200 ரூபாய்க்கு குறைவில்லாத ஒரு ஓவர்சீயரை வைத்து அதன் மூலமாக கண்மாய் மராமத்துக்களெல்லாம் நடந்து தண்ணீர் 6 மாசத்துக்கு குறைவில்லாமலிருக்கும்படி தண்ணீர் பெருக்கி சரியான சாகுபடி செய்துகொண்டு வந்தார்கள். சௌகரியமாகயிருந்தது. மகாராஜா பட்டத்திற்கு வந்து மராமத்து கிடையாது. கலுங்குபோட்டை ரிப்பேர் கிடையாது. ஒரு வருஷம் தண்ணீரைப் பிடுங்கிவிட்டுவிட்டார்கள். சமுசாரிகளுக்கு நெல் விளையக் கூடாது என்று செய்துவிட்டார்கள். கண்மாய்க்கு வருகிறதற்கு ஆறு இருக்கிறது. ஒரே ஆற்றில் தண்ணீர் வருகிறதாயிருந்தாலும் பக்கத்தில் இன்னொரு ஆறும் இருந்தது. இந்த இரண்டு ஆற்றையும்

பிரித்து சமமாகவிட்டுக்கொண்டிருந்தார்கள். கலுங்கை ரிப்பேர் பார்க்காமல் இடிந்துபோய் விட்டது. ஒரே வாக்கில் தண்ணீர் வருகிறது. ஊருக்குள் போகிறது. பிள்ளை குட்டிகளெல்லாம் கஷ்டப்படுகிறது. நாங்கள் கஷ்டத்தை அடைகிறது ஒருவிதமான கஷ்டமென்று சொல்லமுடியாது. பக்கத்திலிருக்கிற சமுசாரிகளுடைய நிலத்திலிருந்து மண்ணைக்கொண்டு போய்விடுகிறது. மேட்டைப் பள்ளமாகவும் பள்ளத்தை மேடாகவும் ஆக்கிவிடுகிறது. கிணறுகளை மண்ணைக்கொண்டு நிரப்பிவிடுகிறது. அந்த மண்ணை யெல்லாம் அள்ளி எறிந்து விவசாயம் பண்ணமுடியாமலிருக்கிறோம். 1338-ம் பசலி வரை எங்களுக்கு நஞ்சை சாகுபடிக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 5–5–10 தீர்வை ஏற்பட்டிருந்தது. 1339-ம் பசலியிலிருந்து எக்கருக்கு 18, 14, 11 என்று தீர்வை ஏற்பட்டிருக்கிறது. ஒரு எக்கருக்கு என்ன விளையும். எங்கள் நிலத்தில் 4 பொதி, 4½ பொதியாகும். 25, 30 ரூபாய் செலவு பண்ணியிருப்போம். 28 ரூபாய்க்கு விற்போம். அறுவடைக்கு முன்னமேயே கடன் வாங்கியிருப்போம். நெல் வந்த உடனே விற்றுக்கொடுக்கவேண்டும்; கிஸ்திக்கு காணுகிறதில்லை. கடன்காரனுக்கு கொடுக்க வழியில்லாமல் போய்விடும். பஞ்சாயத்து கோர்ட்டில் நம்பர் போடுகிறது. நாங்கள் கஷ்டப்படுகிறோம். ஒரு எக்கருக்கு இரண்டு தலைக்கட்டு வைக்கல் கொடுக்கவேண்டும். பெரிய படியை கொண்டு திராசில் வைத்து கட்டச்சொல்லி கொடுக்கவேண்டும். பகவான்தான் பார்க்கவேண்டும். எங்கள் ஷரத்துக்குமேல் பெரிய வைக்கல் கட்டுகளைக் கட்டிக்கொடுக்கவேண்டும்.

Mr. P. S. Kumaraswami Raja:

Q.—தீர்வையைத் தவிர வைக்கோல் வேறு கொடுக்கவேண்டுமா ?

A.—அவர்களுக்குமட்டுமல்ல. அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கவேண்டும். **Land Record Inspector**கள் இருப்பார்கள். இன்னும் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டும். **Forest**காரர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு கொடுக்கவேண்டும். கச்சேரியிலுள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும். **water rate** எக்கருக்கு 3¼ வீதம் போட்டு வந்தோம். இப்பொழுது 18, 14, 11 வாங்கி விடுகிறார்கள். மலையில் ஆடு மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்தோம். விறகு எடுத்துக்கொண்டிருந்தோம். விலைக்கு விற்கக்கூடாது. வீட்டுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டிருந்தோம். உழவுக்கு வேண்டிய மரங்களை எடுத்துக்கொண்டிருந்தோம். கமலைக்கு குத்துக்கால் முதலிய சாமான்களை வெட்டிக்கொள்ளலாம். முக்கியமான மரங்களை வெட்டக்கூடாது. இந்த மகாராஜா பட்டத்துக்கு வந்த பிறகு கலப்பை வெட்டக்கூடாது. விறகு எடுக்கக்கூடாது. ஆடுமாடுகளை மேய்க்கக்கூடாது. இப்படி நிர்ப்பந்தம் பண்ணுகிறார்கள். சகிக்கமுடியாத நிர்ப்பந்தம். எங்கள் ஊரில் 2, 3 ஊரணிகள் இருக்கின்றன. ஒரு மடையைவைத்து அவர்களுடைய சொந்தக்காரர்களுடைய புஞ்சைக்கு தண்ணீர் பாயும்படியாக விட்டுவிட்டார்கள். ஆடு மாடுகளுக்கு தண்ணீர் குடிக்க வழி இல்லாமலே போகிறது. ஆலமரத்துத் தெப்பத்தில் மாடுகளுப்பாட்டவேண்டும். வாய்க்கூடு போட்டுத்தான்கொண்டு போகவேண்டும். வழிக்குப் பக்கத்திலிருக்கிற தரிசை மிதித்துவிட்டால் மாடுகளை அரண்மனைக்கு கொண்டுபோய் நிறுத்திக்கொள்ளுகிறார்கள். எருமைக்கு ½ ரூபாய், காளைக்கு ¼ ரூபாய், பசுவுக்கு ¼ ரூபாய், கன்றுக்குட்டிக்கு ¼ ரூபாய். உடனே மீட்டாத விஷயத்தில் தீனிக் கிரயம் கொடுக்கவேண்டும். மாடு குளுப்பாட்டுகிறதற்கு ஒரு ஊரணியைக் கொடுக்கவேண்டும். புறம்போக்கு நிலங்களை நீக்கி 4,000 எக்கர் புஞ்சை நிலம் இருக்கிறது. 300 எக்கர் நஞ்சையும் இருக்கிறது. நான் கஸ்பாவில் இருக்கிறது. புஞ்சை 2,500 எக்கர் சொந்தத்திலிருக்கிறது. நஞ்சை 210 எக்கர் சொந்தத்தில் வைத்திருக்கிறார்கள். ஒரு அணா ஏலத்தில் நிலத்தை ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள். 2½ மடங்கு தீர்வையை வாங்கிக்கொண்டு பட்டா கொடுக்கவேண்டும். பட்டா நிலங்களில் மரங்கள் இருக்கின்றன, புளிய மரங்கள், தென்னை. அதை வெட்டபோனால் வெட்டக்கூடாதென்று தடுத்துவிடுகிறார்கள். அரண்மனைக்கு வண்டியைக்கொண்டு போய் விடுகிறார்கள். கொஞ்சம் பலம் உள்ளவர்கள் மீறிச் செய்துவிடுகிறார்கள். ஏழை எளியவர்களாயிருந்தால் அபராதம் கொடுக்கிறார்கள். குள வெட்டுக்கும் சத்திரத்துக்கும் பட்டாவில் வசூல் பண்ணுகிறார்கள். நூற்றுக்கு 16 ரூபாய் வசூல் பண்ணுகிறார்கள். செலவு பண்ணுகிறதில்லை. 1½ ரூபாய் சத்திரத்துக்கு வாங்குகிறார்கள். ஒருவருக்கும் சாதம் போடுகிறதில்லை. அவர்களுடைய சொந்தக்காரர்கள் ஒருவர், இரண்டு பேர்கள் அங்கே போய் சாப்பிடும்படி செய்துகொள்ளுகிறார்கள். நாங்கள் தர்மம் செய்ய கொடுத்த ரூபாயை அவர்கள் சொந்தக்காரர்களுக்கு சாப்பிடும்படியாக செய்துகொண்டிருந்தால் அது தப்பு. அதை நிறுத்தவேண்டும். நாங்கள் கொடுக்கிற ரூபாய்க்கு மராமத்து கவர்ன்மெண்டு மூலமாக நடத்திவைக்கவேண்டும்.

The Zamindar of Mirzapuram:

Q.—**Court of Wards** காலத்திலும் வசூல் பண்ணினார்களா ?

A.—கொடுத்து வந்தோம். தர்மம் நடந்து கொண்டிருந்தது. கண்மாய் மராமத்துப் பண்ணிக் கொண்டுதானிருந்தார்கள்.

வருஷம் ஒன்றுக்கு ஒரு மனிதன் 15 ரூபாய் அல்லது 20 ரூபாய் கொடுத்து இரண்டு மாடு பிடித்து ஏர்வைத்திருப்பான். ஜமீன்தாருடைய சொந்த நிலங்களை உழுதுசாகுபடி செய்த பிறகு தான் எங்கள் நிலத்தை உழவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 10 நாளோ, 15 நாளோ அவர்களுடைய சாகுபடிதீரும்வரை, அவர்களுக்கு உழுது கொடுத்த பிறகு தான் எங்களுடைய நிலத்தை நாங்கள் சாகுபடி செய்யவேண்டும். நான் உழுகிறதும் தவிர பட்டினி கிடந்தும்வர வேண்டும்.

Mr. B. Venkatachalam Pillai:

Q.—உழுகிறதற்கு பணம் உண்டா ?

A.—இல்லைதான் தண்ணீர்தான் கொடுப்பார்கள். சாப்பாடு கூடக் கிடையாது.

வண்டி மாடுகள் வைத்திருக்கிறவர்கள் அவர்களுக்கு எப்பொழுது வண்டி வேண்டுமோ அந்த (time) டயத்திக்கெல்லாம் கொடுக்கவேண்டும்.

Mr. A. Rangaswami Ayyangar:

Q.—வாடகை கிடையாதே.

A.—வாடகை கிடையாது. ஒரு பைசாகூட கிடையாது.

வண்ணான்வெளுக்கிற உவர்மண் இருக்கிறது. அதை அள்ளினால் 2 அணா 4 அணா கொடுத்து விட்டுத்தான் கழுதையில் ஏற்றிக்கொண்டுவருவான். மகாராஜாவுக்கடுத்த சாமிமார்கள், நாயக்க

மார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உழுது கொடுக்கவேண்டும். நாங்கள் இரண்டு பேர்கள் அடித்துக்கொண்டோம். மகாராஜா விடத்தில் போனால் அப்பொழுது அவர்களிடத்தில் தான் போகவேண்டும். அவர்கள் அன்றைக்கு கேட்பார்கள். மாடு உழவரவில்லையென்று வைத்துக்கொண்டு 100, 50 அபராதம் போடுவார்கள். கொடுக்கவில்லையானால் ஜாதிக்காரர்கள் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு விடுவார்கள். அதற்கப்பால் நாயக ஒத்தையாகத்திரியணும். இப்படி அபராதம் போடுகிறார்களே அந்த ரூபாயை ஒரு **fund** ஆக வைத்து 2 பேர்கள் எடுத்துக்கொள்ளும்படி செய்ததாகவும் அந்த 2 பேர்களும் 5,000, 5,000 ரூபாயில் வீடு கட்டியிருக்கிறார்கள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—ஜமீன்தாருக்கு தெரிந்தா தெரியாமலா அபராதம் வாங்குகிறார்கள் ?
A.—தெரிந்துதான் வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

Q.—யார் வாங்கிக்கொள்கிறது ?
A.—சின்னச்சாமி ஒருவர் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கவேண்டும். எங்களுக்கு குடியிருக்கிற இடம் ரெம்ப சுருக்கமாகயிருக்கிறது. பண்ணை வீடு பெரிதாக இருக்கிறது. இரண்டு மைல் விஸ்தீரணத்தில் இருக்கிறது. அரண்மனைக்கு ஒப்பந்தம் நாங்களும் 1,000 வீட்டுக்காரர்கள் இருக்கிறோம். இந்த ஜனவரி மாசத்தில் 10, 30 பேர்கள் படுக்க இடம் இல்லாமல் வியாதிபிடித்து 30 பேர்கள் செத்துப்போய்விட்டார்கள். அவர்களுக்கு பண்ணை வீடுகள் இருக்கின்றன. நாங்கள் அபராதத்துக்கு விட்டு விட்டு வந்தோம். அந்த வீடுகளை மறுபடியும் சாங்சன் பண்ணவேண்டும்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—அவர்கள் ஏலத்தில் எடுத்த வீடுகளா ? .
A.—நாங்கள் அபராதம் கொடுக்க முடியாமல் எடுத்த வீடுகள்தான்.

Q.—அந்த வீடுகளை யார் விட்டது ?
A.—30, 40, 50 வருஷங்களுக்கு முன் எங்கள் முன்னோர்கள் விட்டது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—**Record** ஒன்றும் இல்லையா ?
A.—இல்லை. நாங்கள் ஏழைக்குடிகள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—**Pound** என்று சொன்னீர்களே ஜமீன் பவுண்டா, கவர்ண்மெண்டு பவுண்டா ?
A.—கவர்ண்மெண்டு **Pound** துண்டாயிருக்கிறது. அரண்மனைக்கு கொண்டு போய் அடைத்துக்கொண்டால் அவர்களுடைய கட்டிடத்திற்குள் போய்விடும்.

Q.—அதற்கு ரூபாய் வாங்குகிறார்களா ?
A.—ஆமாம்.

Q.—அதற்கு கணக்கு இருக்கிறதா ?
A.—தெரியாது.

Q.—**Complaint** பண்ணியிருக்கிறீர்களா ?
A.—இன்றைக்கு இங்கு பயந்துகொண்டு வந்திருக்கிறேனே, எனக்கு **Complaint** கொடுக்க வயசுகாணுமா ?

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—பட்டா மாற்றுவிட்டால் 50 ரூபாய் ஜமீன்தாருக்கு அபராதம் போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்களே, அது என்ன ?
A.—எங்களுக்கு நல்லது செய்யவேண்டும். அவர்களுக்கு அபராதம் போடவேண்டுமென்று சொல்லவில்லை.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?
A.—நஞ்சையில் 2 எக்கர், புஞ்சையில் 6 அல்லது 7 எக்கரும் இருக்கிறது.

Q.—மொத்தம் நஞ்சைக்கு எவ்வளவு செலுத்துகிறீர்கள் ?
A.—நஞ்சைக்கு 30 ரூபாய், **cess** சேர்த்து 33 ரூபாய் செலுத்துகிறேன். புஞ்சைக்கு 7 அல்லது $7\frac{1}{2}$ ரூபாய் செலுத்துகிறேன்.

Q.—இந்த நிலம் எப்படிக்கிடைத்தது ?
A.—20 வருஷத்துக்கு முந்தி கிடைத்தது.

Q.—10 வருஷத்துக்கு முந்தி போலிசில் இருந்தீர்களா ?
A.—10, 20 வருஷம் போலிஸில் இருந்து சீக்காய் போய் ராஜிநாமா கொடுத்துவிட்டேன். 10 வருஷமாக இல்லை.

Q.—ஏன் போலீசை விட்டு நீக்கினார்கள் ?
A.—நான் ராஜிநாமா கொடுத்திருக்கிறேன்.

Q.—உங்களுடைய ராஜிநாமாவை ஒத்துக்கொண்டார்களா ?
A.—ஒப்புக்கொண்டார்கள்.

Q.—போலீஸ் உத்தியோகம் வேண்டாமென்று சொன்ன பிறகுதானே நிலம் கிடைத்தது ?
A.—ஆமாம்.

Q.—கிரயத்துக்கு வாங்கினீர்களா ?
A.—கடை வியாபாரம். பாடுபட்டு சம்பாத்தியம் பண்ணினேன். வாங்கினேன்.

Q.—எவ்வளவுக்கு நஞ்சை வாங்கினீர்கள் ?
A.—1,700 ரூபாய்க்கு வாங்கினேன்.

Q.—எந்த வருஷத்தில் ?
A.—27-ம் பசலியில் வாங்கினேன்.

Q.—இந்த நஞ்சையை பயிரிட என்ன செலவாகும் ?
A.—2 எக்கருக்கு 40 ரூபாய் செலவாகும். உரம் போடாமல் நடுகிறதாயிருந்தால் 40 ரூபாய் ஆகும். உரம் போட்டால் 80 ரூபாய் செலவாகும்.

Q.—என்ன கிடைக்கும் மகசூல் ?
A.—100 ரூபாய் வரும்.

Q.—80 ரூபாயில் கிஸ்தி சேர்ந்திருக்கிறதா ?
A.—கிஸ்தியன்னில் 80 ரூபாய் ஆகும்.

Q.—கிஸ்தி என்ன கொடுக்கிறீர்கள் ?
A.—30 ரூபாய் மேற்கொண்டு 4 ரூபாய், 34 ரூபாய் கொடுக்கிறேன்.

Q.—என்ன லாபம் கிடைக்கும் ?
A.—கிணறு வெட்டியிருக்கிறது. கிணற்றில் சோளம் போடுவேன். அது தான் லாபம்.

Q.—சோளத்துக்கு second crop-க்கு தீர்வை போடுகிறதில்லையா ?
A.—அதற்கும் எக்கருக்கு 3 ரூபாய், 2½ ரூபாய், 3½ ரூபாய் போடுகிறார்கள். அதையும் கொடுக்கிறோம்.

Q.—அதற்கு எதாவது ரிக்கார்டு இருக்கிறதா ?
A.—இப்பொழுதில்லை. நாளைக்கு கொண்டுவருகிறேன் ஒரு வண்டி (ரிக்கார்டு).

Q.—ஜமீன்தார் பண்ணை நிலங்களை குத்தகைக்கு விடுகிறாரா ?
A.—விடுகிறார். தானும் சொந்தத்திலும் பயிரிடுகிறார்கள்.

Q.—கஸ்பாவில் சொந்தப் பயிர் ஜாஸ்தியா ?
A.—ஜாஸ்திதான். கொஞ்சமாக வாரத்துக்கும் விடுகிறார்கள்.

Q.—இந்த வருஷம் எவ்வளவு சொந்தப் பயிர் வைத்திருக்கிறார்கள்.
A.—எனக்குத் தெரியாது.

Q.—சொந்தப் பயிரெல்லாம் ஆய்விட்டதா, இல்லையா ?
A.—இனனும்கூட நட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

Q.—குத்தகைக்கு விட்ட நிலத்துக்கு என்ன அவர்களுக்கு கொடுக்கிறார்கள் ?
A.—எனக்குத் தெரியாது.

Q.—நிலம் வாங்கினபோது கடன் வாங்கித்தானே வாங்கினீர்கள் ?
A.—கடை வியாபாரம் பண்ணி ஆதாயத்திலிருந்து வாங்கினேன்.

Q.—கடனே வாங்கவில்லையா ?
A.—பிறகு கடன் வாங்கினேன். நஞ்சை சாகுபடி பண்ணினதில்தான் கடனாளியாய் போனேன்.

Q.—நஞ்சை வாங்கின காலத்தில் கடன் வாங்கினீர்களா ? இல்லையா ?
Q.—இந்த நிலத்தைத் தவிர வேறு நிலம் இல்லையே ?
A.—புஞ்சை நிலம் இருக்கிறது. 6, 7 எக்கர் இன்னும் கடைகள் இருக்கின்றன.

Q.—இப்பொழுது கடன் இருக்கிறதா ?
A.—300, 400 ரூபாய் கடன் இருக்கிறது. ?

Q.—நிலத்தைத் தவிர வேறு சொத்து கிடையாதே ?
A.—இரண்டு கடைகள் இருக்கின்றன, 1,500 ரூபாய் பெறும், வீடு இருக்கிறது, 200 ரூபாய் பெறும்.

Q.—கடைகளை எப்பொழுது வாங்கினது ?
A.—10 வருஷத்துக்கு மேலிருக்கும்.

Q.—கடை வாங்குகிறதற்கு கடன் வாங்கினீர்களே. அதைக்கொடுத்துவிட்டீர்களா ?
A.—கடை வாங்க கடன் வாங்கவில்லை, விவசாயத்துக்காக வாங்கினது தான்.

Q.—எப்படிக் கடை வாங்கினீர்கள் ?
A.—ஆதாயத்திலிருந்து வாங்கினது.

Q.—10 வருஷத்துக்கு முன் கடைகளை வாங்கினேன் என்று சொன்னீர்களே, எப்படி வாங்கினீர்கள் ?
A.—வியாபாரத்தில் ஆதாயத்திலிருந்து வாங்கினேன்.

Q.—ஆதியில் எந்த இடத்தில் வியாபாரம் பண்ணினீர்கள் ?
A.—வாடகை கடையில் வைத்திருந்தேன். அதில் சம்பாதித்ததிலிருந்து வாங்கினேன்.

Q.—நஞ்சை இப்பொழுது என்ன விலை பெறும் ?
A.—இப்பொழுது அவ்வளவையும் 500 ரூபாய்க்கு கேட்கிறார்கள்.

Q.—எக்கர் என்ன விலையாயிருக்கிறது ?
A.—150, 200-க்கு வாங்கலாம்.

Q.—நஞ்சையா, புஞ்சையா ?
A.—நஞ்சைதான். புஞ்சையை ஒருவரும் வாங்கமாட்டார்கள்.

Q.—150, 200 ரூபாய்க்கு நஞ்சை நிலம் கிடைக்குமா ?
A.—நன்றாய் வாங்கலாம். என் நஞ்சையைக்கேட்டால் கொடுக்கத் தயார்.

Q.—உங்களுடைய நிலத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கிறீர்களா ?
A.—கொடுத்துவிடுகிறேன்.

Witness No. 236. **Madura.** **24th September 1938**

Oral evidence of Mr. Ramayya Nadar of Athipatti.

கால்வாய் பாசனத்தில் வருகிற தண்ணீரை அடைத்துக்கொண்டு விடமாட்டோம் என்கிறார்கள். அதினால் எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. 100 எக்கர் வரையில் பாய்கிற ஜலத்தை தடுத்து 50, 60 எக்கருக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் முடியவில்லை.

Witness No. 237. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. Krishnaswami Nayudu of Ramachandrapuram, Seithur Zamin.

1920-ம் வருஷத்துக்கு முன்னால், சேத்தூர், இனாம், ரகுநாதபுரம் கிராமத்தில் சங்கிலிக் கணக்கு இருந்தது. 1920-ம் வருஷத்தில் எக்கர் கணக்கு ஏற்பட்டு செட்டில்மெண்டு நடந்தது, அந்தச் சங்கிலிக் கணக்கு இருந்தபோது பட்டாக்களில் சொந்தக்காரர்கள் கிணறுகளையெல்லாம் கண்டிருந்தது. அப்பொழுது பாசனம் என்று ஒரு கலம் (column) போட்டிருந்தது. அதில் மானாவாரி சாகுபடியா, அல்லது கிணற்று இறைவைச் சாகுபடியா என்று அந்த கலத்தில் போட்டிருந்தது. பழைய கிணறு புதுக் கிணறு என்றும் இருந்தது. 1920-ம் வருஷத்தில் எக்கர் செண்டு, என்று வந்தபிறகு புதுப் பட்டா கொடுத்தார்கள். அந்தப் பாசனம் என்ற பட்டா கலத்தில் மானாமாரியா அல்லது கிணற்று ஜலம் பாய்கிறதா அல்லது பழைய கிணறு அல்லது புதுக் கிணறு என்று போடாமல் பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக அப்படி செய்திருக்கிறார்களென்றால் செட்டில்மெண்டுக்குப் பின்னால் 32 கிணறுகள் ஜமீனுக்குச் சொந்தமென்று சர்வே செய்திருக்கிறார்கள். கிணறு விஸ்தீரணம் 4, 5 செண்டு என்று இருக்கும். 4 எக்கருக்கு மத்தியில் இருக்கிற கிணறு மட்டும் ஜமீனுக்குச் சொந்தமென்று 32 கிணறுகளை ஜமீனுக்கு சேர்க்கப் பார்க்கிறார்கள்.

The PRESIDENT :

Q.—சர்வே எந்த வருஷத்தில் நடந்தது ?

A.—1920-ம் வருஷத்திலே. அதற்கு முன்னால் கொடுத்த பட்டாவில் பழைய கிணறு என்று போட்டிருக்கிறது. **(He produced the patta).** 1920-க்கு முன்னால் கொடுத்த பட்டாவில் ஒரு குறிப்பு சேர்க்கவில்லை. பின்னால் கொடுத்த பட்டாவில் சேர்த்திருக்கிறார்கள். **Referring to the foot-note he says.** **Ryot**-க்கும் ஜமீனுக்கும் மத்தியில் எதாவது தாவாக்கள் ஏற்பட்டால் இது இரு ஆதாரமாகாது. இது வெறும் காகிதம் தான் என்று சொல்லியிருக்கிறார்கள். 32 கிணறுகளை ஜமீனுக்கு சொந்தமென்று சொல்லுகிறார்கள். 1920-ம் வருஷத்திலிருந்து எங்களுக்கு சொந்த மாய் நாங்கள் அநுபவித்துக் கொண்டிருந்த கிணறுகளுக்கு கிரயம் கேட்கிறார்கள். சேத்தூர் ஜமீன் இந்த கிராமத்தை வாங்குகிறதற்கு முன் சில பேர்களிடத்திலிருந்தது. அதற்கு முன்னால் அவர்களிடத்தில் இருந்த காலத்தில் இந்தக் கிணறுகள் இருந்தன. அந்தப் பழைய கிணறுகளை ஜமீனுக்கு சொந்தமென்று சொல்லிக்கொண்டு கிரயம் கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்க முடியாதென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். 1920-ம் வருஷத்துக்குப் பிறகு சில சூழ்ச்சிகள் பண்ணி தெரியாதவர்களிடத்தில் அவர்கள் கிரயம் கொடுத்தார்கள். இவர்கள் கிரயம் கொடுத்தார்கள் என்று சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் சில பேர்களை ஏமாற்றி 40, 50 என்று சொல்லி பணத்தை வாங்கிக் கொண்டு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 32 கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளிலிருந்து இறைத்து சாகுபடி செய்துகொண்டுவருகிற குடிகளுக்கே சொந்த மென்று ஏற்படவேண்டும்; பட்டாமாறுதல் விஷயமாக ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. பட்டா மாறுதல் விஷயமாக சில **fees** வாங்குகிறார்கள். **subdivision fees** என்று வாங்குகிறார்கள். இதற்கு ரசீது கொடுக்கிறார்கள். இன்னும் சில விஷயங்களுக்கு வாங்குகிறார்கள். அதற்கு ரசீது கொடுக்கிறதில்லை. இப்பொழுது கொடுக்கமுடியாதென்று சொல்லி வாங்குகிறார்கள். பல வருஷங்களாக சப்-டிவிஷன் **fees** என்றும் மாமூல் **fees** என்றும் கொடுத்தும் பட்டா மாறுதல் இல்லாமல் இருக்கிறது. தீர்வை செலுத்தத் தவறினால் நிலம் ஏலத்திற்கு வருகிறதென்று நோட்டீஸ் கொடுக்கிறதில்லை. அவர்களுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள், தீர்வை வசூல் பண்ணுகிறவர்களின் மூலமாக நோட்டீஸ் வருகிறதினால் சரியானபடி அந்த நோட்டீஸ் சார்பாகிறதில்லை. எப்பொழுது ஏலம் நடக்கிறது என்று தெரிகிறதில்லை. ஜமீனில் 8 அணா, 4 அணாவுக்கு 8 எக்கர் 10 எக்கர் நிலங்களைக்கூட அப்படியே ஏலம் போட்டு சேர்த்துக்கொள்கிறார்கள். எப்பொழுது **time** முடியும் என்பது தெரியாது. பின்னால் கிரயம் கொடுத்துக்கூட வாங்கவேண்டியிருக்கிறது. ஜமீன் **area**-வில் கடன் கேட்கிறதற்குகூட இப்படிப்பட்ட தொந்திரவுகள் இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. குடிகளுக்குத் தெரியாமலே ஏலம் போய்விடுகிறது. நில அடமான பாங்கு மூலமாக கடன் வாங்கவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி பண்ணவேண்டும்.

Witness No. 238. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. Ponnusamy Thevar of Seithur.

சுந்தரராஜபுரம் முதலிய 8 கிராமங்களிலுள்ள குறைகளைத் தெரியப்படுத்துகிறேன். முத்துசாமியாபுரம் கிராமத்தில் 24,358 எக்கர் இருக்கிறது. குடிகளுக்கு நஞ்சை மாத்திரம் 3,334 எக்கர் இருக்கிறது. ஜமீன் பண்ணைக்கு 880 எக்கர் இருக்கிறது. இனாம் 1,138 எக்கர் இருக்கிறது. தீர்வை விஷயமாக செட்டில்மெண்டு, சர்வே நடந்தது. 1918-ல் முந்திவாரத் திட்டம் இருந்தது. அயனைக் கவனிக்காமலே **(He produces certain records)** எக்கருக்கு 11–6–0 முதல் 19–6–0 வரையில் இருக்கிறது. ஒரு போகத்துக்கு நஞ்சைக்கு, புஞ்சைக்கு ஒரு ரூபாய், அரை ரூபாய் ரேட்டாக இருக்கிறது. இரண்டாம் போகத்துக்கு 5 ரூபாய் **rate** ஆக இருக்கிறது. நெல் சாகுபடி செய்தால் தீர்வை போடலாமென்று இருக்கிறது. கிணறு வைத்திருக்கிறவர்கள் பயிர் செய்தால் 5 ரூபாய் போடுகிறார்கள். **Settlement**-க்கு பின் இரண்டாம் போகத்துக்கு விதிக்கக் கூடாதென்று விவாதம் பண்ணினார்கள். டெப்டி கலெக்டர் கோர்ட்டில் பைசலாயிருக்கிறது. வார **system** 1918-க்கு பிறகு கண்டு முதல் நெல்லுக்கு பொதுச் செலவு ஜமீனைச் சேரவேண்டியது. குளைக்கட்டு ஒரு கொட்டை $5\frac{1}{2}$ படி. 2 எக்கர் 3 செண்டு, ஒரு கொட்டை ஒன்றுக்கு—கங்காணம் 4 படி. மேல்வாரம் நெல் கொட்டை ஒன்றுக்கு உரை $3\frac{1}{4}$ படி சுதந்தரம் 4 மரக்கால் $5\frac{1}{2}$ படி. குடிவாரம் நெல் கொட்டை ஒன்றுக்கு உரை குடிகளுக்கு சேரவேண்டியது கூலி கண்டு முதல் கோட்டை ஒன்றுக்கு கள நிலத்துக்கு பதக்கு. மேற்படி பொதுச் செலவு போக மேல்வாரம் பாதி, கீழ் வாரம் பாதி குடிவாரத்திலிருந்து மேல்வாரத்துக்கு வரவேண்டியது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—இந்த விதமாக எவ்வளவு நாள் இருந்தது ?
A.—40-ம் பசலி வரை இருந்தது.

Q.—இந்த வழக்கம் இப்பொழுது எவ்வளவு நாளாக இருக்கிறது ?
A.—இப்பொழுது தான் இருக்கிறது. 1904-ல் பட்டத்துக்கு வந்தார். அதிலிருந்து இந்த வழக்கம்.

Q.—இதற்கு முன்னுல் எப்படியிருந்தது ?
A.—இதற்கு முன் இப்படி இல்லே. நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குத் தெரியாது.

Q.—இதெல்லாம் இல்லேயென்று காட்ட வேறு பட்டா இருக்கிறதா ?
A.—இல்லே.

Q.—இதற்கு முன் சௌகரியமாக இருந்தது என்று சொல்வதற்கு ரிக்கார்டு இருக்கிறதா ?
A.—பெரியவர்கள் சொல்லத்தெரியும். வேறு ரிக்கார்டு கிடையாது.

Q.—இதற்கு முந்தியுள்ள பட்டா இருக்கிறதா ?
A.—இல்லே.

Q.—அதற்கு ஒன்றும் காகிதம் இல்லேயா ?
A.—இல்லே.

நிலம் ஏலம் போய்விடுகிறது. ஒரு பட்டாவில் 5 பட்டாதார்கள். ஒரு புள்ளி போடாததற்காக நிலத்தை ஏலத்தில் போட்டுவிட்டார்கள். 45 செண்டு ஏலம் போயிருக்கிறது. அதற்கு 144 ரூபாய் கிரயம் வாங்கியிருக்கிறுர்கள்.

அவர்கள் சொந்த நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 10 ரூ. ரேட்டுக்கு பாதிக்கு மேல் குத்தகைக்கு விட்டிருக்கிறுர்கள். அது நஞ்சை நிலம். ஜமீனில் அதிக நீளமானதும் அகலமானதுமான குளம் கிடையாது. அதே குளத்தில் பாய்ச்சுகிற எங்களுக்கு 19 ரூ. தீர்வை.

Q.—பட்டா நிலத்தை குத்தகைக்கு விட்டு இருக்கிறுர்களே அது நல்ல நிலமாய் இருக்குமா ?
A.—இல்லே. எல்லாம் ஒரேதரமான நிலம் தான்.

Q.—எவ்வளவு நிலம் விட்டிருக்கிறுர்கள் ?
A.—சுமார் 144 ஏக்கர்.

Q.—அந்தக் குளத்தில் வேறு நிலம் இருக்கிறதா ?
A.—இல்லே.

Q.—இந்த வருஷத்தில் குத்தகைக்கு விட்டு இருக்கிறுர்களா ?
A.—இந்த வருஷத்திலும் குத்தகைக்கு விட்டு இருக்கிறுர்கள்.

Q.—இதை வேண்டுமென்று நஷ்டப்பட்டு கொடுத்திருக்கிறுர்களா ?
A.—இல்லே. ஜமீனில் குத்தகை ஏலத்திற்கு விட்டு எடுக்கப்பட்டது தான்.

Q.—ஏலம் விட்டு எடுத்ததற்கு ரிக்கார்டு இருக்கிறதா ?
A.—இருக்கிறது. **(Files a document)**.

தண்டந்தீர்வை விஷயமாக கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கிறது. சில புஞ்சை நிலங்கள் கண்மாய் கரை ஓரங்களில் இருக்கின்றன. அவைகளில் தண்ணீர் பிடிக்கிறது. அவைகளில் நெல் தான் சாகுபடி செய்யலாம். வேறு புஞ்சைப் பயிர் சாகுபடி செய்யமுடியாது. அதை உழுது புழுதியாக்கி புழுதி விரைப்பார்கள். அதற்கு தண்டன் தீர்வை விதிக்கிறுர்கள். அது ரொம்ப அக்கிரமம். ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூ. வீதம் தண்டந்தீர்வை விதித்து இருக்கிறுர்கள். **cent**க்கு 6-ம் நூ. கணக்குப்படி 56 ரூ. தண்டந் தீர்வை போட்டிருக்கிறுர்கள்.

Q.—இதை நீங்கள் செலுத்தியாகி விட்டதா ?
A.—ஆமாம்.

அடுத்த வருஷம் 28 ரூ. அதே நிலத்திற்கு தீர்வை போட்டிருக்கிறுர்கள்.

Mr. B. VENKATACHALAM PILLAI :

Q.—அந்த **Ryot** யார் ?
A.—திலகம்மாள் என்கிற ஒரு பெண் பிள்ளே.

Q.—இவ்வளவு தீர்வை கட்டியாவது, ஏன் அந்த நிலத்தை பயிரிட வேண்டும். ?
A.—அந்த நிலத்தைச் சுற்றி நஞ்சை இருக்கிறது. புஞ்சை சாகுபடி செய்யமுடியாது. அக்கம் பக்கத்திலிருக்கிற தீர்வை விதிக்கவேண்டுமென்று மனுக் கொடுத்து இருக்கிறுர்கள்.

Q.—தண்ணீர் **perculation** நஞ்சையாக பாவிக்கும்படி மனு கொடுத்துக் கொள்ளக்கூடாதா ?
A.—மனு கொடுத்து இருக்கிறுர்கள். ஆனுல் இது வரையில் அதைப் பற்றி யாதொரு உத்திரவும் வரவில்லே.

Q.—அந்த நிலம் என்ன விலே பெறும் ?
A.—50 ரூ. பெறும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—இன்னும் அந்த நிலத்தை விவசாயம் செய்துக்கொண்டு இருக்கிறுர்களா ?
A.—ஆமாம்.

Q.—இந்த மாதிரி விவசாயம் செய்துக்கொண்டு செண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் தீர்வை கட்டிக்கொண்டு இருக்கிறுர்களா ?
A.—ஆமாம்.

Q.—ஆகையால் இவ்வளவு தண்டந்தீர்வை போட்டுக்கூட விவசாயம் செய்யவேண்டுமென்று நினேக்கிறீர்களா ?
A.—இந்த விதமாகச் செய்தால் நஞ்சைக்கு மாற்றிக்கொடுத்து என்ற நம்பிக்கையின்பேரில் தான் சாகுபடி செய்துகொண்டிருக்கிறுர்கள். கோவிலுர் 60 நூ. பட்டாவில் அருணசல நாடார்

மகன் போத்தி நாடார் பட்டாவில் ஒரு நிலத்தை புஞ்சையாக காட்டப்பட்டிருக்கிறது அதை நஞ்சைகாக காட்டி தீர்வை போட்டு வருகிறார்கள். 1 எக்கர் 78 செண்டுக்கு ரூ. 58 தீர்வை போட்டிருக்கிறார்கள். Settlementல் அது புஞ்சை என்று classify செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு நல்ல நஞ்சைத் தீர்வை வாங்குகிறார்கள். அது நஞ்சையாக இல்லை. புஞ்சைதான். தண்ணீர் கசிவு ஏற்பட்டிருக்கிறபடியால் புஞ்சை சாகுபடி செய்ய முடியாது. ஜமீன்தார் குளத்திலிருந்து அதற்கு தண்ணீர் வரவில்லை. அக்கம்பக்கத்திலிருக்கிற நஞ்சை நிலங்களிலிருந்து தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. அக்கம்பக்கத்தில் அயன் கிராமங்கள் இருக்கின்றன. செட்டியார்பட்டி கிராமத்தில் 4 ரூ., 5 ரூ.தான் தீர்வை ஒரு எக்கருக்கு இருக்கிறது.

கோவில் சொத்துக்களை ஜமீன்தாரே எடுத்துக்கொள்ளுகிறார்கள். கோவில் காரியங்கள் நடக்க வேண்டும். அந்த வரும்படியை எல்லாம் கோவில்களுக்கே விட்டு விட வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று மனுப்போட்டோம். அது விஷயமாக Civil Court ல் suit போட்டுக் கொள்ளுங்கள் எங்களால் அதில் பிரவேசிக்க முடியாதென்று உத்திரவு செய்து விட்டார்கள்.

கிஸ்தி வசூலில் மகசூலை ஜப்தி செய்து இம்சை செய்கிறார்கள். அறுவடை காலத்தில் மகசூலை ஜப்தி செய்து விடுகிறார்கள். அறுவடை காலத்தில் தீர்வை நிஷ்கர்ஷணை இல்லாமல் இருக்கிறது. கதிராய் இருக்கும்போது ஒரு மதிப்பு போடுகிறார்கள். அதில் பின்னுடி குறைவு ஏற்பட்டால் தண்டன் தீர்வை போடுகிறார்கள். தீர்வையில் பாக்கி இருக்கிறதென்று நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். எப்படியாவது அவர்கள் போட்டிருக்கிற தீர்வையை கொடுக்கவேண்டுமென்று நிர்பந்தம் செய்கிறார்கள். அதற்கு சட்டம் இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். அப்படி ஏதாவது சட்டமிருந்தால் அந்தச் சட்டம் குடிகளுக்கு அனுகூலமாய் இருக்கும்டி செய்யவேண்டும். இந்தத் தீர்வை வசூல் செய்கிறதில் எவ்வளவோ கஷ்டம் ஏற்படுகிறது. கவர்ண்மெண்டில் எப்படி வசூல் செய்கிறார்களோ அதே மாதிரி வசூல் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும். நிலங்கள் கிஸ்திக்கு ஜவாப் தாரியாக இருக்கின்றன. அப்படி இருக்கும்போது மகசூலை ஜப்தி செய்வது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

எங்கள் ஜமீனில் குளம் கணவாய் இவைகளை மராமத்து செய்கிறதே கிடையாது. இப்பொழுது இருக்கிற மாதிரியில் குளங்களில் ஒரு மாதம் $1\frac{1}{2}$ மாதம் தண்ணீர் தான் கட்டும். 4, 5 வருஷகாலமாக ஜமீனில் சொந்த சாகுபடி கிடையாது. கூட்டுக் குத்தகைக்கு விட்டுவிட்டார்கள். கலுங்கு முதலியவைகள் உடைந்தது. உடைந்தே இருக்கிறது. அவைகளை கவனிப்பதே கிடையாது. அதுவும் தவிர மீன் பாசியை ஏலத்திற்கு விட்டு விடுகிறார்கள். குத்தகை எடுத்திருக்கிறவர்கள் தண்ணீரை அடைத்தும் விடுகிறார்கள். பிடுங்கியும் விடுகிறார்கள். இதனால் சாகுபடிக்கு குந்தகம் ஏற்படுகிறது. தண்ணீர் தேவை இருக்கும்போது அடைத்துவிடுகிறார்கள். வேண்டாதபோது மீன் பிடிப்பதற்காக மடையைப் பிடுங்கிவிடுகிறார்கள். மீனை ஜனங்கள் பிடித்துக்கொள்ள பாத்தியம் இருக்கிறபோது 1920-ம் வருஷத்தில் கேஸ் போட்டதில் எங்களுக்கு அனுகூலமாக இருக்கிறது. மாஜிஸ்திரேட் தண்டித்துவிடுவார் அப்பீலில் விடுதலையாகிவிடும்.

(Files documents in connection with this.)

ஆடு, மாடு மேய்கிறதற்கு முன்னோர்கள் காலத்தில் 1850-ம் வருஷத்தில் இப்பொழுது இருக்கிற ஜமீன் குடிகள் பாட்டன் காலத்தில் சௌரக்காடு என்று பெயர் வைத்து அதை காடுகளாக உண்டாக்கி ஒப்பந்தம் ஆன ரிகார்டு இருந்தது. அது சுமார் 7,000 எக்கர் இருக்கும். இப்பொழுது இருக்கிற ஜமீன்தார் பட்டத்திற்கு வந்த பிறகு இவைகளை தாராளமாக தனக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். 1905-ம் வருஷத்தில் ஆடு, மாடுகளுக்குத் தீர்வை போட வேண்டுமென்று இவர்கள் ஆரம்பித்து விட்டார்கள். கிரிமினல் கேஸ் போட்டார்கள். 1906-ம் வருஷத்தில் Civil suit -ம் போட்டார்கள். High Court வரையில் போய் 1919-ம் வருஷத்தில் குடிகளுக்கு சாதகம் ஆயிற்று. அந்தப்படிக்கு அனுபவிக்கவிடும்படிக்கு ஜமீன்தாரை அனுமதி கேட்டார்கள். அனுமதி கொடுக்கவில்லை. அந்த டிக்ரிப்படி அயன் Coupe stytem படிக்கு கொஞ்சம் கொஞ்சமாக Coupe வெட்டிக் கொள்ளலாம். Forest வளர்கிறதற்காக வெட்டிக்கொள்ளவேண்டுமே தவிர சொந்தமாக வெட்டிக்கொள்ளக்கூடாதென்று டிக்ரி ஏற்பட்டிருக்கிறது. அதை மீறி ஜமீன்தார் அவர்கள் ஏகபோகமாக வெட்ட ஆரம்பத்துவிட்டார்கள். 1924-ம் வருஷத்தில் ஆரம்பித்தார்கள். 1932-ம் வருஷத்திற்குள் முக்கால் பாகத்தில் இருக்கிற மரங்களை வெட்டி விற்று விட்டார்கள். 1932-ம் வருஷத்தில் Injunction ஐ மீறி Coupe களை வெட்டி விட்டார்கள் என்று நடவடிக்கை முன்சீப் கோர்ட்டில் நடத்தினோம், Commissioner நியமித்து ரிபோர்டு செய்யச் சொன்னார்கள். அவர்கள் ரிபோர்டு செய்திருக்கிறார்கள். அந்த ரிபோர்ட்டை தாகல் செய்கிறேன். 4, 5 பேர்களை வாதியாக ஏற்படுத்தி தாவா செய்தோம். வெட்டியானது போக இனிமேல் வெட்டக்கூடாது, கோர்ட்டில் Order வாங்கித் தான் வெட்டவேண்டுமென்றும் இது வரையில் இருக்கிறதற்கு ஒரு plan -ம் தயாரித்து வைக்க வேண்டுமென்று Order கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி முனைந்து கோர்ட்டில் கேஸ் போட்டதற்காக Forest Act படி எங்கள்பேரில் Criminal case போட்டர்கள். மாடு மேய்ந்ததாகவும் கொம்பு முதலியவைகள் வெட்டிக்கொண்டு வந்ததாகவும் கேஸ் போட்டார்கள். எல்லா கேஸ்களும் விடுதலையாகி இருக்கிறது. ஒரு தரம் கூப்பில் வெட்டினதாக கேஸ் போட்டார்கள். பிறகு மேல் மலையில் போனதாக ஒரு கேஸ் போட்டார்கள். ஒரு மாஜிஸ்திரேட் புதிதாக வந்தவுடனே ஒரு கேஸ் போடுவார்கள். அதேமாதிரி சமீபத்தில் ஒரு கேஸ் போட்டார்கள். அவர்கள் ஜாகாவுக்கு வந்து விசாரணை செய்து ரிக்கார்டுகளையும் பார்த்து விடுதலை செய்து விட்டார்கள்.

போலீஸ்காரர்கள் எல்லாம் அவர்கள் பக்கம். போலீஸ்காரர்களைத் தன் கைகட்டிக்கொண்டு எங்கள் பேரில் ஜாமீன் கேஸ் போட்டார்கள். அந்த கேசும் விடுதலையாகி விட்டது. அந்தக்கேஸ் Judgment -ல் போலீஸ்காரர்கள் ஜமீன்தார் பக்கம் இருக்கிறதாக எழுதி இருக்கிறார்கள். (Files in number of records in respect of those) Files in number of rec rds in respect of these) முதலாவது ஒரு கேஸ் F rest -ல் மாடு மேய்த்ததாக போட்டார்கள். அது H gh Court வரையில் போயிற்று. அதில் மாடு மேய்க்கிறதற்கு எங்களுக்கு பாத்தியம் இருக்கிறதென்று தீர்ப்பு ஆகி இருக்கிறது. F.les Judgment copy எங்களுக்கு டிக்ரி ஆகி இருக்கிற காடு ஒன்று இருக்கிறது. F rest Act ஒன்று இருக்கிறதென்று ஏதாவது ஒருசாக்கின்பேரில் அதன்படி ரிபோர்ட்டுசெய்து விடுகிறார்கள். மாஜிஸ்திரேட்டு சம்மன் செய்து விசாரணை செய்து கடைசியில் விடுதலை செய்கிறார்கள். அதனால் எங்களுக்கு அதிக பணச செலவு ஏற்படுகிறது. இந்த மாதிரி எல்லாம் எங்களை எவ்வளவோ அலைகழித்து தொந்திரவு செய்கிறார்கள். ஆகையால் அந்த Forest Act என்று சொல்லுகிறதை ரத்து செய்ய வேண்டும்.

Witness No. 239. **Madura.** **24th February 1938.**

Oral evidence of Mr. S. Subramania Ayyar, Advocate of Devakottai.

I submit an additional memorandum giving facts and figures for inam villages both in the Ramnad and Tanjore districts.

The CHAIRMAN: *Q.*—Are you speaking in any representative capacity or in your individual capacity? *A.*—I am speaking in a representative capacity so far as Ramnad district is concerned, and so far as Tanjore is concerned, I have personal knowledge of these things and I have got an interest in that also.

So far as Tanjore district is concerned, I find from the Tanjore District Manual, there are 958 inam villages in that district. So far as Ramnad district is concerned, I have not got exact figures. There the villages number about 500. I am sure there are 500 Darmasanam inam villages in that district. I find from the Ramnad District Manual with reference to the Darmasanam inams prior to settlement, i.e., in the case of pre-settlement inams, the poruppu comes to about Rs. 22,702–7–8. There are a number of posts settlement inam villages for which I have not got exact figures. They are all situated in the Sivaganga as well as the Ramnad zamindari. Similarly there are also Devasthanam villages for which the poruppu before the settlement comes to about Rs. 22,121–6–0. I find that so far as Ramnad district is concerned, each village belongs to a number of persons, say, 40, 50 and 60 and the whole inam is a congery of minor inams. In all the Darmasanam villages there will not be Pannai lands or ryoti lands as they are called. With reference to some of the Darmasanam villages both the warams belong to the inamdars, especially in the case of pre-settlement inam villages. Each inamdar will have only 5, 10, or 15 acres of land and is a small proprietor. My point is that the Estates Land Act brings into its operation only the whole inam villages consisting of 40 or 50 acres of land which have been divided amongst four or five Brahmans and excludes the minor inam villages although such inams may have 400 or 500 acres of lands, and in the case of the former it raises each inamdar to the level of a zamindar. All these Darmasanam villages according to the Hindu Law are divisible among the members of a joint Hindu family. The whole inam villages are in fact a cluster of minor inams, and I say that they also should be excluded from the operation of the Estates Land Act. I say it was wrongly assumed on the floor of the Legislative Council at the time of passing the amended Estates Land Act that the owners of these inams had no pannai interest in their lands. That they had this interest will be evident from both the Tanjore and Ramnad District Manuals. So far as the Tanjore district is concerned, none of the inamdars there got their lands from Palayagars. All of them got their lands from the ruling sovereigns and before the grants were made, the ruling princes purchased both the warams and afterwards gave the lands to Brahmans. I have given an extract from the Tanjore District Manual which will show that they not merely had the melvaram interest but also the kudivaram interest. I have cited an extract from the old authentic records in order to substantiate my statement. I have given the page number there. In addition to the inam villages in the Tanjore district there are also mukhasa lands which number about 96 villages and all of them belonged to Sarabhoji Maharaja; and one of these villages belonged to our ancestors. The grant was in the year 1797.

One Member: *Q.*—Have you got the grant? *A.*—I have not got the grant. Subsequently after the grant was made, these villages were entrusted to the Maharaja during the annexation of Tanjore in 1855 and the villages were taken over by the Government and afterwards regranted to the inamdars as a result of litigation. One of these villages of which I am an inamdar is divided amongst 67 Brahmans and I am enjoying both the warams. I say I have purchased both the warams. I shall produce the sale-deeds. I have purchased both the warams after the year 1930 (?). From the year 1867 both the warams had been leased by the Collector. I am now producing copies of lease-deeds for the thottam lands, which will show that both the warams were leased out by the Collector. The whole village belonged to the Tanjore Palace Estate till the year 1930 (?) though it originally belonged to the inamdars. We presented a petition and we got back the village in the year 1930, and afterwards we divided it amongst ourselves. Even before we purchased, both the warams existed in the village.

Q.—You purchased the land? *A.*—Yes, these are the sale-deeds. Now these villages are sought to be brought within the scope of the Estates Land Act. My point is that these lands have been leased out for a long time and whether or not I had actually cultivated the land for 10 or 12 years prior to the year 1930 or 1934 should not stand in my way of enjoying both the warams. The fact that both the warams belonged to the inamdar is supported by unimpeachable documents. So far as these inamdars are concerned, they are in no way different from the ryotwari ryots. Any adjacent ryotwari landowner who owns 10 or 20 acres of land and who cultivates his land

by hired labour is not in any way different from me, because I cultivate my land by Purakkudi. So where is the difference between a ryotwari landholder and myself? I am also a ryot in Ganapathi Agraharam. There are also several other ryots there who do not cultivate their lands. They also cultivate them by Purakkudi. In the case of the minor inamdar he has not purchased the melvaram interest, whereas in the case of a whole inamdar like myself I have purchased the melvaram interest. I also cultivate my land by Purakkudi.

Mr. B. Venkatachalam Pillai: *Q.*—So far as the inamdars are concerned you say that they have both the warams. But do you admit that each case has to be decided on its merits and according to the nature of the case? *A.*—I am giving these facts only as an illustration.

Q.—Your case is that both the warams exist so far as you are concerned. But generally should not each case be decided on it merits? *A.*—My submission is that so far as Tanjore district is concerned, in most of the cases, the inamdars have got right for both the warams.

Q.—Do you know of cases where the inamdar has got only the melvaram right? *A.*—To my knowledge there is no such inamdar in Tanjore district. So far as Ramnad district is concerned, probably there may be one or two villages there where the inamdars have got only the melvaram right. But I am sure there are a number of villages there also in which both the warams have been acquired subsequently.

Mr. A. Rangaswami Ayyangar: *Q.*—Do you admit that instead of repealing the legislation that has already been passed, if we can suggest some remedies for amending the Estates Land Act, it will go a great way to give relief to the inamdars? *A.*—To some extent it will do. It will be the next best thing.

The Zamindar of Mirzapuram: *Q.*—You want your inams to be excluded from the operation of the Estates Land Act. If that is not possible, what compensation would you suggest? *A.*—The amount of compensation should be worked out by a Civil Court.

Q.—You do not want it to be settled by legislation? *A.*—Certainly not.

Q.—Can you suggest anything better? *A.*—Twenty years rental would be a sufficient compensation.

Q.—If you are given 20 years rental you will be satisfied? *A.*—Yes.

Q.—How much did you pay for your land? *A.*—I have purchased one share of my lands in which I have got both the warams at Rs. 4,000. It comes to 6 acres of nanja lands. I have purchased another share at Rs. 4,000 to Rs. 4,200 or Rs. 4,300.

Q.—What is the extent of your lands? *A.*—Six acres of wet lands and 4 or 5 acres of dry lands.

Q.—Do you want all the inamdars to be treated alike, or, as you have stated just now, do you want that the inamdars to whom the lands were granted by the ruling princes should be treated in a different manner? *A.*—I want that those inamdars who have a right to the soil and to whom the grants were made with a right to both the warams, and also those who have purchased such lands with a right to both the warams should be given the occupancy right.

Q.—Am I to understand that you want all the inamdars to whom the lands were granted by the zamindars or the ruling princes or whoever it might be, should be treated in the same way? *A.*—Provided they have got both the warams, Yes.

Q.—I would also like you to clear my ideas with regard to this point. Before the Estates Land Act of 1908 was passed, you are aware that there were small zamindars and also mukhasadars who are in the same position as inamdars. Don't you think that they should be excluded from the operation of the Estates Land Act? *A.*—Certainly.

Q.—Or you say that they should also get a similar amount of compensation as you have just now suggested? *A.*—Yes.

Mr. B. Venkatachalam Pillai: *Q.*—In your sale-deeds has the melvaram right been mentioned as such separately? *A.*—There is no such thing. The melvaram right was never thought of then or could be thought of.

Q.—You were careful to mention just now that you have been enjoying both the warams? *A.*—There is no separate entry to that effect in the documents. It is not possible.

The ZAMINDAR OF MIRZAPUR : *Q.*—Do you suggest in view of what you have said above, viz, that where as a ryotwari pattadar who has 200 or 300 acres of land can lease out the lands to an under-tenant without giving him the occupancy right, a mukhasadar or an inamdar if he once gives his lands to a tenant, the tenant gets the occupancy right,—in view of that do you suggest that occupancy right should be given to the under-tenant also? *A.*—I think if permanent occupancy right is given to all the sub-tenants in the ryotwari areas and also to sub-tenants in the zamindari areas, then my right of occupancy may also go.

Q.—As they have brought you under the Estates Land Act, it is not possible to exclude you from the operation of that Act. So do you suggest that the under-tenants should be given the occupancy right, the actual tillers of the soil? Otherwise it will amount to perpetuating the injustice that we have committed? *A.*—The under-tenants are not fixed. That is a wrong presumption underlying the whole thing. In ryotwari areas, the cultivating tenants have not been holding the lands for a long time. The ryotwari owners have been changing their tenants year after year. The point is this. The amended Act gives a certain amount of permanent occupancy right to the tenants after 1934. It is difficult for any one to say which person was occupying a particular piece of land before 1934 and whether he is actually claiming occupancy right. Merely by an accident a person might have happened to be in the occupation of the land in 1934. His fathers and forefathers might not at all have been in occupation of the land.

Q.—Can you say whether all these inamdars are cultivating the lands themselves? *A.*—Some cultivate the lands by hired labour. Some cultivate them by purakkudi just as the ryotwari landholders in the Tanjore district.

Mr. A. RANGASWAMI AYYANGAR : *Q.*—Will you at least fix up a particular limit below which the owners of a minimum acreage should be excluded from the operation of the Estates Land Act? *A.*—The limit suggested by Mr. Peddiraju at the time of the passing of the Act, viz., people owning up to 50 acres of land may be excluded from the operation of the Act. These are days in which the people will have to go back to their villages, especially more so it is in the case of Brahmans. They have no other occupation. Therefore they must be given the right of occupancy and the right to cultivate their own lands. They should not be deprived of that right.

Q.—Would you like to have schedule of exempted inamdars saying that any inamdar who owns lands to the extent of 50 acres or so in a particular village as his private land should be excluded from the operation of the Estates Land Act? *A.*—There is no such thing as private land in the case of the inamdars. That is the difficulty. Such a distinction has never been existing. At least in the case of zamindars there is such a thing as home-farm lands. There is no such thing in the case of inamdars. They cannot lay claim to any land as private land.

Q.—Would you be satisfied if a similar provision is introduced in the Estates Land Act to the effect that the inamdars also may have some private lands or home-farm lands for themselves as the zamindars? *A.*—They have made the position of the inamdars at present worse. If they hereafter make any such provision as it is suggested now at least it would be better than the present state of things. Now an individious distinction has been made and an inamdar cannot possess an inch of land as his private land.

Q.—That mistake in depriving the inamdar of his right in the recent amended legislation might not have been intentional. It may be incidental? *A.*—I think it was due to an election stunt.

Mr. B. VENKATACHALAM PILLAI : *Q.*—You said just now that inamdars owning 40 acres or 50 acres might be excluded from the operation of the Estates Land Act. What about some of the non-Brahmans? *A.*—What applies to Brahmans applies also to Non-Brahmans.

The CHAIRMAN : *Q.*—Are you aware that there are several Non-Brahmans in this Presidency who are inamdars? In the Tanjore district it may not be so. But in other parts of the Presidency, there are several Non-Brahman inamdars who own small pieces of land, and what do you say with regard to their grievances? *A.*—I know there are many.

Witness No. 240. Madura. 24th February 1938.

Mr. R. Seturama Ayyangar of Tirumukur, did not give any oral evidence but filed some documents.

Witness No. 241. Madura. 24th February 1938.

Mr. Sabapathy Ayyar of Vaddavasi did not give any oral evidence but filed some documents.

The Committee adjourned for the day.

The Committee resumed its sittings at the Collector's Office Buildings, Madura at 11 a.m. on 25th February 1938.

Witness No. 242. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. Dorai Venkataraja, son of Mr. Peria Alagarraju, aged 55, Seithur, Ramnad district.

All members excepting Mr. B. Narayanaswami Naidu, and Mr. Mahboob Ali Baig were present.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் புதிதாக ?

Evidence :

செட்டில்மெண்டு பட்டாவுக்கு விரோதமாக ஜமீனில் வசூல் செய்கிறார்கள். இந்த செட்டில் மெண்டு பட்டா, பைசல் பட்டா, பைசல் பட்டாவுக்கு விரோதமாக எங்களிடத்தில் வசூல் பண்ணு கிறார்கள். பைசலில் இதைக் காட்டிலும் ஜாஸ்தி வசூல் செய்கிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—எப்படி தெரிகிறது உங்களுக்கு. ரசீது வேண்டுமே.
A.—சிவில் கேஸ்ல் சப்-கலெக்டர் ஆபீஸில் இருக்கிறது.

Witness filed settlement judgment

எனக்கு ராஜபாளையம் பூர்வீகம். மேட்டுப்பட்டியில் இருக்கிறேன். புஞ்சை 50 செண்டு கிரயத் துக்கு வாங்கி வீடு கட்டியிருக்கிறேன். ஜமீனில் வீட்டைக் காலிசெய்ய வேண்டுமென்று ஜில்லா கோர்ட்டில் கேஸ் போட்டார்கள். எனக்கு அனுகூலம் ஆனது. அப்பீல் செய்தார் ஜமீன்தார். ஹை கோர்ட்டிலும் எனக்கு அனுகூலம் ஆச்சு.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—என் காலி பண்ணச் சொன்னார் ?
A.—பட்டா நிலத்தில் கட்டியிருக்கிறேன் என்று தீர்வை 7 அணா நஷ்டம் ஆகிறது என்று.

The CHAIRMAN :

Q.—எவ்வளவு பணம் செலவு ஆச்சு ?
A.—எனக்கு ஹை கோர்ட்டு வரை 100 ரூபாய் ஆச்சு. பட்டாவில் கட்டியிருக்கிறது என்று அப்புறப்படுத்தவேண்டுமென்று சூட் போட்டார்கள். எனக்கு அனுகூலம் ஆச்சு.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—ரிகார்டு தாக்கல் பண்ணுகிறீர்களா ?
A.—ஹை கோட்டில் ரிகார்ட்டுகள் இருக்கு.

Continues

செட்டில்மெண்டு பைசலுக்கு விரோதமாக வருஷாவருஷம் குடிகளிடம் ஏராளமாக **வசூல்** பண்ணுகிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—பைசல் தாக்கல்பண்ணியிருக்கிறார்களா ?
A.—தாக்கல் பண்ணியிருக்கிறேன். (Files).

Continues

47-ம் பசலி அறுவிடை ஆய்க்கொண்டிருக்கிறது. 47-ம் பசலி தீர்வையைக் கொடுத்துதான் நெல்லை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் எடுக்க விடமாட்டோம் என்கிறார்கள். நெல் களத்தில் இருக்கு. நெல் பாழாய்ப் போகிறது.

Witness No. 243. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. Arunachala Thevar, son of Mr. Muthusami Thevar, Seithur Zamin, Ramnad district.

செட்டில்மெண்டு ரேட்டில் ஜமீன்தாரியை சர்வே பண்ணி, அதற்கப்புறம் போர்டுக்குப்போய் ஜமீனைச் சர்வேபண்ணி, தீர்வை விதிக்காமல் பட்டா கொடுத்துவிட்டார்கள். எங்கள் வரி ஐடம்மில் துன்பம் இருக்கிறது. அதை அயன் ஒப்பந்தம் தீர்வை ரேட் சரிபண்ணிக்கொடுக்க வேண்டுமென்று செட்டில்மெண்டு ஆபீஸில் மனு கொடுத்தோம். போர்டில் நஞ்சை தீர்வை ரேட் கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தோம். செட்டில்மெண்டு செலவுக்காக ரூ. 8,087 சொச்சம் பாங்கியில் கட்டி ரசீது கொண்டுவந்து கொடுத்தோம். ஜமீன்தாரர் பூரா செட்டில்மெண்டு பண்ணிக்கொடுக்க வேண்டுமென்று போர்டுக்கு மனு கொடுத்தார். 8,000 சொச்சம் போக இன்னும் 1,362 ரூபாய் கட்டவேண்டும் அப்படியில்லாவிட்டால் ரூபாய் ரீபண்டு வாங்கிக்கொண்டுபோ என்று செட்டில்மெண்டு ஆபீஸர் உத்தரவிட்டார்கள். 1,362 ரூபாய் கட்டிவிட்டோம். செட்டில்மெண்டு சர்வே ஆச்சு. தீர்வை தாரணை, புஞ்சை மட்டும் அயன் ரேட் போட்டார்கள். நஞ்சை மட்டும், அயன் ரேட் கவனியாது, செட்டில்மெண்டு பண்ணாமல் ரூ. 19, 6 அணா வைத்து தீர்வைபோட்டுவிட்டார்கள். அயன் தீர்வை யில்லாதபடி கெடுதலான தீர்வை போட்டு செட்டில்மெண்டு பண்ணி பட்டா பண்ணிவிட்டார்கள். மறுபடியும் போர்டுக்கு அதிகாரம் இருக்கிறதினால் சீர்திருத்தம் பண்ணி கெடுதல் தீர்வையை ரிவைஸ் பண்ணும்படி பெட்டிஷன் கொடுத்தோம்; பெட்டிஷனை டிஸ்மிஸ் பண்ணிவிட்டார்கள். ரெவினியு போர்டில் பட்டாவை நிறுத்தமாட்டேன் என்று கான்ஸல் பண்ணிவிட்டார்கள். செலவு ஜாஸ்தி ஆச்சு. கட்சிகள் ஏற்பட்டு செலவழிக்கமுடியாமல் விட்டுவிட்டோம். சரியான ரேட்படி விதிக்காமல் கெடுதல்ஆன தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைமட்டும் அயன் ரேட் செட்டில் பண்ணுகிறார்கள். நஞ்சைமட்டும் அயன் ரேட்படிக்கு ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். அது

ஜமீன் ஐடம்மாய் இருக்கிறதினால் பத்தொன்பதேகாலரிக்கால் போட்டார்கள். ஜமீன் சொந்த நிலத்தை 35 ரூபாய்க்கு குத்தகை விடுகிறார்கள். இப்போது அவர்களுக்கு ஒரு எக்கர் 10 ரூபாய். அதே நிலத்தை காண்டிராக்ட் விடிகிறார்கள். அவர்கள் செட்டில்மெண்டில் எக்ராவுக்கு 20 ரூபாய் "உரம்" மட்டும் செலவழிக்கவேண்டும். இந்த மாதிரி ஒரு செட்டில்மெண்டில்லாத படி அயன் ஒப்பந்தம் பண்ணுகிறேன் என்று சொன்னதினால் பணம் கட்டினோம். அக்கம்பக்கம் ரேட்டை அனுசரியாமல் ஒரே ரேட் போடுகிறார்கள்.

மராமத்து—

ஜமீன் குளங்களில் மராமத் பார்க்கிறது கிடையாது. குளங்களை மராமத் பார்க்கவேண்டும். கால்வாயில் மலையில் இருந்து வருகிற தண்ணீரை குறுக்கே அடைத்துக்கொண்டு "நாற்று" காலாகாலத்தில் பாவுவதற்கு இல்லாமல் கஷ்டப்படுத்துகிறார்கள். அதனால் நஷ்டமாகிறது. தண்ணீர் வருகிறபோது நாங்கள் ஆவலோடு போய் குளத்துக்கு வருகிற தண்ணீரை ஏன் அடைத்துவிடுகிறீர்கள் என்று கேட்டால், 50 பேர் வந்து கலகம்செய்ய எத்தனிக்கிறார்கள். அநேகமாக போலீஸ் கான்ஸ்டபில்கள் இருப்பார்கள். ஒருவாரம் ஒருமாதத்துக்குப்பின்னால் அபரிமிதமாக மழை பெய்துதான் வெள்ளம் வரும். அதன் பின்னால் பயிரிட எத்தனிப்போம். தண்ணீர் வந்தபோது குளத்தை அடைத்து விடுவார்கள். பயிர் இட்டாலும், தண்ணீர் குறையால் நஷ்டம் அடைந்துவிடுகிறது. இப்படி வருஷாந்திரமும் துன்பம். குளம் மராமத் நடக்கவேயில்லை. குளம் மராமத்தை நிறைவேற்றி செட்டில்மெண்ட் ஜட்ஜுமெண்ட்டை சரியாய் பரிசீலனை பண்ணவேண்டும். ரெவினியு போர்டார் ஜட்ஜ்மெண்டை ரத்துபண்ணி அயன் ஸிஸ்டம்படிக்கு ஸிஸ்டம் பண்ணிக் கொடுக்கவேண்டும். ஏராளமாய் பணம் வருகிறது.

மீன்பாசி—

பூரா குளத்தையும் 5 வருஷத்துக்கு ஒரு வருஷம் ஒன்றுக்கு 5 ஆயிரத்துக்குமேல், மொத்த காண்ட்ராக்டிக்கு முன்னதாகவே பணம் வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள். மீன் குத்தகை எடுத்தவன் அரைக்குளம் இருக்கிறபோதே, தண்ணீரை அடைத்துவிடுவான். நாளைக்கும் நடந்து வருகிறது. தண்ணீர் வேண்டும் என்கிறவர்களுக்கு ரூபாய் வாங்கிக்கொண்டு தண்ணீர் கிரயத்துக்கு விற்கிறான்.

செட்டில்மெண்டு சம்பந்தப்பட்ட விஷயத்தைச் சொல்லியிருக்கிறேன்.

காடு சம்பந்தமான விஷயங்களில் நிர்பந்தம் இருக்கிறது. விரிவாகச் சொல்லவேண்டும்.

Mr. P. S. Kumaraswami Raja :

"30 வருஷமாய் கேஸ் நடத்துகிறீர்கள். ஒரு நாளில் எப்படி சொல்லமுடியும்."

Forest

Witness continues.

ஒரு எக்ராவில் 4 கோட்டைதான் விளையும். இப்போது இருக்கிற நிலைமையில் தீர்வைகட்டமுடியவில்லை. கடன் வாங்கி தீர்வை கொடுக்கவேண்டியிருக்கிறது. 2 லட்ச ரூபாய் பொரும்படியான **Forest coupe** பை வெட்டி ஜமீந்தார் விலைக்கு விற்றுவிட்டார். சூட் போட்டோம். ஜமீந்தார் 35-ம் வருஷ முதற்கொண்டு ஒழுங்காய் விட்டுவிடவேண்டும். காட்டை அழிக்கக்கூடாது என்று கோர்ட்டில் டிகிரி கிடைத்தது. எங்களுக்கு அனுகூலம் ஆச்சுது. டிகிரிபடி சொத்தை ஒப்புவித்துவிட டிகிரியில் நேர்மை பண்ணவேண்டும். ஜமீன்தார்சூட் போட்டிருக்கிறார். ராஜி என்று வாய்தா போட்டார்கள். இன்னும் பெண்டிங்கில் இருக்கிறது.

போலீஸ் சர்கில் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ஜமீந்தார் நினைத்தபோது வரவேண்டும். ஆடுமாடு அடைக்கிறதற்கு சப்-இன்ஸ்பெக்டர் வரவேண்டும். 2,500 மாட்டை பவுண்டில் அடைத்து கேஸ் போட்டார்கள். எங்களுக்கு அனுகூலம் ஆச்சு.

டிக்கிரிபடி மரம் வெட்டப்போனேன். டிப்டி சூப்பிரன்டென்டெண்டு ஆப் போலீஸ், அஸிஸ்டெண்டு சூபிரண்டென்டெண்டு ஆப் போலீஸ், கலெக்டர் உடனே அவ்விடம் வருகிறார்கள். மரத்தோடு எங்களை சார்ஜ்செய்து இருக்கிறார்கள். ஒரு கேசும் தண்டனை ஆகவில்லை.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—அவஸ்தை ஜாஸ்தி யிருக்கிறதா ?
A.—தாங்க முடியவில்லை.

Continues.

எங்களுடைய பாத்யதையில் 2 லட்ச ரூபாய் ஜமீந்தார் அனுபவித்து வருகிறார். ஜமீந்தாரிடம் ரிகார்டு கேட்டால் கிடையாது. சப்-கோர்ட்டில் ரிக்கார்டு பைல் பண்ண இன்னும் வரவில்லை. டிகிரிபடி நடவடிக்கைகளை மீறும்பட்சத்தில் நாங்கள் மீறத்தயாராய் இருக்கிறோம். எங்கள் பாத்யம் அனுபவிக்கும்வரை தீர்வை போடாதபடி ஸ்டாப் பண்ணவேண்டும். கௌன்ஸில் போட கமிட்டியார் ஆகிய உங்களிடம் உத்தரவு கிடைக்கவில்லை என்றால், நாங்கள் யுகாந்திரம் வரை நசித்துத்தான் போகவேண்டும்.

ஜமீன் காட்டில் 24 பேர் மரம் வெட்டியதாக என்னையும் சேர்த்து ஜாமீன் கேஸ் போட்டார்கள். டிக்கிரிபடி அனுபவிப்பதால், கலெக்டர் மணி விடுதலைசெய்துவிட்டார்.

கர்ணம், கிராம முனிஸீப்பைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஜமீந்தார் சொன்னபடி அவர்கள் ஆடவேண்டும். ஜமீந்தாருக்காக, கர்ணம் கிராம முன்ஸீப் சாட்சியம் இஷ்டம்போல் சொல்லுகிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—கர்ணம், கிராம முன்ஸீப் ஜமீந்தாருக்கு கட்டுப்பட்டவர்கள் இல்லையே. அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆச்சே.
A.—ஜமீந்தாருக்குதான் உழைக்கிறார்கள்.

கிரிமினல் கேஸ்கள் எல்லாம் போட்டுப்பார்த்துப் பலிக்காமல், போலீசார் மூலமாக எங்கள்மேல் காட்டில் பிரவேசிக்க மார்க்கமில்லாமல் தடையுத்தரவு போட்டுவித்தார்கள். அந்த ஆர்டர் சரியில்லை என்று மிஸ்டர் புல்லா ரெட்டி தள்ளிவிட்டார்.

Witness No. 244. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. Ramakrishna Reddi, Vadamalaikurichi Pavali zamin, Sattur taluk, Ramnad district.

எங்கள் ஜமீனில் தீர்வை ஒரு விஸ்தீர்ணமில்லாமல் வாங்குகிறார்கள். 1217 பசலியை விட 1327-ம் பசலிக்குப்பின்னால் ஜாஸ்தி தீர்வை போட்டிருக்கிறார்கள். 318-ல் நஞ்சையில் புஞ்சை சாகுபடிக்கு "குளக்காரர்" "மேல் வெட்டு" வசூல் பண்ணினார். 1320-ல் "தரிசு தீர்வை" "தண்ணீர் தீர்வை" "குழை வெட்டு" வசூல் பண்ணினார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—மனு கொடுத்திருக்கிறீர்களா கலெக்டருக்கு ?
A.—தீர்வை கொடுக்கச் சக்தியில்லாதவர்கள். எங்களால் போராட முடியவில்லை. மனுக் கொடுத்தாலும் மராமத் கணக்கில் 50 ரூபாய் செலவு பண்ணினதாகக் கணக்கு கொடுத்து விடுகிறார்கள்.

Continues.

ஜமீந்தாரால் செய்யப்பட்ட மராமத் சரியாய் நடக்கிறதில்லை. சர்க்கார் கண்மாய்களில் மராமத் பண்ணுகிறமாதிரி ஜமீனில் சர்க்கார் மூலம் மராமத்து பண்ணவேண்டும்.

நஞ்சைகளில் புதிதாக கிணறு சொந்தமாக வெட்டினால் அதற்கு 129 பணம் அநியாய தீர்வை போடுகிறார்கள். நிஷ்கர்ஷையில்லாமல் வாங்குகிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—இஷ்டப்படி போட்டால் ஏன் ஆட்சேபனை பண்ணுகிறதில்லை ?
A.—அவர்கள் கவனிக்கிறதில்லை.

Q.—கலெக்டருக்குப் பெட்டிஷன் கொடுக்கலாமே ?
A.—செலவழிக்க முடியவில்லை. போட்டதெல்லாம் கொடுத்து வருகிறோம். (Witness files pattas.)

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—விவகாரச் செலவு ஜாஸ்தியாய்ப் போய்விடும் என்று போட்டதை கொடுக்கிறீர்கள்.
A.—ஆம்.

Continues.

92 செண்டு 1 குழி 60 செண்டுக்கு 1 குழி என்று கணக்கு எடுத்துக்கொண்டு 3 பங்கு தீர்வை வசூல் செய்கிறார்கள். கோடை சாகுபடி செய்தால் அதற்கு 3 பங்கு தீர்வை வாங்குகிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—92 செண்டு 60 செண்டு ஆச்சு எவ்வளவு நாளாக ?
A.—10 வருஷமாய் இருக்கிறது.

Q.—ஆட்சேபனை பண்ணவில்லையா ?
A.—இல்லை. 100-க்கு 90க்குமேல் படிக்கத் தெரியாதவர்கள். ஜமீந்தார் கேட்ட தீர்வையைக் கொடுத்துவிடுகிறார்கள்.

ஒரு கண்மாயில் இருந்து நஞ்சை நிலத்திற்குப் பக்கத்திலுள்ள புஞ்சை நிலங்களுக்குப் பாய்ந்தால் வாட்டர் ரேட்டு தீர்வை ரூ. 13–15–7 வசூல் பண்ணுகிறார்கள். கண்மாயிலிருந்து அனாவசியமாய் போகிற தண்ணீர் புஞ்சை சாகுபடிக்கு உபயோகித்தால் அதற்கு வாட்டர் ரேட்டு அதிக தீர்வை வசூல் பண்ணுகிறார்கள். புஞ்சை 1 பங்குக்கு 3 பங்கு. ஒரு குளத்திலும் அந்த தண்ணீர் தங்குகிறதில்லை அயனுக்குப் போய்விடுகிறது. சமுத்திரத்தில் போய்விடுகிறது. அந்த ஜலத்தை இறைத்தால் தீர்வை கேட்கிறார்கள். நஞ்சையில் அதற்கு ஏற்பட்ட தீர்வை பற்றாது என்று சொல்லி "குளவெட்டு" தீர்வை வசூல் செய்கிறார்கள். "குளவெட்டு" சரிசமமாகப் போடுகிறார்கள். "குளவெட்டு" என்பதே எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. இன்னது என்று சொல்லமாட்டேன் என்கிறார்கள்.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—"குளவெட்டு" எதற்காக வாங்குகிறார்கள் என்பது தெரியவில்லை.
A.—ஆம்.

Continues.

ஜமீந்தாரிடத்தில் ஒரு இஞ்சினியராவது இந்த விதமாக ரிப்பேர் செய்யவேண்டும் என்று செய்கிறதில்லை. கணக்காகச் செய்கிறது. விவசாயிகள் சௌகரியத்துக்காகச் செய்கிறதில்லை.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—"குளவெட்டு" கிஸ்தியில் எவ்வளவு பங்கு ?
A.—ஒன்றில் முக்காலே அரிக்கால் கிஸ்தியில் சேர்த்து வாங்குகிறார்கள். குளத்தை வெட்டுகிறதில்லை.

Q.—ஜமீனில் தனிக்கணக்கு வைக்கிறார்களா ?
A.—வைத்திருக்கிறது தெரியாது.

Continues.

நஞ்சைகளில் கொடிக்கால், கரும்பு, வாழை இவைகளுக்கு 169 பணத் தீர்வை. 20 பணம் ரேட் உள்ள நஞ்சையில் நெல் சாகுபடிக்கு 169 பணம் போட்டிருக்கிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—ஜமீந்தார் பேர் என்ன ?
A.—சி. தா. தேவகோட்டை மேல் வீடு கீழ் வீடு சிதம்பரம் செட்டியார் க. வ. சிதம்பரம் செட்டியார்.

Continues.

1301-ம் பசலிக்கு குள வெட்டு கிடையாது. பின்னால் குளவெட்டுபோட்டிருக்கிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—நீங்கள் கேட்டதெல்லாம் கொடுக்கிறதினால் இதையெல்லாம் போடுகிறார்கள்.
A.—ஆம்.

Continues.

கண்மாய்களில் ஆடுமாடுகள் மேய்வதற்கும், விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளை எடுத்துக் கொள்ளுவதற்கும் ஜமீந்தாரர் விட்டு கொடுக்கவேண்டும். புல்லை மேய்ச்சலுக்குக் கொடுக்கிற தில்லை. அதை எல்லாம் குத்தகைக்கு விட்டு விட்டு உபத்ரவம் செய்கிறார்கள். முன்னால் குத்த கைக்கு விடாது, சமீபத்தில் 10, 15 வருஷமாய் குத்தகைக்கு விடுகிறார்கள். கண்மாய்களை மராமத் செய்வதில்லை. மராமத் செய்து, சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளுகிறார்கள்.

Survey.

எங்கள் கிராமத்துக்கு சர்வே அவசியம் வேண்டும். சர்வே செய்யாததினால் 10 எக்ரா நிலம் இருந்தால், அளவு போட்டுப் பார்த்தால் 8 எக்ரா யிருக்கும். 8 எக்ரா சாகுபடி செய்தால் 10 எகரா தீர்வை கொடுக்கவேண்டும்

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—கணக்கில் 10 எக்கரா இருந்து 8 எக்கரா சாகுபடி பண்ணினால்.
A.—கேட்டால் கொடுக்கவேண்டியதுதான்.

Continues.

நஞ்சைகளில் வடிகால் கழிவு கிடையாது. "அத்து" கிடையாது. அயன் நஞ்சைக்கு ஒப்பந் தம் செய்யவேண்டும்.

பட்டா மாறுதல்.

பட்டா மாறுதல் விஷயத்தில் பட்டா மாற்றிக்கொடுக்கிறதில்லை. அதற்கு "நஜர்" என்று கட்டணம் வாங்குகிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—பட்டாவுக்கு எவ்வளவு வாங்குகிறார்கள் ?
A.—குழி ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் மொத்தத் தீர்வையில் 5 ரூபாய். அப்படிக் கொடுத்தால் பட்டா மாற்றுகிறார்கள். 10 எகரா நிலத்தில் ஒரு எக்ரா நிலம் வாங்கியிருந்தால் அந்த 10 எக்ரா நிலம் உள்ளவனுக்கு 3 பசலி தீர்வை போடுகிறதில்லை. ஒரு எக்ரா நிலம் வாங்கினவனுக்கு, 3 பசலிக்கு 10 எக்ரா பூரா பாக்கி போட்டால்தான் பட்டாமாற்றுவேன் என்று சொல்லுகிறார்கள். சில பட்டா மாற்றாமல் இருக்கிறார்கள். பசலி முடிவுக்குள் எங்களிடம் கிஸ்தி வசூல்பண்ணுகிற தற்கு வட்டி வாங்கக்கூடாது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—வட்டி வாங்குகிறார்களா ?
A.—இந்த பசலி தீர்வைகளை, பசலி முடியாததற்குள் வட்டி வாங்குகிறார்கள். அதை வாங்கக் கூடாது. கிராம, புரம்போக்கு நிலங்களில் சில குடியானவர்களுக்கு ஒட்டுத்தரிசாகச் சேர்ந்து இருக்கிற நிலங்களை 3 பசலி தீர்வை வரை வாங்கிக்கொண்டு பட்டா மாற்றிக்கொடுக்கவேண்டும். கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். 100 ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். 10 எக்ரா வில் 2 செண்டு நிலம் பண்ணைக்கு வைத்துக்கொண்டு, 2 செண்டு ரேட்டு "நஜர்" வாங்கிக் கொண்டு பட்டா மாற்றிக்கொடுக்கச் சொன்னால், மாற்றிக்கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்.

3 வருஷ தீர்வையை வாங்கிக்கொண்டு பட்டா மாற்றிக்கொடுக்கவேண்டும்.

Witness No. 245. Madura. 25th February 1938.

Oral evidence of Mr. த. மு. சி. அ. Swanthuraja Nadar, Etayaranpannai, Sattur taluk, Ramnad district.

பொது ஜனங்கள் சிறு குண்டு குளங்களில் "உரம்" எடுக்கிறதற்குப் பாத்தியம் இருக்கிறது. பட்டா போட்டு வைத்து இருக்கிறார்கள். அவர்கள் சொந்தமாக பிரத்தியாருக்குப் பட்டா பாட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். சொந்த அனுபவத்தில் இருக்கிறது. (Witness files the patta).

பட்டா மாறுதல்.

பட்டா மாறுதல் கஷ்டமாயிருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

ஜாமீனுக்கு சம்பந்தப்பட்டப்புது point சொல்லுங்கள்.

Continues.

தீர்வை, தண்ணீர் வரி ஜாஸ்தியாய் இருக்கிறது.

1 எக்கர் 62 செண்டு உள்ள கோட்டை ஒன்றுக்கு புகையிலை மகசூலுக்கு ரூ. 26–11–8, வாழை க்கு ரூ. 22–4–0, மிளமாய் செடி ரூ. 17–15–1, (Ragi) கேப்பை ரூ. 7–15–8,

Witness files receipts and pattas.

1331 fasli இருந்து பட்டா மாறவில்லை.

நில விஸ்தீர்ணம் **Proprietor** அவர்கள் **agent** டுகளால் ஜாஸ்திபடுத்தப்படுகிறது. **Survey** கிடையாது. **Survey settlement** செய்து விஸ்தீர்ணம் கூட்டாதபடிக்குச் செய்யவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—யார் **Proprietor** ?
A.—**Mr. Kailasa Devar.**

Continues.

Joint பட்டாவிலுள்ள ஒருவர் தன் நிலத்திற்கு தீர்வை செலுத்தினாலும் மேற்படி பட்டாவிலுள்ள மற்றொருவர் தீர்வை செலுத்தாததினால், தீர்வை செலுத்தினவர் நிலத்தையும் தங்கள் பெயருக்கே ஏலம் எடுத்து பண்ணை நிலமாக்கிக் கொள்ளுகிறார்கள். பட்டா மாறுவது வெகுகஷ்டம். அயன் தீர்வை போடும்படிச் செய்யவேண்டும்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—தினுசுவாரி தீர்வை போடக்கூடாது என்கிறீர்களா ?
A.—ஆம், ஒரே தீர்வைதான் இருக்கவேண்டும். அயன் தீர்வையாய் இருக்கவேண்டும்.

Q.—நிலம் கெட்டுப்போகாதா ?
A.—உரம் போடுகிறது நாங்கள்.

Witness No. 246. Madura. 25th February 1938.

Oral evidence of Mr. R. S. Savaridass Oodayar, son of Mr. Savarimuthu Udayar, Rayappanpatti, Erasakkanayakkanur, Madura district.

எங்கள் ஜமீனில் தீர்வை தாரணை, கதிர் தானியத்துக்கு 4 பணம். காய் தானியத்துக்கு 2 பணம். கேப்பை, சாமை, நெல்லு 4 பணம். குடிகள் சொந்த மராமத்திலிருந்து கிணறு வெட்டி சாகுபடி பண்ணினால், கதிர் தானியம், வெள்ளாமையிட்டால் 6 பணம். அது கூடாது. இந்த மாதிரி போட்டதால் ஜமீந்தாரை நேரில் போய்க்கேட்டோம்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—மானவாரியாய் இருந்தால் எவ்வளவு ?
A.—மானவாரியாய் இருந்தால் 4 பணம், 2 பணம்.

Continues.

இந்த 6 பணம் போட்டது நியாயம் இல்லை என்று கேட்டோம். அவர் எங்கள் வழக்கம் என்று சொன்னார். நாங்கள் இந்த பட்டாபெற்றுக் கொள்ளமாட்டோம் என்று **Civil Suit** போட்டோம். **High Court** வரையில் போய், அது போடப்படாது என்று தீர்ப்பு வாங்கி வந்தோம்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—தீர்ப்பு கொண்டு வந்தீர்களா ?
A.—**Water rate case** யில் ஹைகோர்ட்டில் **file** பண்ணியிருக்கிறது.

Continues.

தற்சமயம் தீர்ப்பு வாங்கினவர்களுக்கு தான். மற்றவர்களுக்கு இல்லை. ஆனதினால் இரண்டாவதாக சில பேர் **suit** போட்டார்கள். அவர்களுக்கும் தீர்ப்பு அனுகூலமானது.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Observed "இதே வேலையாய் யிருக்கிறீர்கள்" 3-வது தடவை குடிகள் நோட்டீஸ் கொடுத்தார்கள். அப்போது **zamindar** "ஒரு **survey** பண்ணி **settle** பண்ணிக்கொள்வோம். அப்படி பண்ணினால் தொந்தரவு இல்லாமல் இருக்கும்" என்று சமாதானம் சொன்னார். செலவை நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம். நீங்களே செலவு செய்து **survey** பண்ணுகிறது சம்மதம் என்று சொன்னோம். ஜமீந்தாரே, பணம் **deposit** கட்டி **survey** பண்ணி **settle** பண்ணினார். அப்போது 100-க்கு 12½ ரூபாய் ஒசத்திவிட்டார்கள். அது தப்பு பழைய **pais kist** படி இருக்கவேண்டும். இதனால் ஜமீந்தாருக்கு ஜாஸ்தி தீர்வை ஏற்படுகிறது. அது தப்பு என்று **Revenue Board**க்கு **appeal** போட்டோம். 1919-வது வருஷத்தில் அவர்கள் திரும்பவும் **settle** பண்ணி மொத்தத் தீர்வையில் 9இல் ஒன்று கழித்து விடுகிறது என்று **Revenue Board Order** ஏற்பட்டது. அது சரி இல்லை என்று **High Court** டுக்கு **zamindar Revision** போட்டார். **Privy Council**யில் **Vizagapatam District zamindars case**, இதே மாதிரி **case** நடக்கிறது. அது முடியட்டும் என்று **High Court** டில் **pending** வைத்துவிட்டார்கள். **Privy Council Law report** வந்தவுடனே **High Court** டில் குடிகளுக்கு அனுகூலமாச்சு.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—உங்கள் **zamindar**ருக்கு என்ன வரும்படி வரும் ?
A.—30 ஆயிரம் ரூபாய்.

Continues.

இப்போது இந்த **settlement** முடிந்து **High Court** டில் 4, 5 வருஷம் ஆச்சு. இன்னும் பழைய தீர்வை வசூல் பண்ணுகிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—போடமாட்டோம் என்று சொன்னால் ?
A.—1906-ம் வருஷம் முதல் 34-வது வருஷம் வரை இதே **Court** ஜோலி. இன்னொரு தடவை போனால் சங்கடம். அதற்காகப் போட்டுக் கொண்டிருக்கிறோம்.

Q.—**Judgment Record** இல்லையா ?
A.—**Water case** யில் **High Court** டில் **file** பண்ண, வக்கீல் அலாடி கிருஷ்ணசாமி அய்யர் இடத்தில் கொடுத்திருக்கிறோம். கேட்டு வாங்கி பண்ணுகிறோம்.

Continues.

இந்த நெல், கதிர் தானியமாய் இருப்பதால் 4 பணம் ஏற்பட்டது. தோட்டமாயிருந்தால் சில சமயத்தில் "தன் ஊற்று" வந்து அடித்தாலும், பக்கத்திலுள்ள கண்மாய்கள் பெருகினாலும் ஊற்று எடுக்கும். ஊற்றில், நெல் சாகுபடி பண்ணினால் 6 பண ரேட்டுக்கு மேல் **water** தீர்வை என்று மும்மாகாணி (1–15–0) தீர்வையுள்ள நிலத்துக்கு 46 ரூபாய் தண்ணீர் தீர்வை வாங்குகிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA

Q.—**Survey Settlement** ஆச்சா ?

A.—ஆச்சு.

Q.—**Survey register** வைத்து இருக்கிறார்களா ?

A.—இன்னும் வாங்கவில்லை. ஆதிகாலத்தில் இந்த **settlement** நடந்தது. ஜமீன்தாரும், நாங்களும் பேசிக்கொண்டோம். **Survey settlement** செலவு அவர் செலவு என்று பேசிக்கொண்டோம். இப்போது அந்த **Settlement record Government** இடமிருந்து ஜமீன்தார் வாங்கிக்கொள்ளவில்லை. **Settlement officer** கையில் இருக்கிறது. எந்த காரணத்தால் இருக்கிறதோ, தெரியவில்லை. இரண்டு வருஷத்துக்கு முந்தி **settlement survey** செலவைக்கொடுக்க வேண்டுமென்று என்னமோ **rate** வைத்து 5 ஆயிரத்துச்சொச்சம் குடியானவர்களிடமிருந்து வசூல் பண்ணியிருக்கிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—இந்த வசூல் **zamindar order** ரா, **Government order** ரா ?

A.—**Government order** ரோ **zamindar order** ரோ தெரியவில்லை.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—நீங்கள் எவ்வளவு செலுத்தியிருக்கிறீர்கள் ?

A.—ஜமீன்தாருக்கு 5 ஆயிரத்துக்கு மேல் செலுத்தியிருக்கிறோம்.

Q.—கொடுத்ததற்கு ரசீது இருக்கிறதா ?

A.—கொண்டுவரவில்லை ரசீது யிருக்கிறது.

Mr. P. S. KUMARASWAMI RAJA told the witness :

"பின்னால் ஆஜர் பண்ணுங்கள்."

Witness continues.

குடிகள் பட்டா நிலங்களில் **மரங்கள்** இருந்தால், அது குடிகளுக்குப் பாத்தியம். அதை, இவர்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சிறுவர்களாகயிருக்கிற போது, பலவிதமான **case** சுகள் போட்டுகொண்டிருந்திருக்கிறார்கள். ஒரு தடவை ஒரு குடியானவன் கிணறு வெட்டி கிணற்றோரத்தில் வேப்பமரம் வைத்தான். வேப்பிலை கிணற்றில் விழுந்து குடிக்கிற தண்ணீர் கெட்டுப்போகிறதினால், வேப்ப மரத்தை வெட்டி விட்டான். அவன்மேல் **Criminal** லில் திருட்டுக் கேஸ் போட்டார்கள். நான் வைத்த மரத்தை நான் வெட்டி விட்டேன் என்று சொன்னான். **Magistrate** சொந்தக்காரன், தான் வைத்த மரத்தை வெட்டினால் **Criminal case** ஆகாது என்று தள்ளி விட்டார்.

Continues.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—**Record** கொண்டு வந்தீர்களா ?

A.—இல்லை பட்டணத்துக்கு அனுப்பினேன்.

ஜமீன்தார் **Civil suit** போட்டார்கள். பட்டா நிலங்களிலும், கொல்லைகளிலும் இருக்கிற விருக்ஷ ஜாதி, ஜமீனுக்குச்சொந்தம். பலன் அனுபவிக்கவேண்டுமானாலும், வெட்டவேண்டுமானாலும் ஜமீன்தாரிடம் **permit** கேட்டு வாங்கவேண்டும் என்று பிராது ஆச்சு. **High Court** வரையில் வேப்பமரத்துக்கலைக் கொண்டுபோனோம். **High Court** டில் குடிகள் பட்டா நிலங்களில் இருக்கிற மரங்கள் குடிகளுக்கு சொந்தம் என்று ஆச்சு.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அந்த **Judgment** இருக்கா ?

A.—வாங்கித்தருகிறோம். Mr. P. S. Kumarasami Raja told the witness "**Record** டை வாங்கி அனுப்பவேண்டும்."

Continues.

மலையில் முன்காலத்தில் சகல ஏர் கருவிகள், புல், போதை புல், மரங்கள் இவைகளுக்கு பாத்யம் உண்டு.

1895-ம் வருஷத்தில் **Mahalinga Thevar** கோட்டில், வேலி கட்டுவதற்காக, "தொட்டு" வெட்ட வந்தபோது **Forest** டுகாரர் தடுத்து விட்டார்கள். மரத்தைக் கொண்டுபோய்விட்டார்கள் என்று கொள்ளைப்பிராது **Magistrate Court** டில் கொடுத்தார்கள். **Session** சுக்குப்போய் **Malyerly** துரை, ஜமீன் குடிகள் ஜமீன் **forest** இல் பிரவேசிப்பது **Criminal** குற்றமாகாது என்று **Judgment** கொடுத்து இருக்கிறார்.

அப்படியிருக்க இவர்கள் நாளாவட்டத்தில் ஜமீன் குடியானவர்கள், கலைப்பைக்காகவும் விறகுக்காகவும் ஏர் கருவிகளுக்காகவும் காட்டுக்குப் போய் மரம் வெட்ட, சொந்தக்காரர்கள்பேரிலும் வேலைக்காரர்கள்பேரிலும் சீட்டு (**licence**) வாங்கினதாக நெடுநாள் ஜமீனில் ரிகார்டு பண்ணியிருக்கிறார்கள். கடைசியில் மலையைச் **Chillandi Thevar** க்கு குத்தகைக்கு விட்டு விட்டார்கள். நாங்கள் எதிர்வாதம் பண்ணினோம் வழக்கம்போல் மரத்தை வெட்டிக்கொண்டு வந்தோம். **Oosilampatti Deputy Collector Court** டில் **Criminal case** போட்டார்கள். அவர்கள் அந்த **licence** களை தாக்கல் பண்ணினார்கள். **Deputy Collector** விசாரித்து **Civil Suit** என்று தள்ளி விட்டார்.

Civil court டில் போட்டார்கள். நாங்கள் வாக்கு மூலங்கள் கொடுத்தோம். நெடுநாள் சீட்டு வாங்கினதாக ஜமீன் **record** டுகளில் இருக்கிறது. ஆகையால் நாங்கள் **licence** வாங்கவேண்டுமென்று தீர்ப்பு ஆனது. **High Court** டில் **Appeal** போட்டோம். அவர்களும் இந்த சீட்டுகளை நம்பி, ஆடுமாடு மேய்த்துக்கொள்வதற்கு மாத்திரம் உங்களுக்கு **record** இல்லையே தவிற மற்றவைகளுக்கு **record** இருக்கிறது. புல் பாத்யம்தான் உங்களுக்கு இருக்கிறது. மற்றவைகளுக்குப் **permit** வாங்கவேண்டுமென்று தீர்ப்பு.

இப்போது ஆடுமாடு மேய்வதற்கு சின்னமலை 18 கிராமங்கள் இருக்கின்றன. எல்லாருக்கும் ஆடுமாடு இருக்கிறது. அடிவாரத்தில், புல் உள்ள இடங்களில் கிஸ்தி வாங்கிக்கொண்டு பருத்தி சாகுபடிக்கு விட்டிருக்கிறார்கள். மலை இல்லை. வழுக்கு பாரைதான் பாக்கியிருக்கிறது. மாடு மேய்கிறதெல்லாம் போச்சு. மேய்ச்சல் இடங்களை அரண்மனைக்கு வேண்டியவர்களுக்குச் சொந்தமாகப் பட்டா போட்டு வைத்து இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் இருக்கிறது மலை. ஆடுமாடு மேய்கிற சௌகரியத்தைக் கெடுத்து விட்டார்கள். **Survey** செய்து இருக்கிற **record** டைப் பார்த்து ஒழுங்காக்கவேண்டும்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—வேண்டியபேருக்கு மலையில் **patta binami** போட்டிருக்கிறார்களா ?

A.—என்ன செய்யப்போகிறார் என்பது இனிமேல் தான் தெரியும். சில அயன் குடியானவர்களுக்கும் சில பெண் பிள்ளை ஆள்களுக்கும் பட்டா போட்டு இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். வரும்படி பூராவும் ஜமீன்தார் எடுக்கிறார். எக்ராவுக்கு இத்தனை ரூபாய் வீதம் வாங்குகிறார். விவரம் இனிமேல் தான் தெரியவேண்டும்.

Witness No. 247.

While the witness was deposing the following witness was called in and examined.

Oral evidence of Mr. Parimanam, son of Mr. Malaiyandi Pillai, Anamalaipatti.

ஜமீன் மலையில் இருக்கிற **Forest** டை **Coffee**, ஏலம் சாகுபடிக்கு ஜமீன் குடிகளிடம் **rate** பணத்தை வாங்கிக்கொண்டு பட்டா போட்டுக்கொடுக்கவேண்டுமே. தவிற, மற்ற குடிகளுக்கு விவசாயத்துக்கும் ஏலம், **Coffee** சாகுபடிக்கு விடக்கூடாது.

Witness No. 246 (Recalled.)

Mr. Savaridas Oodaiyar again resumed his evidence.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—Provision for the purchase of other men's rights—விலைகொடுத்து வாங்குகிறதற்குச் சட்டம் இருந்தால் நல்லது அல்லவா ? கட்டாயம் மேல்வாரம் பாத்யதையை வாங்குகிறதற்கு சட்டத்தில் இடம் இருந்தால் வாங்கி விடுவார்களா ?

A.—குடிகளுக்கு வாங்க அவ்வளவு சக்தியில்லை.

Continues.

100 Acres coffee தோட்டம் எங்கள் **Family** பேரால் **patta**. அதை 50 பேர் நடத்துகிறார்கள். அவர் அவர்கள் தங்கள் தங்கள் சொந்தத்தில் சாகுபடி பண்ணுகிறார்கள். அப்படி சாகுபடி பண்ணால் சில சமயத்தில் எல்லோரும் கிஸ்தி போடுகிறதற்கு முடிகிறதில்லை. சில பேர் கிஸ்தி போடாமல் விட்டு விடுகிறார்கள். பட்டாமாறுமல் இருப்பதனால், அதை பட்டாதாரர்களிடத்தில் வசூல் பண்ணுகிறார்கள்.

Survey நடந்தது. மலையில் **survey** பண்ணவேண்டுமென்று **petition** கொடுத்தோம். அது கூடாதென்று ஆட்க்ஷேபித்தார் **Zamindar**. **Government** டிலிருந்து நாங்கள் 50 சொச்ச ரூபாய், இந்த **survey** க்கு **deposit** கட்டினால் நாங்கள் **survey** பண்ணிக்கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 50 கட்டினோம். ஜமீன்தார் அனுமதி கேட்டால் மறுத்து விட்டார்கள். நாங்கள் அந்த பணத்தை வாபீஸ் வாங்காமல் அப்படியேயிருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—Collection பண்ணினது யார் Village ஆபீசரா ?

A.—எங்கள் ஊர் Village Munsif முனிசீப் கர்ணம் collect பண்ணினார்கள்.

Q.—Have they granted receipts ?

A.— Receipt கொடுத்து இருக்கிறார்கள்.

Q.—Is it Government receipt or Zamindar receipt ?

A.—வெள்ளை receipt கொடுத்து நாட்டாண்மைக்காரர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

Q.—Survey case களுக்கு கவர்ன்மெண்டாரே நேரடியாக வசூல் பண்ணுவார்கள் என்பது தெரியுமா ?

A.—தெரியாது.

Witness No. 248. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. R. Narasingaperumal Nayudu, son of Mr. M. Rangasami Nayudu, Secretary, Ryots' Association, Mudukulathur taluk, Ramnad district.

ராமநாதபுரம்சமஸ்தானத்தில் ஜீவநதி என்பது கிடையாது. ஜீவநதியில்லாத காரணத்தால், நிலங்களுக்குப் போதுமான தண்ணீர் சமஸ்தானத்தில் கிடைப்பதற்கு அறிதாய் இருக்கிறது. ஒரு குண்டாறு, வைகைநதி யிருக்கிறது. கால்வாய்களில், காலாகாலங்களில் தண்ணீர் வருவதில்லை. ரயத்துகளாகிய நாங்கள் அரசாங்கத்தாருக்கு நேரடியாகயில்லாமல் ஜமீந்தார் மூலம் வரி செலுத்துகிறோம். ரயத்துவாரி கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கு எந்தவிதத்தில் தண்ணீர் சப்ளை செய்கிறார்களோ, அந்தவிதமாக சப்ளை பண்ணக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அணைகட்ட வேண்டுமென்று சொல்லுகிறீர்களா ?
A.—ஆம்.

Continues.

எங்களுக்குப் போதுமான தண்ணீர் வேண்டும். மழையை எதிர்ப்பார்க்கவேண்டும். காலா காலத்தில் மழையில்லை. அது ஒரு பெரும் குறை. கண்மாய்களில் வசதிகள் கிடையாது. எல்லா கண்மாய்களும் பெரும்பாலும் குறைந்தது 25 வருஷத்திலிருந்து 100 வருஷம் வரை மராமத்து இல்லாமல் இருக்கிறது. அப்படி யிருக்கக்கூடிய கண்மாய்களுக்கு கலுங்குகள், மடைகள் கிடையாது. கண்மாய் இருக்கிற நிலங்கள் அழிந்துபோய், நஞ்சை நிலங்களில் புஞ்சை சாகுபடிதான் செய்யலாம். நஞ்சை செய்ய முடியவில்லை.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—என்ன தீர்வை ?
A.—ஸ்பெஷல் ரேட்ஸ் வாரம் வாங்குகிறார்கள்.

Continues.

கண்மாய்க் கலுங்குகளில் ஷட்டர்ஸ் கிடையாது. சில கண்மாய்கள் அச்சழிவாய் இருக்கின்றன. கலுங்குகள் உடைந்து இருக்கின்றன. இந்த நிலைமையில் இருக்கும்போது ரயத்துக்கு இவ்வளவு தான் இருக்கிறது என்று நிச்சயமாய் சொல்லமுடியாது. இவ்வளவு எக்ரா நஞ்சை, இவ்வளவு எக்ரா புஞ்சை என்று இராமநாதபுரம் சமஸ்தானத்தில் கண்டுபிடிக்க முடியாது. நஞ்சைகள் விரையடி 118-1/8 செண்டு—ஒரு எக்ரா. 98 செண்டு—ஒரு குருக்கம் புஞ்சை. உண்மையாகப் பார்க்கப் போனால் 50 செண்டு தான் இருக்கும். 118-1/8 செண்டுக்கு வரி கொடுப்பான். 18 செண்டுதான் பயிர் செய்வான். நெல் என்றால் வாரப்பத்து. நெல் சாகுபடி செய்யக்கூடிய இடத்தில் வாரம் கொடுக்கிறதோடு நிலவரி செஸ் கொடுக்கவேண்டும். இதனால் கஷ்டம். சர்வே இல்லாமல் இருப்பதினால் என்னுடைய நிலத்தை இன்னொரு ரயத்தின் நிலத்தில் சேர்த்துக்கொள்ளுவதற்கு இடம் கொடுக்கிறது. லிடிகேஷன் ஏற்படுகிறது. அதற்கு செலவு. சர்வே செட்டில்மெண்டு ஆகவேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—ஒருபாகம் சர்வேயாய் இருக்கிறது ?
A.—திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த காக்கூர் ஆய் இருக்கிறது. தேவஸ்தான கிராமங்கள் கொஞ்சம் ஆய் இருக்கிறது.

Continues.

கண்மாயில் தண்ணீர் இருக்கும் 200-கள விரையடிக்கு இருக்கும். தண்ணீர் வரும். விவசாயம் செய்து ஆதாயம்பெறலாம் என்று நினைத்துக்கொண்டு விதை விதைத்து விடுவார்கள். நடுகைக்குத் தண்ணிர்காணாது. கண்மாய்களில் தண்ணீர் தங்கிவிட்டால் கண்மாய் உடைப்பட்டுவிடும். விவசாயம் செய்யமுடியாது. கண்மாய் சம்பந்தப்பட்டமட்டில் குறைகள் இருக்கின்றன.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—Court of Wards வந்த பிற்பாடு, ரயத்துகளுக்கு ஒரு செட்டில் பண்ணினார்களா ?

A.—சில சமஸ்தான சிப்பந்திகளை வீட்டுக்கு அனுப்பினார்கள். அவர்கள் சம்பளத்தைக் குறைத்து செட்டில் செய்தார்கள். இரண்டொரு கண்மாயிக்கு மராமத் ஆயிருக்கிறது. கலுங்கு உடைந்து இருந்ததை பூசிவைத்து இருக்கிறார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—முன்னால் இருந்ததைவிட இப்போது கொஞ்சம் செய்கிறார்களா ?
A.—ஒன்றிரண்டு விஷயங்களை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

Continues.

ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் புல்தரை கிடையாது. இரண்டு இடங்களில் காடு இருக்கிறது. அந்த காடுகளுக்கு ஆடு மாடு போனால், கவர்ன்மெண்டுக்கு ஒரு pound—இவர்களுக்கு ஒரு pound வைத்திருக்கிறார்கள். Forester அடைத்து விடுவார். தண்டத் தீர்வை வாங்குவார்கள். ஒரு உருப்படிக்கு 2 அணா 4-மணிவரை. ஆடு மாடு சாகிறது. Veterinary hospital கிடையாது. ஆடு மாடுகளுக்கு எந்த உதவியும் கிடையாது. இந்த நிலைமையில் ஒரு எக்ராவுக்கு cost of cultivation பிரகாரம், முதலாவது நாற்றங்கால் நாற்றுப்பரவ வேண்டும். நிறைய செலவு செய்ய வேண்டும்.

Witness read from the printed memorandum submitted by him, the particulars regarding the cost of cultivation and the income derived from it.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—After paying the cist you get Rs. 22, you spend Rs. 15, you lose Rs. 52.
A.—Yes.

Q.—What do you get.
A.—45 rupees.

Q.—நஷ்டப்படுகிறது நஞ்சையில் எவ்வளவு ?
A.—கிட்டதட்ட 4 acres.

Q.—At that rate you are losing 200 rupees every year.
A.—இந்த வருஷம் இந்த ஜடம் பிரகாரம் செய்து இருக்கிறேன்.

Q.—You have got 4 acres. You are losing Rs. 200.
A.—We are not accustomed to do that.

Q.—Please give me the actual cost.

A.—மேல்வாரம் கொடுக்காமல் 45 கிடைக்கும். 5 **rupees loss** ஆகும். மேல் வாரம் பாதி கொடுத்தால் அதைச் சேர்த்து loss ஆகும். என் நிலத்திலே களவிரை அடிக்கு, உரம் தழை போட்டதில் எனக்கு ரூ. 42–8–0 செலவு ஆயிருக்கிறது. போனவருஷம் செய்திருக்கிறதில், ஒரு வருஷம் உரம் ஜாஸ்திவைப்போம். இந்த வருஷம் ஜாஸ்தி வைத்தோம். 40-மரக்கால் ஜாஸ்தி வரும். செலவு செய்ததற்கு வருமானம் கிடையாது.

Q.—So you say you are losing.

A.—Yes.

Q.—இந்த நிலம் எப்போது வந்தது ?

A.—பூர்வீக சொத்து—**Heriditary**.

Q.—புதுமாதிரி விவசாயம் செய்தால் 70 ரூபாய் கணக்குப்போட்டுச் சொல்லுகிறீர்களா ?

A.—புதிமாதிரி விவசாயம் செய்தால், ஜாஸ்தி உரம்வைத்து செய்தால் இந்த மாதிரி ஆகிறது. நெல் செய்தால் வாரம் வேறுசெய்தால் ரொக்கம்.

Q.—நெல்லைப்பற்றித்தான் பேசுகிறீர்களா ?

A.—ஆம்.

Q.—உங்களுக்கு வருகிற வரும்படியில் பாதிதான் வாரம் கொடுக்கிறீர்களா ?

A.—ஆம்.

Q.—அப்படி யிருக்கும்போது எப்படி நஷ்டம் என்று சொல்லுகிறீர் ?

A.—செலவழித்த ரூபாய்க்கு வருமானம் இல்லை.

Q.—நஷ்டம் வருகிறபோது 20, 30 ரூபாய் செலவழித்து விவசாயம் பண்ணலாம். என 10 ரூபாய் செலவழிக்கவேண்டும் ?

A.—ஒரு **experiment** டாய் செய்தோம். ஜாஸ்தி உரம்வைத்து செய்தால் எவ்வளவு ஆகிறது என்று பார்த்தோம். சாதாரணமாய் 40 ரூபாய்க்குமேல் ஆகாது.

Continues.

Given on 25th February 1938.

சாதாரணமாக இது நஞ்சை நிலங்களுக்கு புஞ்சை நிலங்களுக்கு 8 அணு முதல் 2 ரூபாய் வரையில் தரவாரித் தீர்வை. நஞ்சைத்தரம் புஞ்சையென்று ஒதுக்கியிருக்கிறார்கள். நஞ்சைக்கழிவு தண்ணீர் கீழே விட்டாலும் அது விவசாயிகளுக்கு உபயோகத்துக்கு இலாயக்கில்லை. மழை பெய்து புஞ்சைக்கு வந்தாலும் "சராசரி" யென்று வரி வசூல்செய்து விடுகிறார்கள். சாதாரணமாக புஞ்சையில் மழைகாலத்தில் வரப்புகட்டி வைத்திருந்தால் "வரப்புகட்டி சராசரி" என்று வசூல் செய்து விடுகிறார்கள்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—அதற்கு பட்டா இருந்தால் அதை ஆஜர் செய்கிறதுதானே ?

A.—ஆதாரம் நிறைய இருக்கிறது. முழம்பால் நீர்பிடி என்பது, கண்மாய் மூனைமாலில், வெள்வரி, பாசல் போடலாமென்று 1868-ம் வருஷத்தில் கொடுத்த பட்டாவிலிருக்கிறது. குருக்கம் ஒன்றுக்கு வெள்ளரிக்கு 8 அணுவும் பாசலுக்கு 12 அணுவும் தீர்வையும் கேட்கிறார்கள்.

Q.—அந்த பட்டா இங்கு கொண்டுவரவில்லையா ?

A.—அது கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பிறகு அதை **produce** செய்கிறேன். அதற்கு தீர்வை கேட்கிறார்கள். சராசரி கேட்கிறார்கள். மகசூல் ஒப்படி செய்வதால் நிலத்துக்கு புள்ளி மதிப்பு வைக்கிறார்கள். **Division Inspector** கர்ணன் அளவுகாரன் போன்றவர்களை அலைந்து கூப்பிடவேண்டும். அவர்கள் புள்ளி மதிப்பு போட்டால், புள்ளி சோதனை கதிரை அடித்து கர்ணம் வீட்டுக்கு கொண்டுபோகவேண்டும். பிறகு ரசீதுவாங்க **Headman** கையெழுத்து வாங்க வேண்டும். பிறகு **Revenue Inspector** இடம் போய் வாங்கவேண்டும். ஆதிதிராவிடருக்கு 7 நாள் ஆனாலும் ரசீது கிடைப்பது கஷ்டம். ஒப்படி குமாஸ்தா காலை 8 மணிக்கு வாயால் உத்திரவு கொடுப்பார். ராத்திரிக்கு அருவடை செய்து விடவேண்டுமென்று உத்திரவு போடுவார்கள். கையெழுத்தான பிறகு சீட்டை எங்களிடம் கொடுக்கமாட்டார்கள். இத்தனம் தேதி அருக்கவேண்டுமென்று ஆட்களை வைத்திருப்போம். ஒப்படி இறங்கும்போது அங்காமிகள் பொறுப்பற்ற சிப்பந்திகளை நியமித்து விடுவார்கள். அவர்கள் **paid** சிப்பந்தியில்லை. அவர்கள் அதிகாரம் ரொம்ப. உடனே அடித்து களத்தில் குவித்தால் சாயந்திரம் 6 மணி யாகிவிட்டால், அதை அங்கேயே போட்டுவிடுவார்கள். **Ours is the responsibility**. ராத்திரி திருடன் வந்து அள்ளிக்கொண்டுபோனால், இவன்தான் ஜவாப்தாரி. இந்த நிலைமையில் ஓடவாரம் பிடிக்கும்போது, கொத்துபடி என்று கர்ணம் **Headman** கொடுக்கவேண்டும். இவ்வளவு கஷ்டமிருப்பதால் இந்த வாரம் **system** ஒழியவேண்டும். வரி எப்படி ஏற்படுத்தவேண்டுமென்றால் 6-ல் ஒரு பங்கு வரக்கூடியதை வரியாகப் போடவேண்டும். பட்டாவை சட்டப்பிரகாரம் ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் கொடுக்கவேண்டும். ஆனால் ஆகஸ்டு-செப்டம்பரில் தான் **Ante-date** போட்டு கொடுப்பார்கள். இதற்கு கர்ணத்துக்கு 4 அணு கொடுக்கவேண்டும். நாங்கள் கொடுக்காவிட்டால் **tender** செய்ய மறுத்துவிட்டதாக தெரியப்படுத்தி விடுவார்கள். நிலத்தை நானே உழுதாலும் தலைமுறை தலைமுறையாக பட்டா **transfer** செய்வது கிடையாது. இரண்டாவது, **court** ல் ஏலம் எடுத்திருந்தாலும், அந்த நிலத்தை நாங்கள் அனுபவித்து ரசீது செலுத்தி வைத்திருந்தாலும் பட்டா **transfer** செய்வது கிடையாது. செத்துப்போய் 20 வருஷமானாலும், பேரன் அனுபவித்துக்கொண்டு வந்தாலும் பட்டா மாற்றிக்கொடுப்பதில்லை. காரணம் லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

Q.—இப்பொழுது அந்த லஞ்சம் எப்படி இருக்கிறது ?

A.—இப்பொழுதும் அப்படித்தானிருக்கிறது. **Court of Wards** வந்தும் பிரயோசனமில்லை. **Sub-Registrar Office** ல் மனுக்கொடுத்தாலும், சமஸ்தானத்துக்கு அனுப்பி நாளது வரையில் பட்டா **transfer** செய்வதில்லை.

Q.—தீர்வை பாக்கியிருப்பதால் மாற்றுமல் இருக்கலாமோ ?

A.—7, 8 மாதத்துக்கு முன்பு எனக்கு ஒரு document முடிந்திருக்கிறது. ஆனால் இன்னும் பட்டா transfer ஆகவில்லை. நான் இன்னும் செலுத்திக்கொண்டுதானிருக்கிறேன். இவ்வளவுக்கும் குடிகள் சிப்பந்திகளுக்கு பயந்து நடக்கவேண்டியிருக்கிறது. தலையாரி முதல் Estate Manager வரையில் பயந்து நடக்கவேண்டியிருக்கிறது. எதாவது ஒரு விஷயத்தில் குடிகளை ஒரு வழியில் சேர்த்து கஷ்டப்படுத்துகிறார்கள். நஞ்சை தண்ணீர் புஞ்சையில் சேர்த்ததாக சராசரியில் சேர்த்து விடுவார்கள். Court டுக்குபோய் decree யாகி எலம் எடுத்து சமஸ்தானத்தில் போய் சேர்த்து அடுத்த வருஷம் பட்டா வராமலிருந்தால்தான் ஏலம் போன விஷயம் குடிகளுக்குத் தெரியும். ஆகையால் கர்ணன்களுடைய பரம்பரை பாத்தியதையை எடுத்து விடவேண்டும். நஞ்சை புஞ்சையில் வீடுகட்டினால் சராசரி கேட்கிறார்கள் (He filed an exhibit) திடலில் கட்டினால் நஸர் கேட்பது. புஞ்சை நஞ்சையில் கட்டினால் 25 வருஷ சராசரி paddy சாகுபடி செய்தால் ரூ. 15, 25 வருஷத்துக்கு கட்டவேண்டும். அதோடு நிலவரி cess ம் கட்டவேண்டும். சில இடங்களில் சராசரியும் கட்ட வேண்டும்.

Q.—உங்கள் வீடு எவ்வளவு நிலம் occupy செய்கிறதோ அதற்கு மாத்திரம் தானே ?

A.—ஆமாம். முதுகளத்தூரில் நிலங்களை வீடுகட்ட ஹரிஜனங்களுக்கு acquisition வாங்கியிருக்கிறது. சமஸ்தானத்தில் தடைபட்டிருக்கிறது. அதனால் ஹரிஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். Government ஸ்தான் acquire செய்கிறார்கள்.

Q.—அதனுடைய cost சமஸ்தானத்துக்குப் போயிருக்குமே, அதனால் ஒருவரும் ஒன்றும் செய்யமுடியாதே ?

A.—Government தான் இதை செய்யவேண்டும். கவுல், இனும், ஜீவிதம் என்று கிராமாதிகாரிகள் இருக்கிறார்கள். இதில் ரயத்துகளை கஷ்டப்படுத்தக்கூடிய நிலைமை அதிகம். நான் இந்த வருஷம் உழைத்தால், நான் அடுத்த வருஷம் இஷ்டமில்லாவிட்டால் துரத்திவிடுவார்கள். அவர்களுக்கு எப்பொழுதும் ஊழியம் உழைப்பு செய்யவேண்டும். மரங்களுக்கு வரி வாங்குகிறார்கள். அதற்கு ஒரு record இருக்கிறது.

Q.—புதிதாக வாங்குகிறார்களா ? எப்பொழுதும்மா ?

A.—ரொம்ப நாளாக வாங்குகிறார்கள். அதிலும் பட்டாவில் சேர்ந்த மரம் இருக்கிறது. எங்களுடைய சமஸ்தானத்தில் எத்தனையோ படித்த வாலிபர்கள் சாமர்த்தியசாலிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்காமல் அடுத்த ஜில்லா வாசிகளைத்தான் கொண்டுவந்து உத்தியோகம் கொடுக்கிறார்கள்.

Q.—Court of Wards வந்த பிறகுமா ?

A.—Court of Wards வந்த பிறகு நிறைய. ஆகையால் சமஸ்தானத்திலுள்ள படித்த வாலிபர்கள் கஷ்டப்படுகிறார்கள். இரண்டாவது அடுத்த ஜில்லாவிலிருந்து வரக்கூடியவர்கள் அவர்கள் ஆகையால் சமஸ்தான பழக்க வழக்கங்கள் புதிதாக வருபவர்களுக்குத் தெரியாது.

Mr. A. Rangaswami Ayyangar :

Q.—உங்களுக்கு உத்தியோகம் கொடுத்தால், ரயத்துகள் எப்படி விவசாயம் செய்வது ?

A.—எல்லாருமேயா படித்திருக்கிறார்கள். அவர்களில் படிக்காதவர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள். இது தவிர language difficulty இருக்கிறது. உதாரணமாக Manager இடம் எங்களுடைய கஷ்டங்களை சரியாகச்சொல்ல முடியவில்லை. அவருக்கு ஒரு interpreter வேண்டியிருக்கிறது.

Q.—அன்னிய நாட்டிலிருந்து வந்ததால் செலவு ஜாஸ்தியா ?

A.—W. R. ஸத்தியனாதன் report பிரகாரம் 11 லக்ஷம் ரூபாய்க்கு, பேஷ் கிஸ்தி 3 லக்ஷம் செலுத்தியிருக்கிறார்கள். பாக்கி 8 லக்ஷம். இப்பொழுது நிர்வாகச் செலவு double ஆகியிருக்கிறது. இப்பொழுது Court of Wards வந்த பிறகு 60 ஆயிரம் செலவுக்கு கொடுக்கிறார்கள். ராஜாவுக்கு முந்தி 1812-ம் வருஷத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ரூ. 4,50,000 ஏற்படுத்தி 3 லக்ஷம் கவர்ன்மெண்டுக்கு பேஷ் கிஸ்தி செலுத்தி மிச்சத்தை ஜமீன் செலவுக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. இங்கு வந்திருக்கும் அதிகாரிகள் ரயத்துகளை எவ்வளவோ கஷ்டப்படுத்துகிறார்கள்.

மாரந்தை கிராமத்தில் ஒரு உடைப்பு ஏற்பட்டுவிட்டது. அதை அடைக்கவேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். ஆனால் போலீஸ் பந்தோபஸ்துடன் அடைக்கவந்த காலத்தில் ஸமஸ்தான சிப்பந்திகளில் ஒரு கொலை ஏற்பட்டுவிட்டது. மேல்பக்கம் உடைப்பிருக்கிறது. கிழக்கே உடைப்பிருக்கிறது. இன்னும் அடைபடவில்லை. அந்த வருஷம் ராமமூர்த்தி கலெக்டராக விருந்தகாலத்தில் நஞ்சைக்கு விரையடிக்கு ரூ. 10-0-0, புஞ்சை குருக்கம் ஒன்று ரூ. 0-8-0 தீர்வை என்று ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் கோபாலசாமி அய்யங்கார் காலத்தில், இப்பொழுது நாங்கள் repair செய்கிறோம். ரூ. 3-8-0 special தீர்வை கொடுங்கள் என்று சொன்னார். விதைபை விற்றுதான் நம்பிக்கொடுத்தார்கள். ஆனால் Estate Collector வாக்குறுதி கொடுத்த பிரகாரம் நிறைவேற்றி வைக்கவில்லை.

Q.—வாக்குறுதி எழுத்துமூலம் இருக்கிறதா ?

A.—இல்லை. அந்த காலத்தில் கோபாலசாமி அய்யங்கார், Estate Collector.

இந்த வருஷம் விளைவுமில்லை. ரூ. 3-8-0 தீர்வை செலுத்தியும் அடைத்து கொடுக்கவேண்டுமென்று எவ்வளவோ petition கொடுத்தாலும் சும்மாயிருக்கிறார்கள். ஆகையால் எங்களுடைய கஷ்டங்கள் போய்த்தீரவேண்டும். விவசாயிகள் கடன் நிவாரண மசோதா வந்த பிறகு, பழம்பாக்கி வஜா என்று சொன்னார்கள். அது (44) நாப்பத்தினாலோடு சரி. இப்பொழுது எல்லாவற்றையும் மீறி suit amount என்று சேர்த்துவிட்டார்கள். ஜப்தி வசூல் 45-ம் பசலியில் செய்துவிடுகிறார்கள். அந்த மசோதா சீக்கிரம் நிறைவேறினால் இந்தக் கஷ்டம் நீங்கும்.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—சட்டம் நிறைவேறவேண்டும் சீக்கிரம் என்று பிரார்த்தனை செய்யுங்கள் ?

A.—ஆகட்டும். ஆகையால் இருக்கும் கடன்களை குறைப்பதற்கு ஸர்காரிடமிருந்து 40 வருஷத்துக்கு நீண்டகால தவணை, குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து உதவவேண்டும்.

The CHAIRMAN :

Q.—Co-operative Society என்ன வாயிற்று ?

A.—நடந்துக்கொண்டிருக்கிறது. நீண்ட காலத்தவணை கடன் கொடுக்கமுடியவில்லை. 4, 5 வருஷத்துக்குதான் கொடுக்க முடியும். அதில் வட்டி 6 per cent. Government ஆக இருந்தால் 3 per cent க்கு கிடைக்கும். அதற்காகத்தான் கேட்கிறோம். பண்டைகால விவசாயம்தான் குடிகள் செய்துகொண்டு வருகிறார்கள்.

Mr. A. RANGASWAMI AYYANGAR :

Q.—நீங்கள்தான் புதிதாக experiment செய்து விட்டீர்களே ?

A.—அதனால்தான் விவசாயத் தொழிலுக்கு புத்துயிர் செய்து கொடுக்கவேண்டும். விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஜமீன்தாரி முறையை மாற்றி ryotwari system -ல் இருப்பதற்கொப்ப ஏற்பாடு செய்யவேண்டும். 10 வருஷத்துக்கு 2 வருஷம்தான் எங்களுக்கு விளையும். ஆகையால் நன்மையான திட்டத்தை வகுத்து ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Q.—ஜமீன் pound, கவர்ன்மெண்டு pound என்று இருக்கிறதென்று சொன்னீர்கள். Government பவுண்டில் வசூல் செய்கிறார்களா ?

A.—காடு என்று சொல்லுவார்கள். அடைத்துக்கொள்ளுவார்கள். Forester என்று இருப்பவர்கள் பணம் வாங்கிகொள்ளுவார்கள். ரசீது கொடுக்கமாட்டார்கள். சாதாரண வருமானத்தில் அது ஒன்று.

Q.—ஜமீன் பவுண்டுக்கு பணம் வாங்குகிறார்களே ! அது உத்தியோகஸ்தருக்கு லஞ்சமா, அல்லது சாதாரண வருமானத்தில் சேருகிறதா ?

A.—அது தெரியாது. புல்தரை வருமானமென்றிருக்கிறது. அதற்கு ரசீது கொடுக்கிறார்கள். பயமுறுத்தி வாங்குவதை எப்படி வைத்துக்கொள்ளுகிறார்கள் என்று தெரியாது.

Q.—ஜமீந்தாரிடத்தில் பயமுறுத்துகிறார்களென்று சொன்னீர்களா ?

A.—தாசில்தாரிடம் சொல்லியிருக்கிறோம். ஜமீன்தாரை நாங்கள் பார்ப்பது கிடையாது.

Q.—தாசில்தாருக்கு தெரியும். ஆனால் அதைக் கண்டிக்கவில்லையா ?

A.—ஆம். தெரிந்தும் கண்டிக்கவில்லை.

Q.—எஸ்டேட்டின் கீழ் ஜனங்களுக்கு கஷ்டம் என்று சொன்னீரே என்ன கஷ்டம் ?

A.—நஞ்சைத்தரத்தில் சாகுபடி செய்தால் ரூ. 2–13–9 தீர்வை கேட்கலாம். இப்பொழுது estate-ல் சரிவாரம் கேட்கிறார்கள். தீர்வை நிலத்தை வாரக convert செய்து விட்டார்கள்.

Q.—தீர்வை system தை ரத்து செய்து வாரம் ஆக்கியிருக்கிறார்களா ?

A.—சரிவாரப்பட்டா ஆக்கியிருக்கிறார்கள்.

Q.—எத்தனை வருஷத்துக்கு முன்பு ?

A.—2, 3 வருஷத்துக்குள்ளாக Court of Wards-ல்.

Q.—அதைப்பற்றி complaint செய்தீர்களா ?

A.—எவ்வளவோ தடவை செய்திருக்கிறோம். அது ஒரு குறை.

Q.—குளங்கள் Government தரப்பில் வைத்துக்கொள்ளவேண்டுமா ?

A.—மராமத்து ஸர்க்கார் வசத்தில்தான் இருக்கவேண்டும். அதற்குள்ள செலவை ஜமீந்தாரிடம் இருந்து வாங்கவேண்டும்.

Q.—வரி யார் வசூல் செய்யவேண்டும் ?

A.—ஜமீந்தார் மகாநாட்டில் resolution போட்டு அனுப்பியிருக்கிறோம். ஜமீந்தார் officials வசூல் செய்வதில் எங்களுக்கிஷ்டமில்லை.

Q.—என்ன கெடுதல் ?

A.—Record மூலம் ருஜுசெய்ய முடியாது. ரசீது பணவகை என்று இருக்கிறது. பணம் மாத்திரம் வாங்கிக்கொள்வார்கள். ஆகையால் வாரம் system போகவேண்டும்.

Q.—சிவகங்கை ஜமீனில் வாரம் system வேண்டு மன்று கேட்கிறார்களே. அது என்ன ?

A.—30 வருஷம் average கணக்கிட்டு நஷ்டம் ஏற்படாமல் பார்த்து நீங்கள் செய்யவேண்டும். சமஸ்தானத்தில் தான் survey செய்து கொடுக்கவேண்டும்.

Q.—மஹிமை வாங்குகிறார்களா ?

A.—ஆம். ஆனால் சரியானபடி அதை outlay செய்வதில்லை. வரியோடு சேர்த்து வாங்குகிறார்கள்.

Q.—தனிக்கணக்கு இருக்கிறதா ?

A.—ஆம். சத்திரம் ஒன்று இருக்கிறது. அது இப்பொழுது பூட்டப்பட்டிருக்கிறது.

Q.—எதற்காக தர்மம் ?

A.—சத்திரத்துக்கு வரும் பிரயாணிகளுக்கு உதவிசெய்து கல்வி உதவி போன்றவைகளுக்குதான் தர்மம்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—But there are complaints from tenants of inamdars even in cases where there are more than half a dozen proprietors ? *A.*—I think in such cases some of the inamdars are themselves ryots and these difficulties do not arise.

Mr. Pallam Raju : *Q.*—Suppose zamindaris are made partible. What do you think should be the size of a holding in order that it should be included in the Estates Land Act ? *A.*—I think the statute should provide remedies for the existing evils. If 15 years hence new situations arise, the Government will then take stock of the position and apply suitable remedies.

The Zamindar of Mirzapuram : *Q.*—Even today there are zamindars and mohasdars holding 2, 3, or 5 acres and all these people come under the Estates Land Act ? *A.*—I am not aware of any such case. If there are any, they should be excluded from the Act.

Q.—You say that petty inamdars, petty zamindars and petty mohasdars should be excluded from the operation of the Act ? *A.*—Yes.

Q.—Are not the ryots in a big zamindari much happier than the ryots under the petty agraharamdar or mohasdar, because there is greater scope for a petty landholder to harrass the ryot than in the case of a big landholder. *A.*—For the very same reason the opposite conclusion should be arrived at.

Q.—In the case of minor landholder the ryots have to pay for nearly a dozen people. But that is not the case with a big landholder. *A.*—I do not know. I am not aware of any such thing.

Q.—In your agraharams there are about 100 shareholders for each village and the poor ryots will have to pay for all these people ? *A.*—That assumes that all these hundred people have divided the land.

Mr. A. Rangaswami Ayyangar : *Q.*—In such cases where there are numerous landholders, is there no provision for one of them to be called a landholder so that he may collect the rent ? *A.*—If there are several landholders one of them can be appointed as a landholder for the purpose of getting over the difficulty. Practically they carry on the operations of agriculture by mutual consent. There is no difficulty whatsoever.

Witness No. 253. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. P. S. Subrahmanya Ayyar, Manamadura.

சிவகங்கை ஜமீந்தாரி சம்பந்தப்பட்டமட்டில் வாரப்பத்தில் இருந்ததை பத்து பதினைந்து வருஷங்களுக்குமுன் **commutation rent** மூலமாக தீர்வைப்பத்தாக ஆக்கினார்கள். அந்த சமயத்தில் விலைவாசி ஜாஸ்தியாக இருந்தது. வாரப்பத்து இருந்த காலத்தில் பாதி வாரம் கொடுத்துக்கொண்டிருந்தோம். தீர்வைப்பத்தாக ஆன பிறகு **fixed rent** கொடுக்கும்படி நேரிட்டது. உயர்ந்த விலையில் இருந்த காலத்தில் ஒரு **average** போட்டு அந்த ரேட்டை ஏற்படுத்தினார்கள். அந்தக் காலத்தில் விலைவாசி ஜாஸ்தியாக இருந்ததால் நாங்கள் மனம் ஒப்பி அந்த தீர்வை கொடுத்தோம். ஆனால் பின்னால் **season failure**-ம் **fall-in-prices** முதலிய **difficulties** ஏற்பட்டது சாவி, தரிசு முதலியவைகள் இருந்தால் தீர்வை தள்ளிக்கொடுக்க வேண்டுமென்ற **condition** இருந்தது. வாரப்பத்தாக இருந்தாலும சரி, தீர்வைப்பத்தாக இருந்தாலும் சரி நிலத்தை **improvement** செய்கிறதற்கு இடமிருந்தது. அபிவிருத்தி செய்வதில் சொல்ப கஷ்டமிருந்தாலும் சில வருஷங்கள் பூமி விளைந்தது. பிறகு தண்ணீரே இல்லாமல் விளையாமல்போய்விட்டது. அப்பொழுது **Zamindari Court of Wards**ல் இருந்தது. ஆனால் பட்டாவில் கண்டபடி சாவி, தரிசு இவைகளுக்கு **remission** கொடுத்தார்கள். இந்த முறை சரியானபடி நடக்கிறதென்று இருந்தோம். மறுபடியும் விளைச்சலே இல்லாமல் போய்விட்டது. அது பகவான் சோதனை. காலா காலம் மழை இல்லாமல் இருந்தாலும் போதுமான தண்ணீர் இல்லாமல் இருந்தாலும் நாங்கள் பிரயாசைப்பட்டும் பணத்தை செலவழித்தும் சாகுபடி செய்து பார்த்ததில் ஒருவிதமான நன்மையும் கிடைக்காத நிலைமையில் எங்களைக் கொண்டுவந்துவிட்டது. சாவி தரிசுக்கு நாங்கள் **remission** கேட்டோம். இந்த மாதிரி நீங்கள் வழக்கமாக கேட்கிறீர்கள். எங்களால் கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டார்கள். தள்ளிக் கொடுக்காமல் போனால் நாங்கள் தீர்வைப்பணத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று ஆக்ஷேபனை சொன்னோம்.

The President : *Q.*—What was the rate then ?

A.—As the prices were high there was cash rate system prevailing and we were paying accordingly. The price per kalam was from Rs. 6 to Rs. 8. The rent was fixed on the level of prices then existing.

Q.—How long is it since commutation was fixed ?

A.—10 or 12 years.

Q.—Nanja rate or punja rate ?

A.—Nanja rate.

Q.—What is your objection now (இதற்கு என்ன ஆக்ஷேபனை) ?

A.—நாங்கள் வாரப்பத்தாக இருந்து கொடுக்கிற காலத்தில் கலம் 3, 4 ரூபாய் இருந்தது. நடுவில் விலை ஏற ஆரம்பித்தது. அதை உத்தேசித்து உயர்ந்த ரேட்டு போட்டார்கள். இப்பொழுது பழைய ரேட்டுக்கு விலை வந்துவிட்டது. இப்பொழுதும் அந்த ரேட்டு தீர்வை கேட்டால் 50 **per cent.**

fall in prices இருந்துகொண்டிருக்கிறபோது உயர்ந்த ரேட்டு கேட்டால் அது ஜனங்களால் கொடுக்க முடியாது. அயனில் இருக்கிற தீர்வை சமஸ்தானத்து ரேட்டுக்கு குறைந்தே இருக்கிறது. நாங்கள் ஆக்ஷேபணை செய்தோம். இது சம்பந்தமாக **consideration** பண்ணி ஒரு **form of remission** கொடுக்கிறார்கள். அது எங்களுக்கு போதாது, கட்டவில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம்.

Q.—**Government rate** எப்படி ?

A.—மானாவாரி கண்மாயாக இருக்கிற இடங்களில் எக்கருக்கு ரூ. 6 முதல் ரூ. 8-க்கு மேல் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் அதே மானாவாரி பிரதேசங்களில் ஜமீனில் ரூ. 25 வரையில் தீர்வை இருக்கிறது. நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டும் சாவி, தரிசு இவைகளுக்கு தள்ளிக்கொடுக்க மாட்டோம் என்று சொன்னதால் எவ்வளவோ **suits** ஏற்பட்டு அனாவசியமான **litigation** க்கு போகும்படி நேரிட்டது. கோர்ட்டுக்குப்போனாலும் வீண செலவு தான் ஆகிறதே தவிர அனுகூலம் இல்லை. செலவு இல்லாமல் **remission** கிடைக்கிறதற்கு வேறு வழி இல்லை. **Litigation** நடத்துகிறதற்கும் தயாராக இல்லை. **Litigation** னால் பிரயோஜனம் இல்லை என்று தெரிந்தும்கூட வேறு வழி இல்லாமல் **Litigation** செய்து எல்லாவற்றையும் இழக்கவேண்டி நேரிட்டுவிட்டது. இப்படி இருந்தும் தீர்வையை கட்டிக்கொண்டுதான் வருகிறார்கள். இந்த நிலைமையில் சிலர் **land** களை ஒத்தி வைத்தோ அல்லது வேறு எவ்வளவோ கஷ்டப்பட்டோ தீர்வை செலுத்துகிறார்கள். ஆகையால் குடிகள் எல்லோரும் ரொம்ப கஷ்டப்பட்டுக்கொண்டுவருகிறார்கள். அநேகம்பேர்கள் தங்கள் சொத்து சுதந்திரத்தை எல்லாம் இழக்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். நல்ல ஸ்திதியில் இருந்த குடிகள் அநேகம்பேர்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு ஊர்விட்டு ஊர் பிழைப்புக்கு போகும்படிகூட நேர்ந்துவிட்டது.

Q.—உங்களுக்கு எந்த **rate** இப்பொழுது தேவை ?

A.—நான கணக்குப் பண்ணி சொல்லுகிறேன். எங்களுக்கு ஒரு எக்கருக்கு **cultivation expenses** எக்ஸ்பென்ஸஸ் ரூ. 35 ஆகிறது. மகசூல் ரூ. 30 அல்லது ரூ. 40 கிடைக்கும். **Straw** வில் ரூ. 10 கிடைக்கும். குடிகளே உழுகிறவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அந்தந்த வேலையைச் செய்கிறதற்கு ஒரு **living wage** ஐ அவர்கள் **last in cultivation** ஆக போடுகிறார்கள். அது **at least** சாதாரணமாக ஏற்படுகிற **last in cultivation** க்குசரியாய் போய்விடுகிறது. அப்படிக் கணக்கிட்டுப்பார்த்தாலும் ரூ. 10, ரூ. 15 மிச்சமாகும். இதில் அடுத்த சாகுபடிக்கு விதை முதலியவைகள் போக ஐந்து ரூபாய்தான் மீதப்படுகிறது. இதில் **half the share** கணக்கு வைத்தால் ரூ. 2–8–0 தான் கிடைக்கிறது. ஆகையால் இந்த ரேட்டு மோசமாகத்தான் ஆகிவிட்டது. எங்களுக்கு குறைந்த ரேட்டு வேண்டுமென்று தான் நாங்கள் சொல்லுகிறோம். அதாவது இரண்டு ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரையில் தரவாரியாக ரேட்டு போட்டால் குடிகளுக்கு கொஞ்சம் அனுகூலம் ஏற்படும். நாங்கள் எங்கள் நிலங்களை கொஞ்சம் **improvement** சீர்திருத்தம் செய்து எதாவது பிரயாசப்பட்டு கொஞ்சம் சௌகரியம் அடையலாம் என்பது எங்கள் கோரிக்கை. புஞ்சை சம்பந்தப்பட்டமட்டில் 6 அணா முதல் ரூ. 1–8–0 வரையில் ரேட்டு இருக்கிறது. சில **locality** ல் ஜாஸ்தியான தீர்வை வாங்குகிறார்கள். ரூ. 2–8–0 முதல் ரூ. 4–8–0 வரையில் வாங்குகிறார்கள். வானத்தை எதிர்ப்பார்த்து சாகுபடி செய்யும் நிலங்களில் இந்த மாதிரி தீர்வை போட்டால் எங்களால் தாங்கமுடியவில்லை. ஆகையால் **reduction of rent** வேண்டுமென்றுதான் நாங்கள் கோருகிறோம். ரூபாய் 4 ரேட்டு போட்ட காலத்தில் சுகவிலை ஜாஸ்தியாக இருந்தது. இப்பொழுது அந்த விலை குறைந்துவிட்டது. ஆகையால் அந்த ரேட்டு இப்பொழுது ஜாஸ்தியாக இருக்கிறது. அது கூடாது என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

இன்னும் ஒரு குறை. மழை இல்லாமல் விளையாமல் போகிறபோது புஞ்சையாக இருந்தாலும் சரி நஞ்சையாக இருந்தாலும் சரி நாங்கள் **pocket**-ல் இருந்து வரி கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறபோது இரண்டு அணா 6 அணா **item** கூட ஒரு **burden** ஆகத்தான் இருக்கிறது. மழை இல்லாமல் விளையாமல்போனால் புஞ்சை சம்பந்தப்பட்டமட்டில் பூரா **remission** கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கிறோம். எந்த **form of rent** இருந்தாலும் எங்கள் **request** என்னவென்றால் காலாகாலத்தை அனுசரித்து ஏற்படக்கூடிய **rent** ஆக இருக்கவேண்டும். அது தான் கொடுக்கமுடியும். இந்த நிலைமை வாரப்பத்து காலத்தில் இருந்தது. அப்பொழுது விளைந்தால் தீர்வை கொடுத்தோம். விளையாவிட்டால் கொடுக்கிறதில்லை. **Remission of rent according to circumstances** என்ற நியதி எங்களுக்குக் கிடைக்கவேண்டும்.

Garden land தீர்வை எங்களால்தாள முடியவில்லை. **Garden land** என்பது ஏற்படுவது குடியானவனுடைய பிரயாசையால்தான். அவன் தன் சொந்த பணத்தைக்கொண்டோ அல்லது **borrow** பண்ணியோ ஒரு கிணறு வெட்டி சாகுபடி செய்கிறான். அதற்கு ஜமீனில் ஒருவிதமான உதவியும் அளிக்காத நிலைமையில் **no kind of enhanced rent should be levied. Remission of rent in some cases is given out of grace.** ஒரு **circular** இருக்கிறது. அதில் **remission** ஐ **confine** பண்ணிக்கொள்ளுகிறார்கள். அதாவது **Alkalinate** உவர் அழிவு **damage by floods** நீரால் அழிவு **drought** தண்ணீர் இல்லாத அழிவு என்று வைத்திருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் **remission** கட்டாயம் கொடுக்கவேண்டும். ஆனால் அந்த **circular is not generally enforced.**

மானாவாரிக்கண்மாய் இருக்கிறது. அந்தந்த காலாகாலத்து மழைத்தட்டால் **(failure of seasonal rains)** தண்ணீர் சரியானபடி வருகிறதில்லை **monsoon** சரியானபடி இருந்தாலும் ரொம்ப பெருக்கால் **crops** விளையக்கூடிய நிலைமையில் இருக்கிறதில்லை. ஒரு மாத ஜலம் கண்மாயில் இருக்கிறபோது தண்ணீர் இறைச்சு விளைவிக்கவேண்டி நிலைமை வந்துவிட்டால் **cost of cultivation goes high** இப்பேற்பட்ட காலங்களில் **our request is that proportionate remission should be given.**

The Zamindar of Mirzapuram :

Q.—Are they not giving 25 per cent remission ?

A.—I do not know.

The President :—*Q*.—What are the sources of water-supply ?

A.—The major portion of the zamin area is rain-fed. There are some portions which are irrigated by Vaigai channel. ஆனால் கவர்ன்மெண்டார் பெரிய channel வெட்டி ஆற்றை divert பண்ணினகாலம் முதற் கொண்டு எல்லாம் ஒரே நிலைமையாகத்தானிருக்கிறது. ஏனென்றால் வைகைத்தண்ணீர் எங்கள் காலுக்கு சரியானபடி வருகிறதில்லை.

Q.—**Repairs** எப்படி இருக்கிறது ?

A.—கூடியவரையில் **repair** செய்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் பூராவாகச் செய்கிறதில்லை. **Rent fix** ஆகி விட்டபடியால் சரியானபடி பூரா ரிப்பேர் அவர்கள் செய்கிறதில்லை இன்னும் **repairs** அவசியமாக செய்யவேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

Q.—**Grazing rights** எப்படி இருக்கிறது ?

A.—எங்கள் ஜமீனில் **forest** அதிகமாக இல்லை. **Grazing facilities** அதிகமில்லை. ஏதோ கொஞ்சநஞ்சம் இருக்கிற இடங்களில்கூட **licence** வாங்கித்தான் **grazing** செய்யவேண்டியிருக்கிறது. அடுத்தாற்போல் **settlement of rent** செய்து இருக்கிறதால் நிலங்களை சரியாக **classification** செய்யவில்லை.

Q.—**Government settlement** ஆபீசர்தானே செய்திருக்கிறார் ?

A.—இல்லை. சில இடங்களில் நன்றாய் விளையக்கூடிய நிலங்களுக்கு எவ்வளவோ ரேட்டு ஆழ்ந்த ரேட்டாக இருக்கிறது. மானாவாரியாக இருக்கிற இடங்களுக்கு தீர்வை அதிகமாக இருக்கிறது. ஆகையால் நீர் பாசனத்திற்குத் தகுந்த படியும் ஜலவசதிக்குத்தகுந்தபடியும் **settlement** செய்யவேண்டும்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—யார் அதை **settlement** செய்தது ?

A.—சமஸ்தானம் **Court of Wards** இருந்தபோது செய்தது. **Government settlement** செய்யவில்லை. **Survey** தான் கவர்ன்மெண்டார் செய்தார்கள்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—**Estate Collector settlement** செய்தாரா அல்லது **Government officers** வந்து செய்தார்களா ?

A.—**Government officers** வந்து **settlement** செய்யவில்லை. **Estate Collector Estate Court of Wards** ல் இருக்கும்போது அவர்கள் **staff** மூலமாக செய்தார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM :

Q.—Are you not given a remission of 30 per cent owing to the fall in prices ?

A.—They are giving certain remissions but they are not adequate.

Q.—What is the value of one acre of wet land in Manamadura ?

A.—From Rs. 500 to Rs. 800 ?

Q.—What is the rent of such land ?

A.—Ranging between Rs. 15 and 20.

Q.—Have you leased out such lands ?

A.—I have not leased out my lands. My tenants themselves cultivate.

Q.—What income you will get ?

A.—As I have not leased out the lands I do not know what income the tenant will get if he sublets it.

Q.—Are you directly leasing out the land ?

A.—Yes.

Q.—What income do you get ?

A.—I get half varam.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—பங்கில் குடியானவர்கள் உங்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் ?

A.—சாகுபடி செலவு முதலியவைகள் கழித்துவிட்டு பாதி கொடுப்பார்கள்.

Q.—தீர்வை கொடுக்கிறது யார் ?

A.—நான்தான் தீர்வை கொடுக்கிறேன். இதற்கு தீர்வைப்பத்து போட்டால் அது ஜாஸ்தியாக இருக்கிறது. அதனால்தான் நாங்கள் குறை சொல்லுகிறோம்.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q*.—Have you got lease deeds ?

A.—I have no lease deeds. Mine is all oral agreement. We have been doing like this for a very long time.

Q.—How long have you been in possession of these lands ? Have you purchased any ?

A.—From the time of my ancestors. I have not purchased any land in my time.

Mr. A. RANGASWAMI AYYANGAR : *Q*.—Have you studied agriculture ?

A.—I am an agriculture diploma holder.

Q.—How much do you pay to the Estate ?

A.—About Rs. 650.

Q.—What remission do you get generally ?

A.—Ab.ut 30 per cent.

Q.—What did you get last year ?

A.—I have completely paid for last fasli 1346. Up to 1345 I have some arrears but it was completed by settlement.

Q.—What was the remission given to you ?

A.—With regard to this question, the remission granted to me was liberal remission. There was a large amount of arrears before 1345 but by agreement I get a remission of Rs. 1,300.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—இது உங்களுக்குமாத்திரம்தானே கிடைத்தது ?

A.—நான் apply பண்ணினதால் கிடைத்தது. General remission கொடுக்கவில்லை.

Q.—நீங்கள் கொடுத்ததுபோக arrears போகத்தானே இந்த remission ?

A.—நான் தீர்வை கொடுத்ததுபோக பாக்கி இருக்கிறதில் settlement செய்து எனக்குக் கிடைத்தது.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—இப்பொழுது உங்களுக்கு எவ்வளவு remission கொடுக்கவேண்டுமென்று கேட்கிறேன் ?

A.—Original rate-ஐ வைத்துக்கொண்டு எவ்வளவு remission கொடுத்தாலும் கட்டாது.

Q.—30 per cent நியாயமாக இருக்கிறதா இல்லையா ?

A.—சில கேஸ்களில் நியாயமாக இருக்கலாம். சில கேஸ்களில் நியாயமில்லாமல் இருக்கலாம். எனக்கு இருக்கிற ஸ்திதியில் ஏக்கருக்கு ரூ. 2 முதல் 6 ரூபாய் வரையில் settle செய்தால் அதனுல் என்ன remission கிடைக்குமோ அது கிடைக்கவேண்டும்.

Q.—30 per cent போதுமா போதாதா ?

A.—போதாது.

Zamindar of Mirzapuram : *Q.*—In dry lands do you grow groundnuts, tobacco and chillies ?

A.—No. On dry lands we cannot grow such produce under the present condition. In the whole estate in dry lands so far as I know, there is no such cultivation.

Q.—Because you think the land is not rich enough for groundnut ?

A.—Groundnut is generally a dry crop grown in a portion of the estate.

Q.—What about chillies ?

A.—Chillies in dry lands do not grow.

Q.—Not in garden lands also ?

A.—To some extent chillies are grown in garden lands.

Q.—Is tobacco grown under the wells ?

A.—In small portions under the well irrigation tobacco is grown.

Q.—In tobacco what will the ryot get ?

A.—I cannot give a definite idea as what income would be obtained by tobacco cultivation.

Q.—Will it come to Rs. 500 per acre ?

A.—From the agricultural knowledge I have I can say that the sum of Rs. 500 is an exaggerated amount and Rs. 200 will be the proper yield.

Q.—How much tobacco cultivation is being made ?

A.—In a garden about 50 cents will be cultivated.

Mr. P. S. Kumaraswami Raja :

Q.—நீங்கள் 600 ரூபாய் தீர்வை கொடுக்கிறீர்களே உங்களுக்குக் கட்டுகிறதா ?

A.—எனக்குக் கட்டுபடி ஆகவில்லை. I am thinking of selling my lands. I cannot live on that alone. Inspite of my knowledge in agriculture and my attempt to improve the land, I find by practical experience that it is not advantageous under the existing conditions. I have also tried several methods in this matter but I have been bitten by disappointment.

Q.—உங்களுக்கு ரொம்ப நிலம் இருந்ததால் அதை சாகுபடி செய்து சௌக்கியமாக இருக்கலாம் என்று நினைத்துவந்தீர்களா ?

A.—ஆம். அனுபவத்தில் பார்க்கிறபோது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

Zamindar of Mirzapuram : *Q.*—So agriculture is not a paying concern ?

A.—Especially in a Zamindari area.

Q.—Have you got some cowle lands ?

A.—Yes.

Q.—What is the rent ?

A.—Rs. 6 per acre.

Q.—Do you think even that is high.

A.—Yes. I have worked out the figures. I am getting only Rs. 2–8–0. I have got a knowledge of agricultural service to whom I have got to pay extra wages. So then that rate is high.

Q.—You prefer always new method of cultivation ?

A.—Yes. I am doing, trying and experimenting with no profit.

Q.—Inspite of that you are not prosperous ?

A.—Yes. Agriculture depends upon natural conditions. In the course of six years from 1923 to 1929 thousands of suits have been launched in courts. Enormous amount of expense has been incurred and I think here are still some suits pending.

Q.—What is the result of the suits so far ?

A.—Undoubtedly all unfavourable to the ryots (laughter). District Court-ல் சில கேஸ்கள்கூட இருக்கிறது.

புறம்போக்கு சம்பந்தப்பட்டமட்டில் கிராம நிலங்கள் நத்தங்கள் என்று இருந்தது. என் அனுபவம் என்னவென்றால் அந்தக்காலத்தில் specific ஆக புறம்போக்கு என்பது கிடையாது. குடிகள் அனுபவத்தில்தான் அவைகள் இருந்தன. மரங்களை அதில் அவர்கள் வளர்த்து இருந்து இருக்கிறார்கள். அவைகளை யாதொரு தங்கு தடையில்லாமல் அனுபவித்தும் வந்திருக்கிறார்கள். இப்பொழுது என்ன செய்திருக்கிறார்களென்றால் wet lands சம்பந்தப்பட்டமட்டில் அவைகளிலிருக்கிற மரங்களுக்கு தீர்வை இல்லை. அது தவிர வேறு இடங்களில் மரங்கள் இருந்தால் தீர்வை கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்தத் தீர்வை கொடுக்கமுடியாது. அந்த மரங்களை வளர்க்கவேண்டியது ஒரு necessary மேல் வளர்த்தார்கள். எதாவது அவசியம் நேரிடும்போது அவைகளை வெட்டிக்கொள்ளுவார்கள். ஜமீன்தாருக்குத் தேவை இருந்தாலும் வெட்டிக்கொள்ளுவார்கள். குடிகளும் நன்மை செய்யக் கடைமை பட்டிருக்கும்போது அந்த மரங்களுக்கு வரி போடக்கூடாது. இப்பொழுது பட்டா நிலத்தில் இருந்தாலும்கூட சில மரங்களுக்கு வரி போடுகிறார்கள். அவைகளை எங்களுக்கே விட்டுவிடவேண்டுமென்று சொல்லுகிறோம். Shield துரை காலத்தில் குடிகளை மரம் வைக்கச்சொல்லி ஒரு circular போட்டார்கள். இப்பொழுது பட்டா நிலங்களில் வைத்திருந்த மரங்கள் எல்லாம் எங்களுக்கு வந்துவிட்டது. பட்டா இல்லா நிலங்களில் இருக்கிற மரங்கள் எங்கள் உபயோகத்திற்கு கிடைக்கவேண்டுமென்று கேட்கிறோம். Dry land-க்கு ஒரு ரேட்டு ஏற்பட்டிருக்கிறது. அதை எப்பொழுதும் கொடுக்கக் கடமைபட்டிருக்கிறோம். அந்த நிலத்தில் ஒரு வீடு கட்டுகிறோம், அல்லது ஒரு கடை கட்டி வாடகைக்குக் கொடுக்கிறோம். அல்லது ஒரு Cinema கொட்டகை கட்டி வாடகைக்குக் விடுகிறோம். ஜமீனுக்கு cultivation rate போட்டு rent-க்கு கொடுத்துவிடுகிறோம். இப்படி செய்து கொஞ்சம் லாபம் பெறக்கூடாதென்று எங்களை தடை செய்திருக்கிறார்கள். எந்த விதத்திலாவது பிழைக்க ஒரு வழி உண்டாவென்று யோசித்து ஒரு காரியத்தை செய்தால் அது கூடாதென்று சொல்லுகிறார்கள்.

Forest-ல் ஒரு விதமான நிர்ப்பந்தமில்லை. Statutory rate ஆக ஏற்படுத்தி எங்களுக்கு ஒரு விதமான restriction இல்லாமல் உபயோகப்படுத்திக்கொள்ள உரிமை கொடுக்கவேண்டும்.

Water sources-ல் பகவான் ஒத்தாசை அதிகமாக இருக்கிறதில்லை. வேறு வழியில Irrigation source-ஐ விருத்தி செய்து எங்களுக்கு cultivation-க்கு வேண்டிய facilities செய்துகொடுக்கவேண்டும். ஒரு காலத்தில் ஜமீன்தார் போதுமான ரிபேர் செய்யவில்லை. கலெக்டருக்கு நோட்டீஸ் கொடுத்தோம். ஜமீன்தாருக்கு நோட்டீஸ் கொடுத்து நீங்கள் ரிபேர் செய்துகொள்ளுங்கள். அந்த தொகையை ஜமீன்தாரிடத்தில் வாங்கிக்கொடுக்கிறோம் என்று பதில் வந்தது. ஆனால் காரியத்தில் ஒன்றும் ஆகவில்லை. Legal aspect-ல் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். எந்த கோர்ட்டுக்கும் ஸ்டாம்பு fees கட்டி வக்கீல் fees கொடுத்து Summon batta முதலியன கட்டி வழக்காடுகிறதற்கு நாங்கள் லாயக்கில்லை. நாங்கள் ஏழைகள். எங்களுக்கு facilities கிடைக்கும்படி ஒரு tribunal form செய்து அதில் ஒரு Revenue officer, outside இரண்டுபேர்கள், இரண்டு குடிகள், இரண்டு நிலச்சுவான்தார்கள் இவர்களை கொண்ட ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி எங்களுக்கு செலவு இல்லாமல் எங்கள் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அந்த Tribunal-க்குமேல் Appellate Authority Revenue Board அல்லது Governor யாராக இருந்தாலும் சரி அந்த பஞ்சாயத்து எலக்ஷன் முறையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இந்த மாதிரியான பஞ்சாயத்துகள் அநேகம் Centre களில் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் குடிகளுக்கு அதிக செலவு இல்லாமல் அனுகூலம் கிடைக்கும். இவைகள்தான் எங்களுடைய கோரிக்கைகள்.

Witness No: 254. Madura. 25th February 1938.

Oral evidence of Mr. Odayappa, President, Zamin Ryots' Association, Sivaganga.

வரி வந்ததிலிருந்து சகிக்கமுடியாத கஷ்டமிருக்கிறது. தொலைதூரங்களுக்கு ஓடிப்போகலாமென்று விவசாயிகள் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். அநேகம் பேர்கள் இப்படிப்போனவர்கள் திரும்பிவரவில்லை. எங்கள் ஜமீனில் 3 ரூபாய் முதல் 24 ரூபாய் வரையில் தீர்வை இருக்கிறது. இந்த சிவகங்கை ஜமீன் எரியாவில் சிவகங்கைக்குப்பக்கத்தில் கவர்ன்மெண்டு தாலூகாவான மேலூர் தாலூகா இருக்கிறது. கவர்ன்மெண்டு கிராமமாகிய மலம்பட்டியில் 4 ரூபாய் முதல் $7\frac{1}{2}$ ரூபாய் வரையில் ஒரு எக்கருக்கு தீர்வை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலிருக்கிற இடைய மேலூரில் 20 ரூபாய் வரையில் தீர்வை இருக்கிறது. திருவேம்பத்து, திருவாடானை தாலூக்கா குமாரளி கிராமத்தில் எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 6 வசூல் செய்கிறார்கள். ஜமீன் ரேட்டு ஒரு எக்கருக்கு ரூ. 14 முதல் 21 ரூபாய் வரையிலிருக்கிறது. பரமக்குடி தாலூக்காவில் கவர்ன்மெண்டு நிலத்தில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 6-12-0 இருக்கிறது. பக்கத்திலிருக்கிற ஜமீன் கிராமங்களில் ரூ. 3 முதல் ரூ. 20 வரையில் இருக்கிறது.

Mr. B. VENKATACHALAM PILLAI:

Q.—இப்பொழுது சொன்ன இடத்தில் ஜமீன் பூராவும் சேர்ந்து எகருக்கு ரூ. 20 தீர்வை கொடுக்கிற நிலம் எவ்வளவு இருக்கிறது ?
A.—எங்கள் ஊரில் மூன்றில் ஒரு பாகத்திற்கு ரூ. 20 தீர்வை இருக்கும். ஆனால் ஜமீன் பூராவும் எனக்கு எவ்வளவு இருக்கிறதென்று தெரியாது.

Q.—ரூ. 24 எகருக்கு தீர்வை கொடுக்கக்கூடிய நிலமே 60 எகர்தான் இருக்கிறதென்று சொல்ல முடியுமா ?
A.—எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஜனங்கள் சொல்லுகிறதிலிருந்து ஜாஸ்தி இருக்கிறதாகத்தான் தெரிகிறது. நெ. 210-ம் பட்டாவில் எனக்கு ரூ. 20 தீர்வை இருக்கிறது.

The ZAMINDAR OF MIRZAPURAM:
Q.—அந்த நிலத்தை எவ்வளவு விலைக்கு வாங்கினீர்கள் ?
A.—அந்த நிலங்கள் பூர்வீகமான நிலங்கள். 10 வருஷத்துக்குமுன் ஒரு எக்கர் வாங்கினேன். அது 400 ரூபாய் கிரயம்.

Q.—ஆயிரம் ரூபாய்க்குமேல் கொடுத்து வாங்கவில்லையா ?
A.—அந்தமாதிரி நான் வாங்கவில்லை.

Q.—நீங்கள் நிலம் வாங்கியிருக்கிறதாக சொல்லுகிறீர்களே அந்த தஸ்தாவேஜு இருக்கிறதா ?
A.—இருக்கிறது. அதை தாக்கல் செய்கிறேன்.

இந்த மாதிரியான வரிகள் அதிகக் கொடுமையாக இருக்கிறது. (**Files records regarding Government rates**) கண்மாய் மராமத்து செய்கிறதே இல்லை. மராமத்து செய்யவில்லையென்றும் அதை உடனே செய்யவேண்டுமென்றும் திவான் அவர்களுக்கும் எஸ்டேட் உத்தியோகஸ்தர்களுக்கும் மனுக்கொடுத்ததை காட்ட தாக்கல் செய்கிறேன். எங்கள் எரியாவில் இரண்டொரு குளம்தான் ரிபேர் செய்திருக்கிறார்கள். இன்னம் ரிப்பேர் செய்யவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அவைகளையும் **complete** ஆக செய்யாமல் அரைகுறையாகத்தான் செய்திருக்கிறார்கள். வேசங்கப்பட்டியில் கலுங்குகள் உடைந்து 5, 6 வருஷமாயிற்று. வருஷா வருஷம் குடிகள் மனு கொடுத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் அவைகளை இன்னும் ரிபேர் செய்து கொடுக்காமல் அப்படியே தான் இருந்துவருகின்றன. ஒரு இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டு என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது வரி வசூல் செய்கிற வேலையில்தானிருக்கிறார்கள். இரண்டு மூன்று நாளைக்குமுன் கூட ஒரு ஓவர்சியரை ஒருவர் வீட்டில் கண்டேன். அவரை எந்தக்காரியமாய் ரிபேர் செய்ய வந்திருக்கிறீர்களென்று கேட்டேன். அதற்கு வரவில்லை வரி வசூல் செய்கிறதற்காகத்தான் வந்திருக்கிறேனென்று சொன்னார்.

Mr. P. S. KUMARASWAMI RAJA:

Q.—கோடைகாலத்தில்தானே கண்மாய் ரிபேர் செய்யமுடியும். பாக்கி காலங்களில் என் வரி வசூல் செய்யக்கூடாது ?
A.—அவர்கள் கோடைகாலத்திலும்கூடத்தான் வரி வசூல் செய்துவந்திருக்கிறார்கள்.

Q.—அவர்களுக்கு வேலை இல்லாத காலத்தில் என் வரி வசூலுக்குப் போகக்கூடாதென்று சொல்லுகிறீர்கள்.
A.—மராமத்து வேலையை சரிவர கவனித்து செய்கிறதாயிருந்தால் அவர்களுக்கு வேலை சரியாய்த்தானிருக்கும். ஆனால் அவர்கள் மராமத்து வேலையை கவனிக்கிறதே இல்லை. வரி வசூலில்தான் ரொம்ப அக்கரை கொண்டிருக்கிறார்கள். திருப்திகரமாக மராமத்து செய்கிறதில்லை. நான் சொல்லும் புள்ளி விவரத்தைப்பார்த்தால் மராமத்து எவ்வளவு அக்கரையுடன் நடக்கிறதென்று தெரியவரும்.

		ரூ.
1334-ம் பசலில் **estimate**	.. ..	3,80,506
1335 ஷை	.. ..	1,21,500
1336 ஷை	.. ..	1,31,500
1337 ஷை	.. ..	62,690

அதற்குப்பிறகு ரிபேர் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் இந்த வருஷத்தில் லக்ஷ ரூபாய்க்கு **estimate** போட்டிருப்பதாக சொல்லுகிறார்கள்.

The ZAMINDAR OF MIRZAPURAM:

***Q*.—Diwan says 35 lakhs of rupees have been spent from 1919 to 1937. Is it so ?**
A.—எனக்குத் தெரியாது. இப்பொழுது கண்மாய்கள் இருக்கிற நிலைமையைப்பார்த்தால் அவைகள் ஒரு லக்ஷ ரூபாய் சென்ற 20 வருஷங்களில் செலவழித்து ரிபேர் செய்ததாகத் தெரியவில்லை.

Q.—ஜமீனுக்கு வருமானம் எவ்வளவு வரும் ?
A.—வரியாக தீர்மானித்த காலத்தில் ரூ. 1,67,000 ஆக இருந்தது. இப்பொழுது 20 லக்ஷத்திற்குமேல்தானிருக்கும்.

Q.—இது எப்படி உங்களுக்குத் தெரியும் ?
A.—எனக்கு புள்ளி விவரமாகத் தெரியாவிட்டாலும் தெரிந்துகொண்டுதான் சொல்லுகிறேன்.

Q.—You mean from 'Hear say'! It is said that the income would be between 10 and 12 lakhs and not more than that?

A.—Definite ஆக 20 லக்ஷம் வசூல் செய்கிறார்களென்று சொல்லவில்லை. **Approximate** ஆக எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்.

Mr. P. S. Kumaraswami Raja:

Q.—கண்மாய் மராமத்து செய்திருந்தால் 20 லக்ஷம் வந்திருக்குமென்று சொல்லுகிறீர்களா ?
A.—அவர்கள் **Budget estimate**-படி எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்.

அனேக காரணங்களால் நிலங்கள் சரியாக விளைகிறதில்லை. சரியான விளைச்சல் இல்லாததினால்தான் ஜனங்கள் அவ்வளவு தீர்வை கொடுக்கமுடியாதென்று சொல்லுகிறார்கள். மாரநாட்டுக் கண்மாய் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கண்மாயை விளைந்தும் விளையாமலும் இருக்கும் போது மீன் குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். குத்தகைக்காரர்கள் வெள்ளாமைக்குத் தண்ணீர் அவசியமாக பாயவேண்டி இருக்கிற சமயத்தில் மீன் உற்பத்திக்காக மடையை அடைத்து விடுகிறார்கள். மடையை திடீரென்று அடைத்துவிட்டால் வெள்ளாமை எப்படி விளையும். கிஸ்தி எப்படி கொடுக்கிறது. குடிகள் அதைப்பற்றி திவானுக்கும் ஜமீன்தாருக்கும் தந்திமேல் தந்தி கொடுத்தார்கள். ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. மாஜிஸ்திரேட்டு இடத்திலும் கலெக்டர் இடத்திலும் மனுக்கள் போட்டு கடைசியாக அவர்கள் உத்திரவுப்படி கடைசியாக போலீஸ்காரர்கள் சகிதமாக வந்து மடையை திறக்க ஏற்பாடு செய்தோம். ஆனால் அவர்கள் அரவங்காட்டு ஆசாமிகளை போக்கிரிகளை தருவித்து வைத்துக்கொண்டு மடையை திறக்கமுடியாமல் தடுத்துவிட்டார்கள்.

The Zamindar of Mirzapuram:

Q.—இந்தமாதிரி நடந்ததெல்லாம் கிராமங்களில் இருக்கிற கக்ஷிகளால் அல்லவா ?
A.—இல்லவே இல்லை.

சில கிராமங்களில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுகிறதற்கு ஒரு மணிக்கு 5 ரூபாய் வாங்குகிறார்கள். இந்தமாதிரியெல்லாம் வரும்படி வாங்குகிறதற்காகத்தான் அவர்கள் இப்படி செய்கிறார்கள். மேலும் பக்கத்திலிருக்கிற கிராமங்களுக்கு பெரியார் பாசனத் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அதை சிவகங்கை தெப்பக்குளம்வரையில் வாய்க்கால்வெட்டி குளத்துக்கு கொண்டுவந்துவிட பரிக்ஷை பார்த்திருக்கிறார்கள். ஆனால் நடுவில் அதை விட்டுவிட்டார்கள்.

The Zamindar of Mirzapuram:

Q.—கவர்ன்மெண்டார் பெரியார் ஜலத்தை நிரந்தரமாகக் கொடுக்கமுடியாதென்று சொல்லியிருப்பது தெரியுமா ?
A.—எனக்குத் தெரியாது.

Q. எஸ்டேட்டு திவான் எவ்வளவோ பிரயத்தனப்பட்டு அந்த ஜலத்தை வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாரென்பது தெரியுமா ?
A.—அந்த பக்கங்களில் இருக்கிற கிராமங்களுக்கு ஏதாவது ஜலம் கொடுத்தார்களோ என்னமோ எங்கள் பக்கத்திற்கு ஒரு பொழுதும் அந்த ஜலம் வந்ததில்லை. எங்களுக்கு அந்தக்கால் தண்ணீர் வந்து பாய ஏற்பாடுசெய்துகொடுக்கவேண்டும். அயன் ரேட்படி எங்களுக்கு ரேட் செய்து கொடுக்கவேண்டும்.

Witness No. 255. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. Chockalingam Ambalam, Sivaganga.

வருஷப்பத்து என்று வசூல் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். 5 கலம் கண்டாலும் 10 கலம் 30 படி சொச்சம் செலுத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்தப்படி பட்டாவும் கொடுத்திருக்கிறார்கள். 5 கலத்துக்கு கீழே காணப்பட்டால் மனு கொடுத்து புள்ளி பார்த்து கண்டதை வாரமாக பிரித்துக்கொள்ளவேண்டுமென்று நடத்திவருகிறார்கள். மாத்தா என்றால் ஒரு ஏக்கர் 75 செண்டு. 15 கலம், 13 கலம், 10 கலம் ஆகிறது. செலவு 55 ரூபாய் ஆகிறது. ஒரு மாத்தாவுக்கு 50 ரூபாய்க்கு குறையாமல் செலவு வந்திருக்கிறது. 7, 8 கலம் மிஞ்சும். ஜீவனம் நடத்த முடியாமல், வரி செலுத்தமுடியாமல் கஷ்டப்படுகிறோம். 45-ம் பசலிக்கு பாக்கி செலுத்தவேண்டியிருந்தால் 47-ம் பசலியில் யாதொரு தகவலும் இல்லாமல் அவர்களாக ஏதோ ஒரு ஜப்தி பாரத்தில்—சில பாரத்தில் பேஷ்கார் கையெழுத்து இருக்கும், சில பாரத்தில் கையெழுத்தே இருக்காது—எங்கேயாவது ஒட்டி ஜப்தி செய்கிறார்கள். நாங்கள் கருது அறுக்கிற களத்தில் ஒரு சின்னக் கடுதாசியை ஒட்டிவிடுவார்கள். இப்படி எங்கேயாவது போட்டுவிட்டுபோய்விட்டால் என்ன செய்கிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ரொம்ப பேர்கள் இருக்கிறார்கள். காற்றில் பறந்துபோய் விடுகிறதும் கதிரை அறுத்துக்கொண்டுபோய்விட்டால் கிரிமினல் பிராசிகியூஷன் பண்ணுகிறார்கள். எங்கள் பட்டாவுக்கு இன்னும் பாக்கியிருந்தால் கலெக்டர் ஆபீசுக்கு எழுதி ஏலத்திற்கு கொண்டு வருவார்கள். ஒருவனுக்கு 10 ஏக்கர் இருந்தால், 25 ரூபாய் பாக்கியிருந்தால் 5 ஏக்கரை ஏலத்துக்கு கொண்டுவந்து ஒரு ரூபாய்க்கு எடுத்துக்கொள்கிறார்கள். எங்களுக்கு யாதொரு தகவலும் கிடையாது. ஒரு ரூபாய்க்கு **Estate** பெயரால் எடுத்துக்கொண்டால் அவர்கள் பேரால் பட்டா போட்டுவைத்துக்கொள்ளுகிறார்கள். 5 கலத்துக்கு மேல் கண்டால் மடங்கல் என்பது. 5 கலத்துக் கீழே கண்டால் புள்ளி. நாங்கள் மனுக்கொடுத்துவிடுகிறோம். அதைப்பார்த்துவிட்டு அவர்களுக்காக இஷ்டம் இருந்தால் புள்ளி போட்டு கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் மடங்கள் பண்ணி விடுகிறார்கள். வியாச்சியம் பண்ணி எங்கள்பேரில் பிரவேசிக்கவேண்டியிருக்கிறது. அவர்களாக

இப்படிச்செய்துகொண்டிருக்கிறார்கள். நாங்களும் கொடுத்துக்கொண்டு வருகிறோம். பெரும்பாலும், காடு, புறம்போக்கு முதலிய இடங்களை 38-ம் பசலி வரையில் நாங்கள் அனுபவித்துக்கொண்டு வந்தோம். மாடு மேய்க்கிறதோ காய்ந்த விறகுகளை எடுத்துக்கொண்டோ வந்தோம். சூளை அறுக்கிறதுண்டு. 38-ம் பசலியிலிருந்து பிரவேசிக்கக்கூடாதென்று சொல்லுகிறார்கள். ஏராளமாகக் கொண்டு போய் கொண்டித்தொழுவில் அடைத்துவிடுகிறார்கள். கிரிமினல் execution-ம் போட்டிருக்கிறார்கள். மாடுகளை மீறி ஓட்டிக்கொண்டுபோய்விட்டானென்று Criminal prosecution பண்ணுகிறார்கள். புறம்போக்கில் வீடு கட்டி குடியிருப்பது வழக்கம். மண் வேண்டுமென்றால் எடுத்துக்கொண்டுபோகிறது. அதெல்லாம் இப்பொழுது செய்யக்கூடாது. முந்தி நாங்கள் அனுபவித்துவந்திருக்கிறோம். நத்தம் இல்லாமல் இது தனியே இருக்கிற இடம். புஞ்சையாக இருக்கலாம். அல்லது நஞ்சை .புறம்போக்காக இருக்கலாம். அதற்கு நசர் வேண்டுமென்று கேட்கிறார்கள் வீடு கட்டினால். எங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊர்களையும் கண்மாய்களையும் பற்றிச்சொல்லுகிறேன். Court of Wards காலத்துக்குப்பிறகு ஒரு கண்மாயாவது வெட்டியிருக்கிறார்களென்று சொல்லமுடியாது. தேவஸ்தானம் கண்மாய்களும் அயன் கண்மாய்களும் இருக்கின்றன. வெட்டவேயில்லை. மழையை எதிர்பார்த்துத்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. மழை காலா காலத்தில் பெய்கிறதில்லை. 5 கலம் கண்டால் 10 கலம் அழவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கவனித்து அடுத்த அயல் லாக்காவில் இருக்கிறபடி செய்யவேண்டும். மலம்பட்டி கிராமம் பக்கத்திலிருக்கிறது. அங்கே ரூ. 4–6–0-க்கு மேலே தீர்வை இல்லை. அந்த மாதிரி தீர்வை ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் நெல்லாக இருக்கவேண்டும்.

The ZAMINDAR OF MIRZAPURAM:

Q.—Commutation rate-ஐ ஒப்புக்கொள்ளமுடியாதென்று சொல்லுகிறீர்களா ?
A.—ஒப்புக்கொள்ளமுடியாது.

Q.—இரண்டு மூன்று வருஷத்துக்கு முந்தி எரியூர் குளத்தை ரிப்பேர் பண்ணினார்களா இல்லையா ?
A.—பூராவும் உடைத்துக்கொண்டு போய்விட்டது. அந்த உடைப்பை அடைத்துக்கொடுத்திருக்கிறார்கள். வேறொன்றும் செய்யவில்லை.

Q.—இன்னும் வேறு என்ன செய்கிறது ?
A.—உடைப்பை மாத்திரம் அடைத்திருக்கிறார்கள். கண்மாய் 2 மைல் விஸ்தீர்ணம் உள்ளது. 16 அடி உடைப்பை அடைத்திருக்கிறதைத்தவிர கண்மாயை வெட்டிக்கொடுக்கவில்லை.

Q.—திவானுக்கு அதைப்பற்றிச் சொன்னீர்களா ?
A.—எல்லாக் கண்மாய்கள் சம்பந்தப்பட்டவரையிலும் சொல்லியிருக்கிறோம். மனு கொடுத்திருக்கிறோம்.

Q.—உங்கள் கிராமத்தை திவான் அனேக தடவை வந்து பார்த்திருக்கிறார்களா ?
A.—பெரிய திவான் வருஷத்துக்கு ஒரு முறை இரண்டு முறை வருவார்கள். Assistant திவான் அடிக்கடி வருவார்கள். வருகிற காலத்தில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். இப்படியெல்லாம் இ-ஞ்சல் பண்ணுகிறார்களென்று சொல்லியிருக்கிறோம். கூடிய சீக்கிரத்தில் சௌகர்யம் பண்ணுவோமென்று சொன்னார்கள். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. Forest ஆகக் கிடக்கிற இடங்களை சாகுபடி செய்யக்கூடிய நிலைமையிலிருந்தால் நாங்கள் சாகுபடி செய்கிறது வழக்கம். அந்தமாதிரி ரிக்கார்டும் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் ஒப்பந்தத்தில் சிவகங்கை ஜமீனிலிருந்து எங்கள் பிராந்தியம் வேறு.

The ZAMINDAR OF MIRZAPURAM:

Q.—Court of Wards காலத்தில் பட்டா சரியாய் கொடுத்தார்களா ?
A.—Court of Wards காலத்திலும் பட்டா சரியாய் கொடுக்கிறதில்லை.

Q.—உங்களுக்கு பட்டா இருக்கிறதா ?
A.—எனக்குப் பட்டா இருக்கிறது.

Q.—எப்படி வந்தது ?
A.—28-ம் பசலிக்குமுன்னால் ஏற்பட்ட பட்டா. பட்டா மாற்றுகிற வழக்கமேயில்லை. பட்டா கொடுக்கிறதும் இல்லை.

Q.—உங்களுடைய பட்டா உங்கள் பேரில்தானிருக்கிறதா ?
A.—எனக்கு பட்டா இல்லை. அவர்களுடைய அடங்கலில் எழுதியிருக்கிறது. நானும் என் சகோதரர்களும் இருக்கிறோம். எங்கள் பேரில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஜமீனில் எங்கள் சம்பந்தம் வேறு, மற்றவர்கள் சம்பந்தம் வேறு. நாங்கள் உழுது வெள்ளாமை செய்தால் சாகுபடியை எழுதி அடுத்திருக்கிறதை அனுசரித்து வரியை வசூல் பண்ணுகிறதுதான் வழக்கம். இப்பொழுது அப்படி செய்யக்கூடாது. நசர் செலுத்தவேண்டும். அப்புறம் நாங்கள் ஏற்பட்ட வரியைச் செலுத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பாக்கி ரூ. 4-6-0 அதாவது 10 கலத்துக்கு அதிகமாக ஆகிறது.

Q.—அதற்கு ரிக்கார்டு இருக்கிறதா ?
A.—இந்த ரிக்கார்டுதான். அதைப்பார்த்துக்கொண்டு கொடுத்துவிடவேண்டும்.

Q.—நசர் வேண்டுமென்று கேட்டார்கள் என்று சொன்னீர்களே அப்படிக் கேட்டதற்கு ரிக்கார்டு இருக்கிறதா ?
A.—நசர் செலுத்தினதற்கு ரிக்கார்டு வைத்திருக்கிறோம். குறிப்பிடுகிற காலத்தில் கொண்டு வந்து கொடுக்கிறேன்.

Q.—உங்களுக்குச் சொந்தமில்லாத நிலத்தை உழுது சாகுபடி செய்ததற்குத்தானே அந்த மாதிரி செய்தார்கள்.
A.—எங்களுக்கு சொந்தம் ஆகவேண்டுமென்றுதானே நாங்கள் அனுபவிக்கிறோம். அவர்கள் ஏதோ வரி வாங்கலாம்.

Q.—**Forest land** என்று சொல்லுகிறீர்களே உங்களுடைய **land** இல்லையே.

A.—அதற்கு தீர்வை வாங்கிக்கொள்ளவேண்டும். நசர் வாங்கக்கூடாதென்று சொல்லுகிறேன்.

Q.—அவர்களுடைய permission இல்லாமல் சாகுபடி செய்தால்தானே அந்தமாதிரி செய்கிறார்கள்.

A.—அவர்களிடத்தில் **permission** கேட்கவேண்டிய அவசியம் இல்லை. விவசாயம் பண்ணும் பாத்தியம் உள்ளது. அவர்களுடைய **permission** இல்லாது சாகுபடி செய்கிறதுதான். நாங்கள் **permission** இல்லாமல் சாகுபடி செய்தால் வரி கொடுக்கவேண்டுமென்று ஒப்பந்தம் இருக்கிறது. இந்தப் பட்டாவிலேயே அது ஒரு ஷரத்து.

Q.—அப்பேர்ப்பட்ட ஒப்பந்தத்திலுள்ள நிலத்துக்கு நசர் கொடுக்கிறீர்களா ?

A.—ஆமாம்.

Q.—அதைக்காட்ட ஏதாவது இருக்கிறதா ?

A.—ரிக்கார்டு இருக்கிறது. தபாலில் அனுப்புகிறேன்.

எங்கள் லாக்கா அம்பலமானிபம் இருக்கிறது. ஒரு மாத்தா—1¾ எக்கருக்கு ரூ. 1–9–0 செலுத்தி சகல சுதந்தரத்தையும் சகல பாத்தியத்தையும் அடைவது வழக்கம். அந்தமாதிரி வழக்கம் இருக்கிறது. அந்தப்படி அனுபவித்துவந்ததை 28-ம் பசலியில் Court of Wards வந்தபோது 15 ரூபாய் செலுத்தினால்தான் மாமூலாகக் கொடுத்துவந்த முறையைக் கொடுக்கமுடியுமென்று சொல்லி வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தாவா பண்ணி கோர்ட்டில் தீர்ப்பு வாங்கி வைத்திருக்கிறோம். File பண்ணுகிறேன். கோயில் சம்பந்தப்பட்டவரையில் தேவஸ்தான கிராமம் இருக்கிறது. வாரப்பத்து என்று இருக்கிறது. கதிரை அறுக்கவேண்டியது. பாதியை ஜமீன்தாருக்கு கொடுக்கவேண்டியது. பாதியை நாங்கள் அனுபவித்துக்கொள்ளுகிறது. சிலபோது செலவுக்கு எடுத்துக்கொள்வதுண்டு. அந்தச்சிலவு எடுத்தது போக பாக்கி இருக்கிறதை பிரித்துக்கொள்ளவேண்டும். அது எந்த முறையில் இப்பொழுது பிரித்துக்கொள்கிறதென்றால் நாங்கள் போய் கங்காணம், நாளைக்கு, கதிர் அறுக்கவேண்டுமென்று சொல்லவேண்டியது. அவர்கள் சரியென்று சொன்னபிறகு தான் அறுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாங்கள் குறிப்பிட்ட டயத்தில் (time) அறுக்கமுடியாமல் இருக்கிறதினால் கெட்டுப்போய்விடுகிறது. நாங்கள் petition ஜமீன்தாருக்கு கொடுக்கிறோம். இத்தனாம் தேதி கதிரறுக்கப்போகிறோமென்று சொல்லுகிறோம்.

The Zamindar of Mirzapuram :

Q.—வேறு எந்தமாதிரி செய்யவேண்டும் ?

A.—இந்தப் பட்டாவிலிருக்கிற திட்டத்தை நல்ல முறையில் நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

Witness No. 256. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. R. V. Swaminathan of Poganeri.

இந்த நிலவரி முறையில் மலம்பட்டியில் ஜாஸ்தி தீர்வை. சிவகங்கை ஜமீனில் மலம்பட்டி கிராமம் இருக்கிறது. அங்கே அந்தக்கலத்தில் 6 ரூபாய் 8 ரூபாய் வரைக்கும் வரி போட்டிருக்கிறார்கள். மற்ற கிராமங்களில் ரயத்வாரி கிராமங்களை அனுசரித்து போட்டார்கள். ஆற்றுப்பாசனமுள்ள ஒரே இடத்தில் ஜமீன் பிரதேசத்தில் 6 ரூபாய் 8 ரூபாய் வரைக்கும் வரி போட்டிருக்கிறார்கள். பின்னால் நெல் விலை அதிகமாகயிருந்தபோது அந்த விலையை அனுசரித்து ஒரே அடியாக 25 ரூபாய்வரைக்கும் ஜாஸ்தி பண்ணிவிட்டார்கள். ஆகையினால் வரி போடுகிறதென்றால் 6 ரூபாய் 8 ரூபாய்க்குமேல் போடக்கூடாதென்று அவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. ரயட்வாரி நிலங்கள்மாதிரி இருக்கவேண்டியது நிரந்தர செட்டில்மெண்டு இருக்கக்கூடாது. 10 வருஷத்துக்கொருதரம் செட்டில்மெண்டு பண்ணவேண்டும். 50 லக்ஷ ரூபாய் வரை கிஸ்தி பாக்கியிருக்கிறது. ஜனங்களுக்கு கொடுக்க வழியில்லாமலிருக்கிறது. ஜப்தி பண்ணினார்கள். அவர்கள் கதிரை ஜப்தி பண்ணுகிறார்கள். இது தப்பு என்று சொல்லியிருக்கிறோம். கதிரை ஜப்தி பண்ணினால் அதை அறுத்து விற்று வரியைக்கொடுக்கமுடியுமா ? கதிர் பூராவும் அழிந்துபோகிறது. ஜமீன்தாருக்கும் இல்லாமல் அவனுக்கும் இல்லாமல் போகிறது. கதிரை ஜப்தி பண்ணக்கூடாதென்று செய்யவேண்டும். ஜப்தி பண்ணுகிறதில் விவசாயத்துக்கு வேண்டிய பொருள்கள் ஆடு மாடுகளை ஜப்தி செய்யக்கூடாது. பெண் பிள்ளைகள் நகைகளை பண்ணக்கூடாதென்று அவர்களுடைய டிமாண்டு நோட்டீசிலேயே சொல்லியிருக்கிறது. ஆனால் அந்தமாதிரி செய்கிறதில்லை. போட்டிருந்த கடுக்கனை ஒருவனிடத்தில் கழற்றிவிட்டார்கள். மாடுகளை ஜப்தி பண்ணுகிறது. என்னுடைய மாட்டை நான் இல்லாத சமயத்தில் ஜப்தி பண்ணிவிட்டார்கள். ஜப்தி நோட்டீசும் கொடுக்கிறதில்லை. உடனே மாட்டைப்பிடித்துக்கொண்டுபோகிறது. பணத்தைப்போட்டுவிட்டு மாட்டைப்பிடித்துக்கொண்டுபோ என்று சொல்லிவிடுகிறது. விவசாயி எதையோ கொடுத்துவிட்டு திருப்பிக்கொண்டுவருகிறது.

Mr. B. Venkatachalam Pillai :

Q.—உழவு மாடுகளையா ஜப்தி பண்ணுகிறார்கள் ?

A.—ஆமாம்.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—**How many years ago ?**

A.—1935-ல் நான் ஊரிலில்லாத சமயத்தில் என்னுடைய மாட்டைப் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள். நான் அரைமணி நேரத்தில் வந்துவிட்டேன். வந்தவுடனே மாட்டைக்காணவில்லை. கேட்டேன். சொன்னார்கள். உடனே போய்க் கொண்டுவந்துவிட்டேன். மாடுகளை ஜப்தி செய்யக்கூடாது என்பது என்னுடைய எண்ணம். காடு இருக்கிறது. நாங்கள் கஷ்டப்பட்டு காட்டை காவல் காக்கிறோம்.

The ZAMINDAR OF MIRZAPURAM : *Q.*—**Village Forest ?**

A.—**Village Forest** ஓ என்னமோ தெரியாது. அவர்கள் எல்லாவற்றையும் குத்தகைக்கு விட்டு விறகெல்லாம் போய்விட்டது. தழைகளை எடுக்க வழியில்லை. ஏராளமாக புஞ்சைகள் இருந்தன. அதை உழுது புல்லை விதைத்து கொள்ளை விதைத்து மாட்டுக்காக செய்கிற வழக்கம் உண்டு. **Settlement** பண்ணுகிற காலத்தில் எங்களுக்கு சொந்தம் என்று சொல்லி ஜமீன்தார் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். நாங்கள் உபயோகித்துக்கொண்டுவந்தோம்.

Q.—அந்தக்காலத்தில் பட்டா இருந்திருக்கும் ?

A.—இருந்திருக்கலாம். அந்தக்காலத்தில் வரியும் கொடுத்திருப்போம். சர்வே டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

Q.—**Why did you not fight it out ?**

A.—அப்போது நான் ஸ்கூலில் இருந்தேன். எனக்குத் தெரியாது.

Q.—**So, it is your father's mistake ?**

A.—அப்படிச்சொல்லவில்லை. அவர்கள் கவனிக்கவில்லை.

Q.—அது கவர்ன்மெண்டு சர்வேயா ?

A.—எனக்குத் தெரிந்தவரையில் **Court of Wards**-ல் செய்த சர்வேதான்.

Irrigation Department—Viswanatha Doss காலத்தில் **Council**-ல் கேள்வி கேட்டார். அவர் கேட்ட காலத்தில் கவர்ண்மெண்டு **explanation** அதை வைத்துக்கொண்டுதான் நான் கொடுத்திருக்கிறேன். **Figures** இந்த கஷ்டத்துக்கு என்ன பரிகாரம் என்றால், **Abolition of the Zamindari system** என்று நினைக்கிறேன். எல்லாவற்றையும் கவர்ன்மெண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன். அதற்கு வழி தேடவேண்டும். அது முடியாவிட்டால் ஜமீன் பிரதேசங்களில் விவசாயிகளுடைய கஷ்டங்களை நிவர்த்திக்க ஏஜெண்டுகளை ஏற்படுத்தவேண்டும். ஜமீன் **peasant**-ஐ **protect** பண்ண ஏஜெண்டு வேண்டும்.

Mr. P. S. KUMARASWAMI RAJA :

Q.—அவர்களுடைய அந்தஸ்து எப்படியிருக்கவேண்டும். ?

A.—**Non-official** ஆகயிருக்கவேண்டும். உத்தியோகஸ்தரல்லாத ஒரு மனிதனைப் போடவேண்டும்.

Q.—**Honarary appointment** ஆகயிருக்கவேண்டுமா ?

A.—வேண்டுமென்றால் சம்பளம் கொடுக்கவேண்டும்.

Q.—சம்பளம் கொடுத்தால் ஆபீசராய்விடுவாரே ?

A.—அது எப்படி வேண்டுமோ செய்யவேண்டும். இனாம் கிராமங்களில் அதிக கஷ்டம் இருக்கிறது. இனாம்தார்கள் கிராமத்திலுள்ள மனிதர்களை விலைக்கு வாங்கினதாக நினைக்கிறார்கள். அவர்கள் வீட்டில் கல்யாணம் கல்லெடுப்பு என்று சொன்னால் அவன் போய் வேலை செய்யவேண்டியிருக்கும். அதை மாற்றவேண்டும்.

Witness No. 257. Madura. 25th February 1938.

Oral evidence of Mr. Ramaswami of Bodinayikunur.

He read the following passage :—

போடிநாயக்கனூர் ஜமீனுக்குச் சொந்தமான 48 கிராமங்களில் சுமார் 2,500 ஹரிஜன குடும்பங்கள் சக்கிலியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு விவசாயம் செய்ய சொந்த நிலம் கிடையாது. இவர்கள் கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள். நூற்றுக்கு 2 பேர்கள் தோல் தைக்கும் தொழிலைச் செய்கிறார்கள். போடி ஜமீனில் ஜமீன்தாரவர்கள் 48 கிராமங்களுக்கும் போகாரி மணியமென்று ஒருவரை நியமித்து நாங்கள் விவாகம் ரத்து செய்யும் காலங்களில் $7\frac{1}{2}$ ரூபாய் வசூலிக்கப்படுகிறது. எங்களில் விவகாரம் ஏற்பட்டால் நாங்கள் ஜாதி பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொண்டாலும் அதில் விதிக்கும் அபராதத்தில் இரண்டு பங்கு ஜமீன்தாருக்கு கொடுத்துவிடவேண்டும். வருஷத்தில் குறிப்பிட்ட தினங்களில் மேற்படி கிராமங்களிலுள்ள ஹரிஜன குடும்பங்கள் தவராமல் கட்டாய இலவச வேலை வாங்கப்படுகிறது. வேலைக்குப்போகத்தவறினால் ஆள் ஒன்றுக்கு 8 அணா வசூலிக்கப்படுகிறது. போடிநாயக்கனூரிலிருந்து திருவாங்கூர் மலைக்கு கொண்டுபோகும் ஆடு மாடுகளுக்கு மாட்டுக்கு 4 அணாவும் ஆட்டுக்கு 2 அணா வீதமும் வாங்கப்படுகிறது. திருவாங்கூர் எல்லையிலிருந்து கொண்டுவரும் தோல்களுக்கு ஒரு அணா வீதம் வாங்கப்படுகிறது. மலையிலிருந்து வரும் மாடுகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் வாங்குகிறார்கள்.

Witness No. 258. **Madura.** **25th February 1938.**

Oral evidence of Mr. Shek Ismail Ambalam of Manamadura, aged 117.

நெ. 187 பட்டதார்.

இரண்டு வருஷமாக மழை இல்லை, எனக்கு கண்ணும் தெரியவில்லை. வயசும் ஆச்சு. என் பேரிற் பட்டா இருக்கிறது. எஸ்டேட் கலெக்டர் சூட் போட்டு என்னை ஐந்து, ஆறு வருஷத்துக்கு முன் வாரண்டில் பிடித்தார். கோர்ட்டார் என்னை விரட்டிவிட்டார்கள்: நிலங்களை வாரத்துக்கு விட்டுக்கொண்டிருக்கிறேன். என்பேரில் 60, 70 ரூபாய் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Mr. B. Venkatachalam Pillai:

Q.—எந்த வருஷத்தில் பிறந்தீர்கள் ?

A.—1823-ம்வருஷம் டிசம்பர்மீ 19உயில் பிறந்தேன். வெள்ளாமை ஒன்றும் கிடையாது. வரி செலுத்த முடியாது. **Sessions Judge** விரட்டிவிட்டார்கள். **High Court**-ல் 50 பேர்கள் சேர்ந்து வேலை பண்ணினார்கள். இரண்டு கோர்ட்டு செலவுகளையும் கொடுக்கும்படி தீர்ப்பு செய்திருக்கிறார்கள். **Estate** கலெக்டர் **High Court**-க்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். அங்கே விரோதம்பண்ணியிருக்கிறார்கள். எனக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

The Committee adjourned to meet again on 20th April 1938, at Madras.

END OF PART II.

AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN INDIA

New Book Co., Booksellers, 'Kitab Mahal,' 188-90, Hornby Road, Bombay.

D. B. Taraporevala Sons & Co., Bombay.

Thacker & Co. (Ltd.), Bombay.

N. S. Wagle, Circulating Agent and Bookseller, No. 6, Tribhuvan Road, Girgaon, Bombay.

The Book Company, Calcutta.

Butterworth & Co. (Ltd.), 6, Hastings Street, Calcutta.

R. Cambray & Co., Calcutta.

Thacker, Spink & Co., 3, Esplanade East, Calcutta.

B. S. Mathur & Co., Chatur Vilas, Pasta Civil Lines, Jodhpur (Rajaputana).

The Proprietor, The Punjab Sanskrit Book Depot, Saidmitha Street, Lahore (Punjab).

The Christian Literature Society for India, Post Box No. 501, Park Town, Madras.

City Book Company, Post Box No. 283, Madras.

C. Coomaraswamy Nayudu & Sons, 27 and 35, Chinnathambi Street, Madras.

Higginbothams (Ltd.), Mount Road, Madras.

The Law Printing House, 11, Mount Road, Madras.

G. A. Natesan & Co., Madras.

P. R. Rama Iyer & Co., No. 363, Esplanade Row, Madras.

P. Varadachari & Co., Booksellers, 8, Linga Chetti Street, Madras.

Agent, The South India Saiva Siddhantha Works Publishing Society, Ltd., 6, Coral Merchant Street, Madras.

D. Sree Krishnamurthi, Editor of "Grama Paripalana," Ongole (Madras).

E. M. Gopalakrishna Kone, Pudumantapam, Madura (Madras).

M. Seshachalam & Co., Proprietors, The Hindu Press, Masulipatam (Madras).

The Hindustan Publishing Co., Ltd., Rajahmundry (Madras).

The Modern Stores, Salem (Madras).

The Proprietor, The House of Knowledge, Booksellers and Publishers, Palliagraharam P.O., Tanjore (Madras).

S. Krishnaswami & Co., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).

L. Vaidyanatha Ayyar, Law Bookseller, Teppakulam P.O., Trichinopoly (Madras).

A. Venkatasubban, Law Bookseller, Vellore (Madras).

P. N. Swaminathasivan & Co., Commission Agents, Booksellers, etc., Pudukkottai State.

Mohanlal Dossabhai Shah, Books Agent, etc., Rajkot.

K. Krishna Ayyar Brothers, Booksellers, Publishers, etc., The Round, Trichur (Cochin State).

The Booklovers' Resort, Booksellers and News Agents, Taikad, Trivandrum.

NOTICE

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C. 2, or through any bookseller.